# சைவ நெறி

## தரம் 10



# சைவ நெறி

## தரம்
## 10

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதற் பதிப்பு 1999
இரண்டாம் பதிப்பு 2000
மூன்றாம் பதிப்பு 2001
எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் பிட்டகோட்டே சிசாரா
அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது

2002/ஜே/10/156/(32000)

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழு மில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு

## நூன்முகம்

இந்நூல் 10 ஆம் தரத்துக்கென மறு பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய சகலருக்கும் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

விஜயநாயக்க ராஜபக்ஷ
கல்வி வெளியீட்டு ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
"இசுருபாய",
பத்தரமுல்லை,
15.06.2001.

## முன்னுரை

சைவநெறி தரம் - 10 என்னும் இந்நூல் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்த் தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்றது.

இது பாடசாலைகளில் பத்தாந் தரத்துப் பிள்ளைகளுக்காக இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

ஈ. டபிள்யு. அபேநாயக்க
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்ல.

1999.5.15

## முகவுரை

புதிய பாடத்திட்டங்கள், அப்பாடத்திட்டங்களுக்கு அமைவான பாடநூல்கள் ஆகியன தயாரிக்கப்பட்டு, பாடசாலைகளுக்கு அனுப்பப் பட வேண்டியது கல்விச் சீர்திருத்தச் செயன்முறையின் முக்கியமான ஓர் அம்சமாகும். அச் செயன்முறைக்கு அமைவாகவே இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் குறிக்கோள்களையும் அடிப்படைத் தகைமை களையும் இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடநூல், மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு மாணவரை இசைவுபடுத்தக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

மாணவரது விருப்புக்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு, அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகக் கற்க வழிநடத்துவதன் மூலம், வாழ் நாட் கல்விச் செயன்முறையில் ஊக்கம் பெறக் கூடியவாறாக இப்பாடநூலை மாணவர் பயன்படுத்த வகை செய்ய வேண்டியது ஆசிரியரின் முக்கிய பொறுப்பாகும்.

பெற்றோரும் மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கல்விக் கருமங்களில் கவனஞ் செலுத்தி, அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அதனூடாகக் கல்விச் செயன்முறையில் மாணவருக்கும் ஆசிரியருக்கும் துணைபுரியலாம்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
1999. 01. 01

பேராசிரியர். லக்ஷ்மன் ஜயதிலக்க
பணிப்பாளர் நாயகம்.

## அறிமுகம்

பத்தாந் தர சைவநெறிப் பாட நூலாக வெளியிடப்படும் இந் நூல் புதிய பாடத்திட்டத்திற்கேற்பத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சைவ நெறியைக் கற்பதனால் பெறப்படும் அனுபவங்கள், அன்றாட வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கு உதவும் வகையில் பாடங்களைத் திட்டமிடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதில் முன்வைக்கப்பட்டுள்ள பாடங்கள் மூலம் மாணவரின் நடத்தைக் கோலத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொது நோக்கங்களையும், பொதுத் தேர்ச்சிகளையும் அடையும் வகையில் புதிய பாடத்திட்டமும், பாடநூலும் எழுதப்பட்டுள்ளன. விசேடமாக ஒழுக்க நெறிக்கும், சமயத்திற்கும் பொருத்தமான தேர்ச்சிகள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின்போது செயன்முறைச் செயற்பாடுகள் மூலம் அதனை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயன்முறைச் செயற்பாடுகள் மூலம் மாணவர் வாழ்க்கையில் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டிய மனப்பாங்குகள் மீது ஆசிரியர், மாணவர் ஆகிய இரு தரப்பினரதும் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். ஏனெனில், இப்பாடநூல் எழுதும்போது மாணவர் மனதைக் கவரக்கூடிய விதத்தில் பல விடயங்கள் முன்வைக்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடநூலை எழுத வழிகாட்டிய தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க அவர்களுக்கும் இந்நூலை எழுத உதவிபுரிந்த ஆலோசனைச் சபையினருக்கும், எழுத்தாளர் குழுவிற்கும், படம் வரைந்தோர், படங்களைத் தந்து உதவியோர், பரிசீலனை செய்தோர் முதலானோருக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எமது நன்றி உரித்தாகுக.

இப்பாடநூலின் உள்ளடக்கம் தொடர்பாகவும், பாட விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ள முறை தொடர்பாகவும், உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிப்பீர்களாயின், அடுத்த பதிப்பின்போது மாற்றங்கள் செய்வதற்கு உதவியாக அமையும்.

தேசிய கல்வி நிறுவகம் — பதிப்பாசிரியர்
மகரகம
*1999.01.01*

| | | |
|---|---|---|
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம். |
| ஆலோசனை | : | சுவாமி. ஆத்மகனானந்தா<br>பேராசிரியர். வை கனகரத்தினம்<br>திருமதி. நாச்சியார் செல்வநாயகம் |
| எழுத்தாளர் குழு | : | திரு. கு. சோமசுந்தரம்<br>திரு. வை. கா. சிவப்பிரகாசம்<br>திரு. வே. வல்லிபுரம்<br>திரு. ந. சிதம்பரநாதன்<br>திரு. பா. சி. சர்மா<br>திரு. மு. கௌரிகாந்தன்<br>திரு. பெ. கணநாதபிள்ளை<br>செல்வி. வ. விஜயலெட்சுமி |
| சித்திரம் | : | திரு. அ. க. நடராஜா |
| பதிப்பாசிரியர்கள் | : | திரு. சி. புவனேஸ்வரன்<br>செல்வி. வ. விஜயலெட்சுமி |

## பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | சிவபரம்பொருள் | 01 |
| 02. | சிவமூர்த்தங்கள | 04 |
| | (அ) நடராஜர் | 04 |
| | (ஆ) தட்சிணாமூர்த்தி | 07 |
| | (இ) இலிங்கோற்பவர் | 09 |
| 03. | எங்கள் சமயத்தின் தொன்மை | 14 |
| 04. | ஈழத்துச் சிவாலயங்கள் | |
| | (அ) திருக்கேதீச்சரம் | 32 |
| | (ஆ) திருக்கோணேச்சரம் | 41 |
| | (இ) முன்னேச்சரம் | 49 |
| | (ஈ) நகுலேச்சரம் | 55 |
| | (உ) கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம் | 62 |
| | (ஊ) ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் | 71 |
| | (எ) பொன்னம்பலவாணேச்சரம் | 77 |
| 05. | ஆலயக் கிரியைகள் | 83 |
| 06. | திருவுருவ வழிபாடு | 89 |
| 07. | விரதங்கள் | 91 |
| 08. | பண்டிகைகள் | 114 |
| 09. | சமயகுரவர் நால்வர் | |
| | (அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | 125 |
| | (ஆ) திருநாவுக்கரசு நாயனார் | 134 |
| | (இ) சுந்தரமூர்த்தி நாயனார் | 143 |
| | (ஈ) மாணிக்கவாசக சுவாமிகள் | 152 |
| 10. | திருமுறைப் பாடல்கள் | 157 |
| 11. | சைவ மெய்யியல் | 198 |
| 12. | பெரிய புராணம் | 209 |
| 13. | திருக்குறள் | 228 |
| 14. | திருவருட்பயன் | 231 |
| 15. | சைவசமய ஒழுக்கம் | 274 |

# 1

# சிவபரம்பொருள்

சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். சிவம் பரம்பொருள், மெய்ப்பொருள், இறை என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. சிவம் பசுபதி எனவும் கூற ப்படும். பசு என்றால் ஆன்மா, பதி என்றால் தலைவன். ஆன்மாக்களுக்குத் தலைவர் என்பதே பசுபதி என்பதன் பொருளாகும். பரம்பொருள் என்றும் உள்ள பொருள்

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

என்னும் திருமந்திரப் பாடலடிகள் சிவத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன.

பரம் ஒன்றே முழுமைத்துவமானது. அதனால், அதற்கு ஈடானது, மேலானது என்று மற்றொன்றுமில்லை.

"தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்"

எனத் திருமந்திரம் மொழிகின்றது.

பரம்பொருள், மெய்ப்பொருள் எனக் கூறப்படுகின்ற இறைவன், ஒருவனே எனச் சைவ சமயம் குறிப்பிடுகின்றது.

"ஒன்றவன் தானே" என்றும்
"ஒருவனே தேவன்" என்றும் திருமந்திரமும்
"ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி" என்று வேத வாக்கியமும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

சிவம் திருவருட் சக்தியோடு இணைந்தே உள்ளது. "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் ......" எனத் திருவருட்பயன் கூறுகின்றது. இந்த மண், விண், மற்றும் இடங்களிலும் பரம்பொருளாகிய சிவம் நிறைந்தும், செறிந்தும் நிற்கின்றது. இதனை,

"எல்லா உலகமும் ஆனாய் நீயே"

என்று அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

சிவம் என்பது அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று நிலைகளிலும் உள்ளது. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் ஆகிய மூர்த்திகளின் மூலம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செயற்படுத்துவது பரம்பொருளே ஆகும்.

"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீயே"

தமக்குத் தந்தை, தாய், துணை, சுற்றம் . மற்றெல்லாப் பொருளும் சிவபெருமான் ஒருவரே என்றார் அப்பரடிகள்.

இவ்வுலகில் வாழுகின்ற மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள். இவ்வுண்மையை அறிந்து தெளிந்து கொண்டால் இவ்வுலகில் சமத்துவம், சகோதரத்துவம், சமரசம், ஆன்மீக ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம் என்பன ஓங்கி வளரும்.

### பயிற்சி :

(அ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. பரம்பொருள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?
2. சிவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
3. ஐந்தொழில்களையும் அவற்றைப் புரியும் மூர்த்திகளையும் குறிப்பிடுக.
4. இறைவன் ஒருவனே என்பதை ஆதாரங்களுடன் விளக்குக.

# 2

# சிவமூர்த்தங்கள்

சிவபெருமான் உயிர்களை உய்விக்கும் பொருட்டுக் கொண்டருளும் அருட் கோலங்கள் மூர்த்தம் எனப்படும். இம்மூர்த்தங்கள் திருக்கோயில்களில் மூர்த்திகளாக வழிபடப் படுகின்றன. சிவமூர்த்தங்கள் அறுபத்துநான்கு ஆகும். அவற்றுள் சந்திரசேகரர் முதல் இலிங்கோற்பவர் வரை இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றன.

அத்தகைய சிவமூர்த்தங்களுள் நடராஜர், தட்சணா மூர்த்தி, இலிங்கோற்பவர் ஆகியவற்றின் சிறப்புக்களைப் பற்றி இங்கு நோக்குவோம்.

## (அ) நடராஜர்

கோயில் என்றால் சிறப்பாகச் சிதம்பரக் கோயிலையே குறிக்கும். அங்கு நடராஜப் பெருமான் திருநடனம் செய்யும் காட்சியைக் காணலாம். அந்த நடனத் திருக்கோலம் **'நடராஜ மூர்த்தம்'** எனப்படும். இம் மூர்த்தம் சிவாகமங்கள் விளக்கிக் கூறும் தத்துவங்களை எல்லாம் தனது திருமேனியில் கொண்டுள்ள அற்புதத் திருவுருவமாகும்.

நடராஜப்பெருமான் ஆடும் ஆனந்தக்கூத்து பஞ்ச கிருத்தியத் திருநடனம் என்று கூறப்படும். இவ்வானந்தத் தாண்டவ மூர்த்தத்தில் பிரணவத்துடன் கூடிய திருவைந் தெழுத்தின் தத்துவம் அடங்கியுள்ளது. இதன் தத்துவத்தை விளக்குவோர், நமசிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஐந்தொழில்களையும் இணைத்து விளக்கம் தருவர்.



நடராஜர்

"தோற்றம் **துடியதனில்** தோயுந்திதி **அமைப்பில்**
சாற்றியிடும் **அங்கியிலே** சங்காரம் - **ஊற்றமாம்**
**ஊன்று மலர்ப்பதத்தில்** உற்ற திரோதம் முத்தி
**நான்ற மலர்ப்பதத்தே** நாடு"

(உண்மை விளக்கம் - மனவாசகங்கடந்த தேவர்)

| அங்கம் | அட்சரம் | தொழில் |
|---|---|---|
| 1. உடுக்கை ஏந்திய கை | சி | படைத்தல் (சிருஷ்டி) |
| 2. அபயகரம் | வ | காத்தல் (ஸ்திதி) |
| 3. தூக்கிய திருவடி | ய | அருளல் (அனுக்கிரகம்) |
| 4. தீச்சுடர் ஏந்திய கை | ந | அழித்தல் (சங்காரம்) |
| 5. (முயலகனை) ஊன்றிய திருவடி | ம | மறைத்தல் (திரோபவம்) |

**படைத்தல்** என்பது ஆன்மாக்களின் பொருட்டு தனு, கரண, புவன போகங்களை இறைவன் படைத்தலாகும். **காத்தலாவது** படைக்கப்பட்ட தனு, கரண, புவன, போகங்களைத் தத்தமது செயல்களினால் நிலைத்து நிற்கச்செய்தல். **அழித்தலாவது** அவ்வாறு நிலைத்து நிற்கும் தனு, கரண, புவன, போகங்களை அவை தோன்றுவதற்கு முதற் காரணமாயிருந்த மாயையில் மீண்டும் ஒடுங்கும்படி செய்தல். ஆணவ மல சம்பந்தத்தினால் அறியாமையில் அழுந்தி நிற்கும் உயிர்களைப் பிறவிகள் தோறும் இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்து, அத்தகைய இன்ப துன்பங்களாற் பயனில்லை என்ற பக்குவ நிலையை எய்தச் செய்தலே **மறைத்தலாகும்**. **அருளலாவது** பக்குவப்பட்ட ஆன்மாக்களின் மல மாசை நீக்கி அவற்றுக்கு வீடுபேற்றை நல்குவதாகும்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் ............" என்று தொடங்கும் அப்பர் சுவாமிகளின் தேவாரப் பாடல் நடராஜப் பெருமானின் திருவடிவத்தை நன்கு விளக்குகின்றது.

## (ஆ) தட்சணாமூர்த்தி

சிவபெருமான் தாயும்-தந்தையும் ஆனதுடன் குருவாகவும் திகழ்கிறார். சச்சிதானந்தமாகிய சிவபெருமானே ஞான வடிவினராய் நின்று, அறிவு பரப்பிய முதற் பரமாசாரியாரும் ஆவார்.

முன்னொரு காலத்திலே சிவபெருமான் திருக்கைலாய மலையிலே கல்லால மரநிழலிலே தெற்கு நோக்கியவாறு அமர்ந்திருந்தார். அப்போது சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய முனிவர்கள் அங்கு வந்து, அவரை வணங்கி "சுவாமி, மேலான மறைகளைப் பலமுறை கற்றோம், எனினும், எங்கள் அறிவு பலவாறாக மயங்கி நிற்கிறது. தேவரீர் ஒருவரே எங்கள் மயக்கத்தினை நீக்கியருளக் கூடியவர். அதனாலேயே தங்களிடம் வந்தோம்" என்று அவர்கள் பணிந்து நின்றனர்.

இறைவன் முனிவர்களிடத்திலே பேரிரக்கங் கொண்டார். முனிவர்களைப் பார்த்து "அன்பர்களே, உங்களுக்கு மெய்யறிவு உண்டாகும் வண்ணம் ஆகமப் பொருளை விளங்க வைப்போம்" என்று கூறி, சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் உரைத்தருளினார். அப்பொழுது ஞானத்தையும் உரைத்தருள வேண்டுமென்று முனிவர்கள் வேண்டி நின்றனர். "ஞானம் நாவினாலே நவிலற்பாலதன்று" என்று இறைவன் கூறி, வலக் கையைச் சின்முத்திரையாகப் பிடித்து மார்பிலே சேர்த்து ஒருகணம் யோக சமாதியில் அமர்ந்தார்.



தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் சின்முத்திரையால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும், பசு பாசத்திலிருந்து நீங்கிப் பதியை அடைதலையும், முத்தியின் இயல்புகளையும் உணர்த்தி அம்முனிவர்களுக்கு அருள் புரிந்தார். அவர் யோகியாய் எழுந்தருளிய நிலையே தட்சணாமூர்த்தம் ஆகும். இங்கு தெற்குத் திசை நோக்கி இருந்தமையினால் சிவபெருமான் 'தட்சணா மூர்த்தி' என்றும் 'தென்முகக் கடவுள்' என்றும் திருப்பெயர்களைப் பெறுகின்றார். திருஞானசம்பந்தப்பெருமான் "பண்டு நால்வருக்கற முரைத்தருளி........." என்று தொடங்கும் திருக்கேதீச்சரப் பதிகத்தில் தட்சணா மூர்த்தம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தட்சிணாமூர்த்தி முக்கண்ணும் நான்கு தோள்களும் உடைய சிவமூர்த்தமாகும். இவரது வலக்கரம் சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு விளங்கும். இடதுகரம் வரதம் அல்லது தண்டம் ஆகிய குறிப்பினை உணர்த்தும். மற்றொரு வலக்கரம் உருத்திராக்க மாலையையும் இன்னோர் இடக்கரம் பாம்பையும் தரித்திருக்கும். இம் மூர்த்தம் சடாபாரம், சடாபந்தம், சடா மண்டலம், சடாமகுடம் ஆகியவற்றில் யாதாயினும் ஒன்றைக் கொண்டிருக்கும். இதில் கங்கையும் மதியும் கபாலமும் கொன்றையும் காணப்படும். திருமுகம் சாய்ந்த நிலையிலும் திருநயனம் தியான (யோக) பாவனையில் மூக்கு நுனியை நோக்கிய நிலையிலும், திருமேனி பளிங்கு போன்ற வெண்ணிறத்திலும் விளங்கும்.

## (இ) இலிங்கோற்பவர்

இலிங்கோற்பவம் என்ற சொல் இலிங்கத்தினுள் இடம் பெறும் தோற்றம் என்று பொருள்படும். சிவத்தலங்களில் கருவறையின் மேற்குத்திசைச் சுவரின் புறத்தேயுள்ள கோஷ்டத்தில் மேற்கு நோக்கியவாறு இம்மூர்த்தம் பிரதிட்டை

செய்யப்பட்டு இருப்பதைக் காணலாம். மூலத்தானத்தில் உள்ள மூல இலிங்கத்தின் அளவையும் பிரமாணத்தையும் அடிப்படையாகக் கொண்டே இலிங்கோற்பவ மூர்த்தியின் அளவுப் பிரமாணம் அமைய வேண்டும் என்று ஆகமங்கள் குறிப்பிடும்.

இலிங்கோற்பவ மூர்த்தம் மிக முக்கியமானதொன்றாகும். எல்லாச் சிவாலயங்களிலும் இத்திருவுருவம் அமைக்கப்பட்டிப்பதைக் காணலாம். முதலில் இலிங்கத்தை உருவாக்கி அதை நான்கு பகுதிகளாகப் பிரித்து மேலே ஒரு பகுதியையும் நடுவிலுள்ள இரு பகுதிகளையும் எடுத்துக் கொள்வர். இலிங்கத்தின் முற் பக்கத்தில் இவ்விரு பகுதிகளும் உள்ளடங்கக் கூடியவாறு அண்ட வடிவின தாக வகுத்துக்கொள்வார்கள். இலிங்கத்தின் மேற்பகுதியையும் கீழ்ப் பகுதியையும் பிறைபோன்று வளைந்திருக்கச் செய்வார்கள். இதன் நடுவே சிவன் திருவுருவத்தையும் அதன் நான்கு திருக்கரங்களையும் அமைப்பர். நெற்றியிலிருந்து முழந்தாள் வரையுமுள்ள பகுதிமட்டும் வெளியில் தெரியும்படி வகுக்கப்படும். இருகரங்களில் மானும் மழுவும் இடம்பெறும். மற்றும் இரு கரங்களும் அபய, வரத நிலைகளில் அமைக்கப்படும். குண்டலம், ஆரம், கேயூரம், முத்து ஆகிய அணிகலன்களைத் திருவடியில் அமைப்பார்கள். அதன் வலப்பக்கத்தின் மேலே பறக்கும் நிலையில் அன்னத்தையும் இடப் பக்கத்தின் கீழே நிலத்துள் உருவத்தை சாய்ந்த பாவனையில் பன்றியையும் சித்திரிப்பார்கள். அன்னத்துக்கு மேல் 'தாழை மடல்' கீழே விழுதல் போல் அமைத்தலுமுண்டு. இத்திருவுருவ அமைப்பைக் குறித்த செய்திகள் ஆகமம், சிற்ப நூல்கள், சிவராத்திரி புராணம், இலிங்க புராணம், கந்த புராணம், அருணாசல புராணம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மா உலகத்தின் கர்த்தா தானே என்று செருக்குற்றார். திருமாலிடம் சென்று தன்னை விட உயர்ந்த தெய்வம் வேறு இல்லை என்று



இலிங்கோற்பவர்

தர்க்கித்தார். திருமால் அதனை ஏற்காது 'தானே பெரியவன்' என்று மறுத்துக் கூற, இருவருக்குமிடையில் வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்றன. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அவர்கள் இருவருக்குமிடையே சோதிப் பிழம்பாகத் தோன்றினார். அப்போது "இச் சோதியின் அடியையோ, முடியையோ யார் முதலில் தேடிக் கண்டுகொள்கிறாரோ அவரே பெரியவர்" என ஓர் அசரீரி கேட்டது.

பிரம்மா "யான் முடியைக் காண்பேன்" என்றும், திருமால் "யான் அடியைக் காண்பேன்" என்றும் முடிவு செய்து கொண்டனர். பிரம்மா அன்னத்தின் வடிவம் கொண்டு வானில் பறந்து சென்றார். திருமால் பன்றி வடிவெடுத்து நிலத்தை அகழ்ந்து சென்றார். திருமால் பலகாலம் முயன்றும் அடியைக் காணாது திகைத்து, இளைத்துப் பின் நல்லுணர்வு பெற்று சிவபெருமானே இவ்வாறு தோன்றினார் என்று உணர்ந்து கொண்டார். வெளியே வந்து சிவபெருமானிடம் தம் பிழையைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிநின்றார். வானிலே பறந்து சென்ற பிரம்மாவும் அவ்வாறே இளைத்துச் சோதியின் முடியைக் காணாது மீண்டும் நிலத்திடை வந்து, சிவபெருமானை வணங்கி நின்றார். இருவரது கர்வமும் அடங்கிற்று. அவ்வேளை சோதிப்பிழம்பு தணிந்து அவ்விடத்தில் இலிங்க வடிவம் தோன்றியது. இவ்வாறு இலிங்கோற்பவம் நிகழ்ந்த காலம் 'சிவராத்திரி' என்று கந்த புராணம் கூறுகிறது. மாசி மாதத்தில் கிருஷ்ணபட்ச சதுர்த்தசித் திதியின் அர்த்தராத்திரியே இலிங்கோற்பவ காலம் எனப்படும்.

இக்கதையின் மூலம், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதும், அகந்தை கொண்டவர்களால் அவரை அடைய முடியாது என்பதும் உணர்த்தப்படுகின்றன.

**"செங்கணானும் பிரமனுந் தம்முள்ளே**
**எங்குந் தேடியுந் திரிந்தவர் காண்கிலார்**
**இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்**
**பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே"**

திருநாவுக்கரசு நாயனார் பாடிய இத் தேவாரத்தில் பிரம்மா, விஷ்ணு அடிமுடி தேடிய போது 'இலிங்கோற்பவம்' நிகழ்ந்தது என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**பயிற்சி :**

(அ) பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக.

1. சிவபெருமான் பல்வேறு மூர்த்தங்களை எடுப்பதற்குரிய காரணம் யாது?
2. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் ............" என்று தொடங்கும் பாடலடி எந்த மூர்த்தத்தைக் குறிக்கின்றது?
3. தட்சணாமூர்த்தத்தின் தத்துவத்தைக் குறிப்பிடுக.
4. சிவாலயங்களில் தட்சணாமூர்த்தி எங்கே வீற்றிருந்து அருள் புரிகின்றார்?
5. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை உணர்த்தும் மூர்த்தம் எது?

(ஆ) கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. கோயில் என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுவது ........................ ஆகும்.
2. நடராசப் பெருமான் ஆடும் ஆனந்தக் கூத்து ........................ என்று கூறப்படும்.

# 3

# எங்கள் சமயத்தின் தொன்மை

சைவ சமயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்ற சமயமாகும். இச்சமயம் உலகின் பல பாகங்களிலும் பரந்து விளங்கியுள்ளது. சைவத்தின் தொன்மைக்கு அகழ்வாராய்வுகள், தொல் பொருட் சான்றுகள், வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றிலுள்ள பழம்பெரும் நூல்கள், பிற வரலாற்றுக் குறிப்புக்கள் என்பன ஆதாரங்களாக விளங்குகின்றன.

## (அ) சிந்துவெளி நாகரிகம்

சைவத்தின் தொன்மைக்குச் சான்றாக விளங்குவது சிந்துவெளி நாகரிகம் என்பது தொல்பொருள் ஆய்வாளர்களான சேர். ஜோன் மார்சல், சேர். அலெக்சாந்தர் கன்னிங்காம், சேர். வில்லியம் ஜோன்ஸ் போன்றோர்களின் கருத்தாகும்.

கி.மு 3250 தொடக்கம் கி.மு 2750 வரையிலான காலப்பகுதியே சிந்துவெளி நாகரிக காலம் எனக் கருதப்படுகிறது. இது உலகில் பண்டைய நதிக்கரை நாகரிகங்களோடு ஒப்பிடத்தக்க பழமை வாய்ந்த நாகரிகமாகும். இந்தியாவின் வடமேற்கில் சிந்து நதி பாயும் பள்ளத்தாக்கில் (இப்பிரதேசம் தற்போது பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.) நிலவிய நனி சிறந்த நாகரிகமே சிந்து வெளி நாகரிகமாகும். சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் புராதன நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகியவற்றில் நிகழ்த்தப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளின் பயனாக ஏராளமான இலச்சினைகள், உருவச் சிலைகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை சமயச் சார்புடையனவாக அமைந்துள்ளன. குறிப்பாக இவை

சைவசமயச் சார்புடைய சின்னங்களாகவே கருதப்படுகின்றன. இதனால் சைவசமயத்தின் தொன்மையை முதன்மைப்படுத்திக் குறிப்பிடுவர் ஆய்வாளர்.

சிந்துவெளி இலச்சினைகளுள் ஆய்வாளர்களின் கருத்தைக் கவர்ந்துள்ளது 'யோகி' போல அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுளின் வடிவமாகும். அவ்வடிவத்தின் தலையிலே இரு பக்கங்களிலும் உட்கவிந்த இரு கொம்புகள் உள்ளன. கொம்புகளுக்கிடையே செடி போல வளர்ந்துள்ள ஒரு பொருள் காணப்படுகின்றது. தலையின் வலப்புறத்தும் இடப்புறத்தும் இரண்டு புடைப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றை இருவேறு முகங்களாகக் கொண்டு இம் மும்முகமூர்த்தியை "முந்துசிவன்" என சேர். ஜோன் மார்சல் கூறியுள்ளார். இக்கடவுள் கால்களை மடக்கிப் பத்மாசன முறையில் இருப்பதோடு கண்கள் மூக்கு நுனியை நோக்குமாறு பாதி மூடிய நிலையிலும் காணப்படுகிறார். யோக நிலையிலுள்ள இவ்வுருவம் சிந்துவெளி மக்களின் உயர்ந்த சிவநெறிக் கோட்பாட்டை உணர்த்துகின்றது. யோக நிலையி லிருக்கும் இக் கடவுளின் உருவத்தைச் சூழ யானை, புலி, காண்டாமிருகம், எருமை ஆகிய விலங்குகளும், அவர் அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழே இரு மான்களும் காணப்படுகின்றன. இத்தோற்றம் சிவன் உலகின் உயிர்களுக்குப் பதியாய், அதாவது "பசுபதியாய்" விளங்கும் தன்மையைச் சித்திரிப்பதெனக் கூறுவர்.

மேலும், சிந்துவெளித் தொல்பொருள்களுள்ளே இலிங்கத்தின் வடிவங்கள் பல கிடைக்கப்பெற்றுள்ளன. ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட கருநிறக்கல், மற்றும் கூம்பு வடிவப் பொருட்கள் என்பன சிவலிங்க வடிவங்களே என ஆய்வாளர் கருதுகின்றனர். இவை தவிர சைவ சமயத்தோடு தொடர்புடைய சக்தி வழிபாடு, நந்தி வழிபாடு, மர வழிபாடு முதலிய வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தமைக்கான ஆதாரங்களைக் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளின் ஊடாக ஆய்வாளர் வெளிப்படுத்தி உள்ளனர்.

சிவனைப் போலவே சக்தியாகிய பெண் தெய்வத்தையும் சிந்துவெளி மக்கள் வழிபட்டனர். ஓர் இலச்சினையிலே, பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடியொன்று வளருவதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தே சிறப்புப்பெற்ற சக்தி தத்துவத்தை விளக்குவதுடன், அப்பெண் தெய்வத்தைச் சிந்துவெளி மக்கள் தாய்த்தெய்வமாகவோ, தரைத்தெய்வமாகவோ வழிபட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

சிந்துவெளித் தொல்பொருட்களில் பொறிக்கப்பட்டுள்ள சித்திர எழுத்துக்கள் தமிழின் தொன்மையான வடிவமாய் இருக்கலாமென அறிஞர் கருதுகின்றனர். இச்சித்திர எழுத்துக்களை இன்றுவரை யாராலும் அறுதியாக வாசிக்க முடியவில்லை. அவ்வாறு வாசிக்கப்படுமேயானால் சைவத்தின் தொன்மை பற்றிய மேலும் பல செய்திகளை அறியமுடியும் என நம்பப்படுகிறது.

# ஆ. வேதகால வழிபாடு

'வேதம்' என்னும் சொல்லுக்கு 'அறிவு' என்பது பொருளாகும். இது இந்திய ஆரியர்கள் தமது சமய வழிபாட்டிலே பயன்படுத்திய துதிப் பாடல்களின் தொகுதிகளுக்குப் பொதுவான பெயராய் வழங்கி வருகின்றது. இத்தொகுதிகள்,

(1) இருக்கு வேதம்
(2) யசுர் வேதம்
(3) சாம வேதம்
(4) அதர்வ வேதம்

என நான்காக வகுக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவை 'நால்வேதம்' எனவும் 'நான்மறை', 'சதுர் வேதம்' எனவும் சொல்லப்படுகின்றன. வேதங்களை இவ்வாறு நான்கு தொகுதிகளாக வகுத்தவர் வியாச முனிவர் என்பர். ஆதலால் அவருக்கு 'வேத வியாசர்' என்று பெயர் வழங்குகின்றது. மொழி நடை, சிந்தனை வளர்ச்சி, புவியியற் குறிப்புகள் முதலிய அகச் சான்றுகளை வைத்து

நோக்க, இவ்விலக்கியம் நீண்டகாலப்பகுதியிலே வளர்ச்சியடைந்துள்ளது என்பது தெளிவாகும். இத்தொகுதிகளுள் இருக்கு வேதம் காலத்தால் முற்பட்டது. அதர்வ வேதமே காலத்தாற் பிற்பட்டது. இவை இருடிகள் எனப்படும் முனிவர்களின் குடும்பங்களிலே தலைமுறை தலைமுறையாகச் செவிவழி மரபிலே கையாளப்பட்டு வந்தமையால், 'எழுதாக் கிளவி' என்றும், 'எழுதாமறை' என்றும் 'சுருதி' என்றும் சொல்லப்படுவனவாயின. இந்துக்கள் இவற்றைத் தெய்வத் தன்மை வாய்ந்த திருநூல்கள் என்று போற்றுகின்றனர். அன்றியும், இவை இறைவனால் வசிட்டர், வாமதேவர், விசுவா மித்திரர், அத்திரி, பரத்துவாசர் முதலிய முனிவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டவை என்றும் மக்களால் ஆக்கப்படாதவை என்றும் நம்புகின்றனர்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும்,

(அ) சங்கிதைகள்
(ஆ) பிராமணங்கள்
(இ) ஆரணியகங்கள்
(ஈ) உபநிடதங்கள்

என நான்கு பகுதிகள் உண்டு. இவற்றுட் சங்கிதைகள் செய்யுள் வடிவிலே அமைந்து, வேதத்தின் முன்னைய பகுதியாகவும் முக்கிய பகுதியாகவும் விளங்குகின்றன. **சங்கிதைகள்** வேதகாலத்துத் தெய்வங்களுக்கென அமைக்கப்பட்ட துதிப் பாடல்களையும், இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு பெறுதற் பொருட்டு அத்தெய்வங்களுக்குச் செய்யும் பிரார்த்தனைகளையும் கொண்டமைந்தவை. இவற்றுக்கு மந்திரங்கள் என்றும் பெயருண்டு. **பிராமணங்கள்** என்பவை யாகங்களைச் செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய கிரியைகள் பற்றிக் கூறும் நூல்களாகும். இவை யாகங்களைச் செய்வதே தெய்வங்களைத் திருப்தி செய்வதற்குரிய சிறந்த வழி என்று கூறுகின்றன. **'ஆரணியங்கள்'** எனப்படும் 'வன நூல்கள்' சமயக் கிரியைகள் பறறிய தத்துவ விளக்கங்களைத் தொடர் உருவகக் கதைகளாகச் சொல்லுகின்றன. சிலவேளை களில் ஆரணியங்கள் பிராமணங்களின் பிற்சேர்க்கைகளாக

அவற்றிலேயே இடம்பெறுவதுமுண்டு. இவை வனத்திலே தனிமையில் இருந்து கற்கப்பட வேண்டியவை என்பதனாலே ஆரணியங்கள் எனப் பெயர் பெற்றன. வேதத்தின் இறுதிப் பகுதிகளான **உபநிடதங்கள்** மெய்யியல் அல்லது தத்துவங்கள் பற்றிய ஆராய்ச்சிகளாகும். இவை 'வேதாந்தம்' என்றும் 'வேதசிரசு' என்றும் சிறப்பித்துக் கூறப்படும். உபநிடதங்கள் சமய சிந்தனையின் தனிப்பகுதிகளாக அமைந்தபொழுதும் பிற்காலத்தில் வேதங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு மேற்படி பெயர்களைப் பெற்றன.

வேதத்தின் மந்திரங்களாய் அமைந்த சங்கிதைகள் தவிர, பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் ஆகிய ஏனைய மூன்று பகுதிகளும் உரைநடையிலே உள்ளன. பின்னுள்ள மூன்று பகுதிகளும் அம்முறையிலே சங்கிதைகளுக்கும் பிற்சேர்க்கைகளாகக் காலத்துக்குக் காலஞ் சேர்க்கப்பட்டவை யேயாகும். பொதுவாக வேதங்கள் என்னும் போது, சங்கிதைகள் முதல் உபநிடதங்கள் வரையுள்ள நான்கு பகுதிகளுஞ் சேர்ந்த முழு நூலுமே கருதப்படும். இன்னும் சங்கிதைகள், பிராமணங்கள் ஆரணியங்கள், உபநிடதங்கள் என்பன முறையே பிரமச்சரியம் (மாணவ நிலை), கிருகஸ்தம் (இல்லற நிலை), வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்தம் செய்யும் நிலை), சன்னியாசம் (முழுத்துறவு நிலை) என்னும் வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் உள்ளவர் களுக்கு உரியன என்றும் கொள்ளப்படுகின்றன.

இனி, வேதத்தில் அடங்கியவற்றை (1) கர்ம காண்டம் (சமய ஆசாரங்கள் பற்றிய பகுதி) என்றும், (2) உபாசனாக் காண்டம் (தியானத்துக்குரிய பகுதி) என்றும், (3) ஞான காண்டம் (அறிவு தரும் பகுதி) என்றும் வேறு ஒரு வகையிலும் பிரிப்பதுண்டு. சங்கிதைகளும், பிராமணங்களும் கர்ம காண்டத்தைச் சேர்ந்தவை. ஆரணியங்கள் உபாசனாக் காண்டத்தைச் சேர்ந்தவை. உபநிடதங்கள் ஞான காண்டத்தைச் சேர்ந்தவை.

## (1) இருக்கு வேதம்

வேத நூல்களுள் இருக்கு வேதமே மிகவும் பழமை வாய்ந்தது. இதிலே 1028 பாசுரங்கள் அடங்கியுள்ளன. இப்பாசுரங்கள் இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாக உருவகித்து அவற்றை அழைக்கும் மந்திரங்களாக அமைந்துள்ளன. இவை பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வோர் இருடியின் பெயரிலே உள்ளது. அவ்வவ்மண்டலங்களில் அடங்கியுள்ள பாசுரங்கள் அவ்வவ் இருடிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டவை என்பர்.

பாசுரங்களின் எண்ணிக்கையை ஓர் அளவுகோலாகக் கொண்டு பார்க்கையில் இந்திரன் (250 பாசுரங்கள்) பற்றிய பாடல்களே கூடுதலாகக் காணப்படுகின்றன. அவனை அடுத்து அக்கினியும் (200 பாசுரங்கள்), சோமனும் (120 பாசுரங்கள்) முதன்மை பெறுகின்றனர். வருணன் 12 பாசுரங்களிலே பாடப்பட்டுள்ள போதும், இந்திரனுக்கு அடுத்தபடி ஏற்றம் பெற்று விளங்குகின்றான். இவ்வகையில் உருத்திரன், விஷ்ணு போன்றோர் சிறு தெய்வங்களாகவே காணப்படுகின்றனர். இத்தேவர்கள் எல்லோரும் மனித உருவம் உடையவராகவே வருணிக்கப்படுகின்றனர். பெருமையும் வல்லமையும் உடையோராயும், தம்மை வழிபடுவோர்க்கு நன்மை செய்ய வல்லவராயும், தீய சத்திகளோடு ஓயாது போராடி வருபவராயும், பாசுரங்களிலே இவர்கள் சித்திரிக்கப்படுகின்றனர். ஆயினும், இவர்களுக்கு உருவம் அமைத்து வழிபட்டதற்கான எவ்வித சான்றும் இல்லை.

வேத கால ஆரியர் பல தெய்வங்களை வழிபட்டோராயினும், தெய்வம் ஒன்றே என்ற கருத்தும் அவர்களிடம் தோன்றியுள்ளது. பலராலும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் இருக்கு வேதப் பாடலின் கருத்து வருமாறு :

"உள்பொருள் (சத்து) ஒன்றே:அதனை அக்கினி என்றும் யமன் என்றும் மாதரிசுவன் என்றும் ஞானிகள் பலவாறு கூறுவர்".

இதில்வரும் உள்பொருள் (சத்து) என்னும் சொல், பின்னர் இந்திய மெய்யியலிலே பொருள் பொதிந்த ஒரு சொல்லாக வளர்ச்சியடைந்துள்ளது.

இருக்கு வேதத்தில் வரும் மந்திரம் ஒன்று சாவித்திரி என்றும் காயத்திரி என்றும் புகழ் பெற்று விளங்குகின்றது. "சவித்திரு" என்னும் பழைய ஞாயிற்றுக் கடவுளை விளித்துப் பாடப்பட்டமையால், இது "சாவித்திரி மந்திரம்" என்றும், 'காயத்திரி' என்னும் யாப்பிலே பாடப்பட்டமையால் 'காயத்திரி மந்திரம்' என்றும் பெயர் பெற்றுள்ளது. இம்மந்திரம் இந்தியாவிலே 3,000 ஆண்டுகளுக்கு மேலாகப் பல கோடி இந்துக்களால் காலை வழிபாட்டிலே பத்தி சிரத்தையோடு ஓதப்பட்டு வருகின்றது. இதன் தமிழ் வடிவம் வருமாறு:

**"செங்கதிர்த் தேவன் சேண்விளங் கவிரொளி**
**சிந்தையில் வைக்குதும் அன்னான்**
**உந்தியெம் உளத்தை ஊக்குதற் பொருட்டே"**

'சவிதா' எனக் கருதப்படும் தேவன் சூரியனிலும் வேறானவன். இவன் சூரியனின் கதிர்களைத் துணைக்கொண்டு ஒளி பரப்புபவன், சூரியனை இயங்கச் செய்பவனும் இவனே. சவித்திரு (இதன் எழுவாய் வடிவமே சவிதா) என்னும் வடமொழிச் சொல்லுக்கு 'இயக்குபவன்' என்பதே பொருள். கடவுள் என்னும் தமிழ்ச் சொல்லுக்கும் இதுவே பொருள் (கடவுதல் - செலுத்துதல்). வடமொழி நிகண்டுகளில் இச்சொல் சிவனுக்குரிய ஒரு பெயராகத் தரப்பட்டுள்ளது. இது இருக்கு வேத காலத்துக்குப் பிற்பட்ட ஒரு வளர்ச்சியாகலாம். எவ்வாறெனினும், இம்மந்திரம் சைவ முறையிலேயே ஓதப்படுகின்றது. இது ஒளிமயமாய் எங்கும் நிறைந்த உள்பொருள் பற்றிய உண்மையையும், அது வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டியதன் இன்றியமையாமையையும் எமக்கு உணர்த்துகின்றது.

## (2) யசுர் வேதம்

இவ்வேதம் செய்யுள் நடையிலும், உரைநடையிலும் அமைந்த வேள்வி மந்திரங்களைக் கொண்டுள்ளது. இவை வேள்விக் கிரியைகளைச் செய்யும் அத்வர்யு என்னும் புரோகிதனால் ஓதற்குரியவை. யசுர் வேதம் பல்வேறு சங்கிதைகளாகப் பயின்று வந்துள்ளது. இச்சங்கிதைகள் கிருஷ்ண யசுர் வேதம் (கருநிற யசுர் வேதம்) என்றும், சுக்கில யசுர் வேதம் (வெள்ளைநிற யசுர் வேதம்) என்றும் இரு வகைப்படும். இவற்றுள் **கிருஷ்ண யசுர் வேதம், வேள்வி** மந்திரங்களையும் அவற்றுக்குரிய கிரியை நெறியை அறிவுறுத்தும் விதிகளையும் தருகின்றது. **சுக்கில யசுர்** வேதம், அம்மந்திரங்களோடு கிரியை முறைகள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களைப் பிராமணம் எனப்படும் பிற்சேர்க்கையாகத் தருகின்றது. யசுர் வேதம் காட்டும் சமூக, சமய நிலைமைகள் இருக்கு வேதம் காட்டுவனவற்றிலும் பெரிதும் பேறுபட்டவை. இங்கே, இருக்கு வேத கால இயற்கை வழிபாடு பின்னணிக்குப் போய்விட, சிக்கலான கிரியை முறைகளைக் கொண்ட வேள்வி வழிபாடே முதன்மை பெறுகின்றது. இவற்றை நடத்துவதற்குச் சிறப்பான பயிற்சி பெற்ற புரோகிதரும் வேண்டியவராய் இருந்தனர். இதனாலே புரோகித வகுப்பாரின் செல்வாக்கு ஓங்கிக் காணப்பட்டது. மேலும், யசுர் வேதத்திலே ஆரியரல்லாத ஆதிக் குடிகளின் சமய வழிபாட்டு முறைகளும் தலைகாட்டுகின்றன. உதாரணமாக, இருக்கு வேதத்திலே காணப்படாத நாக வழிபாடு இங்கே காணப்படுகின்றது.

வழிபாட்டு முறையிலும் புதியதொரு திருப்பத்தை யசுர் வேதத்தில் காணலாம். தெய்வங்களுக்குப் பல பெயர்களைக் கூறும் இப்புதிய முறை யசுர் வேதத்திலேயே முதன்மை பெறுகின்றது. சுக்கில யசுர் வேதத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் வரும் **சதருத்திரியம்** இதற்கு எடுத்துக்காட்டாகும். இங்கே உருத்திரனுககு நூறு பெயர்கள் கூறி, உருக்கமாக

வேண்டுதல் செய்யப்படுகின்றது. கோபங் கொள்ளாதிருக்குமாறும், கோபம் மிகுந்து தீங்கு விளைத்து உயிர்களை அழிக்காதிருக்குமாறும் உருத்திரன் வேண்டப்படுகின்றான். இருக்கு வேதத்திலே முதன்மையில்லாது சிறு தெய்வமாகக் காணப்பட்ட உருத்திரன் இங்கே சிறப்புமிக்க சிவனாகவே மாறி விடுகின்றான். பின்வந்த புராண நூல்களிற் சிவனுக்கே சிறப்பாக உரிய பல பெயர்கள் இங்கே உருத்திரனுக்கு ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. இப்பெயர்களுள் சங்கரன், சம்பு, சிவன், சிவதரன், நீலக்கிரீவன், பசுபதி என்பன குறிப்பிடத்தக்கன. மேலும், வைத்தியர்களுக்குள்ளே தலைசிறந்த மகாவைத்தியனாகவும் அவன் வருணிக்கப்படுகின்றான். பயங்கரமான இயல்புடைய உருத்திரனுக்கு மங்கல வழக்காக உள்ள பெயரே 'சிவன்' (மங்கலமானவன்) என்பது. ஆனால், சிந்துவெளி நாகரிகம் உலகுக்குத் தெரியவந்த பின்னர், திராவிட மக்கள் தம் முதன்மைக் கடவுளுக்கு வழங்கிய பெயரையே ஆரியர் உருத்திரனுக்கு ஆக்கிக் கொண்டனர் என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுவர். உண்மை எதுவாயினும் சிவபெருமானது ஆணையால் அழித்தல் தொழிலைச் செய்யும் மூர்த்தியே உருத்திரன் என்று சைவர் கொள்கின்றனர். ஆதலால், உருத்திரனைச் சிவனாகவே உபசரித்துக் கூறுவது சைவ மரபாகும். இவ்வகையிலே, யசுர் வேதத்தில் உள்ள சத ருத்திரியம் சைவர்களுக்கு முக்கியமானது. இது ஸ்ரீருத்திரம் என்றும் பெயர் பெறும். தென்னாட்டுக் கோயிற் பூசையிலே இறைவனுக்கு 108 பெயர் (அட்டோத்தர நாமம்) சொல்லியும், 1008 பெயர் (சகஸ்ர நாமம்) சொல்லியும் அருச்சனை செய்யும் வழக்கத்துக்கு இந்த யசுர் வேதமே வழிவகுத்தது.

## (3) சாம வேதம்

தெய்வங்களை வணங்குவதற்காகப் பெரும்பாலும் இருக்கு வேதத்திலிருந்து எடுத்து ஒழுங்கு செய்யப்பட்ட பாடல்களின் தொகுதியே சாம வேதம். சாமம் என்பதற்கு இசை என்பதே பொருள் வேள்விகளிலே இசையோடு பாடப்படுவதற்காகத் தொகுக்கப்பட்டவையாதலின், இப்பாடல்களுக்குத் தனிச் சிறப்பு இல்லை. தெய்வ வழிபாட்டிலே இசை சிறப்புற்று விளங்குவதை இவ்வேதம் குறிக்கின்றது. பிற்காலத்திலே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் பண் அமைந்த தமிழ்ப் பாடல்களாற் சிவனை வழிபட்டதற்குச் சாமவேதம் முன்னோடியாய் அமைந்ததெனலாம்.

## (4) அதர்வ வேதம்

முதல் மூன்று வேதங்களைப் போல வேள்விகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிராத இவ்வேதம் மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றுக்கு முதன்மை அளிக்கின்றது. இது செய்யுள் நடையில் அமைந்த வசிய மந்திரங்களையும் செபங்களையும் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. இதில் மந்திரம், கட்டளை, துதி ஆகிய மூன்றும் கலந்துள்ளன. ஆரியர் அல்லாதாரும் ஆரியருமான ஆதிகாலத்துப் பொதுமக்களிடம் காணப்பட்ட சமய ஆசாரங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றைப் பேணி வைத்திருப்பதால், அதர்வ வேதம் மானிடவியல் ஆராய்ச்சியாளருக்கு முக்கியமானது. இந்தியாவின் விஞ்ஞான வரலாற்றை ஆராய்வதற்கு இது சிறப்பாகப் பயன்படத்தக்கது. நோய்களைத் தீர்ப்பதற்கு மூலிகைகளுக்குள்ள வியத்தகு ஆற்றல்களை விரித்துக் கூறுவதால், பிற்கால மருத்துவக் கலையின் முறைகளை இவ்வேதம் தன்னகத்தே கொண்டுள்ளதெனலாம். சமய தத்துவக் கொள்கைகளைப் பொறுத்த வரையில், இருக்கு

வேதச் சிந்தனைகளுக்கும் உபநிடதச் சிந்தனைகளுக்கும் இடைப்பட்ட நிலைமாறும் போக்கை அதர்வ வேதம் காட்டுகின்றது. ஆரியருடைய கொள்கைகளும் ஆரியரல்லாத மக்களின் கொள்கைகளும் கலந்து உருவான சமயமே அதர்வ வேதத்திற் காணப்படுகின்றது. உருத்திரனைச் சிவனோடு ஐக்கியப்படுத்தும் முயற்சி இருக்கு வேத்திலே முளைகொண்டது என்பதனை முன்னர் கண்டோம். இந்த முளையின் இடைநிலை வளர்ச்சியை அதர்வ வேதத்திற் காண்கின்றோம். இது சுவேதாஸ்வதர உபநிடதத்திலே முழு வளர்ச்சியடைந்து, முறையான சைவ மெய்யியலாக விளங்குவதைப் பின்னர் காண்போம்.

## (இ) உபநிடதங்கள்

எமது சமயத்தின் வளர்ச்சியில் தத்துவ சிந்தனைக்கு அடிப்படையாகவும் ஒழுக்க விழுமியங்களின் மேம்பாட்டிற்கு உறுதுணையாகவும் அமைபவை உபநிடதங்கள். இதனால் வேதத்தின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ள உபநிடதங்கள் தனிச் சிறப்புப் பெறுகின்றன.

உபநிடதம் என்பது "மறைபொருட் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியனின் அருகில் இருந்து கேட்டல்" எனப் பொருள்படும். வேதத்தின் ஞான காண்டப் பகுதி உபநிடதம் என்று அழைக்கப்படும். உபநிடதம் வேதத்தின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ளதால் வேதாந்தம் எனவும் வேதத்தின் முடிந்த முடிவான பொருளை உள்ளடக்குவதால் 'வேத சிரசு' எனவும் கூறப்படும்.

உபநிடதங்கள் எனப் பெயர் கொண்ட நூல்கள் எல்லாமாக 108 உள்ளன. அவற்றுட் பன்னிரு உபநிடதங்கள் சிறப்புடையன. அவையாவன.

ஈச உபநிடதம் (அல்லது ஈசா வாசியம்)
கேன உபநிடதம்

கட உபநிடதம்
பிரசின உபநிடதம்
முண்டக உபநிடதம்
மாண்டுக்கிய உபநிடதம்
தைத்திரீய உபநிடதம்
சாந்தோக்கிய உபநிடதம்
பிருகதாரணிய உபநிடதம்
ஐதரேய உபநிடதம்
கௌஷீதகீ உபநிடதம்
சுவேதாஸ்வதர உபநிடதம் என்பனவாகும்.

உபநிடதங்களிலே பிரமம் என்ற சொல் பரம்பொருளைக் குறிக்கும் ஒரு கலைச்சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது. உலகின் எல்லாவற்றின் தோற்றப்பாடுகளுக்கும் பிரமமே முதலும் முடிவுமாகவுள்ள ஆதாரம் என்பது உபநிடதங்களின் கருத்தாகும். உபநிடதங்களில் சீவான்மாவும் (உயிர்) பரமான்மாவும் (பிரமம்) ஒன்றே என்ற கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

எமது சமயச் சிந்தனை வளர்ச்சியின் சிகரமாக விளங்கும் உபநிடதங்கள் சிறந்த ஒழுக்கவியற் கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. ஆசிரியரும், மாணவரும் ஒருமனப்பட்டு ஈடுபடும் சிறப்பைக் கட உபநிடதம் சிறப்பாகக் காட்டுகின்றது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு வருமாறு :

"இறைவன் இரு வேமையும் காப்பானாக;
அவன் இரு வேமிடத்தும் அன்பு கொள்வானாக;
இருவேமும் ஒருங்கே ஊக்கத்தோடு முயல்வோமாக;
எமது கல்வி எமக்கு அறிவொளி ஊட்டுவதாக;
எம்மிடையே வெறுப்புத் தோன்றா திருப்பதாக;
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி".

அத்தோடு குருகுலக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர் மாணவனுக்கு இறுதி அறிவுரைகளைக் கூறி வீட்டுக்கு அனுப்புவார். அத்தகைய அறிவுரை ஒன்று **தைத்திரிய உபநிடதத்திற்** பின்வருமாறு காணப்படுகின்றது.

"உண்மைபேசுக; அறம்செய்க; ஓதுவது ஒழியேல்;
அன்னையைத் தெய்வமாய்ப் போற்றுக;
தந்தையைத் தெய்வமாய்ப் போற்றுக;
ஆசிரியனைத் தெய்வமாய்ப் போற்றுக."

இத்தகைய உபநிடதங்களுள் சைவ சமயத்தவர்க்குத் தனிச்சிறப்பு வாய்ந்தது **சுவேதாஸ்வதர உபநிடதம்** ஆகும். இந்த உபநிடதம் உருத்திரனே பிரமம், உருத்திரனே முழுமுதற் கடவுள், அவனுக்கு இணையான தெய்வம் வேறில்லை; அவன் தன் ஆற்றலால் எல்லா உலகங்களையும் ஆள்கின்றான்; எல்லாப் பொருள்களையும் படைக்கிறான்; காக்கிறான்; காலமுடிவில் அவற்றையெல்லாம் ஒடுக்கிக்கொள்கிறான் என்று கூறுகின்றது.

## (ஈ) சிவாகமங்களின் தோற்றமும் சிவ வழிபாடும்

வேதமும் ஆகமமும் இறைஉண்மையை எடுத்துக் கூறும் நூல்களாகும். அவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பர் ஆன்றோர். வேதங்களில் பொதுவான சமயக் கொள்கைகள் கூறப்பட்டாலும் ஆகமங்களில் வழிபாடுகளும் கிரியைகளும் சிறப்பாகவும் விரிவாகவும் கூறப்படுகின்றன. இதனால், வேதம் பொதுநூலெனவும், ஆகமம் சிறப்பு நூலெனவும் கொள்ளப் படுகின்றன.

ஆகமம் என்பதன் பொருள் 'தொன்று தொட்டு வரும் அறிவு' எனவும் 'இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும்

ஞான நூல்' என்றும் அறிஞர் பொருள் கொள்வர். ஆகமங்கள் சைவம், வைணவம், சாக்தம் ஆகிய சமயங்களுக்குத் தனித்தனியாக உள்ளன.

சைவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு ஆகும். இவற்றைச் சிவபெருமானே அருளிச் செய்தமையால் சிவாகமங்கள் என்பர். சைவ மரபிலே, ஆகமங்களைச் சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லியருளினார் என்றும், பின்னர் அவை சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றிச் சுத்தவித்தியா தத்துவத்திலிருந்து சதாசிவனால் அநந்தருக்கும், அவரால் ஸ்ரீ கண்டருக்கும் அவரால் தேவர்களுக்கும் அவர்களால் முனிவர்களுக்கும் முனிவர்களால் மநுடருக்கும், மநுடரால் மானுடருக்குமாக உபதேசிக்கப்பட்டதெனக் கூறுவர்.

சிவாகமங்கள் மிகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் சிவவழிபாட்டு முறைகளை விளக்கிக் கூறுவதனாலும் சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கிக் கூறுவதனாலும் சைவத்தின் பிரமாண நூல்களாகவும், சிறப்பு நூல்களாகவும் கொள்ளப்படுகின்றன.

சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் எனும் நான்கு பிரிவுகளை உடையன. ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடையச் செய்வதே சிவாகமங்களின் குறிக்கோளாகும். இவ்வகையில் கோயிற் கிரியைகளின் வகைகள், அவற்றைச் செய்யும், முறை, வழிபடுவோருக்குரிய இயல்புகள், சைவ சாதனங்கள், கடவுள் வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள் ஆகியவற்றை விரிவாக விளக்குகின்றன. இவை தவிர, ஆலய வழிபாட்டோடு தொடர்புடைய,

ஆலயம் அமைவதற்கான இடம்
ஆலய அமைப்பு முறை
படிம இலக்கணம்
படிமங்களை வார்க்கும் முறை
வாகனங்கள் அமைக்கும் முறை
தேர் அமைக்கும் முறை
அருச்சகர், சிற்பாசிரியர் ஒழுக்கம்
அடியார் இயல்பு

போன்றவை பற்றியும் கூறுகின்றன.

இச் சிவாகமங்களின் கருத்துக்களை திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் ஒன்பது தந்திரங்களில் சிறப்புற விளக்குகின்றது. எனவே, சிவாகமங்களே சைவசித்தாந்தக் கருத்துக்களின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றி உள்ளன எனக் கூறலாம்.

## (உ) புராணங்கள்

வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை விரிவாக விளக்க எழுந்தனவே புராணங்கள் ஆகும். 'புராணம்' என்பதன் பொருள் பழமை என்பதாகும். இது 'பழைய வரலாற்றைக் கூறும் நூல், என்று விரிந்து நிற்கும்.

புராணங்கள் உலகின் தோற்றம் (சர்க்கம்), ஒடுக்கம் (பிரதி சர்க்கம்), மனுவந்தரம், பரம்பரை (வம்சம்), அரசமரபு (வம்சானு சரிதம்) ஆகிய ஐந்தையும் கூறுவதால் புராணம் **பஞ்சலக்கணம்** எனப்படும்.

புராணங்கள் வட மொழியிலும், தமிழ் மொழியிலும் பாடப்பட்டுள்ளன. வடமொழிப் புராணங்களுள் மிகப் பழைமையானவை பதினெண் புராணங்கள் ஆகும். இவற்றை **மகாபுராணங்கள்** என்பர்.

பதினெண் புராணங்களாவன :

| | |
|---|---|
| பிரமம் | பிரமகைவர்த்தனம் |
| பதுமம் | இலிங்கம் |
| வைணவம் | வராகம் |
| சைவம் | வாமனம் |
| பாகவதம் | கூர்மம் |
| பவிஷ்யம் (பௌடிகம்) | மற்சம் |
| நாரதீயம் | காரூடம் |
| மார்க்கண்டேயம் | ஸ்காந்தம் |
| ஆக்கினேயம் | பிரமாண்டம் |

என்பனவாகும். இப் பதினெண் புராணங்களில் சிவபுராணங்கள் பத்து எனவும், விஷ்ணு புராணங்கள் நான்கு எனவும், அக்கினி, புராணம் ஒன்று எனவும், சூரிய புராணம் ஒன்று எனவும் ஏனைய இரண்டும் பிரம புராணங்கள் எனவும் வகுக்கப்பட்டுள்ளன.

வடமொழிப் புராணங்களான பதினெண் புராணங்களைத் தவிர, தமிழ் மொழியிலும் பல புராணங்கள் எழுந்துள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய 'சிவபுராணம்' என்பது தமிழில் முதன் முதலாகப் புராணம் என்ற பெயரில் இயற்றிய கவி நூலாகும். வடமொழிப் புராணங்களைத் தழுவித் தமிழில் எழுந்த புராணங்களாக கந்த புராணம், இலிங்க புராணம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். தமிழில் எழுந்த புராணங்களுள் சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியன மெய்யடியார் புராணங்கள் ஆகும். திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலியன தலங்களின் சிறப்பைக் கூறுகின்றன. இதனால் இவை தல புராணங்கள் எனப்படுகின்றன.

## (ஊ) இதிகாசங்கள்

இதிகாசம் என்பதன் பொருள் இப்படி முன்பு இருந்தது என்பதாகும். இதனைப் பழைய வரலாற்றைக் கூறும் நூல் என விரித்து நோக்கலாம். மகாபாரதம், இராமாயணம் என்பன இதிகாசங்களாகும். சிவரகசியம் என்னும் நூலும் இதிகாச நூல்களுள் அடங்கும் என்பர். பொதுவாக இதிகாசங்கள் மூன்று என்பதே மரபு. இதிகாசங்கள் மானுட விழுமியங்களை ஒழுங்குபடுத்திக் கூறுவதுடன் வேதப் பொருளை நன்கு அறிய உதவும் நூல்களாகவும் உள்ளன.

வேதவியாசரால் பாடப்பட்ட மகாபாரதம் குருகுலத்தவரின் கதையைச் சொல்கின்றது. வான்மீகியால் பாடப்பட்ட இராமாயணம் சூரிய வம்சத்தில் தோன்றிய இராமபிரானுடைய கதையைக் கூறுகின்றது. ஆயினும், இவ்விரு நூல்களும் விஷ்ணுவின் அவதாரக் கோட்பாட்டினை முக்கியப்படுத்திக் கூறும் அதே சமயம் சிவவழிபாட்டின் சிறப்பினையும் கூறிச் செல்லும்.

பாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே ஏற்பட்ட போர் பற்றிக் கூறப்படுகின்றது. அறத்தின் வழிநின்ற பாண்டவர்கள் இன்னலுற்றபோது கண்ணன் அவர்களுக்கு உறுதுணையாக நின்று தருமத்தைக் காப்பாற்றுகின்றார். போர்க்களத்தில் மனங்கலங்கி நின்ற அருச்சுனனுக்குக் கண்ணன் செய்த உபதேசமே 'பகவத்கீதை' எனப் பின்னாளில் சிறப்புப் பெற்றது. பாரதத்தில் அறம் வென்று மறம் தோற்கின்றது. "அல்லன செய்தார்க்கு அறம் கூற்றமாகும்" என்ற உண்மையைப் பாரதம் வலியுறுத்துகின்றது.

காத்தற் கடவுளான விஷ்ணு இராமனாக அவதரித்து இராவணனை அழித்த கதையைச் சித்திரிப்பது இராமாயணம். இந்நூல் தீயன செய்தோர் அழிவர் என்பதையும் அறம் வெல்லும் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

இதிகாசங்கள் பொதுவாக மக்களின் நல்வாழ்க்கைக்கான ஆலோசனை சொல்லும் நூல்களாகவும் அமைகின்றன. இன்ன காலத்தில் இன்ன செய்ய வேண்டுமென வழிவகை கூறுவனவாகவும் உள்ளன. நல்லொழுக்கம், பொறுமை, நேர்மை, அஞ்சாமை, தியாகம், நற்பண்புகள் முதலியன இவ்விரு நூல்களிலும் முக்கியத்துவம் பெற்றுப் படிப்போருக்கு நல்லறிவு ஊட்டி வழிகாட்டுகின்றன.

## பயிற்சி

(1) 'அ' பகுதிக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து, அதன் இலக்கத்தை உரிய கூட்டில் எழுதுக.

| 'அ' பகுதி | | 'ஆ' பகுதி |
|---|---|---|
| 1. சிந்துவெளி மும்முகமூர்த்தி | (  ) | காயத்திரி மந்திரம் |
| 2. உபாசனைக் காண்டம் | (  ) | சிவபுராணம் |
| 3. சவித்திரு என்னுங் கடவுளைப் போற்றுவது | (  ) | சகஸ்ரநாமம் |
| 4. ஆயிரத்தெட்டுப் பெயர் சொல்லும் அர்ச்சனை | (  ) | முந்துசிவன் |
| 5. பதினெண் புராணங்களில் பத்து | (  ) | ஆரணியகம் |

(2) சுருக்க விடை தருக.

1. சிந்துவெளியில் காணப்பட்ட வழிபாடுகள் எவை?
2. வேதத்தின் பகுதிகள் எவை? அவற்றைச் சுருக்கமாக விளக்குக.
3. சதருத்திரியம் என்றால் என்ன?
4. உபநிடத சிந்தனைகளில் கூறப்படும் பிரமம் பற்றிய கருத்துக்கள் இரண்டு தருக.
5. சைவ மரபிலே ஆகமங்களின் தோற்றம் பற்றி யாது கூறப்படுகிறது?
6. புராணம் பஞ்ச லக்கணம் எனப்படுவதேன்?
7. 'இதிகாசம்' என்பதன் பொருளைத் தெளிவுபடுத்துக.

# 4

# ஈழத்துச் சிவாலயங்கள்

# (அ) திருக்கேதீச்சரம்

## (1) அமைவிடம்

திருமூலர் 'சிவபூமி' என்று சிறப்பித்துக் கூறும் இலங்கையின், வடமேல் பாகத்தில் மன்னார் மாவட்டம் உள்ளது. அங்கு மாந்தை என்னும் பிரிவிலே, பாலாவித் தீர்த்தக் கரையிலே திருக்கேதீச்சரம் என்னுஞ் சிவத்தலம் அமைந்துள்ளது. புராதன காலத்திலே திருக்கேதீச்சரம் என்பது ஆலயத்தையும், மாதோட்டம் என்பது அது அமைந்துள்ள இடத்தையுங் குறித்தன. இக்காலத்திலே திருக்கேதீச்சரம் என்பது கோயிலுக்கும் அது அமைந்துள்ள இடத்துக்கும் பொதுவான பெயராக இருக்கின்றது. கேது ஈசனை வழிபட்ட தலம் என்னுங் காரணம் பற்றி இக்கோயில் 'திரு' என்னும் அடைமொழியோடு, 'திருக்கேதீச்சரம்' என்ற பெயரைப் பெற்றது.

இலங்கையிலே திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் என்னும் இரண்டு தலங்கள் மட்டுமே தேவாரப் பாடல் பெற்ற சிறப்பினை உடையன. திருக்கேதீச்சரநாதர் மீது திருஞானசம்பந்தரும் சுந்தரருந் தேவாரத் திருப்பதிகம் பாடியுள்ளனர். இராமேச்சரத்தை வழிபடச் செல்லும் அடியார்கள் ஒரு காலத்திற் கடலின் அக்கரையில் நின்று திருக்கேதீச்சரத்து அண்ணலைத் தொழுதனர். அதற்குச் சான்றாகத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரையும் சுந்தரமூர்த்தி நாயனாரையுங் கூறலாம்.

## (2) பண்டைய வரலாறு

மயன் என்பவன் தேவதச்சன், மகாதுவட்டா என்பவன் அவனுடைய தலைவன். இவர்கள் நிருமாணித்த தலம் திருக்கேதீச்சரம் என்பது மரபுக் கதை. மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி இத்தலத்தை வழிபட்டாள். தீர்த்த யாத்திரை செய்த அருச்சுனன் இதனை வழிபட்டானெனத் தட்சிணகைலாய புராணங் கூறுகின்றது. விசயனுடன் இலங்கைக்கு வந்த உபதிஸ்ஸன் என்னும் பிராமணன் திருக்கேதீச்சரத்திற் பூசை செய்தான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

இயக்கர்களும் நாகர்களும் இலங்கையின் பூர்வீகக் குடிகளாவர். இராவணன் இயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன். அவன் சிவபக்தன் என்பது வரலாறு. நாகர்களும் திருக்கேதீச்சரத்தை வழிபட்டதற்குச் சான்றாக 'நாகநாதர்' என்றொரு பெயர் திருக்கேதீச்சரநாதருக்கு இன்னமும் வழங்குகின்றது.

தொலமி என்னும் புவியியலறிஞர் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் மாதோட்டம் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். உரோமர், பாரசீகர், அராபியர், சீனர், இந்தியர் முதலிய பல தேசத்தவர்களுடன் மாதோட்டத்துக்கு வணிகத் தொடர்புகள் இருந்தனவென்பது அங்கு கண்டெடுத்த பண்டைய நாணயங்களால் அறியப்படும். கி.பி நான்காம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட ஸ்ரீமேகவண்ணன் என்னுஞ் சிங்கள அரசனின் காலத்தில் மாதோட்டத்திற் சைவக் கோயில் ஒன்று இருந்ததெனத் 'தாது வம்சம்' என்னும் நூல் கூறுகின்றது. இது புத்தரின் புனித தந்த வரலாறு பற்றிய நூலாகும்.

ஏறத்தாழ இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தைத் துறைமுகம் இருந்தது என்பதையும் அங்கிருந்து அக்காலத்தில் இந்தியாவுக்குச் செம்பு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் இலங்கைத் தொல் பொருள் ஆராய்ச்சித்

திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ். யு. தேரணியகலை என்பவர் 1997 இல் ஆராய்ச்சி முடிபாக வெளியிட்டுள்ளார். எனவே, மொஹெஞ்சோதாரோ, ஹரப்பாக் காலத்திலும் மாந்தை நிலவியது என்பது ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' என்று கூறப்பட்டதனால், இது கேந்திர முக்கியத்துவமுள்ள ஒரு வணிகப் பட்டினமாகத் திகழ்ந்தது என்பது புலனாகும்.

பிற்காலச் சோழர்களில் முதலாம் இராசேந்திரன், இடைக்காலப் பாண்டியர்களில் முதலாஞ் சுந்தர பாண்டியன் முதலியோர் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இதன் காரணமாகக் கி.பி. பதினோராம் நூற்றாண்டிலும் அதனை அடுத்த காலத்திலும், திருக்கேதீச்சரம் திருவரங்கக் கோயிலுக்கு இணையான ஏழு பிரகாரங்கள் சூழ்ந்த பெருங் கோயிலாகத் திகழ்ந்தது என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உண்டு. சோழரின் ஆட்சிக் காலத்தில் இது 'இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தது. இக்கோயிலை இலங்கை அரசர்கள் பலர் ஆதரித்தனர். புத்தகோயில்களுக்குக் கொடுக்கும் நன்கொடைகளுக்கான சட்டங்களை மீறுவோர் மாதோட்டத்திற் பசுக் கொலை செய்ததை ஒத்த பாவத்தைப் பெறுவரென்ற எச்சரிக்கை ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்களக் கல்வெட்டுச் சாசனம் ஒன்றிற் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் திருக்கேதீச்சரக் கோயில் மீது வைத்திருந்த மதிப்புப் புலப்படும்.

இத்தகைய சிறப்புடைய பண்டைக் கோயில், 1690 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டது. பின்னர் கடற் பெருக்கால் இருந்த இடமும் மறைந்தது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் கழிந்தபின், 1894 ஆம் ஆண்டு பண்டைக் கோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான அகழ்வு ஆராய்ச்சி ஆரம்பமானது. அதன் விளைவாகப் புராதன

கோயில் இருந்த இடங் கண்டுபிடிக்கப்பட்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒரு கோயிலுக்கு மகிமை தருகின்ற முக்கியமான அம்சங்கள் என்று தாயுமானவரின் பாடல் ஒன்று கூறுகின்றது. எனவே, திருக்கேதீச்சரக் கோயிலின் இந்த மூன்று அம்சங்களும் எத்தகையன என்பதனை ஈண்டு நாம் நோக்கலாம்.

## (3) மூர்த்திச் சிறப்பு

இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கேதீச்சரநாதன், இறைவி கௌரிஅம்பாள், தலவிருட்சம் வன்னிமரம். திருக்கேதீச்சரப் பெருமானை மாதோட்டத்து அண்ணல், அத்தன், அடிகள், எந்தை என்றிவ்வாறு போற்றித் திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியுள்ளார்.

சுந்தரர் தம் தேவாரத்தில் இவரை 'அட்டன்' என்கிறார். ஆகாயம், நிலம், நீர், வளி, அக்கினி, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் எட்டு மூர்த்தங்களும் ஒன்று சேர்ந்த மூர்த்தி அட்டன் எனப்படும். வேறொரு தேவாரத்தில் அவர் 'மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி' என்றார். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுத் திருக்கேதீச்சரநாதன் அயன், அரி, அரன் என்னும் மூவராயும் அம்மை, அப்பன் என இருவராயும் முக்கண்ணுடை மூர்த்தியாகிய ஒருவராயும் இருக்கிறார் என்பது அதன் கருத்து. 'இருவர்' என்று கூறும் பொழுது, 'ஈசன் சத்தி பின்னம் இல்லாதவன்' என்னுந் தத்துவப் பொருளும் பெறப்படுகின்றது. இவ்வாறாகத் தேவாதி தேவனாக விளங்குந் திருக்கேதீச்சரநாதன், மேலானவன் என்பதனை உணர்த்தும் வகையிற் சிரேட்டன் என்னுஞ் சொல்லைச் சுருக்கிச் 'சிட்டன்' என்றும் அவர் பாடியுள்ளார். திருவெண்ணை நல்லூரிலே தம்மைத் தடுத்தாட்கொண்ட பெருமானும் திருக் கேதீச்சரநாதனும் ஒருவரே என்னுங் கருத்தில் அவர், 'தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே' என்றார்.

ஞானசம்பந்தர் தமக்கு ஞானப்பால் ஊட்டிய எம்பெருமாட்டிக்கு நன்றியுணர்வு உடையவராய் அவரை முதற்கண் குறிப்பிட்டு, 'தேவி தன்னொடுந் திருக்கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே' என்று போற்றித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார். திருக்கேதீச்சரநாதனைக் கைதொழக் கடுவினை அடையா, கெடும் இடர் வினை, அருவினை அடையா, மொய்த்தெழும் வினைபோம், தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய் கேதீச்சரம் என்றெல்லாம் இம்மூர்த்தியின் சிறப்பினைப் பலவாறாகப் போற்றி அவர் தேவாரம் பாடியுள்ளார்.

## (4) தலச் சிறப்பு

பண்டைக் காலத்தில் நீர் வளமும் நில வளமும் பொருந்திய தலமாய்த் திருக்கேதீச்சரம் விளங்கியது. வாழைத் தோட்டங்கள், மாஞ் சோலைகள், தென்னம் பொழில்கள், வண்டு யாழ் செயும் மலர்ப் பூங்காக்கள், நிழல்தரு மரங்கள் ஆகியவை மாதோட்டத்தின் சிறப்புக்கும் ஆலயச் சூழலின் செழிப்பிற்கும் மெருகூட்டின.

கடல் வாய்ப் பொன் இலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய மாதோட்டம் என்று ஞானசம்பந்தரின் தேவாரத்திலும், வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம், வானத்துறு மலியுங் கடல் மாதோட்டம், கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்டம் என்று சுந்தரரின் தேவாரத்திலும் பாடப்பட்டிருத்தல் திருக்கேதீச்சரப் பகுதியின் கடல்படு திரவிய வளத்தினையும் கடல் வணிக மேம்பாட்டினையுந் தெளிவாகக் காட்டுகின்றது.

திருக்கேதீச்சரம் ஆதிகாலத்திற் கேது என்னுங் கிரகம் பூசித்த தலம் என்பதும், 'இராவணன் மேலது நீறு' என்று ஞானசம்பந்தராற் சிறப்பிக்கப்பட்ட இராவணனின் துணைவியாகிய மண்டோதரி வழிபட்ட தலம் என்பதும் இத்தலத்தின் பழமையையும் மகிமையையுந் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

## (5) தீர்த்தச் சிறப்பு

ப்ாலாவி என்பது இந்தச் சேத்திரத்தின் புண்ணிய தீர்த்தமாகும். இது சுந்தரர் பாடிய தேவாரத்தில் 'பரிய திரை எறியா வரு பாலாவி' எனப் புகழப்பட்டது.

இந்தத் தீர்த்தத்தின் சிறப்பினைப் 'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி' எனச் சுந்தரர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது தொண்டர்கள் போற்றுந் தீர்த்தமாக விளங்கிய பாங்கினை அவர் 'பத்தாகிய தொண்டர் தொழு பாலாவி' என்று புகழ்ந்துள்ளார்.

மகா சிவராத்திரி காலத்தில் அடியார்கள் வெள்ளிக் குடங்களிற் பாலாவித் தீர்த்தத்தைத் தாமே கொண்டு வந்து மகாலிங்கப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்தல் கண்கொள்ளாக் காட்சியாகும். புராதன கோயிலின் மூலத்தானத்தில் இருந்த இந்த மிகப் பெரிய மகாலிங்கம் இப்பொழுது கோயிலின் மேற்குப் பிரகாரத்திற் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இது இக்கோயிலின் பண்டைப் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றது. பாலாவியிலிருந்து தீர்த்தக் காவடியாகக் கொண்டு வரப்படுகின்ற தீர்த்தம் இதற்கே அபிடேகஞ் செய்யப்படும்.

இந்தியாவிலே தல யாத்திரை செய்வோர் கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி, குமரித்துறை, சேது சமுத்திரம் என்னும் இப்புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவர். அது போலவே ஈழத் திருநாட்டிலும் பாலாவித் தீர்த்தம் அமைந்துள்ளது. இங்கு பிதிர்க் கடன் செய்வோர் காசி, காயா, காஞ்சி என்ற புண்ணிய சேத்திர வரிசையிற் காயாவிற் செய்த பலனைப் பெறுவர் என்பது சைவ மரபு. எனவே, இந்தத் தீர்த்தக் கரையில் ஆடி அமாவாசையிலும் அந்தியேட்டித் தினங்களிலும் பலர் பிதிர்க்கடன் செய்வதுண்டு.

## (6) புதிய கோயில்

ஆறுமுகநாவலர் 1872 ஆம் ஆண்டு வெளியிட்ட 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்னும் விஞ்ஞாபனத்திற் கூறியுள்ளதை ஈண்டு நோக்குதல் சாலப் பொருத்தமானது. "..............இத்திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்தில் இருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே........... இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிதாக உபகரிக்கினும் எத்துணைப் பொருள் சேர்ந்துவிடும்.............. இத்திருப்பணியினை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வார்" என்பது அவருடைய பணிவான வேண்டுகோள். இன்றுள்ள புதிய கோயில் உருவாதற்கு இந்த வேண்டுகோளே தூண்டுதல் அளித்தது.

1894 ஆம் ஆண்டு தை மாதம் பசுபதிச் செட்டியாரின் தலைமையில் அங்கு சென்ற சைவர்கள் காடு வெட்டிக் கோயிலைத் தேடினர். இறைவனின் சித்தமாக மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழப் பத்து மீற்றர் ஆழத்திற் பழைய கோயிலின் தீர்த்தக் கிணறு காணப்பட்டது. பின்னர் அக்கோயிலிற் பிரதிட்டை செய்திருந்த மகாலிங்கம், சோமாஸ்கந்தர், விநாயகர், நந்தி முதலிய விக்கிரகங்கள் கண்ணுக்குத் தென்பட்டன. அவ்வாண்டு ஆவணி மாதம் பழைய கோயில் இருந்த இடத்துக்கு ஏறத்தாழ கால் கிலோமீற்றர் வடக்கே சிறிய கோயில் ஒன்றினை நிறுவினர். அக்கோயிலின் பரிபாலனம் நாட்டுக் கோட்டை நகரத்தாரிடம் இருந்தது. அவர்கள் 1903 ஆம் ஆண்டு கற்கோயில் ஒன்று கட்டிக் கும்பாபிடேகஞ் செய்வித்தனர். அன்று இராமேச்சரம் வழியாகக் காசியிலிருந்து கொணர்வித்த சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமுமே இன்றும் மூலத்தானத்தில் உள்ளன. அகழ்ந்தெடுத்த சோமாஸ்கந்தர் இப்பொழுதும் திருவிழாவுக்கு எழுந்தருளுதல் வழக்கம்.

## (7) பூசைகளும் விழாக்களும்

இங்கு ஆறு காலப் பூசைகள் ஒழுங்காக நடைபெறும். மகாசிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். பங்குனி உத்தரத்திலும் பிற விசேட தினங்களிலும் சிறப்பான பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறும். பிரதோஷத் திருவிழாவுஞ் செய்யப்படும்.

இக்கோயிலின் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, வைகாசி விசாகத்திலன்று பத்தாந் திருவிழாவாகத் தீர்த்த உற்சவம் நடைபெறும் வகையில் அமைகின்றது. தீர்த்த உற்சவம் பாலாவித் தீர்த்தத்தில் இடம்பெறும். ஆறாம் நாள் கலை அம்சம் மிக்க பிச்சாடணமூர்த்தி பிச்சையெடுக்க எழுந்தருளுங் காட்சி காண்டற்கரியது. ஏழாம் நாள் திருக்கல்யாண விழாவிலே திருக்கேதீச்சரநாதர் கௌரி அம்பாள் சமேதரராய் மங்கலக் கோலத்திற் காட்சி தந்தருளுவர். பக்தோற்சவம் எட்டாம் நாள் திருவிழாவாக நடைபெறும். ஒன்பதாம் நாள் நடைபெறுகின்ற தேர்த் திருவிழாவுக்கு ஐந்து தேர்கள் இழுக்கப்படும். மகோற்சவ காலப் பத்து நாள்களுங் கழிந்த பின்னர் மறுநாள் மௌன உற்சவம் நடைபெறும். இது அநேகமான கோயில்களிற் காணமுடியாத அற்புதமான ஓர் உற்சவமாகும்.

இலங்கையிலுள்ள பல்வேறு தமிழ்ப் பாடசாலைகள் திருவிழாக் கால உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்தல் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியதொன்று.

## (8) குருகுலம்

சிவானந்த குருகுலம் என ஒரு தாபனம் இங்கு இயங்கி வந்தது. இது சைவ சமயக் குருமார் தங்கி இருந்து குருத்துவப்

பயிற்சி பெறுகின்ற கல்விக்கூடமாகும். இதனைத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையே நடாத்தியது.

## (9) அடியார் சேவை

கோயிலுக்கு வரும் அடியார்கள் தங்குவதற்குத் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், சிவராத்திரி மடம், திருவாசக மடம், கௌரீசர் மடம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மடம், நாவலர் மடம், நகரத்தார் மடம் எனப் பல தங்குமிடங்களும் இங்குள்ளன.

## (10) நூல்கள்

இக்கோயிலின் வரலாறு பற்றிக் கூறும் நூல்கள் தட்சிண கைலாய மான்மியம், மாந்தைப் பள்ளு என்பனவாகும். திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம், திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடு தூது, திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல், திருக்கேதீச்சரப் புராணம், தீருக்கேதீச்சரத்துக் கௌரி நாயகி பிள்ளைத் தமிழ் முதலியனவை திருக்கேதீச்சரக் கோயில் மீது பிற்காலத்தில் எழுந்த செய்யுள் இலக்கியங்களாகும்.

### பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. ஈழத்திலுள்ள தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் எவை?
2. திருக்கேதீச்சரம் எங்கு அமைந்துள்ளது?
3. திருக்கேதீச்சர ஆலயத்திற்குப் பணி செய்த மன்னர்கள் சிலரின் பெயரைத் தருக.
4. இந்த ஆலயத்தின் இறைவன் பெயர், இறைவி பெயர், தீர்த்தம் என்பவற்றைக் கூறுக.
5. இறைவனின் அட்ட மூர்த்தங்களும் எவை?
6. இத்தலத்தின் மீது தேவாரம் பாடியோர் யாவர்?

## (ஆ) திருக்கோணேச்சரம்

### (1) அமைவிடம்

இலங்கையின் கீழ்த் திசையில் அமைந்துள்ள இயற்கை எழில் மிக்க நகரம் திருக்கோணமலை. இலங்கையின் மிகப் பெரிய நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்திற் கடலுடன் கலப்பதால் அப்பிரதேசம் நீர் வளமும் நில வளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. அங்கு சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலே திருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. அது அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்ட புதிய கோயிலாகும்.

### (2) பண்டைய வரலாறு

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கோயில் ஒன்று சமுத்திர ஓரத்தில் அந்த மலையின் அடிவாரத்தில் இருந்ததென நம்பப்படுகின்றது. அது கி.மு. 306 இல் நிகழ்ந்த கடல் கோளினாற் சமுத்திரத்தினுள் மூழ்கிவிட்டது. தெனன்று என்னும் வரலாற்றாசிரியர் எழுதிய 'இலங்கைச் சரித்திரம்' என்னும் நூல் இவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறுகின்றது. ஆழ்கடலில் அமர்ந் திருக்குங் கோணேச்சரப் பெருமானுக்கு இன்றும் மலைப் பூசை ஒன்று செய்யப்படுவதை நாம் காணலாம். மலையின் அடியில், ஆழ்கடலுக்கு எதிரே, மலைக்குகை போன்று பண்டைக் கோயிலின் மூலத்தானத்தின் ஒருபகுதி இன்னமும் எஞ்சியிருக்கின்றது. அது பல்லவர் காலக் குகைக் கோயில் போன்றது. அக்கோயிலின் மிகுதி சமுத்திரத்தின்அடியில் உள்ளதென 1961 இல் ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மைக்வில்சன் என்பர் கூறியுள்ளார்.

இராவணன் தென் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலே தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இராவணன் தன் தாயாருக்குச் சிவலிங்கம் ஒன்று பெற விரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிண கைலாய புராணங் கூறுகின்றது. இதற்குச் சான்று பகர்வது போன்று இம்மலைப் பாறையில் இராவணன் வெட்டு என்ற பெயருடன் மலைப் பிளவு ஒன்று இன்னமும் இருக்கின்றது. இராவணன் கிறிஸ்து யுகத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனுடைய காலத்துக்குப் பின் கடல்கோள் ஒன்று நிகழ்ந்தது என்றும் 'ராஜாவளிய' என்னும் புத்த சமய வரலாற்று நூல் கூறுகின்றது.

கடல் கோளுக்குப் பின் மீண்டுஞ் சுவாமிமலை உச்சியில் அமைக்கப்பட்ட கோயில் கி.பி. ஏழாம் நாற்றாண்டிற் சீருஞ் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இதனையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "தாயினும் நல்ல தலைவர்" என்னுந் தேவாரத்தில், "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே" என்று போற்றிப் பாடியுள்ளார். சோழர், பாண்டியர், ஆரியச் சக்கரவர்த்திகள் முதலானோர் இக்கோயிலை ஆதரித்தனர். குளக்கோட்டு மன்னன் குளந் தொட்டு வளம் பெருக்கித் திருப்பணிகள் பலவுஞ் செய்வித்தவன் என்பது வரலாறு. இவன் திருக்கோணேச்சர ஆலயத்துக்குத் திருப்பணி மட்டுமன்றிச் சோதிட முற்கூறலுடன் அமைந்த கல்வெட்டு ஒன்றினையுஞ் செய்வித்தான். அது கோட்டை வாயிலிலுள்ள கற்றூணிற் பதிக்கப்பட்டு இன்னமும் இருக்கின்றது. அதனை ஈண்டு நோக்குதல் சாலப் பொருத்தமானது.

**முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப்**
**பின்னே பறங்கி பிரிக்கவே - மன்னவபின்**
**பொண்ணா ததனை யியற்றவழித் தேவைத்து**
**எண்ணாரே பின்னரசர் கள்.**

என்பது அக்கல்வெட்டு. குளக்கோட்டனின் திருப்பணியால் அமைந்த இவ்வாலயத்தைப் பறங்கியர் உடைப்பார்கள். பின்னர் அரசர்கள் இதனைப் பேணமாட்டார்கள் என்று இதன் எதிர் காலம் பற்றி இங்கு குறிப்பிட்டிருத்தல் வியப்புக்குரியது.

இக்காலத்திற் சிவராத்திரி தினத்திற் கோணேச்சரப் பெருமானுக்கு நகர்வலம் வருதல் என்னுந் திருவிழா ஒன்று சிறப்பாக நடைபெறுகின்றது. அக்காலத்திலும் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்வாறாக 1624 ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு நாளில் நகர்வலம் வருந் திருவிழா ஒன்று நடைபெற்றது. இதற்காக மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவாக அடியார்களுடன் கோயிலிலிருந்து நகருக்கு எழுந்தருளினார். அவ்வேளையிற் போர்த்துக்கேயப் படைவீரர் பிராமணர்கள் போல வேடந் தாங்கிக் கும்பிடப்போவது போன்று கோயிலினுட் புகுந்தனர். அந்நேரத்திற். கோயிலின் உள்ளே பூசகர்கள் சிலரும் வேலையாளரும் மட்டுமே எஞ்சியிருந்தனர். கொன்ஸ்ரன்ரயின் டீசா என்பவனுடைய தலைமையிற் சென்ற இப்போர்வீரர் எதிர்த்தவர்களை வெட்டிக் கொன்றுவிட்டுக் கோயிலிலிருந்த தங்க, வெள்ளி நகைகளையும், விலைமதிப்புமிக்க பிற பொருள்களையும் சூறையாடிக்கொண்டு சென்றனர். அதன் பின்னர் அடியார்கள் சில விக்கிரகங்களை அகற்றி மறைத்து வைத்தனர். போர்த்துக்கேயர் பீரங்கிகளுடன் மீண்டும் வந்து கோயிலை முற்றாக அழித்தனர். போர்த்துக்கேயர் அழித்த கோயிலில் ஆயிரங்கால் மண்டபமும் பெரியதொரு தீர்த்தக் கேணியும் பிற மண்டபங்களும் இருந்தன என்பது அவர்கள் வரலாற்றுச் சான்றாக வரைந்து வைத்த படம் ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது. கொன்ஸ்ரன்ரயின்டீசா செய்த சிவத்துரோகத்துக்காக அவன் 1630 ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொல்லப்பட்டான்.

## (3) புதிய கோயிலின் வரலாறு

1944 ஆம் ஆண்டு திருக்கோணமலைக் கோட்டையினுள்ளே நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்த பொழுது விஷ்ணு, மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன. 1950 ஆம் ஆண்டு ஆடி மாதத்திற் சுவாமிமலைக்கு அண்மையிற் கடற்கரை வீதியருகே கிணறு ஒன்று வெட்டப்பட்டபொழுது மூன்று விக்கிரகங்கள் கிடைத்தன. வேறோர் இடத்தில் அகழ்ந்தபொழுது மேலும் இரண்டு விக்கிரகங்கள் கிடைத்தன. இந்த விக்கிரகங்கள் எல்லாம் 1952ஆம் ஆண்டிற் பிரதிட்டை செய்யப்பட்டன.

1950. 07. 03 அன்று கலாநிதி பாலேந்திரா அவர்களின் தலைமையிலே திருக்கோணேச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஆரம்பமானது. இச்சபையின் பெருமுயற்சியாற் பழைய கோயில் இருந்த இடத்தில் மீண்டுந் திருக்கோணேச்சரர் ஆலயம் அமைக்கப்பட்டு 1963. 03. 03 அன்று மகா கும்பாபிடேகம் நிறைவெய்தியது. பழைய கோயிலுடன் ஒப்பிடும் பொழுது இது சிறிய கோயிலாகவே இருக்கின்றது.

## (4) மூர்த்திச் சிறப்பு

இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கோணேச்சரர், இறைவி பெயர் மாதுமை அம்பாள். தலவிருட்சம் கல் ஆலமரம். இப்பொழுதுள்ள கோயிலை அடுத்து இம்மலையின் வட முனையிற் பாறையினுள் வேர்வைத்து இந்த ஆலமரம் செழிப்பாக வளர்ந்து நிற்கின்றது.

சோழ நாட்டிலே பழையாறை என்பது கி.பி 831 இல் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. அங்கு குமராங்குசன் என்னும் அரசன் அப்பொழுது ஆட்சி செலுத்தினான். இவனுடைய மகள் சீர்பாததேவி.

நகுலேச்சரத் தலவரலாற்றிற் குறிப்பிட்டுள்ள மாருதப்புர வீகவல்லி என்பவளுக்கு நரசிங்கன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் சீர்பாததேவியைத் திருமணஞ் செய்தான். இவர்கள் இருவரும் தம் சுற்றத்தாருடன் இலங்கைக்கு வருவதற்குச் சோழநாட்டிலிருந்து கப்பலிற் புறப்பட்டனர். அப்பொழுது சீர்பாததேவி இலங்கையின் நாட்டு வளத்தைப் பார்க்க விரும்பினாள். எனவே, கப்பல் இலங்கையின் கிழக்குக் கரையோரமாகப் பயணஞ் செய்தது.

கப்பல் திருக்கோணமலையை அண்மித்தபொழுது திருக்கோணேச்சரந் தென்பட்டது. அரசி அவ்விறைவரை வணங்கினாள். அதே நேரம் கப்பலும் நங்கூரம் இட்டது போன்று நிலையாய் நின்றது. அரசி மிகவுந் துயரடைந்து விக்கினங்களை அகற்றுபவரான விநாயகரைத் தொழுதாள். பின்னர் படகோட்டியைக் கப்பலின் கீழே சென்று பார்க்குமாறு பணித்தாள். கப்பல் தரையிற் பட்டுவிட்டதென்றே அவள் கருதினாள். எனினும், அங்கு தரை இருக்கவில்லை. ஆயின், கடலில் மிகுந்த ஆழத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்று இருந்தது. அதனை அவள் கப்பலுக்குள் எடுப்பித்த பின்னர் கப்பல் மீண்டும் ஓடத்தொடங்கியது. இவ்வாறாகக் கடல்கோளாற் கீழே சென்ற புராதன ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் இவ்வளவு மகிமை உடையதென்றாற் கோணேச்சரப் பெருமானின் மகிமையைக் கூறவும் வேண்டுமோ?

திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவுக்கு எழுந்தருளிய பின்னரே போர்த்துக்கேயர் கோயிலினுட் புகுந்தனர் என்று முன்னர் கூறப்பட்டது. எனவே, அந்த விக்கிரகங்கள் காப்பாற்றப் பட்டிருத்தல் வேண்டும். அவை இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட

விநாயகரும் சோமாஸ்கந்தருமாக இருக்கலாம். இந்த விநாயகர் விக்கிரகம் மிகவுஞ் சிறப்பான அம்சங்களைக் கொண்டுள்ளது. பழைய கோயிலின் பல விக்கிரகங்கள் தற்செயலாகக் கிடைத்தன என்பது இறைவனின் செயல். இதுவும் திருக்கோணேச்சரப் பெருமானின் மூர்த்திச் சிறப்பினையே புலப்படுத்துகின்றது.

## (5) தலச் சிறப்பு

இந்தத் தலத்தின் சிறப்புக் காரணமாகவே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோணேச்சரப் பெருமான் மீது தேவாரத் திருப்பதிகம் பாடினார். இத்தலத்தின் மகிமையை அடியார்கள் சொல்லக்கேட்டு அவர் இப்பதிகத்தைப் பாடினார். அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழ் ஒன்றில்,

**"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்**
**திருக் கொணாமலை தலத்தாறு கோபுர"**

என்று இத்தலத்தை வருணித்துள்ளார்.

குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் இத்தலம் அமைந்துள்ளது. திருக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென் கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் என்பன இத்தலத்தின் பிற பெயர்கள்.

## (6) தீர்த்தச் சிறப்பு

இக்கோயிலின் தீர்த்தம் பாவநாசம் எனப்படும். இந்தச் சொல்லின் பொருளை நோக்கும்பொழுது இக்கோயிலின் தீர்த்தச் சிறப்புப் புலப்படும். இங்கு தீர்த்தமாடுபவர்களின் பாவம் தொலைந்துவிடும் என்பது இதன் கருத்து.

சுவாமி மலையின் தென் பக்கத்தில் ஆழமான ஒரு கிணறாகப் பாவநாசத் தீர்த்தம் இப்பொழுது இருக்கின்றது. இதனைச் சுனை என்று கூற முடியாத அளவுக்குப் போர்த்துக் கேயர் பழைய கோயிலை இடித்து அங்கிருந்த தீர்த்தக் கேணியையுஞ் சுனையுந் தூர்த்துவிட்டனர். இப்பொழுதுள்ள கேணியுந் தீர்த்தக் கிணறுஞ் சேர்ந்த பெரிய கேணி ஒன்று முன்பு இருந்ததென ஊகிக்கப்படுகின்றது. அற்புதமான இந்தத் தீர்த்தத்தின் ஒரு சிறு பகுதியையாயினும் பாவநாசத் தீர்த்தக் கிணற்றின் மூலம் திருக்கோணேச்சரர் தம் அடியார்களாகிய நமக்குத் தந்தருளினாரே என்பது இந்தத் தீர்த்தத்தின் சிறப்பு.

## (7) பூசைகள், விழாக்கள்

இங்கு ஆறுகாலப் பூசைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. சிவராத்திரிக் காலத்திலே திருக்கோணேச்சரப் பெருமான் நகரத்தினுள்ளே திருவுலாவாக எழுந்தருளுதல் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோயிலின் மகோற்சவம் பங்குனி உத்தரத்திலே தொடங்கிப் பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும்.

## (8) நூல்கள்

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரைநடையிலுங் கவிதையிலுங் கூறுகின்றது. சீர்பாதகுல வரலாறு, மட்டக்களப்பு மான்மியம், ராஜாவளிய, மச்சபுராணம், திருக்கோணாசலப் புராணம், இலங்கைச் சரித்திரம் (தெனன்று), தட்சிண கைலாய புராணம், திருக்கோணமலைத் திருவுருவங்கள் குடுமியா மலைச் சாசனம், திருக்கோணமலைக் கோட்டை வாயிற் கல்வெட்டு முதலியன இக்கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன.

திருக்கோணேச்சரத் தேவாரத் திருப்பதிகம், கோணேஸ்வரர் குறவஞ்சி, திருக்கோணேஸ்வரர் அகவல், திருக்கோணமலை அந்தாதி முதலியன இக்கோயில் மேல் எழுந்த இலக்கியங்களாகும்.

## பயிற்சி

(அ) பொருத்தமானவற்றைத் தொடுக்க.

| | |
|---|---|
| 1. இராவணன் | தீர்த்தம் |
| 2. பாவ நாசம் | இலிங்க வழிபாடு |
| 3. தென் கைலாயம் | தலவிருட்சம் |
| 4. கல் ஆலமரம் | குளக்கோட்டன் |
| 5. கல்வெட்டு | திருக்கோணமலை |

(ஆ) சுருக்க விடை தருக.

1. தற்போது திருக்கோணேச்சரம் அமைந்துள்ள இடம் யாது?
2. திருக்கோணேச்சரத்தைப் புகழ்ந்து பதிகங்கள் பாடியோர் யாவர்?
3. திருக்கோணேச்சரத்தை வழிபட்ட அரசர்கள் யாவர்?
4. திருக்கோணேச்சரத்தின் மேல் எழுந்த இலக்கியங்கள் எவை?
5. திருக்கோணேச்சர ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறும் காலம் யாது?

## (இ) முன்னேச்சரம்

### (1) அமைவிடம்

இலங்கையின் வடமேல் மாகாணத்திலே, சிலாப நகரிலிருந்து கிழக்கே ஏறத்தாழ இரண்டு கிலோமீற்றர் தொலைவில் முன்னேச்சரம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. முன்னை ஈச்சரம் என்னுங் கருத்தில் முன்னேச்சரம் என்றும் பெயரறியாத முனிவர் ஒருவர் வழிபட்டமையால் முனீச்சரம் என்றும் இக்கோயிலுக்குப் பெயர்கள் வழங்குகின்றன.

### (2) பண்டைய வரலாறு

கோட்டை இராச்சிய அரசர்கள் இக்கோயிலுக்கு ஆதரவு அளித்தனர். பதினைந்தாம் நூற்றாண்டிற் கோட்டை அரசனாக விளங்கிய ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் இக்கோயிலை மொன்னீஸ்வரம் என்று குறிப்பிட்டு நன்கொடை வழங்கிய செய்தி அவனுடைய கல்வெட்டுச் சாசனம் ஒன்றிற் காணப்படுகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னன் இக்கோயிலுக்குப் பல கிராமங்களை நன்கொடையாக வழங்கியதற்குச் சான்றாகச் செப்பேட்டினால் உறுதி செய்துள்ளான். குயில் விடு தூது (கோகில சந்தேசய) என்னும் சிங்கள காவியம் இக்கோயிலை முன்னேசரம் என்று குறிப்பிடுகின்றது. குளக்கோட்டு மன்னன் இக்கோயிலுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளான் என்று முன்னேஸ்வர மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. தயோதமெலோ என்னும் போர்த்துக்கேயப் படைத்தலைவன் 1578 ஆம் ஆண்டு இக் கோயிலை இடித்து அழித்தான். பதினெட்டாம் நூற்றாண்டிற் கண்டி இராச்சிய அரசனான கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் இந்தியாவிலிருந்து சிற்பிகளைக் கொணர்வித்து, இந்த ஆலயத்தை மீண்டும் அமைத்தான்; 1753 ஆம் ஆண்டிற் கும்பாபிடேகமுஞ் செய்வித்தான்.

## (3) மூர்த்திச் சிறப்பு

இக்கோயில் அறுபத்து நான்கு சத்தி பீடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இறைவன் பெயர் முன்னைநாதர். இறைவி பெயர் வடிவாம்பிகை. இங்கு வடிவாம்பிகையின் அருளாட்சி மேலோங்கியிருத்தல் தெற்றென புலனாகின்றது. சத்தி பீடத்தில் அவ்வாறு இருத்தல் இயல்பேயாம்.

முன்னொரு காலத்திற் செம்படவன் ஒருவன் அக்கோயிலுக்கு அயலிலுள்ள குளம் ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டு நின்றான். அவ்வேளையில் மிக அழகிய சிறுவன் ஒருவனும் சிறுமி ஒருத்தியும் குளக்கரையில் விளையாடிக் கொண்டு நின்றனர். செம்படவன் அவர்களைக் கண்டவுடன் அவர்கள் மறைந்துவிட்டனர். மறுநாள் அவன் பற்றை மறைவில் ஒளித்திருந்து அவர்களைப் பிடிக்க முயன்றான். அப்பொழுது சிறுவன் மாயமாய் மறைந்தவிட்டான். சிறுமி மட்டுமே அகப்பட்டாள். உடனே அச்சிறுமி பொன் விக்கிரகமாக உருமாறிவிட்டாள்.

அந்த நிகழ்ச்சியைச் செம்படவன் அரசனுக்கு அறிவித்தான். செம்படவன் எங்கோ அந்த விக்கிரகத்தைக் களவு செய்துவிட்டான் என்றே அரசன் எண்ணினான். எனவே, அரசன் அந்த விக்கிரகத்தைத் தான் வாங்கி வைத்துக்கொண்டு, அவன் வேறொரு நாள் அதனை அடையாளங் காட்டவேண்டும் என்று பணித்தான். அவ்வாறு அடையாளங் காட்டத் தவறினாற் செம்படவனுக்குத் தண்டனை கிடைத்தல் நிச்சயம். அதற்கிடையில் அரசன் அது போன்று பல விக்கிரகங்கள் செய்வித்து அவற்றுடன் இதனையுங் கலந்து வைத்தான்.

செம்படவன் தனக்குக் கிடைக்கப் போகின்ற தண்டனையை நினைந்து மிகுந்த கவலை அடைந்தான். எனவே, தன்னை அச்சிக்கலிலிருந்து காப்பாற்ற வழி செய்யுமாறு கேட்டு, மனமுருகி

ஆண்டவனை வேண்டினான். அன்று இரவு அம்பாள் அவனுக்குக் கனவிலே தோன்றி, “விக்கிரகங்களை நீ பார்க்கும் பொழுது, எந்த விக்கிரகத்தின் வலக்கால் அசைகின்றதோ அந்த விக்கிரகத்தைக் காட்டுக” என்று அருள் வாக்குக் கொடுத்தார். அவன் உண்மை யான விக்கிரகத்தைக் தெரிந்தெடுத்ததோடு, தன் கனவினையும் அரசனுக்குக் கூறினான். அரசன் பெருவியப்படைந்து, ஆகம முறைக்கு அமைய அவ்விக்கிரகத்துக்குப் பூசைகள் நடைபெற ஆவன செய்தான். அவ்விக்கிரகம் திருவிழாக் காலங்களில் வசந்த மண்டபத்திலும் ஏனைய நாட்களில் முன்னைநாதரின் மூலத்தானத்திலும் வைத்து இன்றும் வணங்கப்படுகின்றது. அந்த நிகழ்ச்சியும் அக்கோயிலிற் சத்தியின் மகிமையைப் புலப்படுத்துகின்றது.

## (4) தலச் சிறப்பு

இராமர் இலங்கைக்கு வந்து, இராவணனுடன் போர் புரிந்து அவனைக் கொன்றார். அதனால் பிரமகத்தி தோஷம் அவரைப் பீடித்தது. அவர் முன்னேச்சரத்திற் சிவலிங்க பூசை செய்து அந்தத் தோஷத்தினை அகற்றினாரென்று தட்சிண கைலாய மான்மியம் என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது.

பாரதம் என்னுங் காவிய நூலை வடமொழியில் வியாச முனிவர் இயற்றினார். அவரும் இக்கோயிலை வழிபட்டார் என்று அந்த மான்மியங் கூறுகின்றது. அக்குறிப்புகளினால் இந்தக் கோயிலின் தொன்மையுந் தலச் சிறப்பும் புலனாகும். இக் கோயிலின் தல விருட்சம் அரச மரமாகும்.

## (5) தீர்த்தச் சிறப்பு

இத்தலத்திற்குரிய தீர்த்தம் மாயவன் ஆறு (தெதுறு ஓயா) என்பது. இக்கோயிலிலிருந்து ஏறத்தாழ ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் இது அமைந்துள்ளது. தீர்த்தத் திருவிழா

அன்று அதிகாலையில் வடிவாம்பிகை சமேத முன்னைநாதப் பெருமான் திருவுலாவாக அந்த இடத்துக்கு எழுந்தருளுவர். அங்கு ஆற்றிலே தீர்த்த உற்சவம் நிறைவெய்திய பின்னர், அந்த ஆற்றங்கரையிலே, ஓர் அரச மரத்தின் கீழ் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் வடிவாம்பிகை சமேத முன்னை நாதர் நெடுநேரம் வீற்றிருப்பர். அவ்விடத்திற் பூசைகளும் அர்ச்சனைகளும் நடைபெறும். பிற்பகலிலே திருவுலா மீண்டும் ஆரம்பித்துப் பெருங் கோயிலைச் சென்றடையும்.

## (6) பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலின் பூசைகளிலும் விழாக்களிலும் சிறப்பான பல அம்சங்கள் காணப்படுகின்றன. பொதுவான அம்சங்களை நோக்கும்பொழுது, ஆறுகாலப் பூசைகள் இங்கு ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. பிராமணக் குருமார் பூசைகளை நடத்துகின்றனர். மரபு வழியாகப் பிராமணர்களே இக்கோயிலின் நிருவாகத்துக்கும் பொறுப்பாக இருக்கின்றனர்.

கோள் வடிவில் அமையும் பிந்து என்பது தேவியின் உறைவிடம். இதனை உச்சியாகக் கொண்டு ஸ்ரீசக்கரம் என்னும் யந்திரம் அமைக்கப்படும். அது மூன்று வகைப்படும். அவற்றுள் மேருப் பிரஸ்தார ஸ்ரீசக்கரம் என்பதே மிகச் சிறந்தது. இந்த யந்திரம் ஒன்று அம்மனின் கருவறையில் வடிவாம்பிகையின் விக்கிரகத்தோடு வைக்கப்பட்டிருக்கின்றது.

முன்னேச்சரத்தில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இங்கு ஓர் ஆண்டில் நான்கு நவராத்திரி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் வசந்த நவராத்திரி விழாவே மிகவுஞ் சிறப்பானது. அக்காலத்திலே தினமும் நூற்றெட்டுச் சங்குகள் வைத்து, ஒவ்வொரு சங்கிலும் வெவ்வேறு மருந்து மூலிகைகள் இட்டுச் சங்கு பூசை நடைபெறும்.

இக்கோயிலில் ஆண்டொன்றில் இரண்டு முறை மகோற்சவம் நடைபெறுகின்றது. அவற்றுள் ஒன்று ஆவணி மாதப் பௌர்ணமியிலே தீர்த்த உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்றதாக அதற்கு முன்னாகவுள்ள இருபத்தேழு நாள்களுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது. அடுத்த மகோற்சவம் மாசி மகத்திலே தீர்த்த உற்சவம் இடம்பெறும் வகையில் அதற்கு முன்னுள்ள ஒன்பது நாள்களுக்கு நடைபெறுகின்றது. மாசி மகம் அம்பாளுக்கு மிகவுஞ் சிறப்பான நாளாகும். இக்காலத்திற் கிரியைகள் மிகவும் விரிவாகச் செய்யப்படுகின்றன.

முன்னேச்சரத்திற் பத்தோற்சவம் என்னுந் திருவிழா நடைபெறும் பாங்கு மனத்தைக் கவர்கின்றது. இங்கு அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் மணிவாசகருக்கும் எழுந்தருளி விக்கிரகங்கள் உள்ளன. இத்திருவிழாவுக்கு வடிவாம்பிகை சமேத முன்னைநாதர் தேர் ஒன்றிலே திருவுலாவுக்கு எழுந்தருளுவர். அப்பொழுது அறுபத்து மூன்று நாயன்மாரும் மணிவாசகரும் முன்னைநாதரை வழிபடுகின்ற பாவனையில், அவர்களுக்குரிய விக்கிரகங்கள் சுவாமியை நோக்கியவாறு வேறொரு தேரில் இருக்கும். அத் தேர் முன்னே செல்லாமற் பின்னே செல்லும்.

இக்கோயிலின் மூன்றாம் வீதியின் வடமேற்கு மூலைக்கு அப்பாற் சிறிது தூரத்தில் ஐயனார் கோயில் ஒன்று அமைந்துள்ளது. வேட்டைத் திருவிழா அன்று மாலையில், சுவாமி குதிரை வாகனத்தில் எழுந்தருளி, ஐயனார் கோயிலுக்குத் திருவுலாவாகச் செல்வார். அங்கு அக்கோயிலுக்கு முன்னால் உள்ள மைதானத்தில் வேட்டையாடும் பாங்கில் வேட்டைத் திருவிழா ஒன்று நடைபெறும்.

மூன்றாம் வீதியைக் கடந்து வட திசையிற் சென்றால், அங்கு பத்திரகாளி கோயில் ஒன்று இருப்பதைக் காணலாம்.

சத்தி பீடங்களில் அம்பாளுக்கு மேன்மை அதிகமாக இருப்பதற்கு ஏற்றவாறு, அங்குள்ள காளிகோயில்களுக்கும் மகிமை அதிகமாகும். முன்னேச்சரப் பத்திரகாளி அம்மனுக்கு அண்மைக் காலத்திற் பெரிய கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பண்டாரங்களே பூசகர்களாக இருக்கின்றனர்.

"சிதம்பரம் தரிசிக்க முத்தி" என்று கூறுவது நம் சமய மரபு. சிதம்பர நடராசரைத் தரிசிப்பவர்கள் தில்லைக் காளியைத் தரிசிக்கவில்லை என்றால் அவர்கள் யாத்திரைப் பயனைப் பெறமாட்டார்கள். அது போலவே முன்னேச்சரஞ் செல்பவர்களும் வடிவாம்பிகையைத் தரிசித்த பின் இந்தப் பத்திரகாளியைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

முன்னேச்சரத்திற் பல சமயத்தவர்களும் வழிபாடு செய்கின்றனர். அத்துடன் அமையாது சாதி, சமய ஏற்றத் தாழ்வுகள் எவற்றையும் பொருட்படுத்தாது, மக்கள் அனைவரும் தம் பிள்ளைகளே என்ற பாங்கில் வடிவாம்பிகையின் அருளாட்சி நடைபெறுகின்றது. மக்கள் தம் குறுகிய மனப்பான்மையைப் போக்கி உயர்ந்த சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கு இத்தகைய நிலைமை வழி செய்கின்றது.

## பயிற்சி

சுருக்கமான விடை தருக.

1. அறுபத்து நான்கு சத்தி பீடங்களில் ஒன்றாகத் திகழும் இலங்கையில் உள்ள ஈச்சரம் எது?
2. முன்னேச்சரத்தில் வீற்றிருக்கும் இறைவன், இறைவி பெயர் யாவை?
3. முன்னேச்சரர் ஆலயத்தின் சிறப்புக்கள் பற்றி தட்சிண கைலாய மான்மியம் யாது கூறுகிறது?
4. முன்னேச்சரத்தில் இடம்பெறும் இரு மகோற்சவங்களும் யாவை?
5. பக்தோற்சவம் என்றால் என்ன?

## (ஈ) நகுலேச்சரம்

### (1) அமைவிடம்

யாழ்ப்பாணத்தில் வடமேற்குத் திசையில் ஏறத்தாழ இருபது கிலோமீற்றர் தொலைவில் நகுலேச்சரம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. இது கீரிமலை, நகுலகிரி எனவும் அழைக்கப்படும்.

### (2) மூர்த்திச்சிறப்பு

கலிங்க நாட்டு அரச மரபினனான உக்கிரசிங்கன் இலங்கையின் வட பிரதேசத்தைத் திருமலையிலிருந்து ஆட்சி செய்தான். அவன் தன் குலதெய்வமாக நகுலேசுவரப் பெருமானை வணங்கியவன். மாருதப்புரவீகவல்லி இந்தியாவிற் கீர்த்தி பெற்ற பல தலங்களைத் தரிசித்த பின்னர் இத்தலத்துக்கு வந்து நகுலேசுவரப் பெருமானை வணங்கிய பின்னர் மீண்டும் இந்தியாவுக்குச் செல்லவேயில்லை.

இவ்வாறு அரச குடும்பத்தினர் இந்தத் தலத்தைத் தேடி வந்து தரிசித்தனர் என்பதனால் நாம் இம்மூர்த்தியின் மகிமையை ஊகித்து அறியலாம். இத்தலத்தின் இறைவன் பெயர் நகுலேசுவரர். இறைவி பெயர் நகுலாம்பிகை.

### (3) தலச் சிறப்பு

விசயன் இலங்கைக்கு வந்த காலத்திலேயும் இத்தலம் சிறப்புற்று விளங்கியது என்றும் அக்காலத்தில் இதன் பெயர் திருத்தம்பலை என்றும் யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல் கூறுகின்றது.

இந்தத் தலத்தில் ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன் செய்தல் சைவ மக்களின் பாரம்பரிய வழக்கம். இங்கு இவ்வாறு செய்வதனாற் பிரிந்த ஆன்மாவுக்கு உய்தி உண்டாகுமென்பது அவர்களுடைய நம்பிக்கை.

இத்தலத்திற்குக் கந்தருவ நகரம், வீணாகானபுரம் என்னும் பெயர்களும் உண்டு. இதற்குரிய தல விருட்சம் கல் ஆலமரம்.

## (4) தீர்த்தச் சிறப்பு

பண்டைக்கால வரலாறு, கல்வெட்டு எழுத்துக்களாற் பதித்தும் பொன்னாற் செய்த தகடுகளிலும் செம்பினாற் செய்த ஏடுகளிலும் எழுதியும் நெடுங் காலத்துக்குப் பேணி வைப்பது வழக்கம். ஓலை ஏடுகள் நெடுநாளைக்கு இருப்பதில்லை. இவ்வாறாக மட்டக்களப்பிலே, துறைநீலாவணை என்னும் ஊரிலே பேணி வைக்கப்பட்டுள்ள செப்பேடு ஒன்றிலே கீரிமலைத் தீர்த்தச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. அந்த விபரத்தை ஈண்டு நோக்குதல் சாலப் பொருத்தமானது.

சற்சன சோழ மன்னனின் மகள் மாருதப்புரவீகவல்லி. அவள் குன்ம நோயினால் வருந்தினாள். இந்நோய் வயிற்றுக் குடலைப் பாதிப்பது. இதனாற் பாதிக்கப்பட்டவர்கள் உண்ணுதலும் உறங்குதலும் இயலாது. எனவே, உடல் மெலிவடைந்து அவர்களுடைய முகமுஞ் சுருங்கும். இத்தகைய மெலிவினால் மாருதப்புரவீகவல்லியின் முகம் குதிரை முகம் போலாயிற்று. இதனைக் குன்ம நோய் என்றும் கூறுவதுண்டு. அவளின் நோயை மருந்துகளாற் குணப்படுத்த முடியவில்லை. எனவே, அவள் இந்தியாவிலுள்ள புண்ணிய தலங்களுக்குச் சென்று

தீர்த்தமாடினாள். எனினும், நோய் தீரவில்லை. ஒரு நாள் சாந்தலிங்கசுவாமி என்பவரைத் தரிசித்தாள். அவர் அவளை இலங்கையிலுள்ள புனித தலத்திற் புண்ணிய தீர்த்தமாடச் செல்லுமாறு கூறி ஆசி மொழி வழங்கினார்.

அதன் பின் அவள் இலங்கைக்கு வந்து கதிர்காமஞ் சென்றாள். அங்கு மாணிக்க கங்கையிலே தீர்த்தமாடி முருகனிடங் குறையிரந்தாள். முருகன் கனவிலே தோன்றி, அவள் கீரிமலைச் சுனையிலே தீர்த்தமாடினால் அவளுடைய நோய் தீரும் என்று கூறி அருள்செய்தார்.

எனவே, அவள் தன் தோழியருடன் கீரிமலைக்குச் சென்றாள், அங்கு குமாரத்தி பள்ளம் என்னும் இடத்திற் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தாள்; ஒவ்வொரு நாளும் புனித நீரூற்றிலே தீர்த்தமாடி நகுலாம்பிகை சமேத நகுலேசுவரரை வழிபட்டு வந்தாள். நாளடைவில் அவளுடைய நோய் தீர்ந்தது. குதிரை முகமும் நீங்கி, அழகு பொலியும் மிக்க அரசிளங்குமரியாக அவளுடைய தோற்றம் மாற்றமடைந்தது.

நகுலம் என்பது கீரியைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும் ருகுலம் என்பதுகீரி முகச்சாயல் உடைய முனிவர் ஒருவர் மாருதப் புரவீகவல்லியின் காலத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில் இந்தியாவில் இருந்தார். அவருடைய தோற்றங் காரணமாக அவருக்கு நகுல முனிவர் என்ற பெயர் வழங்கியது. அவருடைய காலத்திற் கீரிமலையின் பெயர் திருத்தம்பலை என்பது. நகுல முனிவர் திருத்தம்பலைக்கு வந்து அங்கிருந்த புண்ணிய நீரூற்றிலே தீர்த்தமாடித் திருத்தம்பலேசுவரரை வழிபட்டபொழுது அவருடைய கீரிமுகம் நீங்கி மனிதமுகம் உண்டானது. திருத் தம்பலேசுவரர் நகுல முனிவருக்குச் செய்த அற்புதத்தை என்றென்றும் நினைவுகூரும் வகையிற் கீரிமலைத் தீர்த்தம் என்னும் பெயரும் அத்தலத்திலுள்ள சிவபெருமானுக்கு நகுலேசுவரர் என்ற பெயரும் ஏற்பட்டன. இதற்கு முன்னர் இது கண்டகி தீர்த்தம் என்றே பெயர்பெற்றிருந்தது.

நகுல முனிவருக்கும் மாருதப்புரவீகவல்லிக்கும் நிகழ்ந்த அற்புதங்களால் இந்தத் தீர்த்தத்தின் மகிமை தெற்றெனப் புலனாகும். அது மட்டுமன்று, மாருதப்புரவீகவல்லியின் உலகியல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தவரும் நகுலேசுவரப் பெருமானேயாவர்.

மாருதப்புரவீகவல்லி குமாரத்தி பள்ளத்திற் கூடாரம் அடித்து இருந்தபொழுது, வளவர்கோன் பள்ளத்தில் அப்பிரதேச அரசனான உக்கிரசிங்கன் என்பவனுங் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தான். அவனும் கீரிமலைப் புனித நீரூற்றிலே தீர்த்தமாடி, நகுலேசுவரப் பெருமானை வழிபடும் நியதி உடையவன். இவ் வாறாக மாருதப்புரவீகவல்லியும் உக்கிரசிங்கனும் நகலேசுவரப் பெருமானை வழிபடச் சென்றவிடத்து அவருடைய சந்நிதியில் ஒருவரை ஒருவர் முதன்முதலாகச் சந்தித்தனர். இதன் பெறு பேறாகப் பின்னர் இந்த இருவருக்குந் திருமணம் நிகழ்ந்தது.

மாருதப்புரவீகவல்லி தமக்கு முருகன் செய்த அருளுக்கு நன்றிக்கடனாக மாவிட்டபுரக் கோயிலைக் கட்டுவித்தாள். மாவிட்டபுரம் என்பதன் பொருள் 'குதிரை முகம் விட்ட புரம்' என்பது.

முருகனுக்குக் காங்கேயன் என்றொரு பெயரும் உண்டு. இளவரசியின் பெருமுயற்சியால் மாவிட்டபுரக் கோயிலுக்காகக் காங்கேயன் விக்கிரகம் இந்தியாவிலிருந்து கொணர்ந்து இறக்கிய இடமே காங்கேயன்துறை. அது இப்பொழுது காங்கேசன்துறை என மருவி வழங்குகின்றது. மாவிட்டபுர மகோற்சவ முடிவு தினமாகிய ஆடி அமாவாசை அன்று முருகன் திருவுலாவாக எழுந்தருளிச் சென்று, கீரிமலைச் சமுத்திரக் கரையிலே தீர்த்த உற்சவம் நடைபெறும். இவ்வாறாகக் கீரிமலைப் புண்ணிய தீர்த்தம் நகுலேசுவரப் பெருமானுக்கு மட்டுமன்றி மாவிட்டபுர முருகனுக்கும் பொதுவானதாக அமைதல் இதன் தனிச் சிறப்பு.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற் சிவபதம் அடைந்தவர்களின் அஸ்தி எனப்படுகின்ற எலும்புச் சாம்பல் இந்தப் புண்ணிய தீர்த்தத்திற் கரைத்தல் அப்பிரதேச மக்களின் பாரம்பரிய வழக்கமாகும். இவ்வாறாகக் கீரிமலைத் தலத்தில் அதன் தீர்த்தமே அளப்பரிய மகிமை உடையதாகத் திகழ்கின்றது.

## (5) பூசைகளும் விழாக்களும்

பண்டைக் காலந் தொட்டுப் பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வந்த கோயில் பரராசசிங்கன் என்னும் அரசனின் ஆட்சிக் காலம் வரை இருந்தது. அவன் மறைந்தவுடன் நகுலேச்சரத்தையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையும் போர்த்துக்கேயர் இடித்தழித்தனர். அவர்கள் அவ்வாறு இடிப்பதற்கு முன்னர் அக்கோயிற் குருக்களான பரசுபாணி ஐயர் என்பவர் அங்கிருந்த விக்கிரகங்கள் சிலவற்றைக் கோயிற் கிணற்றில் இட்டு மண்ணால் மறைத்துவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார். அவருடைய சந்ததியினர் இன்றும் உள்ளனர். சென்ற நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் புராதன ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்வதற்காகத் தீவிர பிரசாரஞ் செய்தார். இதற்காக இயற்றப்பட்ட ஒரு பாடலை ஈண்டு நோக்குவோம். அது இங்கே தரப்படுகின்றது.

தேவர் தொழுங் கீரிமலைச் சிவன்கோயிற்
  றிருப்பணியைச் செய்விப் போரும்
ஆவலொடும் பலபொருள்க ளளித்ததன்சீர்
  வளர்ந்திடற்கே யகங்கொண் டோரும்
பூவனிரை பாவனிதை போற்றுநகு
  லாம்பிகையைப் புணரு மெங்கோன்
சேவடியாம் பெருவாழ்விற் றிளைத்து மகிழ்ந்
  திடுவரிது திண்ணந் தானே.

அப்பிரசாரத்தினாலே தூண்டப்பட்ட கார்த்திகேயக் குருக்களும் அவருடைய பிள்ளைகள் இருவரும் ஆலயத்தை மீள அமைக்கும் பணியினை ஆரம்பித்து வைத்தனர். அந்தத் திருப் பணி வேலை நிறைவெய்தி, 1859 ஆம் ஆண்டு ஆனி மாதம் மகா கும்பாபிடேகஞ் செய்யப்பட்டது. அதன் பின்னர் பூசைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. மாசி மாதத்திற் சிவராத்திரி இரவு கழிந்து, மறு நாட்காலையிலே தீர்த்த உற்சவம் நடைபெறக் கூடியவகையில் அதற்குமுன் பதினைந்து நாள்களுக்கு இக்கோயிலின் மகோற்சவம் நடைபெறும்.

கீரிமலையிலிருந்து காங்கேசன் துறையை நோக்கிக் கடற்கரை ஓரமாக ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குச் சென்றால், புராதனகோயில் அமைந்திருந்த மலைமேட்டினையும் வரலாற்றுப் புகழ் பெற்ற நீர்ச் சுனையையுங் காணலாம்.

## (6) பிணி தீர்க்கும் பெருமான்

கீரிமலைத் தலம் இந்து சமுத்திர தீரத்தில் அமைந்து, கடற் காற்றின் சுவாத்தியத்தைப் பெறுவதோடு, அங்குள்ள சுனைகளும் நோய் தீர்க்கும் பண்பு உடையனவாக இருப்பது மருத்துவ ஆராய்ச்சி மூலம் அறியப்பட்ட உண்மை. இவ்வாறாக இத்தலம் ஒரு சுகத்தானம் எனப் புகழ் ஈட்டியுள்ளது. இத்தகைய சுகந் தருஞ் சூழல் எல்லாம் நகுலேசுவரப் பெருமானின் அருட் செயல் என்பது சைவ மக்களின் ஆணித்தரமான நம்பிக்கை.

இத்தலத்திலே தங்குவதற்குப் பல மடங்கள் உள்ளன. குமரகுருசுவாமி என்னுஞ் சித்தர் கீரிமலையிலே தங்குவதற்கு யாழ்ப்பாணம் சண்முகநாதன் அச்சக உரிமையாளர் மடம் ஒன்று அமைத்துக் கொடுத்தார். அது குமரகுருசுவாமி மடம் எனப்படும். சில மடங்களிற் கந்தபுராணப் படிப்பு நடைபெறுவதுண்டு.

## (7) நூல்கள்

இச்சிவாலயத்தின் பழைமை பற்றி, யாழ்ப்பாண வைபவ மாலை, தட்சிண கைலாச புராணம், சீர்பாதகுல வரலாறு, கைலாச மாலை, நகுலேஸ்வர புராணம், நகுலகிரிப்புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன. அருணகிரிநாதரின் திருப்புகழ் ஒன்றில் இத்தலங் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகுலாம்பிகைக் குறவஞ்சி, நகுலமலைச் சதகம், நகுலேஸ்வரர் விநோத விசித்திரக் கவிப்பூங்கொத்து முதலிய நூல்கள் இவ்வாலயத்தின் சிறப்பை எடுத்தியம்புகின்றன.

### பயிற்சி

*பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.*

1. *நகுலேச்சரத்தின் முன்னைய பெயர் யாது?*
2. *நகுலேச்சரத்திற்கு அப்பெயர் வரக் காரணம் யாது?*
3. *கீரிமலைத் தீர்த்தச் சிறப்பைக் கூறும் கல்வெட்டு எங்கு காணப்படுகிறது?*
4. *'மாவிட்டபுரம்' எனும் கோயிலைக் கட்டியவர் யார்?*
5. *கீரிமலைத் தீர்த்தம் இன்று இந்துக்களிடையே எவ்வகையில் பயன்படுத்தப்படுகிறது?*
6. *இச் சிவாலயத்தில் வழிபட்ட சோழ இளவரசியின் கதையினைச் சுருக்கமாகக் கூறுக.*

# (உ) கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம்

## (1) அமைவிடம்

கிழக்கு இலங்கை அன்று தொட்டு இன்று வரை சைவ சமயம் சிறப்புற்றுத் திகழ்கின்ற பிரதேசமாகும். அதற்குக் காரணம் அவர்கள் சைவ சமயத்தின் மீது வைத்துள்ள பற்றும் தொன்மை வாய்ந்த பல ஆலயங்கள் அங்கு இருத்தலுமாகும். அங்குள்ள கோயில்கள் **'திருப்படைக் கோயில்கள்'** என்றோ **'தேசத்துக் கோயில்கள்'** என்றோ வேறுபடுத்திக் கூறப்படுகின்றன. **'திருப்படை'** என்பது அங்கு வாழும் பல்வேறு இன மக்களின் **'ஒன்றியம்'** எனப் பொருள்படும். **'தேசம்'** என்பது அப்பிரதேசம் முழுவதையும் அடக்குகின்றது. எனவே, அவ்வாறு கூறப்படுகின்ற கோயில்கள் அப்பிரதேச மக்கள் அனைவருக்கும் பொதுவாய் இருக்கின்ற முக்கியமான கோயில்கள் என்பது பெறப்படும்.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகும். மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதுக்குமான ஒரேயொரு சிவன் கோயில் இது மட்டுமேயாம்.

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே பதின்மூன்று கிலோமீற்றர் தொலைவிற் கொக்கட்டிச்சோலை என்னுங் கிராமம் உள்ளது. இயற்கை எழில் மிக்க அக்கிராமத்தில், நிழல் மரங்கள் நிறைந்த வீதியின் மருங்கில் இக்கோயில் அமைந்துள்ளது.

## (2) பண்டைய வரலாறு

இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை மேற்கொண்டு கொக்கட்டியர் என்னும் அடியார் ஒருவர் இலங்கைக்கு வந்தார்.

அவர் கொக்கட்டி மரம் ஒன்றின் கீழே இருந்து சமாதி அடைந்தார். அந்த இடத்திலே இந்தச் சிவலிங்கம் தானாகவே தோன்றியது என்பது அவ்வூர் மக்களிடையே வழங்குகின்ற கதை.

குளக்கோட்டன் மன்னன் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளான் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. அதனை இங்கு பார்த்தல் பொருத்தமானது.

சீர்மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு
 செல்வமும் சிவநேச இருசமயமும்
செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்
 செகமேவு கதிரமலையும்
ஏர்பெறும் தென்கயிலை வாழ்கோணலிங்கம்
 மேன்மை தான்தோன்று லிங்கம்
வெற்றிபுனை மயூரசித்திர சங்காரவேல்
 வெள்ளை நாவற் பதியதாம்
பேர்பெறும் தென்திருக் கோயில்
 சிவாலயம் சிவபூசை தேவாரமும்
செய்முறைகள் என்றென்றும் நீடூழிகாலமும்
 தேசம் தளம்பாமலும்
ஏர்பெருகு பரிதி குலராசன்
 குளக்கோட்டர் எவ்வுலகு முய்வதாக
எழுகோபுரம் கோயில் தொழுவார் தினம்
 தேட எங்கெங்கு மியற்றினாரே.

என்று அந்தக் கல்வெட்டுக் கூறுகின்றது. இக் கல்வெட்டின் கருத்தை நோக்கும் பொழுது, கதிர்காமம், கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றியீச்சரம் முதலிய ஏழு கோயில்களை இவ்வரசன் தொழுது திருப்பணி செய்தவன் என்பது பெறப்படும். குளக்கோட்டனின் காலம் பற்றித் திட்டவட்டமாக ஒன்றுந் தெரியவில்லை. எனினும், இவன் பத்தாம் நூற்றாண்டின் பின் வாழ்ந்தவன் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இக்கோயிலில் வழங்கி வருகின்ற மரபுமுறைகளும் சில பாடல்களும் அவனைப் பற்றிய சில விபரங்களைத் தருகின்றன. அவற்றை ஈண்டு நோக்கலாம்.

குளக்கோட்டன் என்பவன் கிழக்கு இலங்கையில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த ஓர் அரசனாவான். இந்திய அரச வம்சத்தவன்; கலிங்க நாட்டோடுஞ் சோழ நாட்டோடும் நட்புறவுத் தொடர்புகள் உள்ளவன்; சைவ சமயத்தவர்களில் ஒரு பிரிவினரான வீர சைவர்களை ஆதரித்தவன். அவன் இக்கோயிலின் திருப்பணிகளுக்கும் பூசை திருவிழாக்களுக்கும் மானியங் கொடுத்து உதவி வழங்கினான்.

## (3) மூர்த்திச் சிறப்பு

இந்தப் பகுதியிற் பண்டைக் காலத்தில் வேடர்கள் வாழ்ந்தனர். இங்கு வாழ்ந்த வேடர்களில் ஒருவன் கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலை ஒன்றினுள்ளே தேன் இருக்கும் இடத்தைத் தேடிச்சென்றான். கொக்கட்டி மரம் கொடுக்குநெட்டி மரம் என்றுங் கூறப்படுவதுண்டு. கொக்கட்டி மரங்கள் அங்கு அடர்ந்து நின்றமையால் அக்கிராமம் கொக்கட்டிச் சோலை எனப் பெயர் பெற்றது.

அந்தச் சோலையில் ஒரு மரத்திலே தேன் இருப்பதை வேடன் கண்டான். மிக உயரத்திலே தேன் இருந்தமையால் அம்மரத்தை வீழ்த்துவதற்காக அவன் அதனை வெட்டினான். மரத்தில் அவன் வெட்டிய இடத்திலிருந்து இரத்தம் போன்று செந்நிறமான பால் வெளிவந்தது. ஒரு குறிப்பிட்ட மரத்திலே தேன் இருத்தலும் அந்த மரத்தை வெட்டும்பொழுது செந்நிறப் பால் வருதலும் தான்தோன்றியீச்சரரின் அற்புதச் செயலாகும்.

இந்நிகழ்ச்சியாலே திகைப்படைந்த வேடன் அம்மரத் தடியிலுள்ள இடத்தை ஆராய்ந்தான். அங்கு சிவலிங்கம் ஒன்று அவனுடைய கண்ணுக்குத் தென்பட்டது. அந்தச் சிவலிங்கத்தை முதன்முதலிற் கண்ட வேடனின் பெயர் **'திகடன்'** என்று **'மட்டக்களப்பு மான்மியம்'** கூறுகின்றது. பின்னர் அவனுடைய கூட்டத்தினர் அங்கு பந்தல் அமைத்து, அச்சிவலிங்கத்தை நெடுங்காலமாக வழிபட்டு வந்தனர்.

இந்த மூர்த்தியின் கீர்த்தியை அறிந்தே குளக்கோட்டன் இதற்குக் கோயில் எழுப்ப முனைந்தான். இக்கோயிலின் இறைவன் பெயர் **கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரர்.** இறைவி பெயர் **பார்வதி அம்மையார்.** தல விருட்சம் **கொக்கட்டிமரம்.** இயற்கையாகத் தோன்றிய சிவலிங்கத்தை அவ்விடத்திலே வைத்துக் கோயில் அமைக்கப்பட்டதால், அந்த இலிங்கம் வெளியே அடியார்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அச்சிவலிங்கத்துக்கு மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

## (4) தலச் சிறப்பு

தான்தோன்றியீச்சரங்கள் சில குறிப்பிட்ட இடங்களிலே தாமாகத் தோன்றுபவை. இவ்வாறாக, இறைவன் தானே விரும்பி வீற்றிருக்குந் தலம் என்ற மகிமை இவற்றுக்கு உண்டு. ஏனைய கோயில்கள் மனிதராலே தாம் விரும்பும் இடங்களில் அமைக்கப்படுபவையாகும். தான்தோன்றி ஆலயங்களை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்துக்கு மாற்றுதல் இயலாது. இது இவ்வகைத் தலங்களின் தனிச் சிறப்பாகும்.

கொக்கட்டிச் சோலையும் அதனை அடுத்துச் செழிப்பு மிக்க நெல் வயல்களும் சூழ்ந்துள்ள, இயற்கை எழில் மிகுந்த ஒரு சூழலில் இத்தலந் தோன்றியுள்ளது.

## (5) தீர்த்தச் சிறப்பு

சங்கமர் என்னும் குருமாரா இங்கு பூசை செய்கின்றனர். இவர்களுடைய பூசை முறை பிற சைவக் கோயில்களில் நடைபெறுகின்ற பூசை முறையிலிருந்து சற்று வேறுபடுகின்றது. இவர்கள் பின்பற்றுவது **'வீராகமம்'** எனப்படும். தீர்த்த உற்சவம் இக்கோயிலின் வீதியிலுள்ள தீர்த்தக் கிணறு ஒன்றில் நடைபெறுகின்றது. எனினும், இக்கோயிலின் தீர்த்தம் மிகச் சிறப்பானது என்பதனை இங்கு நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் மூலம் நாம் உணரலாம்.

இக்கோயிலின் மூன்றாவது மண்டபத்திற் பார்வதி அம்மன் கோயிலின் வாசலுக்கு முன்னாற் கற்சிலையாக அமைந்த இடபம் ஒன்று உள்ளது. பதினாறாம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் இக்கோயிலை இடித்தழிக்கும் நோக்கத்தோடு இங்கு வந்தனர். அவர்கள் அம்மன் வாசலில் இருந்த இடபத்தைப் பார்த்துக் கேலி செய்யும் வகையில், 'அது என்ன தேவைக்காக அங்கு கிடக்கின்றது? அது புல்லுத் தின்னுமா? தண்ணீர் குடிக்குமா?' என்றெல்லாங் கோயிற் பூசகரிடங் கேட்டனர். பூசகர் ஆவேசங் கொண்டு, 'அந்த இடபம் அவை எல்லாஞ் செய்யும்' என்று இறைவாக்காகக் கூறிவிட்டார். எனவே, அவர் கற்சிலை இடபத்துக்குப் புல்லுங் கோயிலின் தீர்த்தமும் ஊட்டவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. என்ன அற்புதம்! அந்த இடபம் உயிருடைய காளைபோல் எழுந்து நின்று, புல்லைத் தின்று, தீர்த்தத்தைக் குடித்துவிட்டு அவர்களைத் துரத்தத் தொடங்கியது. அப்பொழுது நடுநடுங்கி ஓடித் தப்பிய போர்த்துக்கேயப்

படைவீரர் இக்கோயிலை அழிப்பதற்கு மீண்டும் வரவேயில்லை. இவ்வாறாகக் கற்சிலை இடப்ம் பருகிய தீர்த்தம் என்ற மகிமை இக்கோயிலின் தீர்த்தத்துக்கு உண்டு. அன்று எழுந்தோடிய நந்தி இன்னமும் அங்கு இருக்கின்றது. இன்றும் அத்தகைய அற்புதங்கள் அங்கு நிகழ்வதாக அடியார்கள் கூறுகின்றனர்.

## (6) பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலிற் பூசை செய்பவர்கள் **சங்கமர்** என்பவர்களாவர். நம் சமயத்திற் குரு இலிங்க **சங்கம வழிபாடு** என்று ஒன்று உள்ளது. இங்கு கூறியுள்ள சங்கமம் என்பது சிவனடியார்களைக் குறிக்கும். எனவே, நம் நாட்டு வழக்கப்படி இவர்களைச் சிவனடியார்களாகிய **பூசகர்கள்** என்று கூறலாம்.

இந்தியாவிற் கலிங்க நாட்டிலுள்ள நாகார்சனபுரம் என்னும் இடத்திலிருந்து இவர்கள் குளக்கோட்டனால் அங்கு கொண்டு வந்து குடியேற்றப்பட்டவர்கள். இவர்கள் வீரசைவப் பிரிவைச் சேர்ந்தவர்கள்; தம் கழுத்திற் சிவலிங்கம் ஒன்றினை அணிந்திருப் பார்கள். இக்கோயிற் பூசைகளைச் செய்வதற்கு இவர்கள் குளக்கோட்டு மன்னனால் நியமிக்கப்பட்டவர்கள்.

இக்கோயிலிலே தினந்தோறும் மூன்று காலப் பூசை முறையாக நடைபெற்று வருகின்றது. தைப் பொங்கல், தைப்பூசம், மாசி மகம், வருடப் பிறப்பு, திருக்கார்த்திகை, திருவெம்பாவை முதலிய நாள்களில் விசேட பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறும். சிவராத்திரி, கந்த சஷ்டி, விநாயக சஷ்டி முதலிய விரதங்களுக்காக இங்கு பெருந் தொகையான அடியார்கள் கூடுகின்றனர்.

இக்கோயிலின் மகோற்சவம் ஆவணி மாதத்து அமா வாசைக்குப் பின் சந்திரனின் முதற் பிறை தோன்றும் நாளிற்

கொடியேற்றத்தோடு ஆரம்பிக்கின்றது. இதற்குப் பின்னர் பௌர்ணமி கடந்த பின் வருகின்ற முதலாவது ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தேர்த் திருவிழாவும் அடுத்த நாளாகிய திங்கள் அன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இங்கு எல்லாமாகப் பதினைந்து நாள்களுக்கு மேலாகத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. தேர்த் திருவிழாவே இக்கோயிலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் இப்பிரதேச மக்கள் இந்த மகோற்சவம் முழுவதையுந் 'தேரோட்டம்' என்றே கூறிவிடுகின் றனர். சித்திரத் தேர் என்னும் பெரிய தேரிற் சிவனும் அம்மனும், பிள்ளையார் என்னுஞ் சிறிய தேரில் விநாயகரும் முருகனும் தேர்த் திருவிழாவுக்கு எழுந்தருளுகின்றனர்.

தீர்த்த நாளன்று அதிகாலையில் வேட்டைத் திருவிழா நடைபெறும். இது ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்குத் தடையாயுள்ள மலங்களை இறைவன் அழிக்கும் பாவனையில் அமைகின்றது.

இந்தத் திருவிழாவினை அடுத்துக் கோயிற் பரிபாலகர்களை யும் தொண்டூழியக்காரரையும் திருவிழாவிற் பங்கு கொண்ண டோரையுங் கௌரவிக்குஞ் சீர்வரிசையாகக் **'குடுக்கை கூறுதல்'** என்னும் நிகழ்ச்சி இடம்பெறும். இதனைப் பற்றிய விபரங்கள் மட்டக்களப்பு மான்மியத்திற் **'பங்கு கூறுங் கல்வெட்டு', 'திருப்படைக் களஞ்சியம்'** என்னும் பகுதிகளிற் காணப்படுகின்றன.

## (7) கோயிற் பரிபாலனம்

ஏனைய சைவக் கோயில்களைப் போலன்றி, இக்கோயிலின் பரிபாலனம் சற்று வேறுபட்ட முறையில், தொன்றுதொட்டு வந்த மரபுகளுக்கு அமைய நடைபெறுகின்றது. எனவே, இதனையுஞ் சற்று நோக்குதல் சாலப் பொருத்தமானது.

**வண்ணக்கர்** மூவர் கூட்டாக இக்கோயிலின் பரிபால னத்துக்குப் பொறுப்பாக இருக்கின்றனர்.

இக்கோயிலின் வண்ணக்கர் என்போர் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் பரந்துபட்டு வாழுகின்ற 'முற்குகர்' என்னுங் குலத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் தொன்று தொட்டு வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் காலிங்கா குடி, உலகிப்போடி குடி, படையாண்ட குடி என்னும் மூன்று குறிப்பிட்ட குடிகளைச் சேர்ந்தவர்கள். வண்ணக்கர் பதவி பெறுபவர்கள் ஆயுள் முழுவதும் அப்பதவியை வகிப்பார்கள்.

ஈண்டு கூறிய வண்ணக்கர் மூவரில், காலிங்கா குடியைச் சேர்ந்தவர் தலைமைப் பதவிக்கும், உலகிப்போடிக் குடியைச் சேர்ந்தவர் பொருளாதாரத் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பான பதவிக்கும், படையாண்டகுடியைச் சேர்ந்தவர் நிருவாக நடைமுறைகளுக்குப் பொறுப்பான பதவிக்கும் நியமிக்கப் ப்டுவார்கள்.

வண்ணக்கர், சங்கமர், தொண்டூழியக்காரர் முதலியோரின் உரிமைகள் கிழக்கு இலங்கைப் பாரம்பரிய முறைக்கு அமையத் தாய் வழி உரிமையாகப் பொறுப்பு மாற்றம் செய்யப்படுகின்றது.

## (8) நூல்கள்

இக்கோயிலின் வரலாறு மட்டக்களப்பு மான்மியம், கல்வெட்டுக்கள், மரபுப் பாடல்கள் முதலியவற்றிலிருந்து அறியப்படுகின்றது. வெற்றிலைக்காரப் புலவர் என்று பொது மக்கள் கூறுகின்ற சின்னவப் புலவரும் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை என்பவரும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரர் மீது இரண்டு பதிகங்கள் பாடியுள்ளனர். நாட்டுக் கூத்துக்களிலும் கிராமிய இலக்கியங்களிலும் இந்த இறைவன் மீது பாடப்பட்டுள்ள பல காப்புச் செய்யுள்கள் கிடைத்துள்ளன.

## பயிற்சி

(அ) பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்க.

1. மட்டக்களப்புப் பிரதேச ..................... கோயில்களுள் ஒன்று கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம்.
2. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரர் ஆலயத்தில் திருப்பணி செய்த அரசன் .........................
3. ......................... எனும் நூலில் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றியீச்சரத்தின் பண்டைச் சிறப்புக் கூறப் படுகிறது.
4. இக் கோயிலிற் பூசை செய்பவர்கள் .................. என்பவர்களாவர்.
5. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரத்தில் தீர்த்த நாளன்று அதிகாலையில் ............... திருவிழா நடைபெறும்.

# (ஊ) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்

## (1) அமைவிடம்

இலங்கையிற் பண்டைக் காலந்தொட்டுப் புகழ் பெற்று இலங்கிய தான்தோன்றியீச்சரங்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம். மற்றையது வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம். மற்றையது

இவற்றுள் ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் ஏறத்தாழ இருபது கிலோமீற்றர் தொலைவில் இருக்கின்றது.

## (2) பண்டைய வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள இடைக்காடு என்னும் ஊரைச் சேர்ந்த வீரபத்திரர் என்ற சைவ வேளாளர் தம் பிள்ளைகள் இருவருடன் வன்னிக்குச் சென்று குடியேறினார். ஒட்டுசுட்டானில் அவர்கள் வாழ்ந்த இடம் இன்றும் இடைக்காடு என்றே அழைக்கப்படுகின்றது. அவர் அவ்விடத்திற் காடு வெட்டிக் குரக்கன் பயிரிட்டார். குரக்கன் கதிர்களைக் கொய்த பின்னர் ட்டுக்களுக்குத் தீயிட்டு எரித்தார். அப்பொழுது கொன்றை மரம் ஒன்றின் கீழ் அவை எரியாதிருந்தன.

அந்த இடத்தை அவர் நன்றாக ஆராய்ந்து பார்த்த பொழுது, சிவபெருமானின் திருவருளால் அக்கொன்றை மரத்தின் கீழே சிவலிங்கம் ஒன்று கண்ணுக்குத் தென்பட்டது.

அதுவே அன்று தொட்டு இன்று வரை அக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கமாக விளங்குகின்றது.

## (3) மூர்த்திச் சிறப்பு

வன்னியை ஆண்ட சிற்றரசன் ஒருவன் முதலில் இதற்குக் கோயில் கட்டுவித்தான். பல பெரிய கோயில்களைக் கட்டுவதில் ஈடுபட்ட குளக்கோட்டு மன்னனும் இக்கோயிலுக்குந் திருப்பணி செய்வித்தான் என்பதனால் இம்மூர்த்தியின் கீர்த்தி எத்தகையது என்பது புலப்படும்.

இது தானாகவே தோன்றிய இலிங்கம் என்பது ஏலவே கூறப்பட்டது. மூர்த்தியின் மகிமை காரணமாகவே அது தானாகத் தோன்றுகின்றது. இத்தகைய மூர்த்தி சுயம்பு இலிங்கம் எனப்படும். சிற்பி செய்கின்ற சிவலிங்கத்துக்கு உருத்திர பாகம், விஷ்ணு பாகம், பிரம பாகம் என மூன்று பிரிவுகளைக் கொண்ட சிவலிங்கம் வேறாகவும், ஆவுடையார் என்பது வேறாகவும் இருக்கும். சுயம்பு இலிங்கத்துக்கு இந்த வரையறைகள் இல்லை என்பதனால் ஆவுடையார் பகுதியும் இல்லை. இது இல்லாதிருத்தல் தவறு எனக் கருதிய கோயில் நிர்வாகி இந்தியாவிலிருந்து சிற்பி ஒருவரை வரவழைத்து, ஆவுடையார் பகுதியைச் செய்வித்தார். அத்துடன் இயற்கையாக அமைந்த இந்தச் சிவலிங்கத்தை அழகுபடுத்தவேண்டும் என்றெண்ணி அதனை மூடுவதற்குப் பொற் கவசம் ஒன்றுஞ் செய்விக்கப்பட்டது. எனினும், இவை இரண்டும் தமக்குத் தேவையில்லை என்பதனைத் தான்தோன்றியீச்சரர் தம் அருட் குறிப்பாற் கோயில் அதிகாரிக்குத் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியும் அந்த மூர்த்தியின் அளப்பரிய அருளாற்றலை வெளிப்படுத்துகின்றது. பொற் கவசம் இன்னமும் கோயிலில் இருக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இக்கோயில் இயற்கையாகவும் செயற்கையாகவும் உண்டாகின்ற அனர்த்தங்களினாற் பாதிக்கப்படாமல் இருப்பதும் இந்த மூர்த்தியின் அற்புதச் செயலாகும்.

சுயம்புலிங்கம் எப்பொழுது தோன்றியது எனக் கூறமுடியாது. எக்காலத்தில் இருந்து மக்கள் இதனை வழிபடத் தொடங்கினர் என்பதனை மட்டுமே கூற முடியும். இது சுயம்பு லிங்க மூர்த்தியின் தனிச் சிறப்பாகும்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரர். எரித்த குரக்கன் ஒட்டு வேகவில்லை என்பதனால் வேகாவனமுடையார் என்னும் காரணப் பெயரும் இவருக்கு வழங்குகின்றது. இறைவி பெயர் பூலோகநாயகி. இக்கோயிலின் தல விருட்சம் கொன்றை.

## (4) தலச் சிறப்பு

இது அடர்ந்த காட்டுப் பகுதியில் அமைந்துள்ள தலமாகும். எனவே, இங்கு மக்கள் அதிகமில்லை. இந்தத் தலத்தின் மகிமை காரணமாக ஆதியில் மக்கள் இங்கு குடியிருக்கத் தொடங்கியிருப்பார்கள். தான்தோன்றியீச்சரரை நம்பி அங்கு குடியேறியவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அங்கு குளம் ஒன்று கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது கோயிலை அடுத்துள்ள காட்டுப் பகுதியிற் பாழடைந்த நிலையில் முத்துராயன் கட்டுக்குளம், இறைவன் சித்தமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அது இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் அத்தலத்தைச் செழிப்பாக்கியமையும் அந்தத் தலத்தின் சிறப்பாகும்.

இத்தலத்திற்குத் 'தேவர் பதி' என்னும் பெயரும் வழங்குகின்றது. தேவர்கள் வாழும் இடம் என இப்பெயர் பொருள் தருதலும் இத்தலத்தின் சிறப்பினையே எடுத்து விளக்குகின்றது.

## (5) தீர்த்தச் சிறப்பு

இந்தக் கோயிலுக்கு இயற்கையாய் அமைந்த அற்புதமான தீர்த்தக் குளம் ஒன்று உள்ளது. தீராத நோய் உள்ளவர்கள் இக்கோயிலுக்கு நேர்த்திக்கடன் செய்வார்கள். அந்த நேர்த்திக் கடனை நிறைவு செய்து இந்தத் தீர்த்தக் குளத்தில் நீராடிய பின்னர் அவர்களுடைய நோய் தீர்ந்துவிடும். இது இத்தீர்த்தத்தின் மகிமையை எடுத்தியம்புகின்றது.

இதற்கு மாறாக, இந்தத் தீர்த்தக்குளத்தை அசுத்தப்படுத்த எண்ணுபவர்கள் இறைவனின் சீற்றத்திற்கு ஆளாதலும் கண்கூடு. இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலுக்குப் பூசை செய்ய நியமிக்கப்பட்ட பூசகர் இருவர் இந்த தீர்த்தத்தின் புனிதத் தன்மையைப் பேணாது இதனை பயன்படுத்த முயன்றனர். அப்பொழுது தற்செயலாக அவ்விடத்துக்கு வந்த கோயில் நிருவாகி அவர்களை தடுத்தும் அதனைப் பொருட்படுத்தவில்லை. அதனால் அவ்விருவரும் தீர்த்தக் குளத்தில் இருந்து உயிருடன் மீளவில்லை. இந்நிகழ்ச்சி அந்தத் தீர்த்தத்தின் மகிமையை அச்சத்துடன் புலப்படுத்துகின்றது.

## (6) பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலில் ஒவ்வொரு நாளும் மூன்றுகாலப் பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன. விசேட தினங்களில் அவ்வவற்றுக் குரிய பூசைகளுஞ் செய்யப்படுகின்றன.

இங்கு மகோற்சவம் ஆனிமாதத்தில் வருகின்ற அமாவாசையோடு ஆரம்பித்து, பதினாறு நாட்களுக்கு நடை பெறும். பதின்மூன்றாம் நாள் நடைபெறும் வேட்டைத் திருவிழா மிகவும் சிறப்பானது. தீராத நோய்களாற் பீடிக்கப்பட்டவர்கள் தம் நோய் தீருவதற்காக வேட்டைத் திருவிழா அன்று வேடனாக வருவதாக நேர்த்திக்கடன் செய்வார்கள். இவர்கள் வாகைமரக்

குழைகளாற் குடையும் வாகைக் குழையால் அல்லது தென்னோலை யால் செய்த தொப்பியும் அணிந்து, உடல் முழுவதும் கரிபூசி வேடர்கள் போலக் கோலஞ் செய்வார்கள். தடி ஒன்றின் நுனியிற் குழை கட்டி அதனைக் கையில் வைத்துக்கொள்வார்கள். இவ்வேடர்களுக்குத் தலைவன் ஒருவன் இருப்பான். இது பரம்பரை பரம்பரையாகக் கிடைக்கின்ற ஒரு பதவியாகும். தலைவன் தேன் நிறைந்த சுரைக் குடுவை ஒன்றினை அரையிலே கட்டியிருப்பான்.

இந்தத் திருவிழாவுக்குச் சுவாமி மட்டுமே எழுந்தருளுவார். அவர் பெரிய வேடன் போல மேலே வீற்றிருக்க, வேட்டுவப் படை அணி சூழ்ந்து வர, திருவிழா பவனி வருதல் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறு வீதி வலம் வந்து கோயில் வாயிலை அடையும்பொழுது, அக்கோயிலின் இறைவி சுவாமியுடன் கோபித்துக் கொண்டு வாயிற் கதவைப் பூட்டிக் கொள்ளுவார். அவ்வேளையில் கோயில் மணியகாரர் அவர்களுடைய பிணக்கை விசாரித்துத் தீர்த்து வைக்கும் பாங்கில் நிகழ்ச்சி ஒன்று அவ்விடத்தில் நடைபெறும்.

இவ்வாறாகப் பிணக்குத் தீர்க்கப்பட்டுச் சுவாமி கோயிலின் உள்ளே சென்ற பின்னர் வேடுவர் ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து நிற்பர். அவ்வேளையில் வேட்டுவத் தலைவனின் ஆணைக்கு அமைந்து, அவர்கள் நிலத்தில் வீழ்ந்து வணங்குவர். பின்னர் அவர்கள் கோயிலை வலம் வந்து, தீர்த்தக் குளத்திற்குச் சென்று வேட்டுவ உடைகளைக் களைந்து தீர்த்தமாடுவர். இதன் பின் அவர்களுடைய நோய் தீர்தல் ஒருதலை. இத்தகைய நோயாளர் விரதம் இருந்தே இந்த நேர்த்திக் கடனைச் செய்தல் நியதி. அதனால் நோய் தீரும் என்ற நம்பிக்கை வலுப் பெற்றுள்ளதனால், வேட்டைத் திருவிழாவில் வேடுவர்களாகப் பங்குபற்றுவோரின் தொகையும் அதிகரிக்கின்றது.

மகோற்சவப் பிற்பகுதியில் பதினைந்தாம் நாள் தேர்த்திரு விழாவும் பதினாறாம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இக்கோயிலின் பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய வருவாயைப் பெறுவதற்காக இதற்குச் சொந்தமான நெல் வயல்களும் தென்னந்தோட்டங்களும் உள்ளன. இவை பண்டைக் கால மன்னர்களாலும் பொது மக்களாலும் இக்கோயிலுக்கென வழங்கப்பட்ட நன்கொடைகளாகும். இக்கோயிலுக்கு குளக்கோட்டு மன்னனும், வன்னியரசர்களும் திருப்பணி செய்துள்ளார்கள்.

## (7) நூல்கள்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் ஆசிரியர் விருத்தம் என்னும் நூல் கொக்குவில் கு.ச.சபாரத்தின முதலியாரால் 1883 இல் இயற்றப்பட்டது. இக்கோயிலுக்கு ஊஞ்சற் பதிகம் ஒன்றும் உள்ளது. சுதுமலையைச் சேர்ந்த பண்டிதர் ஆ.சி. நாகலிங்கம் என்பவரால் அது பாடப்பட்டுள்ளது.

வேட்டைத் திருவிழா அன்று இறைவனுக்கும் இறைவிக்கும் இடையிலான பிணக்கை விசாரித்துத் தீர்த்து வைப்பது போன்று அமைந்த வசன கவிதை ஒன்றும் நூல் உருவில் இருக்கின்றது. கோயில் மணியகாரரே அவர்களுடைய வழக்கை விசாரிக்கும் நடுநிலையாளர் போன்ற பாவனையில் இக்கவிதை அன்று அவராலே படிக்கப்படும்.

இறைவனும் இறைவியும் நேராக ஒருவர் மீது ஒருவர் குற்றம் கூறாமல், தம் குறையை மணியகாரருக்கு முறையிடுவது போன்று இக்கவிதைகள் அமைந்துள்ளன. இது வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு நிகழ்ச்சியாகும்.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சர ஆலயம் எங்குள்ளது?
2. இத்தலத்தில் உள்ள இறைவன், இறைவி பெயர் யாது?
3. இவ்வாலயத் தீர்த்தத்தின் சிறப்பினைக் குறிப்பிடுக.
4. வேட்டைத் திருவிழா இவ்வாலயத்தில் எப்போது இடம் பெறுகின்றது? அதன் சிறப்பினை விளக்குக.

# (எ) பொன்னம்பலவாணேச்சரம்

## (1) அமைவிடம்

இலங்கையில் கொழும்பு மாநகரை அணி செய்யும் சிறப்பு வாய்ந்த ஆலயங்களுள் பொன்னம்பலவாணேச்சரமுமொன்று. இது தென்னிந்திய தமிழ் மன்னர்கள் எழுப்பிய பெருங்கற் கோயில்களின் அமைப்பில் இலங்கையிலே முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு கட்டப்பட்டது. கருங்கல்லில் பொளிந்த சிற்பங்கள் நிறைந்த தூண்கள் கோயிலின் உள்ளே இலங்குகின்றன. கருவறையுங் கருங்கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றது. உட்பிரகாரக் கூரை கருங்கல்லாலே தளம் போடப்பட்டு மூடப்பட்டுள்ளது. இக்கோயிலின் கிழக்கு, மேற்கு வாயில்கள் கோபுரங்களைக் கொண்டு, அழகாகக் காட்சியளிக்கின்றன.

## (2) கோயில் வரலாறு

பொன்னம்பல முதலியார் அவர்களால் முதலில் கட்டப்பட்ட இச்சிவத்தலம் அவரது மைந்தன் சேர். பொன். இராமநாதன் அவர்களால் தற்போதுள்ள தோற்றம் அமையும் வகையில் நிர்மாணிக்கப்பட்டது. சைவ சமயப்பற்று மிகுந்த பொன்னம்பல முதலியார் நிலையான சைவப் பணிகள் செய்ய விரும்பினார், அவர் அக்காலத்திற் கொழும்பில் வாழ்ந்த சைவ மக்கள் வழிபடச் சிற்பசாத்திர சைவாகம முறைப்படி அமைந்த கோயில் இல்லாத குறையை உணர்ந்தார். அதனாற் சிவன் கோயில் கட்டும் எண்ணம் அவரின் சிந்தையிற் குடிகொண்டது. இறைவனது சித்தம் எப்படியோ என்று நினைத்த அப்பெரியாருக்குக் கனவொன்றின் மூலம் தெய்வக் குறிப்புத் தெரியவந்தது. அதன் பின், முதலியாரது கோயில் கட்டும் ஆர்வம் தடுக்கமுடியாத பேரார்வமாயிற்று. கொழும்பில் கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கினார். இந்தியாவிலிருந்து கோயில் கட்டும் கலைஞரை வரவழைத்தார்.

இரண்டு வருடம் ஓயாது ஒழியாது உழைத்தார். அதன் மூலம் அழகிய ஓர் ஆலயத்தை உருவாக்கினார். அதன் இடப்பக்கத்தில் யந்திரம் அமைத்து அம்மன் கோயிலைக் கட்டுவித்தார். இத்தகைய சிறப்புடையதாக ஆரம்பகாலச் சிவன் கோயில் அமைந்திருந்தது. மூலத்தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது. இவ்வாறாகப் பொன்னம்பலவாணேச்சரம் எழுந்தது.

முன்பு குறிப்பிட்டவாறு தற்போதுள்ள நிலையில் இக்கோயிலைப் புதிதாக நிர்மாணித்த பெருமைக்குரியவர் சேர்.பொன். இராமநாதன் அவர்கள். அவர் தென்னிந்தியாவிற் பல்லவ, சோழ, நாயக்க மன்னர்கள் கட்டிய கற்கோயில்களையும், இலங்கையில் பொலனறுவையில் சோழமன்னர்கள் கட்டிய கற்கோயில்களையும் கண்ணுற்றதன் விளைவாக, கற்கோயில் எழுப்பும் பேரார்வம் மிகவும் தூண்டப்பெற்றவரானார். அரசர்கள் பல தலைமுறைகளிற் கட்டிய கோயில்களைப் போல் கட்ட நினைத்த அவர் தமது தந்தை தொடங்கிய பணியைத் தொடர்ந்து செய்தார். தென்னிந்தியா சென்று சிறந்த கோயிற் சிற்பக் கலைஞர்களை அழைத்து வந்தார். வியாங்கொடையிலிருந்து கருங்கற்கள் வருவித்தார். 1907 இல் கருங்கற் கட்டட வேலையை ஆரம்பித்தார். 1912 இல் சிவாலய கட்டட வேலைகள் முற்றுப் பெற்றன. இராமநாதன் இவ்வாலய வேலை யாவற்றையும் தாமே நின்று மேற்பார்வை செய்தார். உள்ளமுருக்கும் தேவாரங்களை எடுத்துச் சொல்லி, அவர்கள் செய்யும் திருப்பணி ஒரு சிவப்பணி என்று மனத்திற் பதியும்படி விளக்குவார். இவ்வாறு சிரமம் பாராது அவர் நிர்மாணித்த இவ்வாலயம் ஈழத்தின் சிறந்த கலைப்படைப்பாகத் திகழ்கின்றது எனலாம்.

## அமைப்பு - மண்டபங்கள்

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இதன்முன் அர்த்தமண்டபமும் அடுத்து மகாமண்டபமும் உள்ளது. மகாமண்டபத்திலே சிவனின் நடராச மூர்த்தம் உள்ளது. இது மிகுந்த கலைவடிவம் பொருந்தியதாகக் காணப்படுகின்றது. பிரதான ஆலயத்திற்கு முன்பாக நந்தி, பலிபீடம், கொடித்தம்பம் ஆகியன காணப்படுகின்றன.

பிரதான ஆலயத்திற்குத் தெற்குப் பக்கம் நோக்கியதாக, சிவகாமிக்குரிய அம்மன் ஆலயம் உளது. இவ்வாலயமும் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் என்பவற்றைக் கொண்டு விளங்குகின்றது. சிவகாமி ஆலயத்திற்கு நேரே ஆலயத்தின் தெற்குப் பக்கலில் ஒரு கோபுரம் காணப்படுகின்றது. இக் கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டது. இக்கோபுரத்திலே அதிக சிற்ப வேலைப்பாடுகள் இடம்பெறவில்லை. அது ஏறக்குறைய 35 அடி உயரமுடையது. சிவகாமி ஆலயத்திற்குப் பக்கலில் பள்ளியறையுள்ளது. பள்ளியறைக்குப் பக்கலில் மிக அழகு வாய்ந்த **கல்யாண மண்டபம்** காணப்படுகின்றது. இக்கல்யாண மண்டபத்தின் தூண்களில் சைவ நாயன்மார்களதும் அடியார்களதும் அற்புதச் சம்பவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கண்ணப்பநாயனார் கண்ணினைப் பிடுங்கிச் சிவலிங்கத்தின் மேல் வைக்கின்ற காட்சியினைச் சிற்பி மிகச் சிறந்த முறையிலே கலை வனப்புடன் செதுக்கியுள்ளார்.

## பிரகாரங்களிற் காணப்படும் சிற்பங்கள்

தூண்கள் ஒவ்வொன்றும் **நாகபந்தம், சதுரம், பட்டம்** என்பனவற்றை உடையனவாகக் காணப்படுகின்றன. தூண்களின் மேற் பகுதியில் அதாவது மேற்றளத்தினைத் தாங்குகின்ற பகுதியில் **புஸ்பபோதிகை, சிங்கம், கொடிவளை, முத்துபந்தம், அளவுத்தரம்** என்பன மிகச் சிறந்த முறையிலே செதுக்கப் பட்டுள்ளன. ஆலயம் எங்கணும் இதேவிதமான அமைப்புக் காணப்படுகின்றது. ஆலயத்தின் உட்பிரகாரத்தில் (சுற்றுப் பிரகாரம்) கணேசர், சோமாஸ்கந்தர், பெருமாள், விஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்பிரமணியர், ஷண்முகர், ஞான பைரவர், சுவர்ண பைரவர் என்பவர்களுக்குத் தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிலும் சிறந்த விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதான ஆலயத்தின் விமானமும் மிகச் சிறந்த அமைப்புடையதாகக் காணப்படுகின்றது. இவ்விமானங்கள் கீழே நின்று பார்க்கமுடியாத வகையில் நான்கு பக்கமும் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கர்ப்பக்கிருகத்தின் வெளிப்புறத்தில் பன்னிரண்டு **மாடத்தெய்வங்கள்** இடம் பெற்றுள்ளன. இவ்வாலயத்தின் பிரதான வாசல் கிழக்குப் பக்கலில் உள்ளது. இந்நுழைவாயிலில் சிறந்த கோபுரம் உள்ளது. ஐந்து தளங்களையுடைய இக்கோபுரம் மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் உடையதாகத் திகழ்கின்றது. சிவனுடைய திருவிளையாடலைக் குறிக்கும் சம்பவங்களும், அடியார்களின் பக்தித் திறமும், மும்மூர்த்திகளின் உருவங்களும் கலையுணர்வு ததும்பும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. இக் கோபுரம் ஏறக்குறைய 65 அடி உயரமுடையது. இக்கோபுரத் தினைத் தாண்டி அப்பாற் சென்றால் ஆலயத்தின் முன்பக்கத்து மேற்புறத்தில் **பன்னிரண்டு** ராசிகளும் சிறப்பாகச் செதுக்கப் பட்டுள்ளன. முன் பிரகாரத்திலே காணப்படும் இரண்டு தூண்களில் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் முகமும் லேடி இராமநாதனின் முகமும் உள்ளன. இவை அளவிலே மிகச் சிறியனவாயினும் நாயக்கர் காலத்தில் எவ்வாறு கோயில்களைக் கட்டியவர்களை முகப்புத் தூண்களில் செதுக்கினார்களோ அதே போன்று இங்கும் செதுக்கியுள்ளனர் என்ற உண்மையை உணர்த்துகின்றன. சில சுவர்களில் ஒரு தலையுடன் இரண்டு உடல் கொண்ட மிருகங்கள் உள்ளன. இவை பார்ப்பவர் மனதில் சிந்தனாசக்தியை ஏற்படுத்தவல்லன. சில தூண்களில் உள்ள உருவங்கள் ஒரு கோணத்தினின்று பார்க்கும் பொழுது ஒருவகைத் தோற்றமாகவும் மறுபக்கம் நின்று பார்க்கும் பொழுது வேறு வகைத் தோற்றமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவை சிற்பிகளினுடைய பல்பரிமாணத் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

## (3) பூசைகள், விழாக்கள்

இக்கோயில் பூசைச் சிறப்பு, வழிபாட்டுச் சிறப்பு ஆகிய இரண்டும் உடையது. இங்கு தினமும் ஆகமமுறைப்படி ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றது. இந்தக் கோயிலின் தனிச்சிறப்பு இதன் மகாமண்டபத்திற் காணப்படுகின்ற **நித்தியாக்கினி குண்டமாகும்.** எப்பொழுதும் அக்குண்டத்தில்

நெருப்பு இருப்பதனால் அது "நித்திய அக்கினி" எனப் பெயர் பெறுகின்றது. இக்கோயிலிற் காலை ஏழு மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசைகளில் நித்தியாக்கினி வளர்க்கப்படும். அதன் பின்னர் சுவாமி பொன்னம்பலவாணேச்சரர், அம்பாள் ஸ்ரீ சிவகாம சௌந்தரி சமேதரராக, சிறிய தேர் ஒன்றின் மீது உள்வீதியில் திருவுலா வருவார். இது **நித்திய உற்சவம்** எனப்படும்.

பிரதோஷ வேளையில் இங்கு **பிரதோஷ உற்சவம்** நடைபெறுகின்றது. **மாதப் பிறப்பு** அன்று **சங்கிராந்தித் தீர்த்த விழா** இடம்பெறும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று **ஸ்ரீ சக்கர பூசையுடன் இராசராசேசுவரி உற்சவம்** நடைபெறும். இக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் பங்குனி மாதத்திற் பத்துத் தினங்கள் நடைபெறும். கொழும்பில் இக்கோயிலில் மட்டுமே ஐந்து தேர்கள் இழுக்கப்படுகின்றன. விநாயகர், சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் தேர்களில் உலா வருவர். அம்பாள் தேரைப் பெண்கள் மட்டுமே இழுத்து வருதல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதொன்று. பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவெய்தும்.

ஆடிப் பூரத்துக்கு முந்திய ஒன்பது தினங்களும் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாளுக்குத் தினமும் அபிடேகம், பூசை, யந்திர பூசை, இலட்சார்ச்சனை, ஓமம், உற்சவம் ஆகியன இடம் பெறும். இறுதி நாளான ஆடிப்பூரத்தன்று அம்பாளுக்குத் திருவுலாவுஞ் சிறப்பாக நடைபெறும்.

கந்தசஷ்டிக் காலத்தில் தினமும் அபிடேகம், பூசை, யாகபூசை, திருவுலா ஆகியன இங்கு நடைபெறும். மகாசிவராத்திரி, நடேசர் அபிடேகத் தினங்கள், ஆவணி மூலம், திருவெம்பாவை, நவராத்திரி, தைப்பூசம் ஆகியனவும் இங்கு முக்கியமானவை. இத்தினங்களுடன் மார்கழித் திருவாதிரையும் ஆனி உத்தரமும் இங்கு மிகச் சிறப்பானவை. பொதுவாக நோக்கும் பொழுது சிற்ப சாத்திர கட்டிடக்கலை அமைந்த அமைப்பையும் ஆகம விதிக்கமைந்த கிரியை நெறிகளையும் கொண்ட சைவக் கலைக்களஞ்சியமாக இவ்வாலயம் திகழ்வது சைவ உலகிற்குப் பெருமை தரும் விடயமாகும்.

## பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.

1. பொன்னம்பலவாணேச்சர ஆலயம் எங்கு அமைந்து உள்ளது?
2. இவ்வாலயத்தின் மகா மண்டபத்தில் காணப்படும் சிறப்பம்சம் யாது?
3. இவ்வாலயத்தில் இடம் பெறும் உற்சவங்களைக் குறிப்பிடுக.
4. இவ்வாலயத்தின் இறைவன், இறைவி பெயர்களைக் குறிப்பிடுக.

# 5

# ஆலயக் கிரியைகள்
# நித்திய, நைமித்திய கிரியைகள்

## (அ) அறிமுகம்

கிரியை என்ற சமூக சமயத்துறைக் கலைச்சொல் பல்வேறு சந்தர்ப்பங்களிலே மக்கள் அனுஷ்டிக்கும் நியதிச்செயல்கள் என்னும் கருத்தில் சமயப் பிரமாண நூல்களில் வழங்கி வருகின்றது. கரணம், சடங்கு என்பனவும் அதே பொருளைத் தரும் சொற்கள் ஆகும். இந்நியதிச் செயல்கள் ஆலயக் கிரியைகள், வீட்டுக் கிரியைகள் என்னும் இரு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது. பூசைகள், அபிஷேகங்கள், சாந்திகள் என்பன ஆலயக் கிரியைகளுக்கு உதாரணங்கள் ஆகும். திருமணச்சடங்கு, பூப்புநீராட்டு, ஷஷ்டியப்தபூர்த்தி என்பன வீட்டுக் கிரியைகளுக்கு உதாரணங்கள் ஆகும். சைவசமயிகளுக்குரிய இத்தகைய கிரியைகள் பற்றி, சிவாகமங்களும் அவற்றைச் சார்ந்த உபாகமங்களும் இவற்றின் அடிப்படையில் எழுந்த பத்ததிகளும் விரித்துக் குறிப்பிடுகின்றன. இந்தப் பாடத்திலே ஆலயக்கிரியைகள் என்னும் பிரிவில் அடங்கும் நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள் என்பன பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்ளுவோம்.

## (ஆ) நித்திய கிரியைகள்

'நித்திய கிரியைகள்' என்னும் தொடரின் கருத்து 'ஆலயங்களில் தினமும் நிகழும் நியதிச் செயல்கள்' என்பது ஆகும். பூசைகள் எனப்படும் நித்திய கிரியைகள் ஆலயங்களில் நிகழும் போது ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, அருச்சனை, துதி, நிருத்தியம் என்னும் நியதிகள் பின்பற்றப்படும். இவற்றைக்

கோயிற் பிரதம குரு அனுஷ்டிக்கும் போது **உதவிக்குரு** ஒருவரோ சிலரோ பூசைகள் நியதிக்கிரமத்திற்கு இணங்க ஒத்தாசை புரிதல் வழக்கம். இத்தகைய பூசைகள் சிவாலயத்தின் வசதிக்கேற்பப் பன்னிரு காலங்களிலோ ஆறு காலங்களிலோ நடைபெறுதல் வழக்கம். இத்தகைய நிலை பழம் புகழ் பெற்ற ஆலயங்களில் இன்றும் காணப்படுகின்றது. உதாரணமாகத் திருச்செந்தூரில் பன்னிருவேளைப் பூசைகள் நிகழுதல் இன்றும் காணப்படும் வழக்கம் ஆகும். அனேகமான ஆலயங்களில் காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலப் பூசைகள் நிகழுவதோ, காலை, மாலை என்னும் இருவேளைப் பூசைகள் நிகழுவதோ இன்று நடை முறையிற் காணப்படுகின்றது.

## (இ) ஆறுகாலப் பூசைகள்

ஆலயங்களில் நிகழும் ஷட்காலப் பூசைகள் அல்லது ஆறுவேளைப் பூசைகள் உஷக்காலப் பூசை, காலைச்சந்திப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாங்காலப் பூசை, அர்த்தயாமப் பூசை என்பன ஆகும். இவை முறையே அனந்தற் பூசை, காலைப் பூசை, மத்தியானப் பூசை, மாலைப் பூசை, இரவுப் பூசை, சாமப் பூசை என்றும் கூறப்படும்.

### (1) உஷக்காலப் பூசை

சூரியன் உதிக்குமுன் மூன்றே முக்கால் நாழிகையின் முன் நடைபெறுவது உஷக்காலப் பூசை ஆகும். உஷக்காலப் பூசை அதி விடியற் பூசை என்றும் கூறப்படும். இப்பூசையைச் செய்யும் அர்ச்சகர் முதலில் தமது அனுஷ்டானங்களை முறைப்படி நிறைவேற்றுதல் வேண்டும். அடுத்து ஆலயத்தினுள் பள்ளியறைத் திறவுகோலுடன் சம்பிரதாய பூர்வமாகச் சென்று திருப்பள்ளியெழுச்சி இசைத்தல் வேண்டும். நிர்மாலியங்களைக் களைந்து, இறைவனை எழுந்தருளச் செய்து, பின் கருவறைக்கு எழுந்தருளி வந்திருக்கும் மூர்த்தியில் இருக்கும் இறைவனை உற்சவக் கிரியையால் மூல மூர்த்தியில் சேர்ப்பிக்க வேண்டும்.

## (2) காலைச் சந்திப் பூசை

சூரியன் உதித்தபின் ஏழரை நாழிகைக்குள் நடைபெறும் பூசை. காலை சந்திப் பூசையாகும்.

சூரிய பூசை, விநாயக பூசை, பின் பரிவார தெய்வங்களுக்கான பூசை, நித்திய பலி என்பன காலைப் பூசையின் அங்கங்களாக அமையும்.

## (3) உச்சிக்காலப் பூசை

உச்சிக்காலப் பூசை என்பது நண்பகலில் கிரமமாக நடைபெறும் பூசையாகும்.

முதலில் அர்ச்சகர் தமது நித்திய கடமைகளைச் செய்து முடித்தல், அடுத்து விக்கினேசுவர பூசை தொடக்கம் சிவோகம் பாவனை வரையிலான பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றல், பின் ஸ்நபனபூசை செய்தல், அதன்பின் மூல மூர்த்திக்குரிய ஆவரண பூசை செய்து தூபதீப ஆராதனை செய்தல், அடுத்து நிகழவேண்டிய பூசைகள் நிறைவேறியதும் சிவநிர்மாலியத்தைச் சண்டேசுவரரிடம் சமர்ப்பித்தல் என்பன மத்தியானப் பூசையின் அங்கங்கள் ஆகும்.

## (4) சாயரட்சைப் பூசை

இப் பூசை சூரியன் மறைவதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் நிகழவேண்டும் என்பது நியதி. விநாயக பூசை, நடேசர், சிவபேதங்கள், அம்பாள் ஆகியோரை முறைப்படி பூசித்தல் என்பன சாயரட்சைப் பூசையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

பிரதோஷ காலப் பூசை, சாயங்காலப் பூசை, மாலைப் பூசை என்பன இப்பூசையைக் குறிக்கும் பிற பெயர்களாகும்.

## (5) இரண்டாங்காலப் பூசை

இரண்டாங்காலப் பூசை மாலைப்பூசையின் பின் மூன்றே முக்கால் நாழிகையில் நிகழவேண்டும் என்பது நியதி.

மாலையில் நீராடித் தூய கோலம் புனைந்து வரும் அர்ச்சகர் முதலில் விநாயக பூசை செய்தல் வேண்டும். பின்னர் துவார பாலகர் பூசை நிகழ்த்தல், பஞ்சாவரண பூசை செய்தல், ஸ்நபனம் முதல் அருச்சனை வரையுள்ள பூசைக் கிரமத்தை நிறைவேற்றல், பரிவார தெய்வங்களுக்குரிய பூசையை நிறைவேற்றல், நித்தியோற்சவம், நித்திய பலி என்பவற்றை நிறைவேற்றிய பின் சண்டேசுவரர் பூசையை நிகழ்த்தல் வேண்டும். இவை இரண்டாங்காலப் பூசையின் கிரமங்கள் ஆகும்.

இரவின் முகம் எனப்படும் பிரதோஷ காலத்தின் பின் இரண்டாவதாக நிகழும் பூசையே இரண்டாங்காலப் பூசை என்பது நினைவில் நிறுத்தற்குரியது. மேலும், இப் பூசையை இரவுப் பூசை எனப் பொதுமக்கள் பேச்சுமொழியிற் கூறுவது வழக்கம்.

## (6) அர்த்தயாமப் பூசை

இப்பூசை இரண்டாங்காலப் பூசையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகை எல்லைக்குள் நிகழவேண்டும் என்பது நியதி.

முதலில் அபிஷேகம் தொடக்கம் தூப, தீபாராதனை வரையுள்ள நியதிகளைக் கிரமமாகச் செய்து பூசையை முடித்தல், பின் எழுந்தருளி மூர்த்தியைச் சிவிகையில் ஏற்றிப் பள்ளியறையில் தேவியோடு எழுந்தருளச் செய்தல், நிவேதனப் பொருள்களைச் சமர்ப்பித்து திரையிட்ட பின் வெளியேறல், அடுத்து சண்டேசுவரர் பூசை நிகழ்தல், இறுதியில் ஆலயப் பாதுகாப்பை பைரவரிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைத்தல் என்பன அர்த்தயாமப் பூசையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

நடுநிசிப் பூசை, நள்ளிரவுப் பூசை, சாமப் பூசை என்பன அர்த்தயாமப் பூசையைக் குறிக்கும் பிற பெயர்கள் ஆகும்.

## (ஈ) நைமித்திய கிரியைகள்

யாதாயினும் ஒரு விசேட காரணத்தை அல்லது நிமித்தத்தை முன்னிட்டு ஒருவார, இருவார, ஒரு மாத, சில மாத, ஒரு வருட, பல வருட இடைவெளியின் பின் நிகழும் சம்பிரதாய பூர்வ நியதிச் செயல்கள் நைமித்திய கிரியைகள் எனப்படும். ஒருவார இடைவெளியின் பின் நிகழும் விசேட பூசைகளுக்கு உதாரணமாக சுக்கிரவார பூசை, சோமவார வழிபாட்டுக்குரிய பூசை என்பவற்றைக் குறிப்பிடலாம். பிரதோஷ விரத காலப் பூசை இருவாரத்திற்கு ஒரு முறை நிகழும் நைமித்திய பூசையாகும். மாதப் பிறப்பு, சதுர்த்தி ஆகிய விசேட தினப் பூசைகள் மாதமொருமுறை நிகழும் நைமித்திய கிரியைகள் ஆகும். நடேசர் அபிஷேகங்கள் சில மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் ஓராண்டில் ஆறு முறை நிகழும் நைமித்திய கிரியைகளாகும். தைப் பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் முதலியனவும் ஆலயங்களில் நிகழும் பிரமோற்சவமும் வருடமொருமுறை நிகழும் நைமித்திய நிகழ்ச்சிகள் அல்லது பெருங் கிரியைகள் ஆகும். மகாமகம் பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நைமித்திய கிரியை ஆகும். கும்பாபிஷேகம் என்பது பல வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் மிக விரிவான நைமித்தியகிரியையாகும். மேலும், தநுர் மாத பூசை, தீப பூசை போன்ற பல நைமித்திய கிரியைகள் பற்றிய விரிவான தகவல்கள் பூர்வகாரணாகமம், உத்தரகாரணாகமம் ஆகிய பிரமாண நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவை திருக்கோயிற் கிரியைகளை நெறிபிறழாது நிறைவேற்றும் அந்தணர்களுக்குச் சிறப்பாக உரியனவாகும்.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. நித்திய கிரியைகள் என்றால் என்ன?
2. ஆலயங்களில் இடம் பெறும் ஆறுகாலப் பூசைகளும் எவை?
3. நைமித்திய கிரியைகள் என்றால் என்ன?
4. நைமித்திய கிரியைகள் பற்றிக் கூறும் நூல்கள் இரண்டின் பெயர் தருக.

# 6

# திருவுருவ வழிபாடு

இறைவன் குணங்குறிகளற்ற சொரூப நிலையினர். அவர் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவர்கள் மீது உண்டான கருணையால் பல படி இறங்கி அருள் புரிகின்றார். அவ்வாறு வந்து அருள் புரியும் வடிவங்களை வைத்துத் திருவுருவங்களும் பல வகைப்படுகின்றன.

கோயிலில் உள்ள திருவுருவங்கள் விக்கிரகம், பிரதிமை போன்ற வேறு சொற்களாலும் குறிப்பிடப்படுகின்றன. விக்கிரகம் என்ற சொல்லின் பொருள் இறைவனது திருவருள் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்ற உயர்ந்த இடம் என்பதாகும்.

கோயிலில் கல்லினால் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் உண்டு. அவற்றுள் கல்லால் அமைந்தவை கற்சிலை அல்லது சிலாவிக்கிரகம் எனப்படும். இவை கருவறையில் பிரதிட்டை செய்யப்பட்டு. வழிபாடு செய்யப்படும்.

சிவாகம விதிப்படி அமைக்கப்பட்டு மகாகும்பாபிடேகத்தால் பிரதிட்டை செய்யப்பட்டு நித்திய, நைமித்திய கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கோயில்கள் பல உண்டு. அக்கோயில்களில் இறைவனது ஆற்றல், திருவருட் சக்தி ஆகியன மந்திரம், கிரியை முதலிய சாதனங்களால் ஆற்றுப்படுத்தி அமைக்கப்படுகின்றன. இறைவனது பரந்துபட்ட பேராற்றலும் பேரருளும் விக்கிரகத்தில் குடிகொண்டிருக்கும் தன்மை சாந்நித்தியம் எனப்படும். சாந்நித்தியம் பொருந்திய இடமே சந்நிதி ஆகும். இவை கோயில்களில் உயிர்நாடியாக அமைந்து. பூசைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

விக்கிரகங்கள் யாவும் ஆகம முறையில் அவற்றின் அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்ப அமைக்கப்படும். இவற்றை அமைக்கும் போது தவறுகள் ஏதேனும் நேரிடின், அதனால் பல்வேறு கேடுகள் ஏற்படும் எனச் சிற்ப நூல்களும், ஆகமங்களும் குறிப்பிடுகின்றன.

திருவுருவ அமைப்பு, அது சுட்டும் வரலாறு, உருவத்தின் திருக்கரங்களில் விளங்கும் படைக்கலங்கள், அணிந்திருக்கும் அணிகலன்கள் போன்றவையும் அவற்றிற்கான தத்துவங்களும் வழிபடுபவர் மனதில் இலகுவாகப் பதிகின்றன. இதனால் திருவுருவங்கள் சாதாரண மக்களால் எளிதாய் விளங்கி, மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை நினைவு கூருவதற்கும், இறைவனது பெருமையை உணருவதற்கும் துணை நிற்கின்றன.

திருவுருவ வழிபாட்டால் தங்கள் எண்ணத்தை நிறைவு செய்து இறை உண்மையை உணர்ந்து முத்தி பெற்றோர் பலராவர். இவர்களுள் கண்ணப்பர், சண்டேசுரர், திருநாளைப்போவார், சேரமான் பெருமாள், பூசலார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. விக்கிரகம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. கல்லால் அமைந்த விக்கிரகங்கள் எவ்வாறு அழைக்கப் படும்?
3. திருவுருவ வழிபாட்டால் முத்தியடைந்த நாயன்மார் நால்வரைக் குறிப்பிடுக.
4. திருவுருவ வழிபாட்டின் முக்கியத்துவத்தினைக் குறிப் பிடுக.
5. விக்கிரகங்களின் அமைப்பினை விளக்கும் நூல்கள் எவை?

# 7

# விரதங்கள்

மனிதர்கள் தம் வாழ்வை நெறிப்படுத்தி, ஆன்மீகத் துறையில் முன்னேற உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும்.

விரதம் என்னும் சொல் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது விடுத்தல் என்ற நியமத்தைக் குறிக்கின்றது. உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். மேலும், ஒரு தினம் அல்லது பல தினங்கள் உணவு வகை எதனையும் விடுத்து இறை தியானத்தில் லயிக்கும் தீவிர நியமத்தை உபவாசம் எனலாம். நோன்பு என்னும் சொல் உணவை விடுத்தல் என்னும் நியமத்தோடு பிணைந்துள்ள பொறுமை என்னும் பண்பைக் குறிக்கும். இது விரதத்தின் உயர் நிலையான தவம் என்னும் அருஞ் செயலில் ஈடுபடும் தவசிகள், துறவிகள், முனிவர்கள் ஆகியோருக்குச் சிறப்பாக உரியனவாகும்.

## (அ) வரையறை

விரதம் என்ற ஆன்மீக நியமத்தின் விளக்கச் சிந்தனைகளை ஒருங்கிணைத்து ஆறுமுகநாவலர் கூறியது வருமாறு:

> "விரதமாவது மனம் பொறி வழிப்போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்".

இங்கு பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

1. விரதம் என்பது ஒருவகை விசேட வழிபாடு.
2. விரதத்தை அனுட்டித்தலின் நோக்கம் மனவடக்கத்தை மேம்படுத்தல்.
3. விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களை அடக்கி, திரிகரண சுத்தியுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.
4. விரதம் என்னும் சாதனத்தின் விதிகள் :
   உ-ம் 1. விரதம் என்ற நியமம் ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் அனுட்டிக்கப்பட வேண்டும்.
   2. விரத நிறைவு தினத்தின் மறுநாள் பாரணம் அல்லது பாரணை என்று கூறப்படும். உணவுண்ணும் சம்பிரதாயத்தைப் பின்பற்றும்போது விரதி அடியார்களோடு சேர்ந்து உணவு உண்ணல் வேண்டும்.
   3. விரத அனுட்டானத்தைத் தொடர இயலாமல் முதுமையில் கைவிடும் நிலை தோன்றும் போது, நியமப்பூர்த்தி தொடர்பான கிரியையை முறைப்படி செய்தபின் விரத வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

## (ஆ) விரத வகைகள்

விரதங்களில் பல வகையுண்டு. இவற்றுள் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம் முதலானவை சிறப்பானவை. காலம், இடம், வாழ்க்கைக் கடமை, சிறப்பு, நோக்கம் என்னும் அடிப்படைகளில் விரதங்களை வகைப் படுத்தலாம். ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படும் விரதங்கள் மகாசிவராத்திரி, சாரத நவராத்திரி, ஆவணிச் சதுர்த்தி,

சதுர்த்தி, திருக்கார்த்திகை விரதம் என்பன குறிப்பிடத்தக்கன. மாதந்தோறும் அனுட்டிக்கப்படும் விரதங்களில் மாத சிவராத்திரி, சதுர்த்தி, கார்த்திகைத் தினம் என்பன உதாரணங்களாகக் கூறத்தக்கவை. வாரந்தோறும் நோற்கப்படும் விரதங்களில் சோமவார விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என்பன சிறப்பாகக் கூறத்தக்கவை.

பல்வேறு மாவட்டங்கள், பிரதேசங்கள் என்னும் நிலப்பிரிவுகளில் வாழும் சைவ நெறியினர் தங்கள் பகுதிகளில் உள்ள சிவாலயங்களில் திருவிழாக்கள், கும்பாபிடேகம், சங்காபி டேகம், சிறப்புப் பூசைகள் ஆகியன நிகழும்போது விரதம் அனுட்டிப்பர். உதாரணமாகக் காரைக்காலில் காரைக்காலம் மையாரின் தெய்வீக நினைவாக 'மாங்கனிவிழா' நடைபெறும் போது அப்பிரதேசத்தினர் விரதம் நோற்பர். ஏனைய பிரதேசங்களில் இது நிகழ்வது வழக்கமில்லை. அவ்வாறே, பாண்டிருப்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களிலுள்ள திரௌப தையம்மன் ஆலயங்களில் திருவிழா நடபெறும் போது, அப்பகுதியைச் சேர்ந்த அடியவர்கள் விரதம் மேற்கொள்வதை மற்றொரு உதாரணமாகக் கூறலாம்.

வாழ்க்கைக் கடமை என்ற அடிப்படையில் நோற்கப்படும் விரதங்களில், தந்தையை இழந்தவர்களுக்கு உரிய ஆடி அமாவாசை, மஹாளய அமாவாசை என்பவற்றையும், தாயை இழந்தவர்களுக்கு உரிய சித்திரா பூரணை, மாதப் பூரணைகள் என்பவற்றையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## (இ) சிவ விரதங்கள்

சிவபிரானை மெய்யன்போடு விசேடமாக வழிபடுதற்குரிய விரத தினங்களில் (அ) மகா சிவராத்திரி (ஆ) மார்கழித்திரு வாதிரை (இ) பிரதோஷம் என்பன தனித்துக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றில் முதலிரு தினங்களும் ஆண்டு தோறும்

முறையே மாசி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் வரும் விரத நாள்கள் ஆகும். மூன்றாவதாகிய பிரதோஷம் என்பது ஓர் ஆண்டு பூராகவும் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை வருவது.

## (1) மகா சிவராத்திரி

மகா சிவராத்திரி என்ற தொடர்மொழி 'பெருமை மிக்க சிவனுக்கு உரிய இரவு' எனப் பொருள்படும். இது ஆண்டுதோறும் மாசி மாதத்தில் தேய்பிறை பதினான்காம் திதியில் அதாவது கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசியில் வரும் விரதம் ஆகும். சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர்கள் சிவராத்திரிக்கு முந்திய தினம் ஒரு வேளை உணவு உண்ணல், சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருத்தல், மறுநாள் அதிகாலை பாரணை செய்தல் என்னும் நியதிகளைக் கடைப்பிடிப்பர். மேலும், இவ் விரத தினத்தில் இரவு பூராகவும் விழித்திருத்தல், இலிங்கோற்பவ காலத்தில் சிவபிரானை விசேடமாக வழிபடல், சிவ சிந்தனை, சிவநூற் பாராயணம், கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபடல் என்பன விரதிகள் கடைப்பிடிக்க வேண்டியவை ஆகும்.

இமயம் தொடக்கம் குமரிமுனை வரை பரந்துள்ள பாரதத்தில் சிவ வழிபாட்டைப் பேணும் மக்கள் வாழுகின்ற தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் நேபாளம், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் மகாசிவராத்திரி சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. கந்தபுராணம், இலிங்கபுராணம், சிவராத்திரி புராணம் என்னும் நூல்கள் சிவராத்திரி விரத மகிமையைப் புரிந்து கொள்ள உதவும் சமய இலக்கியங்கள் ஆகும்.

சிவராத்திரி பற்றிய புராணக் கதைகளில் பிரம விட்டுணுக்கள், இலிங்க வடிவ ஒளிப் பிழம்பின் அடியையும், முடியையும் தேடித் தோற்று, அகந்தை அகன்று, சிவபரத்துவத்தை ஏற்றுக்

கொண்டமை, சிவபிரானின் இரு கண்களையும் பொத்தி உலகை இருளில் ஆழ்த்திய குற்றம் நீங்க உமையம்மை நான்கு யாமச் சிவபூசை செய்து இடர் களைந்த பெருமை என்பன சிறப்புடையன ஆகும்.

சிவசக்தி அம்சம் கொண்ட நாளாகப் போற்றப்படும் சிவராத்திரியில் நள்ளிரவு வேளையான இலிங்கோற்பவ காலத்தில் வில்வம் இலைகளினால் அர்ச்சனை செய்வது பிரதானமாகும். "திரிஜென்ம பாபசங்காரம் ஏகவில்வம் சிவார்ப்பணம்" என்பது ஆன்றோர் கருத்து. பின்வரும் தேவாரப் பதிகப் பாடல்கள் மகா சிவராத்திரியின் போது மெய்யன்போடு ஓதத்தக்கவையாகும்.

திருச்சிற்றம்பலம்

தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழுவார் மறுகில் விதியால் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே.

( சம்பந்தர் தேவாரம்)

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

( அப்பர் தேவாரம்)

அயனோ டன்றரியும் அடியும்முடியும் காண்பரிய
பயனே யெம்பரனே பரமாய பரஞ்சுடரே
சுயமா ருஞ் சடையாய் கடவூர்த்திரு வீரட்டத்துள்
அயனே யென்னமுதே யெனக்கார்துணை நீயலதே,

திருச்சிற்றம்பலம்

( சுந்தரர் தேவாரம்)

## (2) மார்கழித் திருவாதிரை

மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலம் அல்லது வைகறைப் பொழுதாகக் கருதப்படும். மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் தில்லை நடராஜப் பெருமானுக்கு அபிடேகத் திருவிழா நடைபெறும் புண்ணிய தினம் ஆகும். மேலும், திருவெம்பாவை வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதிநாளாக அமையும் சிறப்பும் மார்கழித் திருவாதிரைக்கு உரியதாகும்.

சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சிற்சபேசன் எனப்படும் நடராஜப் பெருமானை இத்தினத்தில் தரிசிப்பதும் விரதம் அனுட்டிப்பதும் சிவனடியார்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் தனிப்பெரும் பேறு ஆகும். ஆதிரை விழாவை 'ஆருத்திரா தரிசனம்' என்று சிறப்பித்துக் கூறல் சமய மரபு. அன்றைய தினம் தில்லையில் 'ஆருத்திரா தரிசனம்' செய்யச் செல்ல இயலாதவர்கள் - குறிப்பாக நம்நாட்டவர் நடராஜவடிவம் அமைந்துள்ள காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், பொன்னம்பலவாணேச்சரம், முன்னேச்சரம், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரம் முதலிய சிவத்தலங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் திருவாதிரை விழா வழிபாடு செய்வதும் விரதம் நோற்பதும் நாம் காணக்கூடிய தொன்றாகும்.

நடராஜ வடிவம் என்பது சிவபிரான் புரியும் ஐந்தொழில்கள் அல்லது பஞ்ச கிருத்தியம் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு அவர் என்றும் உதவும் கருணையின் அடையாளமாக விளங்குகின்றது. 'அரனடி என்றும் அனுக்கிரகம்மே' என்ற பேருண்மையைத் திருமூலர்,

**"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்**
**அரன்அங்கி தன்னில் அறையிற் சங்காரம்**
**அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி**
**அரனடி என்றும் அனுக்கிர கம்மே"**

என்ற பாடலில் அருமையாகக் கூறியுள்ளார்.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் போன்ற முனிவர்கள் தரிசித்து மெய்ம்மறந்த தில்லை நடராஜரின் ஆடற்கோலம் என்றும் காணத்தக்கது. அதனைக் கண்ணாரக் கருத்தாரக் காண மனிதப்பிறவி எடுக்க விரும்புவதாக அப்பர் பெருமான் கூறியுள்ளார். அவர் கருத்தமைதியுடன் பாடிய தேவாரப் பாசுரம் திருவாதிரைத் தரிசன தினத்தில் ஓதத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

**குனித்த புருவமும் கொவ்வைச்**
**செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல்**
**மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த**
**பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே**
**இந்த மாநிலத்தே.**

திருச்சிற்றம்பலம்

(அப்பர் தேவாரம்)

## (3) பிரதோஷ விரதம்

'பிரதோஷம்' என்ற வடசொல் 'இரவுக்கு முந்தியது' எனப் பொருள்படும். 'பிர' என்பது 'முதல்' எனவும் 'தோஷம்' என்பது 'இரவு' எனவும் வடமொழியில் பொருள் தரும். எனவே, 'பிரதோஷ விரதம்' என்பது இரவுக்கு முற்பட்ட வேளையாகிய பகல் முழுவதும் உணவு உண்ணாமல் கடைப்பிடிக்கும் விரதம் என்று விளக்குதல் பொருத்தமாகும். வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரு பட்சத்தும் பதின்மூன்றாம் நாளான திரயோதசித் திதியில் சிவபெருமான் கருணையை நாடி அநுட்டிக்கப்படுவது பிரதோஷ விரதமாகும். இவ்விரதத்தை நோற்க விரும்புபவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் வரும் சனிப் பிரதோஷ தினத்தில் விரத அநுட்டானத்தைத் தொடங்குதல் மரபு.

பிரதோஷ விரதம் அநுட்டிப்போர் பகல் முழுவதும் உபவாசமிருந்து பிரதோஷ வேளையாகிய சூரிய அஸ்த்தமனத்தின் போது சிவாலயங்களில் சிவதரிசனம் செய்த பின் போசனம் செய்தல் நியமமாகும்.

பிரதோஷ தினத்தில் செய்யும் சிவதரிசனம் வழக்கமாகச் சிவபெருமானைத் தரிசிக்கும் முறையிலும் வேறானது ஆகும். பிரதோஷ காலத்தில் சிவலிங்க மூர்த்தத்தைத் தரிசிப்பவர்கள் முதலில் இடப தேவரைத் தரிசித்து, இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசிக்க வேண்டும். அங்கு நின்று வலமாக வட திசையிற் கோமுகை வரை செல்லுதலும் அதனைக் கடவாது திரும்பி வந்த வழியே சென்று, இடப தேவரையும் சண்டேசுரரையும் தரிசித்தலும் மீண்டும் திரும்பி கோமுகை வரை சென்று, திரும்பி வந்து சண்டேசுரரைத் தரிசித்து விட்டுத் திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்தலும் அவருடைய இரு கொம்புகளினூடாக இடபாரூடரைத் தரிசித்தலும் வேண்டும். இத்தகைய சிக்கலான தரிசன மரபிற்குக் காரணமான புராணக் கதைச் சம்பவம் ஒன்று சமய இலக்கியங்களிற் கூறப்படுகின்றது.

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காகத் திருப்பாற் கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சைச் சிவபிரான் ஏற்று உண்டு, தேவர்களைக் காத்தருளினார். இச்சந்தர்ப்பத்தில் சிவபிரான் இடப தேவரின் கொம்புகளின் நடுவில் நின்று திருநடனம் புரிந்தருளினார். இந்நடனம் புரிந்த காலம் பிரதோஷ காலமாகும். எனவே, பிரதோஷ விரதிகள் இடப தேவரின் கொம்புகளின் ஊடாகச் சிவலிங்கத்தைத் தரிசிப்பதன் மூலம் ஆனந்தக் கூத்தரின் அருட் பிரவாகத்தை அடையலாமென்ற சிந்தனை, விரத தரிசன மரபாகப் போற்றப்படுகின்றது.

உயிர்களுக்கு அருள் பாலிக்கும் ஆலமுண்ட கண்டனைத் துதிக்கும் பின்வரும் தேவாரப் பாசுரங்கள், பிரதோஷ காலத்தில் சிறப்பாக ஓதத்தக்கன ஆகும்.

திருச்சிற்றம்பலம்

1. நாகந் தான்கயிறாக நளிர்வரை யதற்கு மத்தாகப்
பாகந் தேவ ரொடசுரர் படுகட லளறெழக் கடைய
வேக நஞ்செழ ஆங்கே வெருவொடும் இரிந்தெங்குமோட
ஆகந் தன்னில் வைத்தமிர் தமாக்கு வித்தான் மறைக்காடே.

திருச்சிற்றம்பலம்

(சம்பந்தர் தேவாரம்)

திருச்சிற்றம்பலம்

2. பருவரை ஒன்று சுற்றி அரவங் கைவிட்ட
இமையோர் இரிந்து பயமாய்ச்
திருநெடு மால் நிறந்தை அடுவான் விசும்பு
சுடுவான் எழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றி தற்கோர் பிதிகாரம் ஒன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே.

திருச்சிற்றம்பலம்

( அப்பர் தேவாரம் )

## (ஈ) சக்தி விரதங்கள்

சிவத்தின் வேறாகாது விளங்கும் சக்தி அம்பிகை, அம்பாள், பராசக்தி, உலக நாயகி என்னும் பொதுப் பெயர்களினாலும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி போன்ற பல சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படல் சமயமரபு. இத்தகைய சக்திக்குரிய விரத வகைகளில் வெள்ளிக் கிழமை விரதம் (உமா சுக்கிர வார விரதம்), சாவித்திரி விரதம், சுவர்ணகௌரி விரதம், காரடையா நோன்பு,

வரலட்சுமி விரதம், நவராத்திரி விரதம் என்பன குறிப்பிடத் தக்கன ஆகும். இவற்றில் வரலட்சுமி விரதம், நவராத்திரி விரதம் என்னும் இரண்டைப் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

## (1) வரலட்சுமி விரதம்

ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் வரலட்சுமி விரதம் அநுஷ்டிக்கப்படவேண்டியது ஆகும். செல்வ போகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களை முன்னிட்டு வரலட்சுமி தேவியை விசேடமாக வழிபட்டுப் பெண்கள் இவ்விரதத்தை நோற்பர்.

இவ்விரதத்துக்குரிய நியதிகளில்,

* விரத தினத்தில் தாமரைக் கோலத்தின் மீது பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைத்தல்.
* மஞ்சளில் தோய்ந்த ஒன்பது நூலிழைகளை முறுக்கி எடுத்து முடிந்த ஒன்பது முடிச்சுக் காப்பைக் கும்பத்தில் வைத்துப் பூசை செய்தல்.
* பூசை முடிவில் காப்பை வலக்கையில் கட்டிக் கொள்ளல். (சிறப்பு மரபு)
* விசேட நைவேத்தியமாக நெய்ச்சாதம் படைத்தல்.
* விசேட அர்ச்சனைப் பொருளாக அறுகம்புல்லைப் பயன்படுத்தல்.

என்பன குறிப்பிடத்தக்கன ஆகும்.

இந்த விரதத்துக்கு உபவாசம் விதியாக இல்லை. நண்பகல் போசனம், இரவு பலகாரம் உண்ணல் இவ்விரத அநுஷ்டானத்துக்கு உரியன ஆகும். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அநுஷ்டித்தல் இவ்விரதத்துக்குரிய மரபு.

## (2) நவராத்திரி விரதம்

வசந்த காலத்தில் அநுஷ்டிக்கப்படுவது வசந்த நவராத்திரி எனவும் சரத் காலத்தில் அநுஷ்டிக்கப்படுவது சாரத நவராத்திரி எனவும் பெயர் பெற்றுள்ளன. இவற்றில் வசந்த நவராத்திரி என்பது இலங்கையில் முன்னேச்சரத்திலும் இந்தியாவிற் சிற்சில பகுதிகளிலும் அநுஷ்டிக்கப்படுகின்றது. ஆயினும், சாரத நவராத்திரி என்னும் விரத காலம் தசரா, துர்க்கை பூசை, நவமி என்ற பெயர்களில் இந்தியாவில் இமயம் தொட்டு குமரிமுனை வரையிலுள்ள பல பிரதேசங்களிலும் இந்தியப் பண்பாடு பரவியுள்ள ஆசிய நாடுகள் பலவற்றிலும், இலங்கையிலும் சமூக, சமய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சாரத நவராத்திரி புரட்டாசி மாத வளர் பிறை முதல் ஒன்பது தினங்களும் நோற்கப்படும் விரதம் ஆகும். இவ்வொன்பது தினங்களிலே சக்தியை முதல் மூன்று தினங்களும் துர்க்கை ஆகவும், அடுத்து மூன்று தினங்களும் இலக்குமியாகவும், இறுதி மூன்று தினங்களும் சரஸ்வதியாகவும் வழிபடுதல் மரபு. இவ்வழிபாட்டின் மூலம் வீரம், செல்வம், கல்வி என்னும் பேறுகள் கிடைக்கும் என்பது விரதிகளின் நம்பிக்கை.

இவ்விரதத்துக்குரிய நியதிகளில்,

* பிரதமைத் திதியில் கும்பம் வைத்துப் பூசையைத் தொடங்கல்
* வீடுகளில் கொலு வைத்தல்
* ஸ்ரீசக்கர மகாயந்திர பூசை செய்தல்
* சண்டி ஹோமம் வளர்த்தல்
* தேவி மகாத்மியம், லலிதா சகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை போன்ற சக்தி நூல்களைப் பாராயணம் செய்தலும் கூட்டுப் பிரார்த்தனை செய்தலும்

என்பன குறிப்பிடத்தக்கன.

நவராத்திரியின் ஒன்பதாம் நாள் ஆகிய மகாநவமியை கலை விழாவாகவும் வீர விளையாட்டு விழாவாகவும் பரவலாகக் கொண்டாடுதல் விஜய நகரப் பேரரசு நிலவிய கால வழக்கம் ஆகும்.

மகா நவமிக்கு அடுத்த தினம் விஜய தசமி எனப்படும். அன்று ஏடு தொடங்கல், புதிதாகக் கலைப்பயிற்சியைத் தொடங்குதல் என்னும் நிகழ்வுகள் பக்தி பூர்வமாக நிறைவேற்றப்படும். ஆலயங்களில் அன்று மகிடாசுர சங்காரம் ஒரு விசேட அம்சமாக நிகழும்.

நவராத்திரி விரதத்தை அநுட்டிப்போர், முதல் எட்டுத் தினங்களிலும் பகலில் உண்ணாமல் இரவில் பூசை முடிந்ததும் பால், பழம், பலகாரம் உண்ணலும் ஒன்பதாம் நாள் உபவாசம் இருத்தலும் தசமியன்று காலையில் பாரணை செய்தலும் இவ்விரதத்தை ஒன்பது வருடங்கள் நோற்றலும் மரபு. இக்காலத்தில் பாடசாலைகளிலும் பிற கல்வி நிலையங்களிலும் நவராத்திரி பெருவிழாவாகக் கொண்டாடப்படுதல் குறிப்பிடத் தக்கது.

நவராத்திரி காலத்தில் பாராயணம் செய்யத்தக்க பாடல்கள் சில கீழே தரப்படுகின்றன.

1. **மணியே மணியினொளியே ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே அணியும் அணிக்க ழகேஅணு காதவர்க்குப்**
**பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே**
**பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.**
**(அபிராமியந்தாதி 24 )**

2. **புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்**
**கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்**
**நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்**
**பண்ணி நம்சென்னியின் மேற்பத்மபாதம் பதித்திடவே.**
**(அபிராமியந்தாதி 41 )**

# (உ) விநாயக விரதங்கள்

ஓங்காரப் பொருளாக விளங்கி யானை முகமும் தும்பிக்கையும், பெருவயிறும் கொண்டவர் விநாயகப்பெருமான். பிள்ளையார், கணபதி, ஆனைமுகன், ஐங்கரன் எனப் பலவாறு சிறப்பித்துக் கூறப்படும் விநாயகரை வழிபடற்குரிய விரதங்களில் சுக்கிர வார விரதம், சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கவை. சைவ நெறியினர் நினைத்த காரியசித்தி, முயற்சித் தடைநீக்கம் என்னும் பொது நோக்கத்தை அடைய விநாயகக் கடவுளைச் சிறப்பாக வழிபட்டு விரதம் நோற்பர். இத்தகைய பலன்தரும் விநாயக விரதங்களில் சதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என்னும் இரண்டையும் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

## (1) விநாயக சதுர்த்தி

விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும் ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் நிகழும் விசேட பூசை வழிபாடுகளைத் தரிசித்து அடியவர்கள் நோற்கும் விரதம் விநாயக சதுர்த்தி ஆகும். மாதந் தோறும் வளர் பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும், தேய் பிறையில் வரும் சதுர்த்தி தினத்திலும் விநாயகரைக் குலதெய்வ மாகவோ இஷ்ட தெய்வமாகவோ போற்றும் அடியவர்கள் சதுர்த்தி விரதம் அநுட்டிப்பர். தேய்பிறையில் வரும் சதுர்த்தி 'சங்கடஹர சதுர்த்தி' என்று சிறப்பித்துக் கூறப்படும். வாழ்வில் ஏற்படும் சங்கடங்களை நீக்கச் சங்கடஹர சதுர்த்தி சிறப்பாகப் பயன்தரும். வளர்பிறைச் சதுர்த்திகளில் ஆவணிச் சதுர்த்தி ஏனைய சதுர்த்திகளை விட மிகமிக மேலானதாகக் கருதப்படுகின்றது. முக்கியமாக மகாராஷ்டிரத்தில் மும்பையிலும் பிற நகர்களிலும் ஆவணிச் சதுர்த்தி வைகாசி மாத விசாகம் (வெசாக்) போல நாடளாவிய ஒரு விழாவாகப் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது. வனவாச காலத்தில் பஞ்சபாண்டவர்கள் சூத முனிவரின் உபதேசத்திற்கு இணங்க அனுட்டித்த வரலாற்றுச் சிறப்புமிக்க விரதம் ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

இச்சதுர்த்தி விரதத்துக்குரிய நியதிகளில்,

* நண்பகலில் உண்ணல், இரவில் பட்டினி இருத்தல்
* நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், வெள்ளரிப்பழத் துண்டு, கரும்புத் துண்டு, அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஆகிய ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்னும் எண்ணிக்கையில் விசேட நிவேதனம் படைத்தல்.
* இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு மலர், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றால் நிகழும் தனித்தனி அருச்சனையைத் தரிசித்தல்.
* விநாயகர் அகவல், விநாயக கவசம், விநாயகர் துதி முதலியவற்றைப் பாராயணம் செய்தல்.

என்பன சிறப்பாகக் கூறத்தக்கவை ஆகும்.

## (2) விநாயக சட்டி விரதம்

கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை (முதலாம் நாள்) தொடக்கம் மார்கழி மாத வளர்பிறைச் சட்டி (ஆறாம் நாள்) வரை உள்ள இருபத்தொரு தினங்கள் அநுட்டிக்கப்படுவது விநாயகசட்டி விரதம் ஆகும். இதனைப் பெருங்கதை விரதம், பிள்ளையார்கதை விரதம், பிள்ளையார் நோன்பு எனப் பாமரமக்கள் கூறுவது வழக்கம். இத்தினங்களில் நம் நாட்டு விநாயகர் ஆலயங்களிலும் சிவ நெறியினரின் பிற ஆலயங்களிலும் வரதபண்டிதரின் பிள்ளையார் கதை, விநாயக புராணம் என்பவற்றைப் படனம் செய்யும் வழக்கம் நெடுங்காலமாகப் பேணப்பட்டு வருகின்றது.

இவ்விரதத்துக்குரிய நியதிகளில்,

* விரதத் தொடக்க நாளில் இருபத்தொரு இழைகள் கொண்ட காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ளல்
* பாரணைத் தினத்தில் காலைப் பொழுதில் பவித்திரமாகக் காப்பை அவிழ்த்தல்

* முதலிருபது தினங்களும் ஒரு பொழுது நண்பகலில் போசனம் செய்தல், இரவில் பால், பழம் உண்ணல்
* இறுதித் தினத்தில் உபவாசம் இருத்தல்
* தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பவற்றை நிவேதனம் செய்தல்

என்பன குறிப்பிடத்தக்கன.

இவ்விரதத்தை இருபத்தொரு வருடங்கள் அநுட்டிப்பது உத்தமம். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் ஏழு வருடமாவது நோற்பது சிறப்பு ஆகும்.

## (ஊ) கந்த விரதங்கள்

சிவநாயகரின் திருக்குமாரர்களில் இளையவர் கந்தப் பெருமான். அசுரர் கொடுமைகளிலிருந்து தேவர்களைக் காக்கச் சிவபிரானின் அருளம்சமாகத் தோன்றிய கந்தப் பெருமானுக்குக் கார்த்திகேயன், சரவணபவன், ஆறுமுகன், முருகன், குமரன் என்னும் பல்வேறு சிறப்புப் பெயர்கள் உள்ளன.

கந்தப் பெருமானைச் சிறப்பாக வழிபடுவதற்குரிய விரத வகைகளில் வார விரதமாகிய சுக்கிரவார விரதம், மாத விரதமான கார்த்திகை விரதம், ஆண்டு விரதங்களான திருக்கார்த்திகை விரதம், கந்த சட்டி என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஆண்டுதோறும் அநுட்டிக்கப்படும் திருக்கார்த்திகை விரதம், கந்த சட்டி விரதம் என்னும் இரண்டையும் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

## (1) திருக்கார்த்திகை விரதம்

கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் வரும் தினத்தில் அநுட்டிக்கப்படுவது திருக்கார்த்திகை விரதம். இது மற்றைய மாதங்களில் வரும் கார்த்திகை நட்சத்திர தினத்தில் நோற்கப்படும் கார்த்திகை விரதத்தைவிட மேலான மகிமை உடையது. இக்காரணத்தினால் இவ் விரதம் 'திரு' என்னும் அடைமொழி சேர்த்து திருக்கார்த்திகை விரதம் எனப்படும்.

திருக்கார்த்திகை விரத நியதிகளில்,

* கார்த்திகை நட்சத்திரத்திற்கு முந்திய தினத்தில், (பரணித் தினத்தில்,) ஒரு வேளை உணவு உண்ணல்
* திருக்கார்த்திகையில் உபவாசம் இருத்தல்
* கார்த்திகை நட்சத்திரத்தின் மறுநாளான ரோகிணி தினத்தில் பாரணை செய்தல்
* ஆலயத்தில் தினைமா, தேன், சர்க்கரை, வாழைப்பழம், என்பவற்றை ஒருங்கே பிசைந்து ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றை இலக்கத் தொகையில் அகல் விளக்கு வடிவில் மாவிளக்குச் செய்து, நெய்விட்டு திரி இட்டு தீபம் ஏற்றுதல் (இது மாவிளக்கு எனப்படும்.)
* வீடுகளில் கோலங்கள் அமைத்து அவற்றின் மீது அகல் விளக்கு ஏற்றுதலும் தேங்காய்ப் பாதிகளை வாழைக் குற்றிகளில் வைத்து எண்ணெய் விட்டு, திரி இட்டு நீண்ட நேரம் எரியச் செய்தல்

என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன ஆகும்.

திருக்கார்த்திகைத் திருநாள் குமாராலய தீபத் திருநாள் எனப்படும். மறுநாள் ஆகிய பூரணைத்தினம் வீடுகளிலும் அனைத்து ஆலயங்களிலும் தீபமேற்றிச் சிறப்பாக வழிபாடு செய்யும் சர்வாலய தீபத் திருநாள் ஆகும். இதனை விளக்கீடு என்று கூறுதல் மக்கள் வழக்கம்.

மூன்று தினங்களில் நிகழும் சமயச் செயற்பாடுகளை உள்ளடக்கிய திருக்கார்த்திகை விரதம் திருவண்ணாமலையில் ஒரு மாபெரும் சமூக விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அம்மலைப் பிரதேச ஆதிவாசிகள் திருக்கார்த்திகை விளக்கீட்டு விழாவைத் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் குலவழிபாட்டுக் கடமையாக நிறைவேற்றி வருகின்றார்கள். பரணித் தினத்தில் முன்னேற்பாடுகள் செய்து மலையடிவாரத்தில் பரணித் தீபம் ற்றும் வழக்கமும், கார்த்திகைத் தினத்தில் ஒருவார காலம் தொடர்ந்து எரியக்கூடிய வகையில் மாபெரும் கொப்பரைகளில் எண்ணெய் நிரப்பி துணிகளைக் கட்டுக்கட்டாக இட்டுத் தீபம் ஏற்றுதல் ஒரு சமூக சம்பிரதாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இத் திருவண்ணாமலைத் தீபத்தைத் தரிசித்து இலட்சோப லட்சம் மக்கள் பக்தி ஆரவாரம் செய்யும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் திருக்கார்த்திகைத் தினச் சிறப்பு ஆகும். இம் மலையுச்சி யில் தீபம் ஒளிவீசத் தொடங்கும் வேளையில் மலையடிவாரத்தில் சுட்கப்பனை (உலர்ந்த தென்னை, பனைத்தண்டுகளால் ஆன) என்னும் சொக்கப்பானை சுவாலித்து எரியும் காட்சி கண்ணுக்கினிய பரவசக் காட்சி ஆகும்.

புற இருள் களைந்து ஒளிபரப்பும் கார்த்திகை விளக்கீடு அகவிருள் போக்கி ஞானச் சுடர் பரப்பும் தத்துவப் பொருளைக் குறிக்கின்றது.

திருக்கார்த்திகையின் பெருமையைக் கூறும் பின்வரும் பாடல்கள் சிறப்பாக ஓதத்தக்கன ஆகும்.

திருச்சிற்றம்பலம்

1. வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த் திகை நாள்
தளத்தேந் தினமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

(சம்பந்தர் தேவாரம்)

2. நிலைதரும் கார்த்திகைத் தினத்து நெல்லியின்
இலைகொடு குகனடிக் கிறைத்து ளோரெலாஞ்
சொலுமிலைக் கொருமகந் தொடர்பி னாற்றிய
பலனடை வாரெனப் பகரு நான்மறை.

(திருச்செந்தூர்ப்புராணம் : 11–36)

## (2) கந்தசட்டி விரதம்

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து அதாவது வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சட்டி வரையுள்ள ஆறு தினங்களும் முருகப்பெருமானை விசேடமாக வழிபட்டு நோற்கும் விரதம் கந்தசட்டி ஆகும். செல்வங்கள், சுகபோகங்கள் நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு, முருகனைக் குலதெய்வமாகவோ இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுட்டிப்பர். தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந் தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். இவ்வுத்தம முறைமையை அநுசரிக்க இயலாதவர் ஐந்து தினங்கள் ஒரு வேளை உண்ணுதலும் ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது.

இவ்விரத நியதிகளில்,

* அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவுண்ணல்
* தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து 'காப்புக் கட்டல்' அதாவது சங்கற்பம் செய்தல்
* ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு, புராணபடனம், போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடல்
* இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்
* ஏழாம் நாள் அதிகாலை நீராடி அநுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூசை முடிந்ததும் மாகேசுர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தல்

என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கந்த சட்டி என்பது முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட்செயலைக் குறிக்கும். இவ்விரதத்தின்ஆறாம்நாள் முருகன் ஆலயங்களில் 'சூரன்போர்' என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுதல் வழக்கம். மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சட்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

கந்த சட்டி விரதத்தின் மகிமையையும் பயனையும் கூறும் பின்வரும் பாடல் படிப்பதற்கு ஏற்றது.

**ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்**
**சீரணி முருகவேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்**
**பாரணம் விதியிற் செய்தார் பயிற்றும் இவ்விரதம் தன்னால்**
**தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.**

**(கந்த புராணம் - கந்த விரதப்படலம் - 23)**

# அட்டவணை

## விரத வகைகள்

| விரத வகை<br>1. தெய்வம் | விரதம் | விளக்கம் |
|---|---|---|
| சிவன் | 1.மகாசிவராத்திரி | ஆண்டுதோறும் மாசி. மாதத் தேய் பிறை பதினான்காம் நாள் நோற்கப்படும் விரதம் |
| | 2.மார்கழித்திருவாதிரை | ஆண்டுதோறும் மார்கழி மாதத் திருவாதிரை தினத்தில்-திருவெம்பாவை வழிபாட்டின் இறுதித் தினத்தில் நடராஜப் பெருமானை வழிபட்டு நோற்கும் விரதம். இத்தினத்தில் செய்யும் நடராஜ தரிசனம் 'ஆருத்திரா தரிசனம்' எனப்படும். |
| | 3.பிரதோஷம் | வளர்பிறை, தேய்பிறைகளில் வரும் பதின் மூன்றாம் நாள் பகல் முழுவதும் உபவாசம் இருந்து சிவதரிசனத்தின் பின் போசனம் செய்யும் நியமமுள்ள விரதம். |
| சக்தி | 4.சாரத நவராத்திரி | சரத்காலத்தில் புரட்டாசி மாத வளர்பிறையில் ஒன்பது தினங்களில் துர்க்கை, இலட்சுமி, சரசுவதி ஆகிய தெய்வங்களை மும்மூன்று தினங்கள் வழிபட்டு நோக்கும் விரதம். - பத்தாம் நாள் ஏடு தொடங்கலுக்குரிய விஜயதசமி ஆகும். |
| | 5.வரலட்சுமி | ஆண்டுதோறும் ஆவணிமாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமை வரலட்சுமி தேவியை விசேடமாக வழிபட்டுப் பெண்கள் நோற்கும் விரதம். |
| விநாயகர் | 6.ஆவணிச்சதுர்த்தி | ஆண்டுதோறும் ஆவணிமாதத் தேய்பிறை நான்காம் நாள் விநாயகப் பெருமான் அருளை வேண்டி நோற்கும் விரதம். |
| | 7.விநாயகசட்டி | ஆண்டுதோறும் கார்த்திகை மாதத் தேய்பிறை முதலாம் நாள் தொடக்கம் மார்கழி மாத வளர்பிறை ஆறாம் நாள் (ஷஷ்டி) வரையுள்ள 21 தினங்கள் நோற்கப்படும் விரதம். பெருங் கதைவிரதம், பிள்ளையார் கதை விரதம் என்றும் கூறப்படும். |

| விரத வகை | உதாரணம் | விளக்கம் |
|---|---|---|
| கந்தன் | 8.திருக்கார்த்திகை | ஆண்டுதோறும் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத் தினத்தில் முருகன் கருணை நாடி நோற்கும் விரதம் |
| | 9.கந்தசட்டி | ஆண்டுதோறும் ஐப்பசி மாதத் தீபாவளியை அடுத்துவரும் அமாவாசைப் பிரதமை தொடக்கம் தொடக்கம் ஷஷ்டி வரையுள்ள ஆறு தினங்கள் முருகன் அருள்வேண்டி நோற்கும் விரதம் |
| 2.காலம் | 10.மாதசிவராத்திரி | மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தியில் அநுஷ்டிக்கப்படுவது மாத சிவராத்திரி |
| மாதம் | 11.மாதச்சதுர்த்தி | மாதந்தோறும் வளர்பிறைச் சதுர்த்தியில் அநுஷ்டிக்கப்படுவது மாதச் சதுர்த்தி |
| | 12.சங்கடஹரசதுர்த்தி | மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தில் அநுஷ்டிக்கப்படுவது சங்கடஹரசதுர்த்தி |
| | 13.மாதக்கார்த்திகை | மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் அநுஷ்டிக்கப்படுவது மாதக் கார்த்திகை |
| வாரம் | 14.சோமவார விரதம் | திங்கள் தோறும் சிறப்பாகச் சிவபிரானைக் குறித்து அநுஷ்டிக்கப்படுவது |
| | 15.சுக்கிரவார விரதம் | வெள்ளி தோறும் சக்தி / விநாயர்/ முருகன் அருள்வேண்டி நோற்கப்படுவது |

| வகைப்பெயர் | உதாரணம் | விளக்கம் |
|---|---|---|
| 3. பிரதேச விரதம் | 16.மாங்கனிவிழா விரதம் | காரைக்காலில் காரைக்காலம்மையார் விழாக்காலத்தின் போது அங்குள்ளோர் அநுஷ்டிப்பது |
| | 17.திரௌபதையம்மன் விழா விரதம் | சிலாபத்திலும் பாண்டிருப்பிலும் திரௌபதையம்மன் திருவிழாக் காலத்தில் அநுஷ்டிக்கப்படுவது |
| 4. கடமை விரதம் | ஆடியமாவாசை / சித்திரைப் பூரணை நோன்பு | இறந்து போன தந்தை /தாயார் பொருட்டு பிதிர்க்கடனாக அநுஷ்டிக்கப்படுவது கணவரை இழந்த பெண்கள் அநுஷ்டிப்பது |
| 5.சிறப்பு நோக்க விரதம் | நேர்த்திக் கடன்சார் விரதம் | நோய் நீக்கம், காரிய வெற்றி போன்றன தொடர்பாக அநுஷ்டிக்கப்படுவது. |

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. விரதம் என்றால் என்ன?
2. சைவ மக்களால் அனுட்டிக்கப்படும் விரதங்களை வகைப் படுத்தி உதாரணம் தருக.
3. மகாசிவராத்திரி விரதம் எப்போது அனுட்டிக்கப்படுகிறது?
4. பிரதோஷ விரதத்தை அனுட்டிக்கும் முறை பற்றி விபரிக்குக.
5. சாரத நவராத்திரி விரதம் அனுட்டிப்பதற்குரிய நியதிகளைத் தருக.
6. கந்த சட்டி விரதத்தின் போது புராண படனம் செய்யும் நூல்கள் எவை?
7. திருக்கார்த்திகை விரதம் உணர்த்தும் தத்துவம் யாது?

**செயற்பாடு :**

கந்தசட்டிவிரத காலத்தில் கந்தபுராணத்தில் பொருத்தமான பகுதிகளில் புராண படனப் பயிற்சி பெற உதவுக.

# 8

# பண்டிகைகள்

## (அ) அறிமுகம்

சமய நூல்களில் விரதங்கள், பண்டிகைகள் என்னும் இரண்டும் இணைத்துக் கூறப்படுகின்றன. எனினும், இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன.

முதலில் பண்டிகை என்ற சொல்லின் பொருளைச் சுருக்கமாகக் கூறுவோம். பண்டிகை என்ற சொல் பெருநாள், விசேட நாள் என்னும் பொருள்களைத் தரும். இச் சொல்லின் பொருளை இக்கால வழக்கை ஒட்டி வரையறுக்கும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, "தாம் சார்ந்துள்ள சமயத்தில் முக்கியமானதாகக் கருதப்பட்டு வருடத்தில் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் சிறப்பாகக் கொண்டாடப்படுவது" எனப் பண்டிகை என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் தந்துள்ளது.

எனவே, விரதத்தைப் போல் பண்டிகைக்கும் சமய முக்கியத்துவம் இருப்பினும், அவை இரண்டுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு இருத்தலை உணர்ந்து கொள்ளலாம். உணவைச் சுருக்குதல், ஒழித்தல் விரதத்தின் ஆதாரமாயிருக்க, பலவகை உணவுகளைச் சிறுவர்கள், பெரியோர்கள், அயலவர்கள், நண்பர்கள் கூடியுண்ணும் விருந்து வைபவமாகப் பண்டிகை விளங்குதல் குறிப்பிடத்தக்கது. மேலும், உறவினர் வீட்டு விஜயம், புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சிகள், வாழ்த்து மடல்கள் அனுப்பல் போன்ற குதூகலச் செயற்பாடுகள் பண்டிகைகளில் அங்கங்கள் ஆகின்றன. விரதங்களில் இத்தகைய கேளிக்கைகள் இடம்பெறுவதில்லை.

தைப்பொங்கல், தீபாவளி, சித்திரைப் புத்தாண்டு, ஆடிப்பிறப்பு, ஓணம் பண்டிகை, காமன் பண்டிகை என்பன கொண்டாடும் திருநாள்கள் அல்லது பண்டிகைகள் ஆகும். இவை பற்றி அறிந்து கொள்ளுவோம்.

## (ஆ) தைப்பொங்கல்

தைமாதம் ஓராண்டின் தொடக்கமாக ஏற்கப்படும் சமய-சமூகக் கொள்கைக்கு இணங்கக் கொண்டாடப்படும் பண்டிகை தைப்பொங்கல் ஆகும். தைப்பொங்கல் என்னும் பண்டிகையைப் பொங்கல் திருநாள், அறுவடைத் திருநாள், உழவர் திருநாள் என்று கூறுதல் இக்கால வழக்கம்.

சமய நூல்கள் தைப்பொங்கற் திருநாளை மகர சங்கராந்தி என்று கூறுகின்றன. சூரியன் தெற்கிலிருந்து வடக்காகப் பூமத்தியரேகையைக் கடக்கும்போது தனுராசியிலிருந்து மகரராசிக்கு இடம் மாறுகிறது. இந்த இடப்பெயர்ச்சியே மகர சங்கராந்தி எனப்படும். மகர சங்கராந்தியை உத்தராயண சங்கராந்தி என்றும் கூறுதல் வழக்கம். உத்தரம் - வடக்கு. அயனம்-செல்லல். எனவே சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலத் தொடக்கத் திருநாளே உத்தராயண சங்கராந்தி ஆகும். சூரியனின் இச்செல்திசைப்பெயர்வு உழவர்களுக்குச் சாதகமான காலநிலையை ஏற்படுத்துகிறது; விவசாய அறுவடைக்கு உகந்ததாக விளங்குகிறது.

வட பாரதத்தில் இந்தச் சங்கராந்தி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பமேளா என்ற பெருவிழாவாக

ஹரித்துவார், பிரயாகை, திரிவேணி சங்கமம் போன்ற இடங்களில் கொண்டாடப்படும். தமிழ் நாட்டிலும் அவ்வாறே 'மகாமகம்' என்ற பெயரில் மகர சங்கராந்தி கொண்டாடப்படுவது வழக்கம். பன்னிரண்டு வருட இடைவெளி நீண்ட காலம் என்ற கருத்து மக்களிடையே பரவியதால் அலகபாத்தில் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை சங்கராந்தி அர்த்த கும்பமேளா என்ற பெயரில் கொண்டாடப்படும் புது வழக்கம் தோன்றியுள்ளது. வடபாரதத்தில் மகாமகம், கும்பமேளா, மகாகும்பமேளா என்ற பெயர்களில் கொண்டாடப்படும் மகர சங்கராந்தி தென் பாரதத்தில் கேரளத்தில் சபரிமலை மகரஜோதி தரிசனம் என்ற பெயரிலும் தமிழ் நாட்டில் தைப்பொங்கல் என்ற பெயரிலும் வேறுபட்ட சம்பிரதாயங்களுடன் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டிலும் தமிழ் மக்கள் வாழும் இலங்கை போன்ற இடங்களிலும் மார்கழி மாதக் கடைசித்தினம் போகிப் பண்டிகையாகவும் அடுத்த நாள் ஆகிய தை முதலாந்தினம் சூரியன் பொங்கல் அல்லது தைப்பொங்கலாகவும் தை இரண்டாம் தினம் மாட்டுப்பொங்கல் அல்லது பட்டிப்பொங்கல் ஆகவும் கொண்டாடப்படுதல் வழக்கம்.

போகிப்பண்டிகை என்பது மார்கழி இறுதித் தினம் ஆகிய ஆண்டிறுதியில் வீட்டிலுள்ள பழைய துணிகள், பொருள்கள் முதலியவற்றை எரித்துப் பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படும் பண்டிகை. தைப்பொங்கலுக்காக வீட்டைத் தூய்மைப்படுத்தும் ஏற்பாடுகள் செய்யும் வைபவ தினமே போகிப்பண்டிகையாகும். தோட்டப்பொங்கல், தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல் என்பன உழவர்கள் தமது தொழில் வளர்ச்சிக்கும் அறுவடைக்கும் உதவும் சூரியனுக்கும் மாடுகளுக்கும் நிலத்திற்கும் நன்றி கூறும் சமய - சமுதாய விழாவாகும். புதுப்பானையில் சமைக்கும் பச்சரிசிப் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்தல், புத்தாடை அணிதல், வாண விளையாட்டு என்பன பாரம்பரிய கொண்டாட்ட அம்சங்கள். இக்காலத்தில் பொங்கல் வாழ்த்து மடல்கள் அனுப்புதல், கலைநிகழ்சிகள், சஞ்சிகைகள் வெளியிடும் பொங்கல் மலர்களைப் படித்து மகிழ்தல், கவியரங்குகள் போன்ற இலக்கிய நிகழ்வுகளில் பங்கு பற்றல் போன்ற அம்சங்கள் தைப்பொங்கலில் இடம்பெறுதல் வழக்கம்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பட்டிகளை அல்லது தொழுவங்களைத் துப்பரவு செய்து மாடுகளை நீராட்டி அலங்கரித்து, சம்பிரதாய பூர்வமாகச் சமைக்கும் பொங்கலை அவற்றுக்கு ஊட்டுதல் பட்டிப்பொங்கல் எனப்படும். இப்பட்டிப் பொங்கல் முற்காலத்தில் வயல் வெளியிலுள்ள பட்டி மேடுகளில் கொண்டாடப்பட்டது. இவ்வழக்கத்தை நினைவூட்டும் வகையில் திருக்கோணமலையில் 'பட்டிமேடு' என்னும் வயலூர் இருக்கிறது. ஆனால், இக்காலத்தில் பட்டிப்பொங்கல் மாடு வளர்க்கும் வீடுகளில் மாட்டுத் தொழுவத்தில் கொண்டாடப்படுதலே வழக்கமாகியுள்ளது. மேலும், இம்மாட்டுப் பொங்கலைத் தொடர்ந்து மாட்டு வண்டிச் சவாரி என்னும் விளையாட்டுப் போட்டி கிராமப் பிரதேசங்களில் நடைபெறுதல் வழக்கம். இதுபோன்ற கிராமிய வழக்கில் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட தோட்ட, வயல் நிலங்களில் தமது விவசாயச் செழிப்புக்கு உதவிய சூரியன், நிலம், விலங்குகள் என்பவற்றை வாழ்த்தவும் நன்றி செலுத்தவும் தோட்டப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

## (இ) தீபாவளி

தீபாவளி பாரதத்தில் இமயம் தொடக்கம் குமரிமுனை வரையும் உள்ள பல பிரதேசங்களிலும், இந்துப் பண்பாடு பரவியுள்ள இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிற் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படும் பண்டிகையாகும். இப்பண்டிகை ஐப்பசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் கொண்டா டப்படுகின்றது.

தீபாவளி சைவர்கள், வைணவர்கள் உள்ளிட்ட இந்து நெறிப் பிரிவினர் யாவரும் கொண்டாடும் பண்டிகையாக இன்று பிரபல்யம் அடைந்துள்ளது.

## (1) வட பாரதத்தில் தீபாவளி

வட பாரதத்தில்,

1. யட்சராத்திரி (அசுரன் இரவு)
2. ஜெகத் ராத்திரி
3. சுகராத்திரி
4. தீபோற்சவம்
5. தீபப்பிரதிபதி உற்சவம்
6. தீபமாலா வர்ணனம்
7. கார்த்திக அமயம் தீபமாலா வர்ணனம்
8. தீவாளி

என்னும் பெயர்களில் விக்கிர ஆண்டு முறையின் தொடக்க நாளாகத் தீபாவளி முற்காலத்தில் கொண்டாடப்பட்டது.

## (2) தென் பாரதத்தில் தீபாவளி

தென்பாரதத்தில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டமை பற்றிய முதற் குறிப்பு முற்காலச் சாளுக்கிய மன்னனான திரிபுவனமல்லனின் கன்னடக் கல்வெட்டில் (கி.பி 1117) காணப்படுகிறது. விஜயநகர ஆட்சி பற்றிக் கூறும் 'ஆகாச பைரவகதா' என்ற நூல் மன்னனின் வெற்றி, செல்வவளம் என்பவற்றுக்காக மகாலட்சுமிக்குப் பூசை செய்து இரு நாள் கொண்டாடப்படுவதே தீபாவளி என்று கூறுகின்றது.

## (3) நரகாசுரன் கதை

பாரதம் முழுவதும் இவ்வாறு கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் கொண்டாடப்படும் தீபாவளி என்ற பண்டிகை பற்றிய கதை ஒன்று உள்ளது. நரகாசுரன் என்ற அசுரன் மகாவிஷ்ணுவால் அழிக்கப்பட்ட தினத்தை அவரின் தாயாகிய பூமாதேவியின் வேண்டுகோளுக்கு இணங்கக் கொண்டாடும் தினமே தீபாவளி என்பது அஸ்ஸாம் மாநிலத்தில் வழங்கும் கதையின் சாரம்.

'துலா மாத மகாத்மியம்' என்ற நூல், தீபாவளி தினத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்தால் கங்கா ஸ்நானப் பலன் கிடைக்கும் எனக் கூறுகிறது.

## (4) கொண்டாட்ட முறை

பொதுவாகத் தீபாவளி தென்பாரதத்தில் நரக சதுர்த்தசி, தீபாவளி என இரு நாள் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால், வடபாரதத்தில் தீபாவளி ஐந்து நாள் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. அந்த ஐந்து நாள் கொண்டாட்டங்கள் பின்வருவன ஆகும்.

1. பழைய பொருள்களை நீக்கிவிட்டுப் புதுப் பொருள் வாங்கல்
2. வீட்டில் மாவிளக்கேற்றல
3. சாணத்தால் செய்த மனித உருவத்தின் தலையில் விளக்கேற்றல்
4. கோவர்த்தனகிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப் பாடுதல்

5. மணமான பெண்கள் பூசை செய்தபின் தங்கள் சகோதரர்களுக்குத் திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல்

இவற்றை நோக்கும் போது தென்பாரதத் தீபாவளிப் பண்டிகையும், வட பாரதத் தீபாவளிப் பண்டிகையும் பெரிதும் வேறுபடுதலை அறிந்து கொள்ளலாம். எனினும், கேளிக்கைகள் தீபாவளித் தினத்தில் செல்வாக்குச் செலுத்தும் பண்பு பாரதம் முழுவதிலும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

## (ஈ) சித்திரைப் புத்தாண்டு

ஓர் ஆண்டைக் கணிக்கும் பல்வேறு முறைகளில் இரு கணிப்பு முறைகள் தென் பாரதத்தில் முக்கியமானவை. அவை சௌரமானம், சாந்திரமானம் என்பன ஆகும். இவற்றில் சௌரமானம் என்பது சூரியன் மேடராசியிலிருந்து மீனராசி வரையுள்ள பன்னிரு இராசிகளிலும் சஞ்சரிக்கும் காலங்களைச் சூரிய மாதங்களாகக் கணக்கிட்டு, சித்திரை முதல் பங்குனி வரையுள்ள பன்னிரு மாதங்களைக் கொண்டதே ஓர் ஆண்டு எனக் கொள்ளும் முறையாகும். இது தமிழ் மக்களில் இந்துக்களும், பௌத்த சிங்கள மக்களும் பின்பற்றும் முறையாகும். சாந்திரமானம் அல்லது சாந்திர வருஷம் என்பது சந்திரன் சுற்றி வருவதால் வரும் சாந்திர மாதங்கள் கொண்ட வருடத்தை நிர்ணயிக்கும் முறை ஆகும். இது ஆந்திரப் பிரதேசத்திலும் பிற இடங்களிலும் வாழும் தெலுங்கு மக்கள் உகாதி என்னும் பெயர் கொண்ட புத்தாண்டைக் கணித்துக் கொள்ளும் முறையாகும்.

சூரியன், மேட ராசியிற் புகும் தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பிற்கு இரு முக்கியத்துவங்கள் உள்ளன. ஒன்று பிரம்மா சித்திரை மாத முதல் நாளிற்றான் தனது படைப்புத் தொழிலைத் தொடங்கியதாக ஒரு புராண மரபு உள்ளது. அடுத்தது வடதிசை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன்கோயிலின் மூலத்தானத்தைக் கடந்து செல்லும் தினம் சித்திரை முதல்நாள் ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் சுப நேரத்தில் மக்கள் விசேட தயாரிப்பான மருத்துநீரைத் தலையில்வைத்து நீராடல், புத்தாடை அணிதல், விசேட வழிபாடு செய்தல், புதுப்பானையில் நியதிக்கு இணங்கப் பொங்கிய அன்னத்தைச் சூரியனுக்குப் படைத்தல், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சுபதின சுபநேரத்தில் விஜயம் செய்தல் என்பன சித்திரைப் பொங்கல் பண்டிகையின் சம்பிரதாயங்கள் ஆகும். மேலும், புத்தாண்டு பிறந்த பின் முதலில் அமையும் சுபதின சுபநேரத்தில் 'கைவிசேஷம்' பரிமாறல், புதுக்கணக்குப் பதிதல், நாள் வியாபாரம் தொடங்கல், ஏர்மங்கலம், புது விதைப்பு, புதிதெடுத்தல், வித்தியாரம்பம் என்னும் கருமங்களைத் தொடங்கும் வழக்கம் தமிழ் மக்களிடம் உள்ளது.

சில தசாப்தங்களின் முன்னர், போர்த் தேங்காய் அடித்தல் என்னும் பொழுது போக்கு விளையாட்டு தமிழ்க் கிராமங்களில் பெருவிழாவாகப் பின்பற்றப்பட்டது. மேலை நாட்டு விளையாட்டுக்கள் இளையோரிடம் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் இக்காலத்திற் போர்த்தேங்காய் அடித்தல் அருகிவிட்டது. எனினும், பொங்கல் படைத்தல், விசேட வழிபாடு, கைவிசேஷம் பரிமாறல் என்னும் முக்கிய அம்சங்கள் பேணப்படும் பண்டிகையாகச் சித்திரைப் புத்தாண்டுப் பொங்கல் இந்து மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது.

## (உ) ஆடிப்பிறப்பு

சூரியன் வட திசைநோக்கிச் செல்லும் உத்தராயணம் தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலத்தில் நிறைவடையும். இது தேவர்களுக்குரிய ஒரு நாளில் பகற்பொழுது என்று கொள்ளப்படும். அடுத்ததாகச் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் தட்சிணாயணம் எனப்படும். இது ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாதம் ஆகும். இக்காலப்பகுதியைத் தேவர்களுக்குரிய ஒரு நாளில் இராப்பொழுது என்று கூறுவது சமய மரபு.

தட்சிணாயணத்தின் தொடக்கத்தினம் ஆடி மாத முதல் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. ஆற்றுநீர் வளமுள்ள தென்னாட்டு மக்கள் காவிரி போன்ற ஆற்றங் கரைகளில் சித்திரான்னம் உண்டு, படகோட்டம் போன்ற கேளிக்கைகளில் பங்குபற்றும் 'ஆடிப்பெருக்கு' பண்டிகையைக் கொண்டாடுவர். ஆயின், நம் நாட்டுத் தமிழ் மக்கள் ஆடிக்கூழ், கொழுக்கட்டை என்னும் உண்டிவகைகளை விசேடமாகத் தயாரித்து, குடும்ப விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தலும் உற்றர் உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணலும் வழக்கமாகும். இவை ஆரோக்கியமான குடும்ப வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் துணைபுரியும் வழக்கக் கூறுகள் ஆகும்.

## (ஊ) காமன் பண்டிகை

சிவபிரானின் அருட்செயல்களில் காமதகனம் என்பது கந்தபுராணம் விவரிக்கும் முக்கியத்துவம் உள்ள செயல் ஆகும். அட்டவீரட்டானத் தலங்களில் திருக்குறுக்கை என்னும்

சிவத் தலத்தில் காமதகனம் நிகழ்ந்ததென்று கூறுவது சைவமரபு. சிவபிரானின் காமதகன அருட் செயலை ஒரு சமய விழாவாகக் கொண்டாடும் போது அச்செயல் பற்றிய கூத்து தமிழ் நாட்டில் திருக்குறுக்கையைச் சூழ்ந்துள்ள பிரதேசத்தில் விசேட நிகழ்ச்சியாகச் சமய விழாவில் இடம் பெற்றது. காலப்போக்கில் அப்பிரதேச விழாவின் சமய முக்கியத்துவம் குன்றியது. ஆனால் காமன் கூத்து என்னும் கலை வடிவத்தின் முக்கியத்துவம் மங்கி மறையவில்லை. இக்காமன் கூத்து மலையகத் தமிழ் மக்களிடையே இப்போதும் வழக்கிலுள்ள ஒரு பண்டிகைக்காலக் கலை வடிவமாகக் காணப்படுகிறது.

## (எ) ஓணம் பண்டிகை

ஆவணி மாதத் திருவோணம் நட்சத்திரம் நடராஜப் பெருமானுக்குரிய விசேட அபிசேகத் தினங்களில் ஒன்று ஆகும். இது பொன்னம்பலவாணேச்சரர் ஆலயத்தில் இப்போதும் விசேட அபிசேகத் தினமாக அநுட்டிக்கப்படுகிறது.

இலங்கையில் வாழும் இந்தியப் பூர்வீகமுள்ள மக்களிடையே சிறப்பாக மலையாளிகளிடையே ஓணம் பண்டிகை இன்றும் ஒரு முக்கிய வைபவமாகக் கொண்டாடப்படுகிறது.

## பயிற்சி

(அ) பின்வரும் நிகழ்வுகள் சிறப்புப் பெறும் பண்டிகைகளைக் குறிப்பிடுக.

1. பட்டிப் பொங்கல்
2. எண்ணெய் தேய்த்துக் குளித்தல்
3. மருத்துநீர் தேய்த்தல்
4. காமதகனம்

(ஆ) பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | பண்டிகை | இடம் | பெயர் |
|---|---|---|---|
| 1. | தைப் பொங்கல் | வடபாரதம் | .......................... |
| 2. | .......................... | கேரளம் | ஓணம் பண்டிகை |
| 3. | தீபாவளி | .......................... | யட்சராத்திரி |
| 4. | .......................... | தமிழ்நாடு | ஆடிப்பெருக்கு |

(இ) பின்வரும் சொற்களை விளக்குக.

1. பண்டிகை
2. மகர சங்கராந்தி
3. சௌரமானம்
4. தட்சிணாயணம்

# 9

# சமய குரவர் நால்வர்

## அ. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

### (1) அறிமுகம்

சைவ சமய குரவர் நால்வரில் தேவார முதலிகள் எனச் சிறப்பித்துக் கூறப்படும் மூவரில் முதலிடம் பெறுபவர் முருகனின் அம்சமென்று அருணகிரிநாதர் குறிப்பிடுகின்ற திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் ஆவார். இவர் ஏனையோரை விட வயதில் மிக இளையவர், பதினாறு ஆண்டுகள் மட்டுமே இம் மண்ணுலகில் வாழ்ந்தார். ஆனால், இக்குறுகிய வாழ்க்கைக் காலத்தில் அவர் செய்த பணிகளும் புரிந்த சாதனைகளும் நூற்றாண்டு காலம் வாழும் சாதாரண மனிதர்களிலும் வேறுபட்ட சாதனையாளராக அவரை உயர்த்தியுள்ளன. அவை இருபத்தோராம் நாற்றாண்டின் தொடக்கத்தை எதிர்நோக்கி வாழும் நமக்கு இப்போதும் நன்மை பயக்கும் அரிய போதனைகளைக் கூறும் சிறப்பு மிக்கவையாகக் காணப்படுகின்றன.

### (2) பிறப்பும் சிறப்பும்

திருஞானசம்பந்தர் சோழ நாட்டிலுள்ள சீர்காழி என்னும் சிவத்தலத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவபாத விருதயர், பகவதியார்ஆகிய பெற்றோரின் நல்வினைப் பயனாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் யாது என்பது இப்போது தெரியாது. ஆனால், அவரின் சிறப்புப் பெயர்கள் பலவற்றில் முக்கியத்துவம் பெறும் "ஞானசம்பந்தர்" என்னும் காரணப் பெயர் அவரைக் குறிக்கச் சமயநூல்களிற் பரவலாக வழங்கி வருகின்றது. "சிவஞானம் சித்தித்த சீரியர்" என்பது

இப்பெயரின் உட்கிடை. சைவத் தமிழுலகிலே சிவஞானத்திற் சிறந்தவர்களும் சிவஞானம் சித்திக்கப் பெற்றவர்களும் வாழ்ந்துள்ளனர். ஆயினும், அவர்களுக்கு வாய்க்காத தனிப் பெருஞ் சிறப்புவழியில் சிவஞானம் பெற்ற காரணத்தால் சிவபாதவிருதயர், பகவதியார் பெற்ற தவக்கொழுந்து மட்டும் 'ஞானசம்பந்தர்' என்ற சிறப்புப் பெயரை முதலிற் பெற்றார், முதன்மை பெற்றார். உமாமகேசுவரரின் அருளமுது பெற்ற சிறப்பு, மூன்று வயதில் அருள் ஞானம் அடைந்த அருமை, மூன்று வயதில் அருட்பாசுரம் பாடும் திறமை என்னும் மூன்றும் ஒருங்கே இணைந்த பெருஞ் சிறப்புக் காரணமாக 'ஞான சம்பந்தர்' என்ற கருத்துச் செறிவுள்ள பெயர் அத் தவக் கொழுந்துக்கு மட்டுமே உரியது ஆயிற்று.

## (3) திருவருட் பேறு

ஞான சம்பந்தரின் குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்த வாழ்க்கைச் சம்பவங்கள் பல, காலவெள்ளத்தில் ஆழ்ந்து விட்டன. ஆனால், ஒரேயொரு சம்பவம் மட்டும் அவரின் குழந்தைப் பருவ வாழ்விலும் வரலாற்றிலும் முதன்மை பெற்றுள்ளது. சிவபிரான் திருப்பாதங்களைத் தமது இருதய கமலத்தில் தரித்த சிவபாதவிருதயர் ஒருநாள் தோணியப்பரை வழிபடச் சீர்காழித் திருத்தலத்திற்குத் தமது திருக்குமாரருடன் சென்றார். அங்குள்ள தீர்த்தக் கரையில் தமது பிள்ளையை இருத்திவிட்டு நீராட முற்பட்ட சிவபாதவிருதயர் சிறிது நேரம் நீரில் அமிழ்ந்து முக்குளித்தார். அப்போது சிவபாதவிருதயரைக் காணாத குழந்தை அழுது அரற்றியது. உலக நாயகரான தோணியப்பர் அத் தவக்கொழுந்தின் அழுகையை நிறுத்தி, அதனுடைய உலகியற் சார்பான ஆற்றாமையையும் தென்னாட்டு மக்களுடைய சமயச்சார்பான ஆறறாமையையும் ஒழிக்கத் திருவுளங் கொண்டார். உடனே, தோணியப்பரின் அருட் சக்தியாகிய உமா தேவியார் பாலமுதினை ஊட்டி, அத் தவக்கொழுந்தை ஞானம் மிளிரும் சிவக்கொழுந்து ஆக்கினார். இந்த அருட் சம்பவத்தை

அறியாத சிவபாதவிருதயர் தமது பிள்ளை தவறு செய்துவிட்டதென மயங்கி, "யார் ஊட்டிய பாலமுதை அருந்தினாய்?" என்று அதட்டினார். அப்போது, அக்குழந்தை வானிலே காட்சியளித்த அம்மையப்பரைச் சுட்டிக்காட்டி ஓங்காரத்தை நினைவூட்டும் சொல்லமைவு கொண்ட **"தோடுடைய செவியன்.........."** என்னும் முதலாவது திருப்பதிகத்தைப் பாடியது. சிவபாதவிருதயரின் அகக் கண்களைத் திறந்த இந்தச் சம்பவத்தின் பின்னர் அவரின் தவக்குழந்தை, 'ஞானசம்பந்தர்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. மேலும், சிவசக்தியினால் ஆட்கொள்ளப்பட்ட அருமை காரணமாக, 'ஆளுடைய பிள்ளை' என்னும் காரணப் பெயரும் ஞானசம்பந்தரின் மற்றொரு சிறப்புப் பெயர் ஆயிற்று.

உமையம்மை ஊட்டிய பாலமுதை உண்ட சம்பந்தருக்கு அடுத்து, சிவம் சக்தி ஆகிய இருவரின் கருணைக்குப் பாத்திரமாகும் சந்தர்ப்பம் விரைவில் வாய்த்தது. அவர் திருக்கோலக்கா என்னும் திருத்தலத்திற்குச் சென்றபோது, **"மடையில் வாளை......."** என்னும் பதிகத்தைப் பாடியதும் சிவபிரான் திருவருளால் திருவைந்தெழுத்து பொறிக்கப்பட்ட பொற்றாளம் அவருக்குக் கிடைத்தது. அப்போது ஓசை பிறவா வெறுந் தாளமாக இருந்த அப்பொற்றாளம், "ஓசை கொடுத்த நாயகி" ஆகிய அம்மையின் கருணையினால் ஓசை பிறந்து இனிமை பரப்பும் நற்றாளம் ஆனது.

இவ்வாறு சிவம், சக்தி ஆகிய இருவரின் திருவருளை இருமுறை பெற்ற சம்பந்தரின் புகழ் பல இடங்களிலும் பரவியது. அதனால் மக்கள் அவரைத் தத்தம் ஊர்களுக்கு வந்து சிறப்பிக்கவேண்டுமென அழைத்தனர். எனவே, அவர் சோழ நாட்டுத் தலயாத்திரையை முதலில் தொடங்கினார்.

## (4) சோழநாட்டுத் தல யாத்திரை – நலன்கள்

சம்பந்தர் சோழ நாட்டுத் தல யாத்திரையைத் தொடங்கியதும் முதன் முதலில் தமது தாய் பகவதியாரின் பிறப்பிடமான

**திருநனிபள்ளிக்குத்** தந்தையாரின் தோளில் அமர்ந்து சென்றார். அவர் மேற்கொண்ட திருத்தல யாத்திரையைச் சிரமங்கள் இல்லாமல் தொடரத் துணைபுரிய வேண்டுமெனச் சிவபிரான் திருவுளங் கொண்டார். எனவே, சம்பந்தர் சிவபாதவிருதயரின் தோளிலிருந்து இறங்கிக், கால்வருந்த நடந்து சென்று, மாறன்பாடி என்னும் பதியில் இராப்பொழுதைக் கழித்த சந்தர்ப்பத்தில், சிவபிரான் தமது அடியார்களின் கனவில் தோன்றி, சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் ஆகிய விருதுகளைக் கொடுத்து உதவுமாறு தெரிவித்தார். அடியவர்கள் ஆசாரியருக்குரிய அவ்விருதுகளைச் சம்பந்தருக்கு வழங்கியதும் ஞானக்குழந்தை **"எந்தை ஈசன்....."** என்னும் திருப்பதிகத்தைப் பாடி அவற்றை ஏற்றுக் கொண்டார். இதன் பின் சிவபாதவிருதயருக்கோ தமக்கோ எத்தகைய பிரயாணச் சிரமமும் இல்லாமல் திருத்தல யாத்திரையை இனிதே தொடரும் பேறு சம்பந்தருக்கு வாய்த்தது. ஆசாரிய விருதுகள் பெற்று சமயகுரவரான ஞானசம்பந்தர், அடியார்களுடன் திருத்தல யாத்திரையைத் தொடர்ந்ததன் பயனாக முதலில் சோழ நாட்டுச் சமுதாயம் பல நன்மைகளை அடைந்தது. **திருவாவடுதுறை** என்ற திருத்தலத்தில் சிவபிரான் அருளால் பெற்றுக் கொண்ட **ஆயிரம் பொன் அடங்கிய பொற்கிழியைச்** சம்பந்தர், சிவபாதவிருதயருக்கு வழங்கி, தந்தையாரின் யாகக்கிரியை இனிதே நிறைவேறத் துணைபுரிந்தார். திருப்பாச்சிலாச்சிரமம் என்ற தலத்தில் **கொல்லிமழவன்** என்ற சிற்றரசனின் **மகளை** வருத்திய **முயலகன்** என்னும் நோயைச் சம்பந்தர் **"துணிவளர்திங்கள்......."** என்ற பதிகத்தைப் பாடி நீக்கினார். பின்னர் **திருக்கொடிமாடச்செங்குன்றூர்** மக்களை வருத்திய குளிர்ச்சுரத்தை **"அவ்வினைக்கிவ்வினை......"** என்ற பதிகத்தைப் பாடித் தீர்த்தருளினார். **திருமருகல்** என்னும் ஊரில் அரவு தீண்டி இறந்த போன வணிகனை, **"சடையா யெனுமால்.............."** என்ற பதிகம் பாடி உயிர்ப்பித்து, அவனுடன்

வந்த கன்னிக்கு மாங்கலியபாக்கியம் நிறைவேற உதவினார். திருவீழிமிழலை என்ற தலத்திற்குத் திருநாவுக்கரசருடன் சென்ற போது, **"வாசிதீரவே ..........."** என்னும் பதிகம் பாடி, சிவபிரான் அருளால் பெற்ற படிக்காசு மூலம் அன்னதானம் புரிந்து மக்கள் துயர்துடைத்தார். இத் துயர்துடைப்புப் பணியில் திருநாவுக்கரசரும் இறைவனிடம் படிக்காசு பெற்று தொண்டு புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்ட சம்பந்தரும் அப்பரும் **திருமறைக்காடு** என்ற தலத்தை அடைந்ததும், அங்குள்ள திருக்கோயிலின் தலைவாயில் நீண்ட காலம் மூடப்பட்டிருக்கும் நிலையை அறிந்து கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் அப்பர் பதிகம் பாடித் திறந்த கதவைக் கிரமமாக மூடவும் திறக்கவும் கூடிய வகையில் சம்பந்தர் **"சதுரம் மறை.........."** என்னும் பதிகம் பாடி மூடச் செய்தார். அதன் பின் அங்கு திருக்கோயில் வழிபாடு செய்ய வந்த பக்தர்கள் தடையில்லாமல் தலைவாயிலின் ஊடு செல்லும் வாய்ப்பு நிரந்தரமாக அமைந்தது.

சம்பந்தர் சோழ நாட்டில் இத்தகைய அற்புதங்களைப் புரிந்து சைவ மக்களிடையே எழுச்சி ஊட்டிய புகழ் அந்நாட்டின் எல்லைகளைக் கடந்து பாண்டிய நாட்டிலும் பரவியது. அப்போது பாண்டி நாட்டில் நெடுமாறன் என்னும் **கூன் பாண்டியன்** சமண சமயத்தைச் சார்ந்து ஆட்சி புரிந்து வந்தான், அந்நாட்டு மக்களும் சமண சமயத்தைத் தழுவி வாழ்ந்து வந்தனர். ஆனால், பாண்டிமாதேவியான **மங்கையர்க்கரசியாரும்** அமைச்சர் **குலச்சிறையாரும்** சைவ சமயிகளாகவே ஒழுகி வந்தனர். அவர்கள் இருவரும் சம்பந்தரை மதுரைக்கு அழைத்துவர அடியார் சிலர் மூலம் தூதுச் செய்தி அனுப்பினர். சம்பந்தர் இவ்வழைப்பை ஏற்றுக் கொண்டதை அறிந்ததும், அவருடன் இருந்த அப்பர் நாளும் கோளும் பாதகமாக இருத்தலையும் சமணர்கள் வஞ்சகத் தீமை புரியும் சாத்தியத்தையும் சம்பந்தருக்கு எடுத்துக் கூறிக் கவலையுற்றார். அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தர் **"வேயுறு தோளி பங்கன்..........."** என்னும் **கோளறு** பதிகத்தைப் பாடி, அப்பரின் கவலையைப் போக்கிவிட்டு மதுரைக்குப் புறப்பட்டார்.

## (5) பாண்டிய நாட்டுத் தலயாத்திரை - சைவ சமய மறுமலர்ச்சி

மதுரை சேர்ந்த சம்பந்தர் அங்குள்ள மடம் ஒன்றில் அடியார் குழாத்துடன் தங்கினார். அன்றிரவு சமணர்கள் அவர் தங்கிய மடத்திற்குத் தீ மூட்டினர். அப்போது சம்பந்தர் **"செய்யனே திருவாலவாய் ............."** என்ற திருப்பதிகத்தைப் பாட அத் தீ கேடு விளைக்காமல் தணிந்தது. 'பையவே சென்று பாண்டியற் காகவே' என்ற முடிவுக்கேற்ப வெப்பு நோயாகப் பாண்டியனை வருத்தியது.

பாண்டியன் நெடுமாறனுடைய வெப்பு நோயைத் தீர்க்க முதலில் சமணர்கள் தாமறிந்த உபாயங்களைக் கடைப்பிடித்தார்கள். அவர்களின் முதன் முயற்சி தோல்வியுற்றதும் மங்கையர்க்கரசியாரின் விருப்பத்திற்கு இணங்க, ஞானசம்பந்தர் பாண்டியனைக் குணப்படுத்த அழைத்து வரப்பட்டார். அவரின் வரவை விரும்பாத சமணர்கள் பாண்டியனின் நோயைத் தீர்க்க இரண்டாம் சந்தர்ப்பம் ஒன்றைத் தமக்குத் தருமாறு கோரினர். இந்நிலையில் பாண்டியன் நெடுமாறன் இருசாராரும் ஒரே நேரத்தில் நோய் நீக்க முயற்சியைத் தொடங்கலாம் எனத் தெரிவித்து, வென்றவர் ஒழுகும் சமயத்தை மெய்ச்சமயமென ஏற்பதாகவும் உரைத்தான். சம்பந்தர் ஆலவாய் அரனைப் போற்றும் **"மந்திரமாவது நீறு ......."** என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி நெடுமாறனின் மேனியில் திருநீற்றைப் பூசினார். சமணர்கள் மயிற்பீலியினால் பாண்டியனின் மேனியைத் தடவினார். இப்போட்டியில் சம்பந்தர் வெல்லச் சமணர்கள் தோல்வியடைந்தனர்.

தோல்வியுற்ற சமணர்கள் தமது ஆதிக்கத்தை இழக்க விரும்பவில்லை. எனவே, அவர்கள் சம்பந்தரை அனல்வாதம் என்னும் மற்றொரு போட்டிக்கு அழைத்தனர். இருசாராரும் தத்தம் சமயச் சிந்தனை எழுதப்பட்ட ஏடுகளைத் தீயிலிட

எவரின் ஏடு எரிந்து ஒழியாது காணப்படுகிறதோ அவரின் சமயமே உண்மைச் சமயமென ஏற்பதாக நெடுமாறன் கூறினான். சம்பந்தர் பாடிய **"தளர் இளவளர் ஒளி......"** என்ற பதிகம் எழுதப்பட்ட ஏடு எரியாது இருக்கச் சமணர்கள் தீயில் இட்ட ஏடு சாம்பராகியது.

அனல் வாதத்தில் தோற்ற சமணர்கள் சம்பந்தரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். இந்தப் போட்டியின் போது சம்பந்தர் பாடிய **"வாழ்க அந்தணர் ....."** என்னும் திருப் பாசுரம் எழுதப்பட்ட ஏடும், சமணர்கள் எழுதிய **"அத்தி நாத்தி........"** என்னும் வாசகம் கொண்ட ஏடும் வையை நதியில் இடப்பட்டன. சமணர்கள் இட்ட ஏடு ஆற்று நீரால் அள்ளுண்டு செல்லச், சம்பந்தரின் ஏடு நீரை எதிர்த்து ஏறிச் சென்று 'திருவேட்கம்' என்னும் தலத்தை அடைந்தது.

இம் மூன்றாம் போட்டியிலே சமணர்கள் தோற்றதும் நெடுமாறன் உடற்கூன் நீங்கி, நின்ற சீர் நெடுமாறன் ஆனான், உள்ளக் கூன் நீங்கிச் சைவசமயத்தைத் தழுவினான், பாண்டி நாட்டிற் சைவசமய மறுமலர்ச்சிக்குக் காரணன் ஆனான்.

இதன் பின் மதுரையிலிருந்து புறப்பட்ட சம்பந்தர் தென்பாண்டி நாட்டுத் தல யாத்திரையை மேற்கொண்டார். சேதுவின் கரையை அடைந்த சம்பந்தர் இராமேச்சரத்தில் வழி பட்டுத் தேவாரத் திருப்பதிகம் பாடினார். அங்கிருந்தவாறே இலங்கையிலுள்ள திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் என்னும் தலங்களை மானசீகமாக வணங்கித் திருப்பதிகங்கள் பாடி யருளினார்.

பாண்டி நாட்டில் சம்பந்தர் புரிந்த சாதனைகள் காரணமாக அவரின் புகழ் மகோன்னத நிலை அடைந்தது. எனவே, இதன் பின் அவருக்கு அன்பு மயமான வரவேற்பு அளிக்கவும் அவரின் சிவிகையைத் தோள் கொடுத்து தாங்கிச் செல்லவும் சிவனடியார்கள்

தமக்குள் போட்டியிட்டனர். இந்நிலையில் ஒரு சந்தர்ப்பத்தில் அவரது சிவிகையைச் சுமக்கும் அடியார் கூட்டத்தில் ஒருவராகத் திருநாவுக்கரசர் சேர்ந்து அவரைத் தாங்கும் பணியை அன்புடன் ஏற்றுக் கொண்டார். அப்போது, சிவிகையிலிருந்து இறங்கிய சம்பந்தர் அங்கே சந்திக்க எதிர்பார்த்த அப்பரைக் காணாமல், 'அப்பர் எங்குற்றார்?' என வினாவினார். 'அடியேன் இங்குற்றேன்' என்ற அப்பரின் குரல் சிவிகை தாங்கிகள் குழுவிலிருந்து கேட்டதும் சம்பந்தர் அவரைப் பணிந்து மனமுருகினார்.

## (6) தொண்டைநாட்டு யாத்திரை - பூம்பாவை

செல்லும் இடம் எல்லாம் பெருவரவேற்புப் பெற்ற சம்பந்தர் சிறிது காலத்தின் பின், தொண்டை நாட்டுத் தலங்களை வழிபடச் சென்றார். திருமயிலாப்பூரை அடைந்தார். அங்கே, சிவநேசர் என்னும் சிவனடியார் தமக்கு மணமுடித்துக் கொடுக்கும் நோக்கத்துடன் வளர்த்த பூம்பாவை என்னும் மகள் அரவு தீண்டி இறந்ததும், தகனக் கிரியையின் பின் சேமித்த எலும்பும் சாம்பரும் ஒரு குடத்தில் பொதிந்து வைக்கப்பட்டிருத்தலைச் சம்பந்தர்அறிந்து கொண்டார். சிவநேசரின் அவலத்தை ஒழிக்க விரும்பிய சம்பந்தர், "மட்டிட்ட புன்னை........" என்னும் கபாலீச்சரப் பதிகத்தைப் பாடி, பூம்பாவையை உயிர்ப்பித்தார். தமது மணப் பெண்ணாகக் கருதாமல் மகளாக ஏற்று மகிழ்வித்தார்.

இதன் பின்னர் திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு, சீர்காழி திரும்பினார்.

## (7) முத்திப் பேறு

சம்பந்தர் பதினாறு வயதை அடைந்தார். அக்காலச் சமுதாயத்தில் ஆண்கள் பதினாறு வயது எய்தியதும் அவர்களின் திருமணத்தை நிறைவேற்றுதல், வைதீக நெறியைப் பின்பற்றும் பெற்றோரின் கடமை. எனவே, சிவபாதவிருதயரும் பகவதியாரும் திருநல்லூர் என்னும் தலத்தில் வாழ்ந்த பெரியாரும் சைவத் திருமுறைத் தொகுப்பாளர் நம்பியாண்டார் நம்பியின் முன்னோர் எனத் தக்கவாறு அவர் பெயரைக் கொண்டவருமாகிய முதல் நம்பியாண்டார்நம்பியின் மகளைச் சம்பந்தருக்கு மணமுடித்து வைக்கத் தீர்மானித்தனர். பெற்றோரின் முடிவுக்குக் கட்டுப்பட்ட சம்பந்தர், **"கல்லூர்ப் பெருமணம்"** என்னும் திருப்பதிகம் பாடித் திருமணம் புரிந்தார். அப்போது, அங்கே தோன்றிய பேரொளியின் உள்ளே புகுமாறு ஓர் அசரீரி ஒலித்தது. இத் தருணத்தில் சம்பந்தர், **"காதலாகிக் கசிந்து......"** என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளி மனைவி, உற்றார் உறவினர் உட்பட அனைவருடனும் அந்த ஒளிப்பிழம்பினுள்ளே புகுந்து, பிறவாப் பெருவாழ்வு அடைந்தனர். இச்சம்பவம் நிகழ்ந்த வைகாசி மாத மூல நட்சத்திரமே சம்பந்தரின் குருபூசைத் தினமாகும். ஓங்காரத்தொடக்கம் ஆதியாய் அமைந்த "தோடுடைய செவியன்" என்னும் முதலாவது திருப்பதிகத்தோடு தொடங்கிய சம்பந்தரின் அருள் வாழ்வு, "காதலாகிக் கசிந்து" என்னும் இறுதித் திருப்பதிகத்தில் அந்தமாய் அமைந்த 'நமச்சிவாயவே' என்ற பஞ்சாட்சர நாத நிறைவுடன் பேரின்ப முத்திப்பேறான அருமை, வேறு நாயனார் எவருடைய வாழ்விலும் காணப்படாத நிகரற்ற சிறப்பு ஆகும்.

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார்

### (1) அறிமுகம்

சமய குரவர்களிலே வயதிலும் வாழ்க்கையனுபவ வளத்திலும் ஏனையோரை விட மூத்தவர் திருநாவுக்கரசு நாயனார் ஆவார். இவர் எண்பத்தியொரு வயதுவரை இம்மண்ணுலகில் வாழ்ந்தார். சமய குரவர்களில் ஏனையோர் சிவநெறியை வாழ்நாள் பூராவும் கடைப்பிடித்து வாழும் நல்வினை வாய்க்கப் பெற்றவர்கள். ஆனால், திருநாவுக்கரசரோ இளமையில் நேரிட்ட இழப்புக்கள் காரணமாகப் பிறசமயம் தழுவி வாழ்ந்து, மீண்டும் சிவநெறியை ஏற்று மனத்திட்பத்துடன் வாழும் தொல்வினைப் பயனை அனுபவித்தவர். பரசமயம் சார்ந்த போது, சிவநெறியினரின் கொடுமைகள் எவற்றையும் நாவுக்கரசர் அனுபவிக்கவே இல்லை. ஆனால், அவர் மீண்டும் சிவநெறியினை ஏற்றுக் கொண்டதும் அதனைப் பொறுத்துக்கொள்ளாமல் சமணர் செய்த அதீத கொடுமைகள் அளப்பரியன. இவ்வாறு நோக்கும் போது நாவுக்கரசரின் வித்தியாசமான சிறப்பு நமது சிந்தனையைக் கிளர்ந்தெழச் செய்கின்றது.

### (2) பிறப்பும் பிறழ்வும்

திருமுனைப்பாடி என்னும் நாட்டிலே திருவாமூர் என்னும் ஊரில் வாழ்ந்த புகழனார், மாதினியார் ஆகிய பெற்றோர் இரு பிள்ளைகளைப் பெற்றனர். முதலிற் பிறந்த பெண் குழந்தைக்குத் திலகவதி என்றும். அடுத்துப் பிறந்த ஆண் குழந்தைக்கு மருணீக்கியார் என்றும் பெயரிட்டனர். திலவதியார் பன்னிரண்டு வயது அடைந்ததும் புகழனாரும் மாதினியாரும் அக்கால வைதீக நியதிக்கு இணங்க, அவருக்கு கலிப்பகையார் என்பவரை மணம் பேசி நிச்சயதார்த்தம் செய்தனர். இதனை அடுத்து, திருமண வைபவம் நிறவேறுமுன்

கலிப்பகையார் அந்நாட்டை ஆண்ட பல்லவ மன்னனின் ஆணையை ஏற்று, படைத்தளபதியாகப் போர்முனை செல்ல நேரிட்டது. நாட்டைக் காக்கும் கடமைநாயகராகச் சென்ற கலிப்பகையார் போரில் வெற்றிகண்டு வீரசொர்க்கம் அடைந்தார். இந்தப் பேரிடி பற்றிய தகவல் போர்க்களத்திலிருந்து வந்து சேருமுன்னர் புகழனார் இயற்கை எய்தினார். இதனைத் தொடர்ந்து, மாதினியார் அக்கால வழக்கத்திற்கு இணங்கக் கணவரோடு உடன்கட்டையேறி மரணத்தைத் தழுவிக் கொண்டார். இந்த இழப்புக்கள் மூன்றினாலும் நிலைகுலைந்த திலகவதியார் தாமும் இறக்கத் துணிந்தார். ஆனால், கலக்கத்தின் மேல் கலக்கம் அடைந்த மருணீக்கியார் அநாதையாவதை விரும்பாத திலகவதியார் உயிர் துறக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, கைம்மைநோன்பைக் கடைப்பிடித்து, தவவாழ்வை மேற்கொண்டார்.

தமக்கையின் தவவாழ்வு மருணீக்கியாரின் உயிர்வாழ்வுக்கு ஒரு பற்றுக்கோடு ஆயிற்று. ஆனால், மனவமைதி மருணீக்கியாரை விட்டு அகன்றது. அதனால், அவர் சமயநெறி பிறழ்ந்தார்; பாடலிபுரம் சென்று சமண சமயத்தைத் தழுவி, அச்சமய நூல் களைக் கற்றுப் புலமை கைவரப் பெற்றார். இதன் பயனாக நால்வகைச் சமணக் குழுக்களில் ஒன்றின் குருவாக உயர்ந்து 'தருமசேனர்' என்னும் பெயரைப் பெற்றார்.

தம்பி மருணீக்கியாரின் மாற்றத்தை அறிந்த திலகவதியார் மனம் வருந்தி, தம்பியாரை மீட்டுத் தரும்படி சிவபெருமானிடம் முறையிட்டார். சிவபிரான் சூலைநோய் கொடுத்துத் தருமசேனரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டார். சிவபெருமானின் மறக்கருணை காரணமாகத் தருமசேனரைப் பீடித்த சூலைநோய் அவரின் குடலைப் பிடித்து முடக்கி வருத்தியது. அவரின் நோய்க்கொடுமையைச் சமணர்களால் ஒழிக்க இயலவில்லை. எனவே, சமணர்களால் கைவிடப்பட்ட தருமசேனர் இரவோடு இரவாகத் தமக்கையாரிடம் போய்ச் சேர்ந்தார். திலகவதியார்

திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றைத் தம்பியாரிடம் கொடுத்து ஆறுதல் அளித்தார். பின் விடியற்பொழுதிலே தம்பியைத் திருவீரட்டானேசுவரர் சந்நிதிக்கு அழைத்துச் சென்று, இறைவன் திருவருள் பெறத் துணைநின்றார்.

திருவதிகை வீரட்டானேச்சுரப்பெருமான் திருவருளால் சூலைநோய் நீங்கும் வண்ணம் **"கூற்றாயினவாறு.........."** என்னும் முதலாவது திருப்பதிகத்தைப் பாடினார். அபபோது ஒலித்த ஓர் அசரீரி அவருக்கு 'நாவுக்கரசு' என்ற பொருள் பொதிந்த பெயரைச் சூட்டியது. அன்று தொடக்கம் மருணீக்கியார், திருநாவுக்கரசர் என அழைக்கப்படலானார்.

## (3) சமணர் இழைத்த கொடுமைகள்

சமயப் பிறழ்வு நீங்கிச் சைவநெறியிற் புகுந்த நம் குரவரின் சிந்தனை மாற்றத்தைச் சமணர்களால் சற்றும் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் அந்நாட்டை ஆண்ட பல்லவ மன்னனிடம் முறையிட்டனர். அவன் நாவுக்கரசரை அழைத்துவரத் தன் அமைச்சரை அனுப்பினான். முதலில் வல்லவன் ஆணையை மறுத்து **"நாமார்க்கும் குடியல்லோம்"** என்னும் **மறுமாற்றத் திருத்தாண்டகம்** பாடிய நாவுக்கரசர், அமைச்சரின் இரக்கநிலை காரணமாக மனம் மாறி அவருடன் சென்றார்.

நாவுக்கரசர் அரச சபை சேர்ந்ததும் அங்கிருந்த சமணர்கள் அரசன் ஆதரவுடன் கொடுமைகளை அவருக்கு ஒன்றன் பின் ஒன்றாகச் செய்தார்கள். முதலில் அவர்கள் நாவுக்கரசரை நீற்றறையில் அடைத்து வருத்தினார்கள். அவர் **"மாசில் வீணையும்"** என்னும் பதிகத்தைப் பாடி, ஏழு நாள் நீற்றறைவாசத்திலிருந்து உயிர் பிழைத்தார். இரண்டாவதாக அவர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றை நாவுக்கரசர் உண்ணக் கொடுத்தார்கள். அப்போது அவர் **"துஞ்சிருள் காலை........."** என்னும் பதிகம் பாடி, நஞ்சு கலந்த பாற்சோற்றை அமுதமாக உண்டு மகிழ்ந்தார். பின்னர்

அவர்கள் மதயானையை ஏவி, நாவுக்கரசரைக் கொல்லப் பணித்தனர். இச்சந்தர்ப்பத்தில் அவர் **"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்......."** என்னும் பதிகத்தைப் பாடியதும் அம்மதயானை மதவெறியகன்று அவரை வலம் வந்து பணிந்தது; ஏவிய சமண ரையே தாக்க முனைந்தது. இறுதியாக அவர்கள் நாவுக்கரச ரைக் கல்லோடு பிணைத்துக் கடலில் போடும் தண்டனையை வழங்கினார்கள். இந்நிலையில் அவர் **"சொற்றுணை வேதியன்......"** என்னும் பதிகத்தைப் பாடினார். அப்போது கல் தெப்பமாக மிதந்தது. இதன் பின் அவர் கரையேறித் திருப்பாதிரிப்புலியூரை அடைந்தார். அங்குள்ள திருக்கோயிலில் ஈசனை வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார்.

திருநாவுக்கரசரின் உயர்நிலையை உணர்ந்த முதலாம் மகேந்திரன் ஆகிய பல்லவ மன்னன் சமண சமயத்தில் நின்று நீங்கிச் சைவன் ஆனான். திருவதிகையில் குணதர ஈச்சரம் என்னும் சிவாலயத்தை நிருமாணித்தான். நாவுக்கரர் அங்கே சிறிது காலம் வாழ்ந்து உழவாரப்பணிபுரிந்து **'உழவாரப் படையாளி'** என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

## (4) தலயாத்திரை – ஆத்மார்த்த விண்ணப்பங்கள்

திருவதிகையிலிருந்து புறப்பட்ட நாவுக்கரசர் திருவெண் ணெய் நல்லூர், திருக்கோயிலூர் முதலிய பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டார். தம்மைப் பற்றிய சமணத் தொடக்கு நீங்க வேண்டுமென விரும்பினார். திருப்பெண்ணாகடம் என்ற தலத்தை அடைந்த நாவுக்கரசர், அங்குள்ள **திருத்தூங் கானைமாடம்** என்னும் கோயிலில் **"பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"** என்ற திருப்பதிகத்தைப் பாடினார். அவருடைய விண்ணப்பத்தை ஏற்ற சிவபிரான் திருவருளால் அவருடைய உடலில் சூல, இடப இலச்சினைகள் பொறிக்கப் பட்டன. இதன் பின் தமது யாத்திரையை மீண்டும் தொடங்கிய

நாவுக்கரசர், சீர்காழி சென்று சம்பந்தரைச் சந்தித்து திருக்கோயில் வழிபாடு புரிந்து மகிழ்ந்தார். சம்பந்தரிடம் விடைபெற்றுப் புறப்பட்ட நாவுக்கரசர் திருச்சத்திமுற்றம் சேர்ந்ததும் திருவடிதீட்சை செய்தருளுமாறு ஈசனைத் துதித்து வேண்டினார். அவரின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட ஈசன் திருநல்லூர் என்ற தலத்தில் அப்பரின் தலைமேல் தமது திருவடியை வைத்து அருள் புரிந்தார். இச் சந்தர்ப்பத்தில் அவர் **"நினைந் துருகும் அடியாரை ..."** என்னும் பதிகம் பாடினார். இப்பதிகப் பாடல்களின் இறுதிதோறும் அவர், "திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்ல வாறே" என்று போற்றியுள்ளார்.

## (5) தலயாத்திரை - பரார்த்தப் பயன்கள்

திங்களூர் என்னும் இடத்தில் வாழ்ந்த அப்பூதியடிகள் என்ற அந்தணர் நாவுக்கரசர்மீது அளவற்ற பக்தி பூண்டவர். அவர் தமது பிள்ளைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டியும் நாவுக்கரசர் பெயரால் அறப்பணிகள் புரிந்தும் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் திருநாவுக்கரசர் திங்களூர் சென்று, அப்பூதியடிகளின் இல்லத்திற்குச் சென்ற போது அவர் நாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தார். தந்தை ஏவலின்படி வாழைமிலை அரிந்து வரச் சென்ற மூத்த திருநாவுக்கரசரைப் பாம்பு தீண்டிற்று. அச்சிறுவன் ஓடி வந்து வாழையிலையைத் தாயிடம் கொடுத்துவிட்டு வீழ்ந்து உயிர் துறந்தான். சிறுவனின் உடலை ஒரு பக்கம் மறைத்து விட்டு, அப்பூதியடிகளும் அவர் மனைவியும் அப்பரை அமுதுண்ண வேண்டினர். அவர்களின் அவலத்தைத் திருவருட் குறிப்பினால் அறிந்து கொண்ட அப்பர், அச்சிறுவனின் உடலைத் திருப்பழனத்து இறைவன் திருமுன் கொணர்வித்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர் **"ஒன்று கொலாம் அவர் சிந்தை......"** என்னும் திருப்பதிகத்தைப் பாடி அச்சிறுவனை உயிர்ப்பித்தார், அப்பூதியடிகள் மகிழ அவரின் இல்லத்தில் அமுது செய்தருளினார்.

## (6) தலயாத்திரை - சமுதாயப்பயன்கள்

திங்களூரை விட்டுப் புறப்பட்ட அப்பர் திருப்புகலூரை அடைந்தார். அங்கு வந்த சம்பந்தரைக் கண்டு அளவளாவினார். அங்கிருந்து புறப்பட்ட சமயகுரவர் இருவரும் திருவீழிமிழலை சென்றனர். அங்கே அப்போது நிலவிய பஞ்சக் கொடுமை ஒழியும்வரை இருவரும் இறைவன் திருவருளால் பெற்ற படிக்காசுகளை ஆதாரமாகக் கொண்டு அன்னதானப் பணி புரிந்தனர்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு, திருமறைக்காடு சேர்ந்தனர். அங்குள்ள திருக்கோயிற் பிரதான கதவு நெடுங்காலம் திறக்க இயலாதவாறு அடைபட்டிருந்தது. அங்கு வழிபட்டு வரும் பக்தர்கள் பக்க வாயிலால் சென்று இறைவனை வழிபடும் நிலையை நீக்க இருவரும் விரும்பினர். எனவே, சம்பந்தரின் வேண்டுகோளை ஏற்ற அப்பர், **"பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ"** என்னும் பதிகப் பாடல்கள் பத்தையும் பாடி முடித்த பின் "இரக்கம் ஒன்றிலீர் எம் பெருமானீரே........... இக் கதவந்திறப்பிம்மினே" என்று அடுத்து மனஞ் சோர்ந்து பாடினார். அப்போது மூடப்பட்டிருந்த கதவு திறந்துகொள்ளக் குரவர் இருவரும் அடியார்களுடன் உட்சென்று வழிபட்டனர். இதன் பின், சம்பந்தர் "சதுரம் மறைதான்" என்னும் பதிகத்தைப் பாடத்தொடங்கி முதற் பாடலைப் பாடி முடித்ததும், திறக்கப்பட்ட கதவு மூடிக் கொண்டது. திறக்கவும் மூடவும் கூடிய இயல்பு நிலையை அடைந்தது.

திருமறைக்காட்டிலிருந்து புறப்பட்ட அப்பர் திருவாய்மூரில் சிவபெருமான் அருளிய திருக்கோலக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த பின், திருப்பழையாறை என்னும் அக்காலச் சோழர் தலைநகரை அடைந்தார். அங்குள்ள வடதளி என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய சிவலிங்கத்தைச் சமணர் மறைத்து வைத்துவிட்டு அக்கோயிலைச் சமணப்பள்ளியாக்கிய கொடுமையை அப்பர்

அறிந்து கொண்டார். எனவே, அப்பர் அங்கே மீண்டும் சிவாலயத்தை அமைத்து, சிவலிங்கத்தை வழிபடும் நிலையைச் சிவனடியாருக்கு அளிக்கும் நோக்கத்துடன் அப்பள்ளியின் அருகே உண்ணாவிரதம் இருந்தார். இறைவன் சோழ அரசன் கனவில் தோன்றி வாகீசரின் எண்ணத்தை நிறைவேற்றுமாறு தெரிவித்தார். இறைவன் ஆணையை ஏற்றுக் கொண்ட சோழன், சமணர்களின் வஞ்சத்தை ஒழித்து, மக்கள் சிவலிங்கத்தை வழிபடச் சிவாலயத் திருப்பணிகளைச் செய்தான். திருநாவுக்கரசர் வடதளியின் உள்ளே சென்று இறைவனை வழிபட்டு, **"தலையெலாம் பறிக்கும் சமண்கையர்"** என்னும் பதிகத்தைப் பாடினார், சிவ வழிபாடு மறுமலர்ச்சியடைய வழிவகுத்தார்.

## (7) தலயாத்திரை - முதுமைப் பருவச் சோதனைகள்

திருப்பழையாறையிலிருந்து புறப்பட்ட அப்பர், முதுமைத் தளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் திருப்பைஞ்ஞீலி நோக்கி நடந்தார். வழிநடைக் களைப்பும் இளைப்பும் காரணமாக அவர் பசியும் தாகமும் அடைந்தார். இந்நிலையில் சிவபிரான் அவருடைய முதுமைப் பருவச் சோதனையில் அவருக்கு உதவத் திருவுளம் கொண்டார். அவர் வரும் வழியில் ஒரு சோலையையும் குளத்தையும் அமைத்து பொதிசோறு வைத்திருக்கும் சைவ வேதியர் கோலத்துடன் காத்திருந்தார். அப்பர் அங்கு வந்ததும் அவ்வேதியர் அவருக்கு உண்ணச் சோறும், குடிக்க நீரும் கொடுத்து உடற் சோர்வை நீக்கியருளினார். அவரோடு திருப்பைஞ்ஞீலி வரை உடன் சென்று திடீரென மறைந்து உள்ளக்கிளர்ச்சியையும் ஊட்டினார்.

முதுமைப்பருவத் தளர்ச்சி என்னும் இம்முதலாவது சோதனையில் திருவருளால் வெற்றி அடைந்த அப்பர், திருக்கயிலை யாத்திரையை இலக்காகக் கொண்டு வட திசை யாத்திரையைத் தொடங்கினார். தென்கயிலை எனப்படும் காளத்தியில் காளத்திநாதரை வழிபட்ட பின், அவர் பல

நாடுகளைக் கடந்து காசியை அடைந்து, விசுவநாதப்பெருமானை வணங்கினார். இதன்பின் அப்பர் தனித்து கற்சுரங்களில் பாதங்கள் தேய நடந்து சென்றார்; நகர்ந்தும் ஊர்ந்தும் புரண்டும் சென்றார். இதன்மேல் அவர் செயலற்ற நிலையை எய்தினார். அப்போது இறைவன் முனிவர் வடிவில் அவர் முன் தோன்றி மானிடர்க்கரிய கயிலையாத்திரை முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் செல்லுமாறு கூறி, அவரின் மனத்திட்பத்தைச் சோதித்தார். இச்சந்தர்ப்பத்தில் மனவுறுதி தளராத அப்பர்,

**"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால்**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"**

என்று அழுத்தமாகக் கூறினார்.

அவர் இரண்டாம் முறை இம் முதுமைப் பருவத் தளர்ச்சி என்னும் கடுஞ்சோதனையில் வெற்றி பெற்றார். சிவபிரான் திருவருளால் அப்பரின் உடற்சோர்வு முற்றாய் நீங்கியது. இறைவன், "திருக்கயிலைக் கோலத்தைத் திருவையாற்றில் காண்பாய்" என அசரீரி வாக்கில் கூறியருளினார். அங்குள்ள தடாகத்தில் மூழ்கிய திருநாவுக்கரசர் திருவையாற்றிலுள்ள வாவியிலிருந்து கரையேறினார். அதன் பின், **"மாதர்ப்பிறைக் கண்ணியானை........"** என்னும் பதிகத்திலே கயிலைக் காட்சியின் மெய்ப்பொருளை அமைத்துப் பாடினார்.

## (8) வாழ்க்கை நிறைவு - முத்தி

திருககயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு ஞான விளக்கம் பெற்ற அப்பர், அதன் பின் முத்தியடைவதற்குரிய தகுதியை அல்லது பக்குவ நிலையைத் துரிதமாக அடைந்தார். பிறர் போற்றுதலையோ தூற்றுதலையோ பொருட்படுத்தாத மனப்

பக்குவத்தினை அடைந்த அப்பர், தம்மைக் காணத் திருப்பூந்துருத்தி வந்த சம்பந்தரின் சிவிகையை எதிர் கொண்டு சுமந்துவரும் பணியை ஒரு கடமையாக நிறைவேற்றினார். பூம்புகலூரில் அப்பர் உழவாரத் தொண்டைப் பற்றற்ற நிலையில் செய்து வாழும் போது உழவாரம் நுழையும் இடமெல்லாம் பொன்னும் மணியும் பொலிந்தன. அப்போது அவர் அவற்றையும் கற்களையும் ஒப்பக் கணித்து உழவாரத்தினால் ஒதுக்கி எறிந்தார். இதனை அடுத்து, வானுலக அரம்பையர் அவரின் முன் தோன்றி ஆடல் பாடல்களால் அவரின் மனத்தைக் கலைத்து மயக்க முனைந்து தோற்றனர்; அவரைத் தொழுது அகன்றனர்.

இவ்வாறு பக்குவ முதிர்ச்சி பெற்ற அப்பர், எண்பத்தொரு வயது நிரம்பியதும் சித்திரைச் சதயத்தில் திருப்புகலூர்ப் பெருமானைத் துதித்து, **"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ"** என்னும் இறுதிப் பதிகத்தைப் பாடி, "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே" என, பாடல் தோறும் முத்தாய்ப்பு வைத்தார். சிவபிரானின் திருவடிகளை அடைந்து பேரின்ப நிலை பெற்றார்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அப்பரின் வாக்கு அவரின் வாழ்க்கைச் செய்தியைத் திட்பமாகவும் நுட்பமாகவும் நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

# (இ) சுந்தரமூர்த்தி நாயனார்

## (1) அறிமுகம்

சைவசமய குரவர் நால்வரிலே சுந்தரர் மற்றைய மூவரினும் பெரிதும் வேறுபட்ட வாழ்வினர் ஆவர். அவர் விண்ணுலக வாழ்வு ஆகிய திருக்கயிலைத் தொண்டு வாழ்விலே, காக்க வேண்டிய மனத்தூய்மையை இழந்த குற்றத்தின் விளைவை அனுபவித்தற்காக மண்ணுலக வாழ்க்கையை ஏற்ற ஒருவராவர். இந்த நிலை மற்றைய மூவருக்கும் நேரிடவில்லை. எனவே, இந்த வேறுபாடு சுந்தரரின் மண்ணுலக வாழ்விலும் பரந்து காணப்படுகின்றது.

## (2) கயிலை வாழ்வு

ஆலாலசுந்தரர் என்பவர் திருக்கயிலையிலே சிவபிரானுக்குத் தொண்டு புரிந்து வாழ்ந்த ஓர் அணுக்கத் தொண்டர். அவர் ஒருநாள் உமையம்மையின் சேடியரான அநிந்திதை, கமலினி என்னும் இருவரையும் அங்குள்ள நந்தவனத்திற் கண்டு கணநேரம், திரிகரண சுத்தியில் ஒன்றான மனத் தூய்மையைக் காக்கத் தவறினார். அச்சேடியரும் அவ்வாறே மனத் தூய்மையை அப்போது இழந்தனர். எனவே, சிவபிரான் ஆலால சுந்தரர் இழந்த மனத்தூய்மையைக் காக்கும் சிறப்பை அனுபவ மூலம் அறிந்து கொள்ள உதவும் முகமாக, மண்ணுலகில் வாழும் பரிகார வாழ்க்கையை அவருக்கு அருளினார். மண்ணுலக வாழ்வில் அவரை நல்வழி செலுத்திக் காக்கும் வாக்குறுதியை வழங்கினார்.

## (3) மண்ணுலக வாழ்வு : காலம் (பிறப்பு–தடுத்தாட் கொள்ளல்)

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் வாழ்ந்த சடையனார், இசைஞானியார் என்னும் பெற்றோருக்குப்

பிள்ளையாக ஆலாலசுந்தரர் பிறந்தார். அவர்கள் தமது பிள்ளைக்கு நம்பியாரூரர் எனப் பெயர் இட்டனர். அவர் பெற்றோருடன் வாழ்ந்துவரும் காலத்தில் ஒருநாள் அந்நாட்டை ஆண்ட நரசிங்கமுனையர் என்பவர் அவர்களின் சம்மதத்துடன் நம்பியாரூரரை அழைத்துச் சென்று வளர்த்தார். அவருக்கு மணப்பருவம் வந்ததும் பெற்றோர் புத்தூர்ச்சடங்கவி சிவாசாரியரின் மகளை மணம் செய்து கொடுக்க நிச்சயித்தனர்.

சுந்தரரின் மணமங்கலம் நிகழும் வேளையில் சிவபிரான் கிழப்பிராமண வடிவில் வந்து மணப்பந்தலில் வாதம் புரிந்தும், திருவருட்டுறையில் வழக்குத் தொடுத்தும் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் சுந்தரர் சிவபிரானைப் பித்தன் என வன்சொற் கூறி இகழ்ந்தமையால், **வன்றொண்டன்** என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். **"பித்தா பிறை சூடி....."** என்று தொடங்கும் திருப்பதிகத்தை முதற் பதிகமாகப் பாடியருளினார்.

## (4) மண்ணுலக வாழ்வு : காலம் (தடுத்தாட் கொள்ளல் – பரவையார்மனைவாழ்க்கை)

சுந்தரர் சிவபிரான் எழுந்தருளிய தலங்களுக்குச் சென்று அவரை வழிபடும் விருப்பம் கொண்டார். எனவே, தலயாத்திரையை மேற்கொண்ட சுந்தரர், பல தலங்களுக்கும் சென்று தேவாரப் பதிகங்களை பாடி வழிபட்டார். திருவதிகையில் 'சித்தவடமடம்' என்னும் அடியார் உறைவிடத்தில் அவர் தங்கியபோது, சிவபிரான் அம்மடத்தினுள்ளே வேதியர் வடிவிற் புகுந்து, நம்பியாரூரரின் தலைமேல் இரு முறை திருவடி வைத்து அருள் பாலித்தார். இச்சந்தர்ப்பத்தில் ஆரூரர், **"தம்மானை அறியாத சாதியார் உளரோ"** என்னும் பதிகம் பாடித் துதித்தார். இதன்பின், அவர் சீர்காழி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டதும் திருவாரூரை அடைந்தார். அங்கு அவர் அடியார்களின் சிறப்பான வரவேற்பை ஏற்று திருமூலட்டானத்திற் புகுந்து வன்மீகநாதரை வணங்கினார்.

திருவாரூரிலே கயிலைக் கமலினியார் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும் பெயரோடு வாழ்ந்து வந்தார். திருவாரூர்த் தியாகேசருக்குச் சரியைத் தொண்டுகள் செய்துவந்த அம்மாதைக் கண்ட ஆரூரர் அவரை நேசித்து மணம் புரிந்து கொண்டார்.

திருவாரூரில் பரவையாருடன் இல்லறம் நடத்திய சுந்தரர், ஒரு நாள் அங்குள்ள கோயிலின் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த சிவனடியார்களுக்கு அடியனாகும் பேற்றை அடைய விரும்பினார். அப்போது இறைவன் அருளிய, **"தில்லை வாழ் அந்தணர்........."** என்னும் தொடரை முதலாகக் கொண்ட திருத்தொண்டத் தொகையைப் பாடினார்.

சுந்தரரின் பெருமையை அறிந்து கொண்ட குண்டையூர்க்கிழார் என்னும் செல்வர் அவருக்குக் கிரமமாக உணவுப் பொருள்களை அனுப்பி வந்தார். ஒருமுறை பஞ்சம் காரணமாகச் சுந்தரர்க்கு நெல் அனுப்ப இயலாது குண்டையூர்க்கிழார் மனம் வருந்தினார். உணவு உண்ணாது உறங்கினார். சிவபிரான் திருவருளால் அன்றிரவு குண்டையூரில் நெல் மலையென நிறைந்தது. எனினும், திருவாரூருக்கு நெல்லை எடுத்துச்செல்ல ஆள் கிடைக்கவில்லை. குண்டையூர்க்கிழார் அனுப்பிய செய்தி கிடைத்ததும் சுந்தரர் **"நீள நினைந்தடியேன்"** என்ற பதிகத்தைப் பாடினார். அப்பொழுது சிவபிரான் ஆணைக்கிணங்கப் பூத கணங்கள் நெற்பொதிகளைப் பரவையாரின் மாளிகையிற் குவித்தன.

திருநாட்டியத்தான் குடியில் வாழ்ந்த கோட்புலி நாயனார் திருவாரூர் சென்று, சுந்தரரைத் தமது இல்லத்திறகு அழைத்துச் சென்றார். சுந்தரரை உபசரித்து அளவளாவிய அந்நாயனார் சிங்கடி, வனப்பகை என்னும் புதல்வியரை மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டினார். சுந்தரர் அவர்களைத் தமது பிள்ளைகளாகக் கருதி வாழ்த்தியருளினார். இதன் காரணமாகச் சுந்தரர் சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்ற காரணப் பெயர்களைப் பெற்றார்.

திருப்புகலூர் என்ற தலத்திற்குச் சென்ற சுந்தரர், திருவாரூரில் நடைபெறும் பங்குனி உத்தரத் திருவிழாச் செலவுக்குத் தேவையான பொன் இல்லாத மனக்குறையுடன் செங்கற்கள்மீது தலை வைத்துத் துயின்றார். அவர் விழிதெழுந்ததும் செங்கற்கள் பொன்கட்டிகளாக மாறியிருந்தன. அப்போது அவர், **"தம்மையே புகழ்ந்து........."** என்ற பதிகத்தைப் பாடிப் புகலூர்ப் பெருமானைத் துதித்தார். பொன்கட்டிகளைக் கொண்டு சென்று, பங்குனி உத்தரத்திருவிழாவை இனிதே நிறைவேற்றினார்.

திருவாரூரிலிருந்து மீண்டும் புறப்பட்ட சுந்தரர், பல தலங்களையும் தரிசித்துத் திருமுதுகுன்றம் என்ற தலத்தைச் சேர்ந்தார். அங்கே இறைவன் திருவருளாற் கிடைத்த பன்னீராயிரம் பொன்னை மணிமுத்தாற்றில் போட்டுவிட்டுத் திருவாரூர் திரும்பினார். திருவாரூரில் கமலாலயம் என்னும் குளத்தில் அப்பொன் முழுவதையும் எடுத்தார். இச் சந்தர்ப்பத்தில் அவர், **"பொன் செய்த மேனியினீர்"** என்ற பதிகத்தைப் பாடித் தம்மைக் கேலி செய்த பரவையாருக்கு இறைவன் அருட் பெருமையை உணர்த்தினார்.

திருவாரூரில் சிறிதுகாலம் வாழ்ந்தபின் சுந்தரர் மறுபடியும் தலயாத்திரையை மேற்கொண்டார். பல தலங்களையும் தரிசித்துப் பதிகம் பாடினார். திருக்குருகாவூர் என்ற தலத்தை நெருங்கிய ஆரூரர் பசி தாகம் என்பவற்றினால் வருந்தினார். அப்போது சிவபெருமான் வழியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து, அந்தணர் வடிவத்தில் அங்கு பொதிசோறு வைத்துக் கொண்டு, சுந்தரரை வரவேற்கக் காத்திருந்தார். அங்கு வந்து சோறுண்டு துயில் கொண்டு இளைப்பாறிய சுந்தரர், விழித்தெழுந்ததும் அந்தணரைக் காணாது அதிசயித்தார். இச் சந்தர்ப்பத்தில் சுந்தரர், **"இத்தனையா மாற்றை அறிந்திலேன்"** என்ற பதிகத்தைப் பாடினார்.

## (5) மண்ணுலக வாழ்வு : காலம் (சங்கிலியார் மனைவாழ்வு – கலிக்காமர் பகை நீக்கம்)

இறைவன் பொதிசோறு அளித்து உபசரித்த திருவிளை யாடல் நிகழ்ந்த பின் சுந்தரர் தொண்டைநாட்டுத் தலயாத்தி ரையை மேற்கொண்டார். திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்ட சுந்தரர் திருவொற் றியூரை அடைந்தார். அங்கே கயிலைச் சேடியர் அநிந்திதையார் சங்கிலியார் என்ற பெயருடன் சரியைத் தொண்டு புரிந்து வாழ்ந்து வந்தார். சங்கிலியாரைக் கண்டு மனம் திரிந்த சுந்தரர் அவரை மணம் புரிய விரும்பினார். சுந்தரர், பரவையாரின் கணவர் என்பதை அறிந்து கொண்ட சங்கிலியார் தம்மை விட்டுப் பிரிவதில்லை என்று சத்திய வாக்கைப் பெற்றபின் சுந்தரரை மணம்புரிய இணங்கினார்.

சுந்தரர் திருவொற்றியூரில் சிறிதுகாலம் சங்கிலியாருடன் மனைவாழ்வை நடத்தினார். பின்னர், திருவாரூர்த் தியாகேசரின் நினைவும் பங்குனி உத்தரத் திருவிழாவைக் காணும் விருப்பும் காரணமாக அவர் திருவொற்றியூரிலிருந்து திருவாரூருக்குப் புறப்பட்டார். சங்கிலியாருக்கு அளித்த சத்திய வாக்குறுதி தவறியமையால் அவர் இரு கண்பார்வையையும் இழந்து குருடரானார். அடியார் வழித்துணையுடன் நடந்து சென்ற சுந்தரர் திருவெண்பாக்கம் சேர்ந்தார். அங்கே அவர் **"பிழையுளன பொறுத்திடுவர்"** என்ற பதிகத்தைக் கழிவிரக்கத்துடன் பாடினார். அதனால், அவர்மீது இரக்கம் கொண்ட சிவபிரான் படிப்படியாகச் சுந்தரரின் துன்பத்தை நீக்கக் கருதினார். எனவே, எம்பெருமான் முதலில் அவருக்கு ஊன்றுகோல் கிடைக்க அருள் புரிந்தார்.

அதன் பின் தல யாத்திரையை ஊன்றுகோலுடன் தொடர்ந்த சுந்தரர் காஞ்சிபுரம் எனப்படும் திருக்கச்சியை அடைந்தார்.

அங்கே அவர் ஏகம்பம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதரைத் துதித்தார். **"கடையானேன் எண்ணாத"** என்ற பதிகத்தைப் பாடி, இடக்கண் பார்வையைப் பெற்றார். அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரை அடைந்த சுந்தரர் வன்மீகநாதரைத் துதித்து, **"மீளா அடிமை உமக்கே......"** என்னும் பதிகம்பாடி வலக்கண் பார்வையும் பெற்றார்.

திருவாரூரில் வாழ்ந்த பரவையார், சுந்தரர் சங்கிலியாரை மணம் புரிந்து இல்வாழ்க்கை நடத்திய செய்தியை அறிந்திருந்தார். எனவே, சுந்தரர் மீது கோபம் கொண்ட பரவையார் சுந்தரரோடு குடும்ப வாழ்வு நடத்த இணங்கவில்லை. அதனால், சிவபிரான் தூதராகச் சென்று பரவையாரின் ஊடலைத் தணித்து, சுந்தரரும் பரவையாரும் சேர்ந்துவாழத் துணை புரிந்தார்.

சுந்தரர், சிவபிரானைத் தூதராக அனுப்பிய செய்தியைக் கேள்வியுற்ற ஏயர்கோன்கலிக்காமர் என்ற அடியார் அவர் மீது கடுஞ்சீற்றம் கெண்டார். சுந்தரரை ஒருபோதும் காண்பதில்லை என்ற வைராக்கியம் பூண்டார். இறைவன் இருவரையும் நண்பராக்கத் திருவுளங் கொண்டார். சிவபிரான் திருவருளால் ஏயர்கோன்கலிக்காமரைச் சூலை நோய் பீடித்தது. சிவபிரான் ஆணையை ஏற்றுச் சுந்தரர் தமது சூலைநோய் தீர்க்க வருவதை அறிந்ததும் கலிக்காமர் தமது உடைவாளால் தம்மையே மாய்த்துக் கொண்டார். அங்கு வந்த சுந்தரர், கலிக்காமரின் உயிரற்ற உடலைக் கண்டதும் தம்மை மாய்க்க முற்பட்டார். அப்போது, சிவபிரான் இருவரையும் உயிர்ப்பித்து நண்பராக்கினார். சுந்தரரும் கலிக்காமரும் திருப்புன்கூர் சிவாலயத்திற்குச் சென்று வழிபட்டனர். இச்சந்தர்ப்பத்தில் சுந்தரர், **"அந்தணாளன் உன்.........."** என்ற பதிகத்தைப் பாடிச் சிவனருட் செயலைப் போற்றினார்.

## (6) மண்ணுலக வாழ்வு : காலம் (பாண்டி நாட்டு யாத்திரை - கொங்கு நாட்டு யாத்திரை)

கலிக்காமரிடம் விடைபெற்றுத் திருவாரூர் சேர்ந்த சுந்தரர் அங்கே சிறிதுகாலம் வன்மீகநாதரை வழிபட்டு வாழ்ந்து வந்தார். அப்போது அவரின் சிவபக்திச் சிறப்பைக் கேள்வியுற்ற சேரமான் பெருமாள் என்னும் கழறிற்றறிவார் அவரைத் திருவாரூர் சென்று சந்தித்து நட்புரிமை பூண்டார். பின்னர் சேரமான் தோழரான சுந்தரரும், சேரமான் பெருமாள் ஆகிய பெருமாக் கோதையாரும் ஒருங்கே தல யாத்திரை மேற்கொண்டனர். பாண்டி நாட்டிலுள்ள மதுரை, குற்றாலம், திருநெல்வேலி முதலிய தலங்களை வழிபட்டு இராமேச்சரத்தை அடைந்தனர். அங்கே இருவரும் தங்கியிருந்த போது சுந்தரரும் சேரமான் பெருமாளும் திருக்கேதீச்சரம் என்னும் நம் நாட்டுத் திருத்தலத்தை மானசீகமாக வழிபட்டனர். இச்சந்தர்ப்பத்தில் சுந்தரர் திருக்கேதீச்சரநாதரைத் துதித்து **"நந்தார் படை ஞானன்........."** என்னும் பதிகத்தைச் சேரமான் பெருமாள் கேட்டு மகிழப் பாடினார்.

பாண்டிநாட்டு இராமேச்சரத்திலிருந்து புறப்பட்ட சுந்தரரும் சேரமான் பெருமாளும் திருவாரூர் சேர்ந்தனர். அதன் பின் சேரமான் பெருமாளின் வேண்டுகோளுக்கு இணங்கச் சுந்தரர் சேரநாட்டு யாத்திரை செய்ய அவருடன் புறப்பட்டார். சேரநாடு செல்லும் வழியில் காவிரிநதியைக் கடக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் சுந்தரர் பதிகம் பாடியதும் நதி பிரிந்து வழிவிட்டது. அதனால் இருவரும் எளிதாக ஆற்றைக் கடந்து சேரநாடு சேர்ந்தனர்.

சேர நாட்டில் சுந்தரர் பெருமாக்கோதையாரின் அதிதியாகத் திருவஞ்சைக்களத்திற் சிறிது காலம் வாழ்ந்தார். பின் திருவாரூர் தியாகேசப் பெருமான் நினைவு மீதூரப் பெற்ற சுந்தரர்,

சேரமான் பெருமாளிடம் விடை பெற்றுப் புறப்பட்டார். சேரர் பெருமாக்கோதையார், சுந்தரருக்குப் பெருநிதி கொடுத்து அனுப்பினார். சேரமான் தோழர் திருமுருகன் பூண்டியை நெருங்கியதும் வேடர்கள் நிதிப் பொதிகளை எல்லாம் பறித்துச் சென்றனர். சுந்தரர் அங்குள்ள திருக்கோயிலுக்குச் சென்று **"கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்"** என்ற பதிகத்லைதப் பாடி முறையிட்டதும், சிவபிரான் திருவருளால் அந்நிதிப் பொதிகள் கோயில் வாயிலில் வைக்கப்பட்டன. ஆரூரர் அவற்றைப் பெற்றுக் கொண்டு திருவாரூர் சேர்ந்தார்.

சுந்தரர் திருவாரூரில் தியாகேசப் பெருமானை வணங்கி வாழும் காலத்தில் சேரமான் பெருமாளின் நினைவு வந்தது. எனவே, சுந்தரர் பல திருத்தலங்களை வணங்கியவண்ணம் சேரநாட்டை நோக்கிச் சென்றார். கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூரை அடைந்ததும் அங்குள்ள அக்கிரகாரத்தில் ஒரு வீட்டில் மங்கல ஒலியும், எதிர் வீட்டில் அமங்கல ஒலியும் கேட்டன. சுந்தரர் இதற்கான காரணத்தை வினவினார். அவ்வூர்க்குளத்தில் நீராடச் சென்ற பிள்ளைகளில் முதலை விழுங்கிய சிறுவனை இழந்த பெற்றோரின் அவலக் குரல் ஒரு வீட்டில் ஒலிக்க, உயிர் பிழைத்து மீண்ட சிறுவனின் உபநயனச் சடங்கு (பூணூறசடங்கு) நிகழும் வீட்டில் மங்கல ஒலி கேட்கின்றதென அங்கிருந்தோர் சுந்தரருக்குத் தெரிவித்தனர். சுந்தரர், முதலையுள்ள குளக்கரைக்குச் சென்று அவிநாசிப் பெருமானை வணங்கி, **"ஏற்றான் மறக்கேன்..........."** என்ற பதிகத்தைப் பாடினார். அப்போது இறைவன் திருவருளால் குளத்து முதலை அமங்கல வீட்டார் மகிழும் வண்ணம் அவ்வீட்டுப் பிள்ளையைக் கரையிற் சேர்த்தது.

பின்னர் சேரநாடு சேர்ந்த சுந்தரர் சேரமான் பெருமாளுடன் சிறிதுகாலம் வாழ்ந்தார்; பரவையார் சங்கிலியார் ஆகியோர் நினைவுகள் அற்றார்; பரமன் நினைவையே பற்றிக் கொண்டார்.

ஒரு நாள் அவர் திருவஞ்சைக்களத்திலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று **"தலைக்குத் தலைமாலை"** என்ற பதிகத்தைப் பாடிப் பேரின்பப் பெருவாழ்வு அருளும்படி பரமனை வேண்டினார். சிவபிரான் ஆணைக்கிணங்க அங்கு வந்த தேவர்கள், வெள்ளை யானை மீது சுந்தரரை ஏற்றிக் கயிலைக்குக் கொண்டு சென்றனர்.

சுந்தரர் வெள்ளையானைமீது ஏறிச் செல்வதைக் கேள்வியுற்ற சேரமான் பெருமாள் தமது குதிரை மீது ஏறி, அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதினார். உடனே, அக்குதிரை விண்ணிற் பாய்ந்து செல்லத் தொடங்கியது. சுந்தரரும் சேரமான் பெருமாளும் திருக்கயிலையை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றனர். இவ்வாறு சுந்தரர் கயிலைப் பெருவாழ்வை மீண்டும் பெற்ற தினம் 'ஆடிச்சோதி' (ஆடிச்சுவாதி) ஆகும்.

வாய்மை காத்தலும், தூய்மை பேணலும் பேரின்பப் பெருவாழ்வுக்கு அவசியம் என்பது சுந்தரரின் முழுவாழ்வு உணர்த்தும் செய்தி ஆகும்.

## (ஈ) மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

### (1) அறிமுகம்

சைவ சமய குரவர் நால்வரில் மாணிக்கவாசக சுவாமிகள், ஏனைய மூவரிலும் வேறுபட்டவராவார். அவர் பட்டம் பதவிகள் பெற்றவர்; அவற்றைத் துறந்து, ஆன்மீக வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர்; தில்லை நடராசப்பெருமானே அவரது திருவாசகப் பாக்களை ஏட்டில் எழுதிய புண்ணியம் பெற்றவர்; பசவர், போப்பையர் போன்றோரால், உருக்கப் பண்பு நிறைந்த பாடல்களைப் பாடியவர் என்ற மதிப்பைப் பெற்றவர். காலம், இடம் மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து கொடுக்கப்பட்ட இம்மதிப்பு மாணிக்கவாசக சுவாமிகளின் சிறப்பின் சிகரமாகும்.

### (2) வாழ்வும் பணியும்

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாதவூரினர். திருவாதவூர் மதுரையை அடுத்துள்ளது. மதுரை அக்காலப் பாண்டி நாட்டின் தலைநகர். அக்காலத்தில் பாண்டி நாட்டை அரிமர்த்தன பாண்டியன் என்பவன் ஆண்டவன் என்பது வரலாறு. பாண்டிய மன்னர்களுக்கு அமைச்சர்களை அளித்த அந்தணர்குலம் ஒன்றிருந்தது. அக்குலத்திலேதான் சுவாமிகள் பிறந்தார்கள். ஆதி சங்கரர் வகுத்த ஏகான்மவாதம் "மிண்டிய மாயாவாதம்" எனப் பேசப்பட்ட காலம் அது என்பர் சமய வரலாற்றினர். ஆயினும், மாணிக்கவாசகரின் பெற்றோர், இயற்பெயர், குடும்ப வாழ்க்கை என்பன பற்றிய குறிப்புகள் இப்போது திருத்தமாகக் கிடைக்கவில்லை.

அறிவாற்றல் மிக்க மாணிக்கவாசகர் பாண்டிய அரசனின் அவையில் அமைச்சராகப் பணிபுரிந்தார். அவரது திறமையையும், பணியையும் மெச்சிப் பாண்டிய மன்னன் **"தென்னவன் பிரமராயன்"** என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினான். ஆயினும், உலகியல் வாழ்வில் நிலை பெறாத அவரது மனம் ஆன்மீக விசாரணையிலேயே நாட்டம் கொண்டது.

## (3) வாழ்க்கையில் திருப்பம்

கீழைக்கடற்கரையில், மரக்கலங்களில் அராபியக் குதிரைகள் வந்திறங்குவது வழக்கம். அக்குதிரைகளை வாங்கிவரும் பணியைப் பாண்டியன் மாணிக்கவாசகரிடம் ஒப்படைத்தான். அவர் பரிவாரங்களுடன் சென்றார். செல்லும் வழியில், திருப்பெருந்துறை என்னும் இடத்தில், குருந்தமர நிழலில் குருநாதர் ஒருவர் சீடர்களுக்கு, ஞானோபதேசம் அளிக்கும் காட்சியைக் கண்டார். அவரின் சீடராகச் சேர்ந்து உபதேசம் பெற்றார்; அரச பணியை மறந்தார். பரிவாரத்தினர் மாணிக்கவாசகரின் செயற்பாடுகளைப் பாண்டியனிடம் சென்று முறையிட்டனர். பாண்டியன் இதனை அறிந்தவுடன் மாணிக்கவாசகருக்குச் செய்தி ஓலை அனுப்பினான். மாணிக்கவாசகர் ஓலையை கொண்டு வந்த ஏவலர்களைக் கொண்டே அதனை வாசிப்பித்தார். "இறைவனின் அடியவனான எனக்குப் பாண்டியன் எவ்வாறு கட்டளை இட முடியும்?" என்று குருநாதரிடம் அவர் வினவினார். அதற்குக் குருநாதர் "நீ மதுரைக்குப் போ; அங்கு ஆவணி மூல நாளிற் குதிரைகள் வருமென்று பாண்டியனுக்குத் தெரிவி" என்று கூறிவிட்டார். அத்துடன் அரசனுக்கு வழங்குமாறு மாணிக்கக்கல் ஒன்றினையுங் குருநாதர் மணிவாசகரிடங் கொடுத்தார். குருவின் சொல்லைச் சிரமேற் கொண்டு மணிவாசகர் மதுரைக்கு ஏகினார்.

## (4) திருவிளையாடற் சோதனைகள்

மணிவாசகர் கொண்டுசென்ற நிதி பற்றி வினவிய பாண்டியன் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தான். தண்டலாளர்கள் அவரை வருத்தினர். ஆவணி மூல நாளில் குதிரைகள் மதுரைக்கு வந்தமையால் பாண்டியன், மணிவாசகருக்கு விடுதலை வழங்கி, கொற்றக் குதிரையில் வந்த குதிரை வணிகத் தலைவருக்குச் சிறப்புப் பரிசும் அளித்தான். இக்குதிரைகள் சிவபிரானின் திருவிளையாடலால் பரி வடிவம்

பெற்ற நரிகளாகும். குதிரை வணிகத் தலைவனாக சிவபிரான் வந்தது பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

**'பெற்றி பெறற்கரிய பெம்மான் பெருந்துறையான்**
**கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி'**

எனப் பாடியுள்ளார்.

அன்றிரவு சிவபிரானின் மற்றொரு திருவிளையாடல் இடம்பெற்றது; பரிகள் மீண்டும் நரிகளாயின. குதிரைப் பந்தியில் கட்டப்பட்டிருந்த உண்மைக் குதிரைகளைக் கடித்து அவை ஊளையிட்டன. இதைக் கேள்வியுற்ற பாண்டியன் மணிவாசகருக்கு மீண்டும் தண்டனை வழங்கினான். நிதி முழுவதையும் திருப்பி ஒப்படைக்கும்வரை கடுந்தண்டனை வழங்கினான். தண்டலாளர்கள் ஆற்றுச் சுடுமணலில் நிறுத்தி, நெற்றியில் கல்லேற்றி வதைத்தனர்.

இந்நிலையில் மணிவாசகருக்கு அபயம் அளிக்கத் திருவுளம் கொண்ட சிவபிரான் மற்றொரு திருவிளையாடலைச் செய்தார். வற்றி வரண்டிருந்த வைகை நதி பெருகிக் கரை மீறிப் பாய்ந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. எனவே, மக்கள் கருத்திற்கு மதிப்புக் கொடுத்த பாண்டிய மன்னன் மணிவாசகருக்கு விதித்த தண்டனையை விலக்கினான். வெள்ளச் சேதம் எதிர்காலத்தில் நிகழாதிருக்க, வெள்ளத்தடை அணைகட்டும் பணியைக் கூட்டுறவு அடிப்படையில் நிறைவேற்றப் பாண்டியன் ஆணையிட்டான். 'செம்மனச் செல்வி' என்னும் பிட்டுவாணிச்சி தனது பங்கை நிறைவேற்ற இயலாதவளாக இருந்தாள்.

இவ்வேளையில் சிவபிரான் பிட்டுவாணிச்சியின் கூலி ஆளாக மாறி மற்றொரு திருவிளையாடலைப் புரிந்தார். அவர் பிட்டுவாணிச்சியின் உதிரும் பிட்டை உண்டும் மணலில் படுத்துறங்கியும் வேலை செய்யாது காலத்தை வீணே கழித்தார். இப்பொதுப்பணியை மேற்பார்வை செய்யவந்த பாண்டியன்,

பிட்டுவாணிச்சியின் பணி நிறைவேறாதது கண்டு, அவளது கூலி ஆளின் முதுகிலே தன் கையிலிருந்த பிரம்பால் ஓங்கி அடித்தான். மாயக் கூலியாள் மறைய, அவ்வடி உலகிலுள்ள சகல உயிர்கள் மீதும் பட்டது. இச்சம்பவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

**'மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுக்காண் அம்மானாய்'**

என்று கூறியுள்ளார். இதன் பின்னர் மதுரை மக்களும் மன்னனும் சிவபிரானின் திருவிளையாடலை உணர்ந்தனர். பாண்டியன் மணிவாசகரின் மதிப்பை உணர்ந்து, அவரின் ஞான மார்க்கத்தைத் தொடர அனுமதியளித்தான்.

## (5) ஆலய தரிசனமும் சிதம்பர முத்தியும்

சுவாமிகள் அதன் பின்னர் தமது வாழ்க்கையை சமயத்திற்காகவே அர்ப்பணித்தார். திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று சிவபிரானை வழிபட்டார்; அங்கெல்லாம் பதிகங்கள், பத்துக்கள் போன்ற பல பாசுரங்களைப் பாடினார். இப்பாசுரங்களில், தென்னாட்டுச் சைவரிடையே வழங்கிய, நாட்டுப் பாடல் வடிவங்களையும் இசை வடிவங்களையும், ஞானமும் பக்தியும் மிளிரக் கையாண்டுள்ளார். இவற்றை அவரின் திருவெம்மானை, திருச்சாழல், திருவெம்பாவை, திருக்கோத்தும்பி முதலிய பாடல் தொகுதிகளில் காணலாம். தமது யாத்திரைகளின் போது, மாற்றுச் சமயத்தவரோடு வாதங்கள் பல புரிந்து வெற்றியீட்டினார். அவரது வாழ்க்கை வரலாற்றில், ஊமை இளவரசியைப் பேசச் செய்தமை முதலான அற்புதங்கள் குறிப்பிடத்தக்கவை.

மாணிக்கவாசக சுவாமிகள் தமது அந்திமகாலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தார். ஒரு நாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து, 'நீர் பாடிய பாடல்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்தேன்" என்று கூறினார்.

எனவே, அவர் அப்பாடல்களை மீண்டும் பாட, அந்தணர் அவற்றை ஏட்டில் எழுதினார். பின்னர் சிதம்பரநாதரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துக் கோவைப் பிரபந்தம் ஒன்று பாடுமாறு அந்தணர் கேட்டுக் கொண்டார். சுவாமிகளும் அவ்வாறே திருக்கோவையாரைப் பாடினார். இதனையும் எழுதிய பின் அந்தணர் விரைவாக மறைந்து விட்டார்.

அடுத்த நாள் காலையிலே தில்லைப் பெருமானுக்குப் பூசை செய்ய வந்த தில்லை மூவாயிரவரில் ஒருவர், கோயிற் படியில் ஏடு ஒன்று இருக்கக் கண்டார். அவர் அதனை எடுத்துப் பார்த்த பொழுது, அதிலே திருவாசகமும் திருக்கோவையாரும் எழுதப்பட்டிருந்தன. ஏட்டின் ஈற்றில், "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது" என்று அடிக் குறிப்பு எழுதி, "அழகிய சிற்றம்பலமுடையான்" எனக் கையொப்பமும் இடப்பட்டிருந்தது. இதனை அறிந்து வியந்த தில்லை மூவாயிரவர் பலர் அடிகளிடஞ் சென்று, "நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் யாது?" என்று கேட்டனர். மூவாயிரரையும் அழைத்துக் கொண்டு தில்லைப் பெருமானின் கோயிலுக்குச் சென்று, அங்கு அம்பலத்தரசனைச் சுட்டிக்காட்டி 'இவரே அதன் பொருள்' என்று கூறிவிட்டுச் சிவசாயுச்சியம் அடைந்தார். 'சிவத்தோடு இரண்டறக் கலத்தல்' என்னும் அத்துவித முத்தியே, திருவாசகம் கூறும் ஞானமார்க்கத்தின் பொருள் என்பதை மாணிக்கவாசகரின் கடைசிச் சொல் உணர்த்துகிறது. மேலும்,

**'கடையூழி வரும் தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்**
**உடையார் உன்வாசகத்தில் ஒருபிரதி கருதினதே'**

என்னும் சுந்தரம்பிள்ளையவர்களின் (மனோன்மணீயம்) கூற்று மாணிக்கவாசகரது திருவாசகத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறது.

### பயிற்சி

1. செயற்பாடு :

நாயன்மார நால்வரும் செய்த அற்புதங்களைத் தொகுத்து அட்டவணை தயாரிக்குக.

# 10

# திருமுறைகள்

## (அ) தொகுப்பு

திருமுறை என்ற தொகைச் சொல் திரு, முறை ஆகிய இரு சொற்களின் இணைப்பு ஆகும். திரு என்பது அழகு, தெய்வீகம், மேன்மை, மங்கலம், செல்வம் என்னும் கருத்துக்களைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்பத் தரும் பதம் ஆகும். முறை என்பது ஒழுங்கு, வரிசை, ஒழுக்கம், உறவு, தரம், நூல் என்னும் பொருள்களை உணர்த்தும் மொழி ஆகும். திருமுறை என்னும் இரு சொற் கூட்டைச் சமய நோக்கில் தெய்வீக உணர்வு பெருக, சமய ஒழுக்தைப் பேணும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட உயர்வான நூல்களின் தொகுதி எனலாம்.

சைவத் திருமுறைகளைத் தொகுக்கும் பணியில் முதலில் ஈடுபட்டவர் நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார். இவரை இப்பணியில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தியவர் 'சிவபாதசேகரன்', 'திருமுறைகண்ட சோழன்' என்னும் சிறப்புப் பெயர்கள் பெற்ற முதலாம் இராஜராஜன் ஆகிய சோழ மன்னன். சைவத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி தொகுத்த கதையை, வரலாற்று அம்சங்களும் புராணக்கதை மரபுகளும் இணைய விரித்துக் கூறும் நூல் உமாபதிசிவம் இயற்றிய "திருமுறை கண்ட புராணம்" என்னும் ஒரு வகைப் புராண இலக்கியம் ஆகும்.

திருநாரையூர் என்பது காவிரியின் வடகரையில் உள்ள ஒரு முக்கிய தலம். அத் தலத்தில் பொள்ளாப்பிள்ளையார் என இலக்கிய வழக்கிலும், பொல்லாப்பிள்ளையார் எனப் பேச்சு வழக்கிலும் பெயர் பெற்றுள்ள விநாயகப் பெருமான் எழுந்தருளிய திருக்கோயில் ஒன்று உள்ளது. இந்த விநாயகர் ஆலயத்தில் அர்ச்சகராக விளங்கிய ஆதி சைவ குல அந்தணரின் பிள்ளையே நம்பியாண்டார் நம்பி ஆவார்.

## (1) நம்பியாண்டார் நம்பி

'நம்பியாண்டார் நம்பி என்ற பெயர்' உத்தமர் ஆகிய விநாயகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட, அந்தணர் குல உத்தமர் எனப் பொருள் தரும். முதல்வணக்கம் பெறும் மரபுரிமை, தமக்கு மேல் தலைவர் இல்லாத மேன்மை, சித்தி புத்திகளின் நாயகத்துவம், ஓங்காரப் பொருள் வடிவம் என்னும் சிறப்புக்கள் காரணமாக மூத்த பிள்ளையார், மூத்த நாயனார், விநாயகர், நம்பி என்ற கருத்துச் செறிவுள்ள பிற பெயர்களை முற்காலத்தில் பிள்ளையார் சமய நூல் வழக்கிற் பெற்றிருந்தார். இத்தகைய நம்பியாகிய பொள்ளாப் பிள்ளையாரின் அற்புத அருளுக்குப் பாத்திரமாகும் புண்ணியம் செய்தவர் இந்த அந்தணர் குல நம்பி. அவர் ஒருமுறை தமது தந்தையாருக்காகப் பிள்ளையாருக்குப் பூசை செய்தார். அப்போது சிறுவரான நம்பி பூசை முடிவில் நைவேத்தியத் திருவமுதைப் பிள்ளையார் உண்ணாமையால், தமது பூசைக் கடமையில் ஏதோ பிழை நேர்ந்து விட்டதாக எண்ணிக் கல்லோடு தலையை முட்டி மோதித் தம்மைத் தாமே வருத்த முனைந்தார். அந்தண

நம்பியின் அன்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரித்த விநாயக நம்பி, அமுதை உண்டு அவருக்கு அருள்பாலித்தார். இந்த நிகழ்ச்சியின் பின் 'நம்பியாண்டார் நம்பி' என்னும் சிறப்புப் பெயர் நிலைபெற்று விட, அவரின் இயற்பெயர் மறைந்துவிட்டது.

அந்தண நம்பியின் புகழ்ச்சிறப்பு இதன் பின் சோழ நாட்டிற் பரவியது. அதனை அறிந்துகொண்ட முதலாம் இராஜராஜன் அவரின் உதவியைப் பெற்றுத் தில்லையில் குவியலாகக் கிடந்த தேவாரத் திருப்பதிகங்களைச் செம்மைப் படுத்தித் தொகுப்பிக்க விரும்பினார். விஜயாலயசோழன் தொடங்கிய திருக்கோயிற் பணிகளை முன்னெடுத்துச் சென்ற முதலாம் இராஜராஜன் ஆட்சிபுரியத் தொடங்குவதற்கு முன்னரே திருவல்லம், திருவாவடுதுறை போன்ற சில ஊர்களில் "திருப்பதிகங்கள்" ஓதப்பட்டன. பிராமணர், தேவரடியார், பிடாரர் (ஓதுவார்) ஆகியோர் உடுக்கை, மத்தளம், தாளம் என்னும் கருவிகளுடன் பூசை வேளைகளில் திருப்பதிகங்களை ஓதினர் என டாக்டர் மா. இராசமாணிக்கனார் கல்வெட்டு ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

இவ்வாறு ஓதப்பட்ட திருப்பதிகங்களும் பிற திருப்பதிகங் களும் அடங்கிய ஏட்டுச் சுவடிகளின் குவியல்களைத் தில்லை வாழ்அந்தணர் நாயகத்திடம் பெற்றுச் செம்மைசெய்து தொகுக்கும் பணி, நாரையூர் அந்தண நம்பியிடம் ஒப்படைக்கப்பட்டது. முதலில் அந்த ஏட்டுச் சுவடிகளை அவருக்குக் கொடுக்கத் தில்லை வாழ் அந்தணர் நாயகம் மறுத்தார். பின், நாரையூர்வாழ் அந்தணர் நம்பி, தில்லைவாழ் அந்தணர் நாயகத்தின் மனத்தைக் குளிர்விக்க, தேவாரம் பாடிய மூவர் முதலிகளின் திருவுருவங்களை அரச ஆதரவோடு பல்லக்கிற் பவனியாகக் கொண்டு சென்று, திருப்பதிகச் சுவடிகளை உதவும்படி விநயமாக வேண்டினார். அவரின் நல்ல நோக்கத்தைப் புரிந்துகொண்டு மனம்மாறிய

தில்லை வாழ் அந்தணர் நாயகம் ஓர் அறையில் குவியலாகக் கிடந்த ஏட்டுச் சுவடிகளை நாரையூர் அந்தண நம்பியிடம் அன்போடு கொடுத்தார்.

இந்த ஏட்டுச் சுவடிகளிற் பல, கறையான் அரித்துச் சிதிலம் அடைந்து கிடந்ததைக் கண்டு நாரையூர் அந்தணநம்பி மனம் வருந்தினார். அப்போது ஓர் அசரீரி வாக்கு, "இக்காலத்திற்கு அவசியம் அற்றவையே அழிந்தன" என ஆறுதல் அளிக்கும் வகையில் ஒலித்தது. இதனால் செயலூக்கம் கொண்ட நாரையூர் அந்தண நம்பி இராஜராஜன் ஒப்படைத்த பணியை நிறைவேற்ற முனைந்தார். அவர் தேவாரத் திருப்பதிகங்களைத் திருமுறை களாகத் தொகுக்கும் அடிப்படை நோக்கத்துடன் முதலில் தொடங்கிய முயற்சி வளர்ந்து, அவர் மறைந்த பின்னரும் நீடித்ததனால் இப்போது நமக்குப் பன்னிரு பிரிவுகள் கொண்ட பன்னிரு திருமுறைகள் கிடைத்துள்ளன. திருஞானசம்பந்தர் தொடக்கம் நாரையூர் அந்தண நம்பியின் மறைவின் பின் வாழ்ந்த சேக்கிழார் ஈறாக இருபத்தேழு சிவத்தமிழ்ச் செல்வர்கள் பாடிய சுமார் 1800 பாசுரங்கள் பன்னிரு திருமுறைகளில் உள்ளன. இப்பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறை தொடக்கம் பன்னிரண்டாம் திருமுறை வரையில் உள்ள பாசுரங்களில் நாரையூர் அந்தண நம்பி இயற்றிய பத்து நூல்களும், அவரின் காலத்தின் பின் இயற்றப்பட்ட கங்கை கொண்ட சோழேச்சரத் திருவிசைப்பா, பெரியபுராணம் போன்ற பதிகங்களும் நூல்களும் இருத்தலால், இந்த ஐந்து திருமுறைகளும் இப்போது பெயர் தெரியாத ஒருவரால் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டின்பின் இணைக்கப்பட்டன என்று கருதும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் போன்ற அறிஞர்களும் உள்ளனர்.

## (ஆ) பகுப்பு

நாரையூர் அந்தணநம்பி தொடங்கிய திருப்பதிகத் தொகுப்புப் பணி அவர் காலத்தில் மறைந்துபோகாமல் ஏட்டுச் சுவடிகளில் கிடைத்த தேவாரப் பதிகங்களை ஏழு தொகுதிகளாக நிறைவு செய்தது. இது முதற் கட்டப் பணி. நாரையூர் அந்தண நம்பிக்குக் கிடைக்காத தேவாரப் பதிகம் ஒன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் கல்வெட்டு ஒன்றிலிருந்து சைவ உலகிற்குக் கிடைத்துள்ளமை இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடத்தக்கது. சம்பந்தர் பாடிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் பாடிய திருப்பதிகங்கள் நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாவும், சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இவை ஏழும் **'அடங்கன் முறை'** எனப்படல் சைவமரபு. இவற்றுக்குத் திருநீலகண்ட யாழ்பாணர் மரபில் வந்த மதங்கசூளாமணி என்னும் பெண்மணி பண் அமைத்து உதவியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்தமைக்கு ஒரு சமயமரபு முக்கிய காரணமாயுள்ளது. மந்திரங்கள் போற்றி, வாழ்க, காண்க, தோன்றும், போலும், தாமே, வெல்க என்றிவ்வாறு ஏழு முடிபுகளைக் கொள்ளுதல் சமய மரபு ஆகும். இந்தச் சமய மரபுக்கு மதிப்பளித்து அதனைப் பேணும் முறையிலே மூவர் அருளிய 797 தேவாரத் திருப்பதிகங்கள் ஏழு தொகுதிகளாக்கப்பட்டன. மந்திரங்களின் மகத்துவம் அவற்றுக்கு அளிக்கப்பட்டன. 'மூவர் தமிழும் திருநான் மறைமுடிபே' என ஔவையாரும், 'தேவாரம் வேத சாரம்' எனக் காசிவாசி செந்திநாத ஐயரும் அடங்கன்முறையைச் சிறப்பித்துள்ளனர்.

தேவாரப் பதிகங்களைத் தொகுக்கும் முதற் கட்டப்பணி முற்றுப் பெற்றபின் இரண்டாம் கட்ட முயற்சி தொடங்கியது. இக்கட்டத்தில் மணிவாசகப் பெருமான் பாடியருளிய 658 பாடல்கள்

கொண்ட திருவாசகமும் 400 பாடல்கள் கொண்ட திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டன. திருமாளிகைத்தேவர் தொடக்கம் சேதிராயர் வரையிலுள்ள ஒன்பது அடியார்கள் பாடிய 28 திருவிசைப்பா பதிகங்களும் சேந்தனாரின் திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தமும் அடங்கும் தொகுதி 301 பாடல்கள் இடம்பெறும் ஒன்பதாம் திருமுறையாகும். முதலாம் இராஜராஜன் காலத்திற்கு முன் ஆட்சி புரிந்த கண்டராதித்த சோழன் பாடிய திருவிசைப்பா பதிகமும், கங்கை கொண்ட சோழேச்சரம் மீது கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா பதிகமும் ஒன்பதாம் திருமுறையில் உள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

திருமூலர், சுந்தரநாதன் என்னும் பெயர்கள் கொண்ட சித்தர் பன்னெடுங்காலம் யோகநிலையில் இருந்து உணர்ந்த உண்மைகளைக் கூறும் 3000 பாடல்கள் அடங்கிய திருமந்திரம் என்ற ஞானக்களஞ்சியம் பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம், தமிழாகமம், சுந்தரனாகமம் எனப் பல பெயர்கள் பெற்றுள்ளது. தத்துவ விளக்கம், யோக நுட்பம், தோத்திரம் எனப் பல பொருள்களைப் புதிர் போலக் கூறும் சிறப்பு திருமந்திரத்தில் பரந்து காணப்படுகிறது. ஒன்பது தந்திரங்கள் என்னும் பிரிவுகள் திருமந்திரத்தில் உள்ளன.

பதினோராம் திருமுறை பன்னிருவர் பாடிய பல்வகைப் பிரபந்தங்களின் தொகுப்பாக விளங்குகின்றது. திருவால வாயுடையார் (இறைவன்) பாடிய திருமுகப் பாசுரம் என்னும் கடிதப் பாட்டு (சீட்டுக்கவி) தொடக்கம் நம்பியாண்டார் நம்பி பாடிய திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை வரையிலுள்ள 41 பிரபந்தங்களில் இடம்பெறும் 1388 பாடல்கள் இத்திருமுறையில் அடங்கியுள்ளன. திருமுறைப் பாடல்களைப் பாடிய 27 அடியார்களில் ஒரேயொரு பெண்ணடியார் ஆகிய

காரைக்காலம்மையார் இயற்றிய பாடல்களும், ஒரேயொரு சேரப் பெருமன்னரான சேரமான் பெருமாள் (மாக்கோதை) இயற்றிய பாடல்களும், ஆன்மீக ஈடேற்றத்திற்காக வழிபட வேண்டிய திருத்தலங்களைக் கோவைப்படுத்தி வெண்பா வடிவில் கூறும் ஒரேயொரு சிவபக்தரான ஐயடிகள் காடவர்கோன் பாடிய ஷேத்திர வெண்பா என்னும் நூலும் இடம்பெறும் சிறப்புக்கள் பதினோராந் திருமுறையிலுள்ளன. மேலும், சங்க இலக்கியத் தொகுதிகளில் உள்ள பாடல்களில் ஒரேயொரு பாட்டு ஆகிய திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தமும் இடம்பெறுகின்றது.

இறுதியாக அமைந்துள்ள பன்னிரண்டாந் திருமுறையில் இரண்டாம் குலோத்துங்கன் ஆகிய அநபாயசோழனின் அமைச்சரான சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் இடம் பெறுகின்றது. அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் கொண்ட சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் ஆகிய பெரிய புராணத்தை 11 சருக்கங்களும் 4286 பாடல்களும் உள்ள ஒரு சைவப் பெருங்காப்பியமாகப் படைத்துள்ளார். இறைவன் அருளிய **"உலகெலாம்........."** என்னும் தொடக்கத்தைப் பேணிச் சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடி முடித்தார்; தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற் பயனே" என்பது சமய மரபு வழிச் சிந்தனையாகும். நூல்கள், தனிநபர், சுற்றுச் சமுதாயம், சமூகம், நாடு, உலகு என்னும் ஐந்து நிலைகளிலும் உடன்பயன், குறுகிய காலப் பயன், நீண்ட கால இறுதிப் பயன் ஆகிய மூன்று நலங்களும் தரவேண்டும் என்பது இன்றைய சிந்தனை. திருமுறைகள் இவ்விருவகைச் சிந்தனைகளையும் நிறைவேற்றத் துணைபுரிகின்றன.

தேவாரத் திருப்பதிகங்கள், திருவாசகப் பாடல்கள், திருவிசைப்பாப் பதிகங்கள் முதலியன அவற்றை ஓதுபவர்களின் அல்லது பாராயணம் செய்பவர்களின் மன அமைதி, மனமகிழ்ச்சி, கருணை, இரக்கம் போன்ற நற்பண்பு வளர்ச்சி, ஆன்மீகத்துறை மேம்பாடு என்பவற்றுக்கு உதவுகின்றன.

திருமுறைகள் சார்பான சமய நிகழ்ச்சிகளான குருபூசைகள், நாடகங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள், முற்றோதல்கள், புராண படனங்கள் முதலியன சைவ மக்கள் வாழும் சுற்றுச்சமுதாயம், சமூகம், நமது நாடு என்பவற்றிலும் உலக நாடுகள் பலவற்றிலும் சமய விழிப்புணர்ச்சியையும், சைவ சமயஈடுபாட்டையும் வளர்க்கத் துணை புரிகின்றன.

மேலும், சைவத் திருமுறைகள் பண்ணாராய்ச்சி, தமிழிசை வளர்ச்சி, பண்ணிசைப் பயிற்சி, பஞ்ச தோத்திர மரபின் ஆக்கம், திருக்கோயில் திருப்பணிகள், திருத்தல யாத்திரை, பன்னிரு திருமுறைத் தொகுப்பு போன்ற சமய நூற்பணிகள், ஆதீனங்கள் ஆகிய சைவ நிறுவனங்களின் பல்திறப்பணிகள், சமய நிறுவனங்களின் மூலவளங்களைத் தேசிய, உலக நலன்களுக்கு நெறிப்படுத்தல் என்றிவ்வாறு பல்வேறு பயன்களை அளித்து வருகின்றன.

'மனமே திருமுறைகள் ஓதுவாய்'

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடைஎழுதுக

(அ) இடைவெளி நிரப்புக.

1. திருமுறைகளைத் தொகுப்பித்தவன் ..............................

2. .......................... எனும் நூல் திருமுறைகள் தொகுக்கப்பட்ட வரலாற்றைக் கூறுகிறது.

3. பன்னிரு திருமுறைகளிலும் சுமார் .......................... பாசுரங்கள் அடங்கியுள்ளன.

4. மூவர் தமிழும் திருநான் மறைமுடிவே என ...................... கூறியுள்ளார்.

5. திருநீலகண்ட யாழ்பாணர் மரபில் வந்த ...................... என்ற பெண் தேவாரங்களுக்குப் பண் அமைத்தார்.

6. சேக்கிழார் பெரிய புராணம் பாடியதனால் .......................... என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

**செயற்பாடு :**

பன்னிரு திருமுறைகளையும் அவற்றில் அடங்கும் நூல்களையும், அவற்றைப் பாடியோரையும் கொண்ட அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

# (இ) சம்பந்தர் தேவாரம்

### பாடல் - 1

திருஞானசம்பந்தர் தல யாத்திரை செய்தபோது பல திருக்கோயில்களைத் தரிசித்து, அருமையான தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியுள்ளார். இவற்றில் ஒரு வகையின அற்புதங்களைச் செய்தபோது பாடிய திருப்பதிகங்கள் ஆகும். பிறிதொரு வகையின அவரின் வித்துவச் சிறப்பு அல்லது மேதாவிலாசம் வெளிப்படும் சொல்லணிப் பதிகங்கள் ஆகும். உதாரணமாக, திருவெழுகூற்றிருக்கைப் பதிகம், திருயமகப் பதிகம் என்பன. மற்றொரு வகையின அற்புதங்கள் நிகழாத சந்தர்ப்பங்களில் மக்களிடையே தலப் பற்றையும் சமயப் பற்றையும் தூண்டும் வகையில் பாடப்பட்ட தலவுணர்வுப் பதிகங்களாகும். இவற்றில் திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் என்னும் தல இணைப்புத் திருப்பதிகத்தில், **"அங்கமும் வேதமும்....."** எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ளது. திருமருகலும் திருச் செங்காட்டங்குடியும் காவிரி நதியின் தென் கரையிலுள்ள தலங்களாகும்.

பண் : நட்டபாடை **தலம்:** திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

திருச்சிற்றம்பலம்

**அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ**
**மங்குல் மதிதவழ் மாடவீதி மருகனிலாவிய மைந்த, சொல்லாய்**
**செங்கயல் ஆர்புனல் செல்வம் மல்குசீர்கொள செங்காட்டங்குடி அதனுள்**
**கங்குல் விளங்கு எரியேந்தி ஆடும் கணபதி யீச்சரம் காமுறவே.**

திருச்சிற்றம்பலம்

**திருமருகல்**

இறைவன் : மாணிக்கவண்ணேச்சுரர் **இறைவி :** வண்டுவார் குழலி

**திருச்செங்காட்டங்குடி**

இறைவன் : கணபதீச்சுரர் இறைவி : திருக்குழல்நாயகி

## பொழிப்பு

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அத்தியயனம் செய்யும் பிராமணர்கள் திருவடிகள் எப்போதும் துதிக்க, மாடமாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் வல்லாளரே, நீர்வளமும் செல்வச் செழிப்பும் மிகுந்த செங்காட்டங் குடியிலே, அனல்தாங்கிக் கூத்தாடும் ஈசுவரன் அமர்ந்துள்ள கணபதீச்சரம் மீது மையல் கொள்ளலாமா? விடை கூறுவீராக.

## பாடல் 2

திருஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியாரின் அழைப்பை ஏற்று, மதுரை சென்று, சமணரின் கொல் தகனக் கொடுமையிற் பிழைத்தல், பாண்டியன் நின்றசீர்நெடுமாறனின் வெப்பு நோயைக் குணப்படுத்தல், சமணர்களை அனல் வாதம், புனல் வாதங்களில் வெல்லல் ஆகிய அற்புதச் செயல்களைப் புரிந்தார். பின் தென்பாண்டி நாட்டிலுள்ள திருத்தலங்களை வழிபட அவர் யாத்திரை செய்தார். தென் தமிழ் நாட்டின் தென்கோடியில் சேது தீர்த்தத்தையடுத்து அமைந்துள்ள திருவிராமேச்சரத்தை அடைந்த சம்பந்தர் அங்கு எழுந்தருளியுள்ள இராமநாதரையும் பர்வதவர்த்தனி அம்மையையும் துதித்து மகிழ்ந்தார். இராமபிரான் பிரதிஷ்டை செய்த இலிங்கம் ஆன இராமநாதப்பெருமானை வழிபட்டு அங்கு இருந்தபோது, ஈழமணித் திருநாட்டிலுள்ள திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் நினைவுக்கு வர, சம்பந்தர் இவ்விரு திருக்கோயில்களையும் மானசீகமாக வழிபட்டு, தேவாரப் பதிகங்கள் பாடினார். இச்சந்தர்ப்பத்தில் அவர் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்தில், **"பண்டு நால்வருக்கு ..........."** எனத் தொடங்கும் பாடல், ஏழாவது பாசுரமாக அமைந்துள்ளது. ஞானத்தின் பொருளைச் சின்முத்திரை மூலம் தட்சிணா மூர்த்தி என்னும் வடிவந் தாங்கிய கயிலைநாதர் முனிபுங்கவர் நால்வருக்கு விளக்கியதை இப்பாடல் உணர்த்துகின்றது. மேலும், திருஞானசம்பந்தரின் இயற்கை வருணனைச் சிறப்பும் இப்பாடலுக்கு மெருகூட்டுகிறது.

**பண்** : நட்டராகம் **தலம்** : திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

**பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப் பல்லுலகினி லுயிர் வாழ்க்கை**
**கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்**
**வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்**
**தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய் கேதீச்சர மதுதானே.**

திருச்சிற்றம்பலம்

**இறைவன்** : கேதீச்சரநாதர் **இறைவி** : கௌரி அம்பாள்

## பொழிப்பு

உலக நன்மைக்காக முன்பு சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்னும் முனிபுங்கவர்களுக்கு ஞான நுட்பத்தை விளக்கிய தென்முகக்கடவுள்பால் துலங்கிய அருளின் அருமை, இப்போது தொண்டர்களுக்குப் பக்தியின் பயனை உணர்த்தும் அருளின் எளிமையாகத் திகழ்கின்றது. இத்தகைய அருளின் வடிவமான சிவமூர்த்தி இயற்கையழகு நிறைந்த மாதோட்டத் திருக்கேதீச்சரத்தில் உவப்புடன் உறைகின்றார்.

## பாடல் 3

திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் சீர்காழி, அவருக்கு மூன்று வயதில் உமையம்மை வயிற்றுப் பசியையும் உள்ளத்தின் பசியையும் போக்க ஞானப்பாலமுது ஊட்டிய தலம் சீர்காழி, சம்பந்தர் இறைவன் திருவருளால் கவிபாடும் திறன் பெற்று முதன் முதல் **"தோடுடைய செவியன்"** என்னும் திருப்பதிகத்தைப் பாடிய திருத்தலம் சீர்காழி. திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் சம்பந்தரைக் காணவந்து ஞானக் குழந்தையின் பதிகங்களை யாழில் அமைத்துப் பாடும் அனுமதியைப் பெற்ற தலம் சீர்காழி. இவ்வாறு சம்பந்தரின் வாழ்விலும் சோழ நாட்டுச் சைவ மலர்ச்சியிலும் தனிச் சிறப்புப் பெற்ற சீர்காழி என்னும் பதிக்குக் கழுமலம், தோணிபுரம், புகலி, பிரமபுரம் போன்ற பன்னிரு பெயர்கள் உள்ளன. இவற்றில் 'கழுமலம்' என்னும் சிறப்புப் பெயர் சூட்டிய கழுமலப்பதிகம் ஒன்றைச் சம்பந்தர் பாடியுள்ளார்.

இக் கழுமலத் திருப்பதிகத்தில் 'நல்லவண்ணம் வாழலாம்' என்னும் ஆக்கச் சிந்தனையை மக்களிடையே வளர்க்கும் நோக்கில், **"மண்ணில் நல்ல"** எனத் தொடங்கும் பாடல் இடம்பெறுகின்றது.

**பண் :** கொல்லி **தலம் :** கழுமலம் (சீர்காழி)

திருச்சிற்றம்பலம்

**மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணிநல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.**

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்பு

அர்த்தநாரீஸ்வரர் ஆகிய உமைநாயகர் நம்பிக்கையூட்டும் பெருந்தகையாகத் திருக்கழுமலத்தில் குடிகொண்டிருப்பதால், நாம் இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் நற்கதியும் அடைய அவரைத் தினமும் மனப்பூர்வமாக வழிபடல் நலம்.

### பயிற்சி

(1) சுருக்க விடை தருக.

1. திருஞானசம்பந்தரின் சொல்லணிப் பதிகங்களுக்கு இரு உதாரணங்கள் தருக.
2. திருமருகலை நாளும் துதிப்போர் யாவர்?
3. செங்காட்டங் குடியிலுள்ள ஈச்சரம் எது? அங்கு வீற்றிருக்கும் இறைவன் யார்?
4. திருக்கேதீச்சரப் பதிகத்தைச் சம்பந்தர் பாடிய சந்தர்ப்பம் யாது?
5. திருக்கழுமலம் எனப்படும் பதி எது? அதன் சிறப்புக்கள் மூன்று தருக.

# (ஈ) அப்பர் தேவாரம்

## பாடல் 1

பிள்ளைப் பருவத்தில் பெற்றாரையும் தமக்கை திலகவதி யாரின் துணைவராக நிச்சயம் செய்யப்பட்ட கலிப்பகையாரையும் காலன் கவர, விரக்தி கொண்ட மருணீக்கியார், சமண சமயத்தைத் தழுவித் தருமசேனர் என்னும் பெயரில் உயர் பதவி அடைந்து வாழ்ந்தார். இதனால் கவலை கொண்ட திலகவதியாரின் பிரார்த்தனைக்கு ஏற்ப, இறைவன் திருவருளால் சூலை நோயுற்ற தருமசேனர் தமக்கையாரிடம் வந்த பின் கோயிலுக்குச் சென்று, 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னும் பதிகம் பாடி, நோய் நீங்கப் பெற்ற பின் திருநாவுக்கரசர் என்னும் நிலையான பெயர் பெற்றார்.

திருநாவுக்கரசரின் கொள்கை மாற்றத்தினால் வெறுப்பும் சினமும் அடைந்த சமணர்கள் நீற்றறையில் அடைத்தல், நஞ்சு கலந்த உணவூட்டல், மத யானையை ஏவிக் கொல்ல முயலல் ஆகிய கொடுமைகளை இழைத்தனர். இவற்றை எல்லாம் இறைவன் இன்னருளால் வென்ற நாவேந்தரைச் சமணர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் வீசும் கொடுமைக்கு ஆளாக்கினர். இச்சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசர் **"சொற்றுணை வேதியன்"** எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடி, உயிர் பிழைத்தார். திருநாவுக்கரசர் பாடிய நமச்சிவாயப் பதிகத்தில் எட்டாவது பாடலாக, **"இல்லக விளக்கது .........."** என்னும் பாசுரம் அமைந்துள்ளது.

**பண்** : காந்தார பஞ்சமம் **தலம்** : பொது

*திருச்சிற்றம்பலம்*

**இல்லக விளக்கது இருள்கெ டுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே.**

*திருச்சிற்றம்பலம்*

பொழிப்பு :

ஒரு மனையின் உள்ளே ஏற்றப்படும் தீபம் இருளை நீக்கும் தன்மை உள்ளது. மொழியின் உள்ளே காணப்படும் சிந்தனைத் தீபம் கருத்தொளியைப் பரப்ப, பல வீடுகளிலும் ஏற்றப்படும் தூல தீபங்கள் சூழலில் பரவலாகச் செறிந்துள்ள இருளை நீக்கிப் பலருக்கும் ஒளி விளக்கம் தரும் சிறப்பினை உடையன. ஆயின், நல்லோரின் உள்ளத்தில் ஒளிவீசும் ஞான தீபமாய் விளங்குவது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் ஆகும்.

## பாடல் : 2

திருநாவுக்கரசு நாயனார் சோழ நாட்டு ஆலயங்களைத் தரிசனம் செய்யத் தல யாத்திரை மேற்கொண்டபோது காவிரியின் இருகரைகளிலும் அமைந்துள்ள திருக்கோயில்களை வழிபட்டுத் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளார். காவிரியின் வட கரைப் பிரதேசத்தில் கீழைக்கடம்பூர், மேலைக் கடம்பூர் என்னும் இரு தலங்களிலும் அமைந்துள்ள இளங்கோயில், கரக்கோயில் என்னும் இரு திருக்கோயில்களையும் சிறப்பித்து அப்பர் பாடியுள்ளார்.

இவற்றில் மேலைக் கடம்பூரிலுள்ள கரக்கோயில் தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட திருக்கோயில் ஆகும். நாயன்மார் வரலாற்றுச் செய்திகளைக் குறிக்கும் சிற்பங்கள் காணப்படும் இக்கோயில் மீது, திருநாவுக்கரசு நாயனார், **"நங்கடம்பனை ........."** எனத் தொடங்கும் **திருக்குறுந்தொகையைப்** பாடியுள்ளார். இப்பாடலில் இடம்பெறும் "என்கடன்பணி செய்து கிடப்பதே" என்னும் ஈற்றடி சரியை மார்க்கத்தின் உயிர்ப்பாக விளங்குகின்றது.

**தலம்** : மேலைக் கடம்பூர்

திருச்சிற்றம்பலம்

**நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்க டனடியே னையும் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே.**

திருச்சிற்றம்பலம்.

**இறைவன்** : அமிர்தகடேசுவரர் **இறைவி** : சோதிமின்னம்மை

### பொழிப்பு :

உமைபாகரும் மேலைக்கடம்பூர்க் கரக்கோயில் இறைவனும் ஆகிய அமிர்தகடேசுவரரின் அருட்கடமைகளில் ஒன்று என்னைத் தாங்கிக் கொள்ளல். எனது கடமை, பலன் எதிர்பாராத தொண்டுக்கு என்னை அர்ப்பணித்தல் ஆகும்.

## பாடல் 3

திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரப் பதிகங்களில் தல யாத்திரையின் போது அற்புதங்கள் என்னும் அருஞ் செயல்களை இறைவன் திருவருளால் புரிந்து பாடிய பதிகங்களும் உள்ளன; பிறவகைப் பதிகங்களும் உள்ளன. இரண்டாவதாகக் குறிப்பிட்ட பதிகங்களில் தனித் தனிப் பொருள்கள் பற்றி அவர் பாடிய திருப்பதிகங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. இவற்றில் **'தாண்டகம்'** என்னும் பாடல் வகை அவரின் பெருமைக்குத் தனி மதிப்பு ஈட்டிக் கொடுத்துள்ளன. அம்மதிப்புக் காரணமாகத் **'தாண்டக வேந்தர்'** என்ற சிறப்புப் பெயர் சைவ சமய வரலாற்றில் அவருக்கு நிலையான இடத்தை வழங்கியுள்ளது. அவர் பாடிய தனித் திருத்தாண்டங்களில் **"திருக்கோயில் இல்லாத............"** எனத் தொடங்கும் பாடல் புகழ்பெற்ற ஒன்று.

திருச்சிற்றம்பலம்

**திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீ**
**றணியாத திருவில் ஊரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும் பாங்கினொடு**
**பலதளிகள் இல்லா ஊரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும் விதானமும்**
**வெண்கொடியும் இல்லா ஊரும்**
**அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரும் அவையெல்லாம்**
**ஊரல்ல அடவி காடே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

சீராக விழாக்கள் நடைபெறும் ஓர் ஊரில் ஆலயம் ஒன்றோ பலவோ முறைப்படி அமைந்திருத்தல் சிறப்பு ஆகும். மேலும், ஊர் மக்கள் விபூதி தரித்தல், தோத்திரங்கள் பாடுதல், சரியைத் தொண்டுகள் பேணுதல், உணவாசாரம் பேணுதல் என்னும் சைவ நன்னெறியைப் பின்பற்றுதல் ஊரின் சிறப்புக்கு மெருகூட்டும். இத்தகைய சிறப்பில்லாத ஊர்கள் விலங்குகள் திரியும் காடாகவே மதிக்கப்படும்.

### பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் பாடப்பட்ட தேவாரங்கள் எவை?
    1. நாவேந்தரைச் சமணர் கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது :- " ................................"
    2. காவிரியின் வடகரையிலுள்ள கரக்கோயில் தரிசனத்தின் போது :- "................................"
2. மேலைக் கடம்பூர் ஆலயத்திலுள்ள இறைவன், இறைவி பெயர்களைத் தருக.
3. "நல்லக விளக்கது நமச்சிவாயவே". எனும் பாடலடியின் பொருளைத் தருக.
4. ஊரின் சிறப்புக்கு மெருகூட்டும் சைவ நன்னெறிகள் எவையென அப்பர் சுவாமிகள் கூறுகிறார்?

## (உ) சுந்தரர் தேவாரம்

## திருக்கேதீச்சரப் பதிகம்

தொண்டை நாட்டுத் திருத்தல யாத்திரை பூர்த்தியான பின்னர் சுந்தரர், சிவபிரான் திருவருளால் பரவையாரோடு இல்வாழ்வைத் தொடரும் சந்தர்ப்பத்தையும் ஏயர்கோன் கலிக்காம நாயனாரோடு பக்தித் தொடர்பைப் பேணும் சந்தர்ப்பத்தையும் பெற்று திருவாரூரில் வாழ்ந்து வந்தார். அப்போது திருவஞ்சைக் களத்திலிருந்து சேர நாட்டை ஆண்ட சேரமான் பெருமாள் என்னும் சிவபக்திமிக்க மன்னர் சுந்தரரைக் காண்பதற்காகத் திருவாரூர் சென்றார்.

இருவரும் தோழமையுறவு பிணைப்புண்ட நிலையில் பாண்டி நாட்டுத் தல யாத்திரையை மேற்கொண்டனர். பாண்டிய மன்னர் தலைநகரான மதுரை, குளிர்சாரல் வீசும் குற்றாலம், நெல்லையப்பர் குடிகொண்ட திருநெல்வேலி முதலிய தலங்களைத் தரிசித்த பின், இறுதியில் இருவரும் தென்பாண்டி நாட்டில் சேது தீர்த்தக் கரையில் உள்ள இராமேச்சரத்தை அடைந்தனர். இருவரும் இராமேச்சரத்தை வணங்கிப் பாண்டி நாட்டுத் திருத்தல யாத்திரையைப் பூர்த்திசெய்து திருவாரூர் நோக்கித் திரும்ப முன்னர் ஈழநாட்டில் உள்ள திருக்கேதீச்சரத்தை மானசீகமாகத் துதித்தனர்.

சுந்தரர் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்திலே பதினொரு பாடல்கள் இடம்பெறும் பொது நியமத்திற்கு மாறாகப் பத்துப் பாடல்கள் மட்டும் இதில் இடம்பெற்றுள்ளன. அதனால் இப்பதிகத்தில் ஒரு பாடல் காலப்போக்கில் அழிந்து போயிருக்கலாமென்று கொள்ளலாம்.

## பாடல் 1

**பண்** : நட்டபாடை **தலம்** : திருக்கேதீச்சரம்

*திருச்சிற்றம்பலம்*

**நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்**
**மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்**
**பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்**
**செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.**

*திருச்சிற்றம்பலம்*

**இறைவன்** : கேதீச்சரநாதர் **இறைவி** : கௌரியம்பாள்

## பொழிப்பு

விட்டுணுவை இடப வாகனமாக்கிக் கொண்டவர், யானைத் தோல் போர்த்த மங்கல நாயகர், கபாலதாரி ஆகிய சிவபிரான் மெய்யன்பர்கள் புண்ணியத்தைப் பெறும் வண்ணம் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

## பாடல் 2

*திருச்சிற்றம்பலம்*

***சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீழும்***
***கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்***
***படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்***
***திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.***

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

நீறு, பிறைச்சந்திரன், கிழிக்கப்பட்ட சீலையைக் கச்சையாய் அமைந்த கீழுடை, யானைத் தோல் என்பவற்றைத் தரித்த நீலகண்டப் பெருமான், பாலாவியின் கரைமீதுள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரிநாதனாக உறைகின்றான்.

## பாடல் 3

திருச்சிற்றம்பலம்

**அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த**
**வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்**
**பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்**
**செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு :

வேதத்தின் அங்கங்களை ஓதுகின்ற பிராமணர்களும் அவர்களைப் போன்றோரும் தேவர்களும் துதிக்கும், பிறை சூடிய பாம்பை ஆபரணமாகக் கொண்ட சிவபெருமான் மாதோட்டத்தில் பாலாவி நதிக் கரையிலுள்ள கேதீச்சரத்தில் அமர்ந்துள்ளார்.

## பாடல் 4

திருச்சிற்றம்பலம்

**கரியகறைக் கண்டன்ந(ல்)ல கண்மேல்ஒரு கண்ணான்**
**வரியசிறை வண்டியாழ்செயு(ம்) மாதோட்டநன் னகருட்**
**பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்**
**தெரியுமறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு :

கருநீல கண்டனும், முக்கண்ணனும், வேத வித்தகனும் ஆகிய சிவபிரான் சோலைகள் நிறைந்த மாதோட்டத்தில் பேரலைகள் வீசும் பெருநதியான பாலாவியின் கரையிலே கேதீச்சரத்தில் குடிகொண்டுள்ளார்.

## பாடல் 5

திருச்சிற்றம்பலம்

**அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி**
**வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்**
**பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு

அடியார்களின் நோய்ப்பீடைகளை நீக்கி, அருள் பாலிக்கும் அரன் கடல் சூழ் மாதோட்ட நகரிலுள்ள பாலாவி என்னும் நதிதீரத்தில் தென்னஞ் சோலைகளின் நடுவில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளோடு உடனுறையும் சிவநாயகராக எழுந்தருளியுள்ளார்.

## பாடல் 6

திருச்சிற்றம்பலம்

**வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி**
**வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்**
**பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு

சடாதாரியான சிவபிரான் தம் அடியவர்களின் பாவங்களை ஒழித்தருளி, மாதோட்ட நகரில் பாலாவியின் கரையில் உள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளுடன் உறைகின்றார்.

## பாடல் 7

திருச்சிற்றம்பலம்

ஊனத்துறு நோய்களடி யார்மெலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணித்தான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

நோய் தீர்க்கும் வைத்தியநாதரான சிவபிரான், கடல்படு திரவிய வளமுள்ள மாதோட்டத்தில் பாலாவியின் கரையில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளுடன் அமர்ந் துள்ளார்.

## பாடல் 8

திருச்சிற்றம்பலம்

அட்டன்னழ காகஅரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

பரம்பொருள், நம் நாயகன், எண் வடிவங்கள் தாங்கும் ஈசுவரன் ஆகிய சிவபிரான், மாதோட்டத்தில் பாலாவி நதிதீரத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் நுதலழகியான கௌரியம் பாளோடு எழுந்தருளியுள்ளார்.

## பாடல் 9

திருச்சிற்றம்பலம்

மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு :

மகாதேவன், அருளாளன், முத்தொழில் புரிபவன், சிவசக்தி வடிவினன், முக்கண்ணன் ஆகிய சிவபிரான் மாதோட்டத்திலே பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் உறைகின்றார்.

## பாடல் 10

திருச்சிற்றம்பலம்

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக லூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்தும்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்

### பொழிப்பு

உப்பங்கழிகளுள்ள மாதோட்டத்தில் சோலைகள் சூழ் திருக்கேதீச்சரத்தில் உறையும் ஈசன்மீது ஆரூரன் என்னும் அடியார்க்கு அடியவன் பாடிய பதிகத்தை மெய்யன்புடன் ஓதுபவர்களைக் கொடிய வினைப்பலன்கள் சாரமாட்டா.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சுந்தரமூர்த்தி நாயனாரோடு தோழமையுறவு பூண்ட இருவர் பெயர்களைத் தருக.
2. சுந்தரர் எங்கிருந்து திருக்கேதீச்சரப் பதிகத்தைப் பாடினார்?
3. திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருவுருவம் பற்றிச் சுந்தரர், சுடுவார் பொடி ............ என்ற பாடலில் எவ்வாறு வர்ணிக்கிறார்?
4. திருக்கேதீச்சரத்தை வழிபடும் அடியார்கள் பெறும் பயன்கள் யாவை?
5. திருக்கேதீச்சரப் பதிகத்தின் பத்தாவது பாடலின் கருத்தை எழுதுக.

## (ஊ) திருவாசகம்

### பாடல் 1

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் என்னும் ஞானக் களஞ்சியத்திலே ஐம்பத்தொரு பிரிவுகளும் 656 பாடல்களும் உள்ளன. இவற்றிலே திருப்பெருந்துறையில் அவர் பாடியருளிய திருச்சதகம் ஒரு சிறப்புமிக்க பிரிவாகும். மெய்யுணர்தல் தொடக்கம் ஆனந்தாதீதம் வரை வரிசைப்படுத்தப்பட்டுள்ள பத்துப் பத்துக்களில் அடங்கும் 100 பாடல்களில் மாணிக்கவாசகர் பக்திநிலையின் வேறுபாடுகளை உணர்வுபூர்வமாகப் பாடியுள்ளார்.

திருச்சதகம் தெய்வப்பெயரைச் சேர்க்காமல் திரு என்னும் அடைமொழியை மட்டும் கொண்டுள்ள தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு பிரிவாகும். இதன் முதற் பத்து ஆகிய 'மெய்யுணர்தல்' என்னும் உட்பிரிவில் முதற்பாடலாக விளங்குவது 'மெய்தான் அரும்பி' எனத் தொடங்கும் கட்டளைக் கலித்துறை ஆகும்.

**திருச்சதகம் : மெய்யுணர்தல்** **தலம் : திருப்பெருந்துறை**

*திருச்சிற்றம்பலம்*

**மெய்தான் அரும்பி விதிர்விதித்து**
**உன்விரை யார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி**
**சயசய போற்றியென்னுங்**
**கைதான் நெகிழ விடேனுடை**
**யாயென்னைக் கண்டுகொள்ளே.**

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

உடையவனே, உடல், உள்ளம், உரை என்னும் மூன்றும் நீர்த்துளி அரும்பல், கை கூப்பல், கண்ணீர் மல்கல், உள்ளம் குமுறல், 'போற்றி சயசய போற்றி' என்று துதித்தல் ஆகிய பக்தித் துலங்களை வெளிப்படுத்த நான் உன்னைப் பற்றிக் கொண்டேன். என்னை இனங்கண்டு அருள்புரிக.

## பாடல் : 2

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் என்பன எட்டாந்திருமுறையில் இடம்பெறுவன. இவற்றில் திருவாசகம் சிவபிரானைப் போற்றும், நீண்ட பாடல் தில்லையில் அருளிய போற்றித்திருவகவல் ஆகும். இது போலச் சிவனைத் துதிக்கும் வகையில் "போற்றி" என்னும் தொடக்கத்தைக் கொண்ட, அகவல் அல்லாது, நீளம் குறைந்த ஆறு பாடல்கள் திருவாசகத்தின் பிரிவுகள் ஆகிய திருச்சதகம், திருவெம்பாவை, திருப்பள்ளிழெுச்சி என்பவற்றில் அமைந்துள்ளன.

இவற்றில் திருப்பெருந்துறையில் அருளிய திருப்பள்ளி எழுச்சி பத்துப் பாடல்கள் கொண்ட பிரிவாகும். திரோதான சுத்தி என்னும் சமய உண்மையை விளக்கும் இப்பாசுரப் பிரிவில், உள்ள "போற்றி என் வாழ் முதல் ஆகிய" என்று தொடங்கும் ஆசிரிய விருத்தம் முதற் பாடலாய் இடம்பெறுகின்றது.

**தலம்** : திருப்பெருந்துறை

திருச்சிற்றம்பலம்

**போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே**
**புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு**
**ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்**
**எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்**
**சேற்றிதழ்க் கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே**
**ஏற்றுயர் கொடியுடை யாய்எனை உடையாய்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

முழுமுதற்பொருளே, வணக்கம். பொழுது விடிந்துவிட்டது. உமது திருமுகத்தில் தவழும் அருளையும் புன்னகையையும் நல்ல குறியாகக் கருதி மலர்தூவித் தொழ வந்துள்ளோம். திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே, நந்திக் கொடி உள்ளவரே என்னை ஆட்கொண்டவரே துயில் எழுவீராக.

## பாடல் 3

*மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்திலுள்ள 51 பிரிவுகளில் ஒன்று நீத்தல் விண்ணப்பம் ஆகும். உத்தரகோசமங்கை என்னும் தலத்தில் பாடியருளப்பட்ட இப்பிரிவில் 'பிரபஞ்ச வைராக்கியம்' என்னும் உண்மையை விளக்கும் 50 பாடல்கள் உள்ளன. உலக வாழ்வில் விரத்தி கொண்ட ஒருவர் தம்மைத் தாங்கிக் கொள்ளுமாறு இறைவனை வேண்டும் முறையில் நீத்தல் விண்ணப்பம் அமைந்துள்ளது. 'பிரபஞ்ச வைராக்கியம்' என்னும் உண்மையை வலியுறுத்தும் உத்தி புலப்படும் வகையில், "கடையவனேனை..............." எனத்தொடங்கும் கட்டளைக்கலித் துறை **நீத்தல் விண்ணப்பத்தின்** முதற்பாடலாகக் காணப்படு கின்றது.*

தலம் : உத்தரகோசமங்கை

திருச்சிற்றம்பலம்

**கடையவ னேனைக் கருணையி**
**னாற்கலந் தாண்டுகொண்ட**
**விடையவ னேவிட் டிடுதிகண்**
**டாய்விறல் வேங்கையின்றோல்**
**உடையவ னேமன்னு முத்தர**
**கோசமங் கைக்கரசே**
**சடையவ னேதளர்ந் தேனெம்பி**
**ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

முன்பு கருவாய் வந்து என்னை ஆட்கொண்ட ஈசனே இப்போது என்னைப் புறக்கணிப்பீரா? இல்லை அல்லவா! ஆடையழகும் வாய்ந்த உத்தரகோசமங்கை வேந்தே, உலகவாழ்வில் விரக்தி உற்ற என்னை வீழ்ச்சியிலிருந்து காக்க ஊன்றுகோல் போலத் தாங்குவீராக.

### பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருவாசகப் பாடல்களின் எண்ணிக்கை யாது?
2. எட்டாந் திருமுறையிலடங்கும் நூல்கள் எவை?
3. மாணிக்கவாசக சுவாமிகள் திருச்சதகத்தில் வெளிப்படுத்திய பக்திச் செயற்பாடுகள் யாவை?
4. பின்வரும் திருவாசகப் பாடல்கள் எத்தலங்களில் பாடப்பட்டன?
   (அ) திருச்சதகம் .....
   (ஆ) போற்றித்திருவகவல்......
   (இ) திருப்பள்ளியெழுச்சி.....
   (ஈ) நீத்தல் விண்ணப்பம்......
5. சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்ந்த திருத்தலம் எது?
6. நீத்தல் விண்ணப்பம் என்றால் என்ன?

## (எ) திருவிசைப்பா

### பாடல் 1

ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருவிசைப்பா என்னும் பக்திப் பாடல்கள் பாடியவர்கள் திருமாளிகைத் தேவர் தொடக்கம் சேதிராயர் வரையிலுள்ள ஒன்பது அடியவர்கள் ஆவர். இவர்களிலே சேந்தனார் என்பவர் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடி இரட்டைப் புகழ் பெற்றவர். திருவீழி மிழலையில் வாழ்ந்தவர். அவர் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் தலங்கள் மீது திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். தில்லையில் மூவாயிரம் அந்தணர் வாழ்ந்து அத்தலத்திற்குப் பெருமை சேர்த்தது போலத் திருவீழிமிழலையில் ஐந்நூற்றுவர் வாழ்ந்ததாகச் சேந்தனார் குறிபிட்டுள்ளார்.

திருவீழிமிழலை மீது சேந்தனார் பாடிய திருவிசைப்பாவில் "ஏக நாயகனை........" எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ளது.

பண் : பஞ்சமம் தலம் : திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

திருச்சிற்றம்பலம்

கோயில் : விண்ணிழிவிமானம்

## பொழிப்பு :

ஒரு பெருந்தெய்வமும், தேவர்களை ஆளும் மகாதேவரும், என்னுயிர் காக்கும் அமுதும், நிகரில்லாத இன்பத் தலைவரும், திருமாலுக்கு அருள் புரிந்து ஊர்தியாகக் கொண்ட அந்தி மேக வண்ணனும், வளம் மிக்க திருவீழிமிழலை என்னும் தலத்தில் உள்ள விண்ணிழிவிமானம் என்னும் செழுங்கோயிலில் உறையும் யோக நிலைத் தலைவனும் ஆகிய சிவநாயகரைத் தவிர, வேறொரு உயர் தெய்வம் உள்ளதென நான் ஒருபோதும் உணரவில்லை.

## பாடல் 2

ஒன்பதாந் திருமுறையில் உள்ள திருவிசைப்பாக்களில் அதிக பாடல்களைப் பாடியவர் கருவூர்த்தேவர். முதலாம் இராஜராஜன் என்னும் சோழமன்னனின் காலத்தவரான இவர், தில்லை தொடக்கம் திருவிடைமருதூர் வரையுள்ள பத்துத் திருத்தலங்கள் மீது பத்துத் திருவிசைப்பாக்கள் பாடியுள்ளார். தஞ்சைப் பிருகதீச்சுவரர் ஆலயத்தில் இலிங்கத்தை ஆவுடையாரில் அசையாது பொருத்திய பெருமை கருவூர்த் தேவரைச்சாரும். இவரின் சமாதி பிருகதீச்சுவரர் கோயில் திருச்சுற்றில் இருக்கின்றது. இவரின் பக்தியை மெச்சிய நெல்லையப்பர், அவரின் வேண்டுதலை நெல்லையில் நிறைவேற்றாது மானூர் என்னும் தலத்தில் காட்சி கொடுத்து நிறைவேற்றினார்.

திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் உள்ள 'ஏழிருக்கை' என்ற ஆலயத்தில் எழுந்தருளிய இறைவன் மீது கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவில் "செங்கணா போற்றி .........." எனத் தொடங்கும் பாடல் உள்ளது.

பண் : பஞ்சமம் தலம் : சாட்டியக்குடி

திருச்சிற்றம்பலம்

**செங்கணா போற்றி திசைமுகா போற்றி**
**சிவபுர நகருள்வீற் றிருந்த**
**அங்கணா போற்றி யமரனே போற்றி**
**அமரர்கள் தலைவனே போற்றி**
**தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்**
**சாட்டியக் குடியிருந் தருளும்**
**எங்கணா யகனே போற்றியே ழிருக்கை**
**இறைவனே போற்றியே போற்றி.**

திருச்சிற்றம்பலம்

கோயில் : 'ஏழிருக்கை'

## பொழிப்பு

முத்தொழில் புரிய மும்மூர்த்தி வடிவம் தாங்குபவரும், அழிவில்லாதவரும், மகாதேவரும், வேத வித்தகர்கள் வாழும் சாட்டியக்குடியிலுள்ள ஏழிருக்கை என்னும் கோயிலில் உறையும் இறைவனும் ஆகிய எங்கள் தலைவரே, எமது வணக்கத்தை ஏற்று, எம்மைக் காத்தருளும்.

### பயிற்சி

(1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடிய அடியவர் யார்?
2. மேக நாயகன், யோகநாயகன் என்ற சொற்களின் பொருளைக் குறிப்பிடுக.
3. கருவூர்த் தேவரால் நிகழ்த்தப்பட்ட அற்புதம் யாது?
4. செங்கணா போற்றி, திசைமுகாபோற்றி எனப் போற்றப்படுபவர் யார்?

# (ஏ) திருப்பல்லாண்டு

## பாடல் 1

ஒன்பதாம் திருமுறையிலுள்ள பாடல்களைப் பாடிய அடியவர்களில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் இருவகைப் பாடல்களையும் பாடியவர் சேந்தனார் ஆவார். பல்லாண்டு என்பது பல வருடங்கள் வாழ்க என வாழ்த்தும் கவி ஆகும். உலகியல் நோக்கில் கூறப்படும் இவ்வுத்தியை ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் திருவருளை வேண்டும் நோக்கத்துடன் பயன்படுத்திச் சேந்தனார், 'திருப்பல்லாண்டு' படைத்துள்ளார். பஞ்ச தோத்திரம் ஓதும் வழக்கம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை திருப்பல்லாண்டிலுள்ள பாடல்கள் கோயிற் திருவிழாக்களிலும் வீட்டில் நிகழும் விசேட வழிபாடுகளின் போதும் இசையோடு பாடப்படுகின்றன.

முன்பு தில்லையில் நிகழ்ந்த திருவாதிரைத் திருவிழாவின் போது, திருவீதியில் இழுக்கப்படும் தேர் ஓடாது, தடைப்பட்டு நின்றபோது அங்கு வந்திருந்த சேந்தனார், திருப்பல்லாண்டைப் பாடியதும் தேர் தடை நீங்கி ஓடத்தொடங்கியது. இந்நிகழ்ச்சியின் பின்னர் ஆண்டுதோறும் திருவாதிரைத் திருவிழாக்காலத் தேரோட்டம் நிகழும்போது, திருப்பல்லாண்டு ஓதும் வழக்கம் தில்லையில் ஒரு சைவ மரபாயிற்று.

இத்தகைய சிறப்புமிக்க திருப்பல்லாண்டு என்னும் பதிகத்திலுள்ள "சொல்லாண்ட............", "குழலொலி யாழொலி" என்னும் இரு பாடல்கள் சிறப்பாக ஓதற்குரியன.

பண் : பஞ்சமம் தலம் : கோயில் (சிதம்பரம்)

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்ட டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்பு :

புகழ்ந்து கூறும் சொல்லாட்சி பெற்ற நான், மறைப்பொருளை நுணுகி ஆய்ந்த தூய மனமுடைய திருத்தொண்டர் திருக்கூட்டத்துள்ளவர்களே! சில ஆண்டுகளில் அழிவுறுஞ் சில தெய்வங்களின் புன்மைநெறி கைப்பற்றாமல் ஒளி திகழும் பொற் குவியல் போன்ற மகாமேருமலையை வில்லாகக் கையாண்ட அழகிய வீரனும் இடப ஊர்தியானும் காலாதீதனுமாகிய தில்லைப் பெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக.

பாடல் 2

பண் : பஞ்சமம் தலம் : கோயில் (சிதம்பரம்)

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு :

குழல்களின் ஒலியும், யாழின் ஒலியும், நடனமாடும் கூத்தின் ஒலியும், எல்லா இடங்களிலும் அடியார் கூட்டமாகக் கூடி வாழ்த்தும் வாழ்த்தொலியும், திருவிழா ஒலியுமாகிய ஒலிகள் எல்லாஞ் சேர்ந்து பேரொலியாகிப் பெருகி, வானொலியாக விசும்புவரை சென்று, மிக்கொலிக்கும் திருவாரூரில் எழுந்தருளியுள்ள இள ஏறூர்ந்த சிவபெருமானுக்கே, வழிவழியாகப் பரம்பரை அடிமையாகியவர்கள் தமக்குள்ளேயே திருமணஞ் செய்யும் குலத்தில் பிறந்த பழஅடியார்களோடு சேர்ந்து எம் தந்தையாகிய சிவபெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துப் பாடுவோமாக.

### பயிற்சி

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. திருப்பல்லாண்டு என்பதன் பொருள் யாது?
2. தில்லையில் எக்காலத்தில் திருப்பல்லாண்டு பாடுவது சைவ மரபாயுள்ளது?
3. "வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன் ........." என்ற தொடர் விளக்கும் சிவபெருமானது அருட்செயலை விளக்குக.
4. "குழலொலி........." என்ற திருப்பல்லாண்டினூடாக விளக்கப் படும் திருவாரூரின் சிறப்புக்கள் யாவை?

# (ஐ) திருமந்திரம்

## பாடல் 1

மந்திரம் என்னும் சொல் 'நினைத்தவர்க்கு நிலையான பயனைத் தருவது' எனப் பொருள்படும். அதாவது எவர் எத் தெய்வத்தின் மீது முழுநம்பிக்கை வைத்து, மனமாரத் தியானிக் கிறாரோ அவருக்கு நிலையான நன்மை தரும் ஒலிக்கூட்டு அல்லது சொற்றொகுதியை 'மந்திரம்' என விளக்கலாம். இத்தகைய மந்திரங்களைக் கூறியருளியவர்கள் 'நிறைமொழி மாந்தர்' எனப்படுவர். அவர்கள் அளித்த மந்திரங்கள் பக்குவநிலை அடைந்த தகைமையாளர்கள் புரிந்து கொள்ளக்கூடிய உள்ளார்ந்த பொருளைக் கூறுவதால் அவற்றை 'மறைமொழி' என்று கருதுவது பெரியோர் கொள்கை. வடமொழியிலே பல்லாயிரக் கணக்கான மந்திரங்கள் உள்ளன. வேதகாலம் தொடக்கம் இவை தலைமுறை தலை முறையாக உச்சாடனம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழிலும் இத்தகைய மந்திரங்கள் உள்ளன. 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சரம் சைவசமயிகள் அறிந்த சிவமூல மந்திரமாகும்.

பத்தாம் திருமுறையாகிய 'திருமந்திரம்' என்னும் நூல் ஒன்பது தந்திரங்கள் என்ற பிரிவுகளையும் மூவாயிரம் பாடல் வடிவ மந்திரங்களையும் கொண்ட திருமந்திரமாகும். திரு மூலர் என்னும் சித்தர் 3000 ஆண்டுகள் வாழ்ந்து கூறிய அனுபூதிச் சிந்தனைகள் திருமந்திரம் எனப் பெயர்பெற்றன. எளிய சொற்களால் ஆழமான ஞான சிந்தனைகளைப் படிப்பவர் உள்ளங்களைக் கவரும் முறையில் பாடிய திருமூலரின் திறமை இந்நூற் பாடல்களில் ஊடுருவிக் காணப்படுகிறது. சைவசித்தாந்தத்தின் ஊற்றுக்கண் ஆகத் திகழும் திருமந்திரம் ஒரு சாத்திர நூலாக மட்டும் அல்லாமல், தோத்திர நூலாகவும் மதிக்கப்படுகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க திருமந்திரத்தில் சிவனின் மாண்பையும் சிவநாமகீர்த்தனத்தின் பயனையும் விதந்துகூறும் "சிவனொடு ஒக்கும்", "சிவசிவ என்கிலர்" எனத் தொடங்கும் இரு திருமந்திரப் பாடல்கள் தனிச்சிறப்புடையன ஆகும்.

திருச்சிற்றம்பலம்

**சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை**
**அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை**
**புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடித் தாமரை யானே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

சிவனுக்கு நிகரான தெய்வம் மூவுலகிலும் இல்லை. பண்டு உலகின் எல்லைகளைக் கடந்து வளர்ந்த பேரொளிப் பிழம்பு தீயெனத்தக்க முடியையும், தண்மையான தாமரையெனத்தக்க அடியையும் கொண்ட சிவபபரம்பொருளேயாகும்.

## பாடல் 2

திருச்சிற்றம்பலம்

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவ்சிவ என்னச் சிவகதி தானே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

'சிவசிவ' என்னும் இணைமொழி மந்திரம் பாவநாசம், தேவநிலை, சிவலோகப் பெருவாழ்வு என்னும் நலங்களை உண்மைப் பக்தர்களுக்கு அளிக்கும், இம்மந்திரத்தை உச்சரிககாதவர்கள் தீவினையாளர்களே ஆவர்.

### பயிற்சி

(1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.

1. சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்கும் திருமுறை எது?
2. 'மந்திரம்' என்பதன் பொருளை விளக்குக.
3. "புவனங் கடந்தன்று பொன்னொளி .........." எனும் திருமந்திரப் பாடலடி விளக்கும் பொருளைத் தருக.
4. 'சிவ' மந்திரத்தை உச்சரிப்பதனால் நாம் பெறும் பேறுகள் எவை?

# (ஓ) மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

பன்னிரு சைவத்திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலே திருவாலவாயுடையார் தொடக்கம் நம்பியாண்டார் நம்பி வரையிலான பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இவர்களில் கபிலதேவநாயனார் என்னும் பெரியார் பாடிய அருமையான பிரபந்தம் 'மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை' என்னும் ஒரு வகை இலக்கியம் ஆகும். கபிலர் என்ற பெயரில் வாழ்ந்த சமயச் சிந்தனையாளர்களில் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் ஒருவர் "சாங்கிய காரிகை" என்ற நூலின் அடிப்படையில் சாங்கியம் என்னும் தரிசனத்தை விளக்கியவர் ஆவார். மற்றவர் அடியார் என்ற பொருள் தரும் 'தேவநாயனார்' என்னும் தொடரைக் கொண்ட விநாயக பக்தரான கபிலதேவநாயனார் ஆவார். இவர்கள் இருவரும் காலத்தாலும் கொள்கையாலும் வேறுபட்டவர்கள்.

மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை என்ற பிரபந்தம் விநாயகப் பெருமானைப் பற்றிய பக்தி இலக்கியமாகும். மூத்தநாயனார், மூத்த பிள்ளையார் என்ற தொடர்கள் சிவபிரானின் மூத்த பிள்ளை ஆகிய விநாயகர் என்ற கருத்தைத் தருகின்றன.

இருபது பாடல்கள் கொண்ட மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் நூலில் உள்ள விநாயக பக்தி ததும்பும் பாடல் "திருவாக்கும் செய்கருமம் ..........." எனத் தொடங்கும் வெண்பா ஆகும்.

*திருச்சிற்றம்பலம்*

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் –உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் கைகூப்புவர்தங் கை.**

***திருச்சிற்றம்பலம்***

**பொழிப்பு :**

மெய்யன்புள்ள மண்ணுலக மக்களுக்கு விநாயகப் பெருமான் செல்வப்பேறு, நற்காரிய சித்தி, வாக்குவன்மைச் சிறப்பு, தெய்வீக வடிவழகு என்பவற்றை ஈயும் கருணையை நினைந்து, விண்ணுலகத் தேவர்களும் அப்பெருமானைக் கைகூப்பி வணங்குவர்.

## பயிற்சி

*(1)* சுருக்கமான விடை தருக.

1. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை எத்தனையாம் திருமுறையில் அடங்கியுள்ளது?

2. மூத்த நாயனார் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?

3. விநாயகப் பெருமானை வழிபடுவதனால் நாம் பெறும் பயன்கள் எவை?

## (ஓ) பெரியபுராணம்

### பாடல் 1

பன்னிரண்டாந் திருமுறையாக விளங்குவது சேக்கிழார் குடியிற் பிறந்த அருண்மொழித்தேவர் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகும். இது ஆளுடைய நம்பி எனப்படும் சுந்தரர் வரலாற்றின் மூலம் சிவனடியார்களின் வரலாற்றைத் தொடர்பு புலப்படக்கூறுவதால் ஆளுடைய நம்பி புராணம் என்றும் கூறப்படும். மேலும், பிறர் செய்தற்கு அரிய செயல்களைச் செய்த 'பெரியர்' வரலாற்றைக் கூறலால் பெரிய புராணம் என்னும் பெயர் வழக்கையும் அது பெற்றுள்ளது. மேலும், சிவனடியார் வரலாற்றை கூறும் சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை, சம்பந்தர் திருவந்தாதி போன்ற இலக்கியங்களை விட விரிவாகக் கூறும் பெரிய வரலாற்றுக் காப்பியமாதலால் பெரியபுராணம் என்னும் பெயர் அந்நூலுக்குத் தகுதியும் பொருத்தமும் உடையதே ஆகும். **'உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்'** என்னும் தெய்வீக அசரீரி வாக்கை தொடக்கமாகக் கொண்ட பெருமையும் 'பெரிய புராணம்' என்ற நூற் பெயர் வழக்கிற்கு உகந்தது ஆகும்.

சேக்கிழார், காவிய மரபுக்கு இணங்க நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்னும் சிறப்பம்சங்களைப் பெரியபுராணத்தின் தொடக்கப் பாகத்தில் உள்ளடக்கியுள்ளார். **"தண்ணளி வெண்குடை......."** எனத் தொடங்கும் பாடல் இத் தொடக்கப் பாகத்தில் திருவாரூர், திருநகரச் சிறப்புப் கூறும் பகுதியில் உள்ளது.

*திருச்சிற்றம்பலம்*

**தண்ணளிவெண் குடைவேந்தன்**
**செயல்கண்டு தரியாது**
**மண்ணவர்கண் மழைபொழிந்தார்**
**வானவர்பூ மழை சொரிந்தார்**
**அண்ணலவன் கண்ணெதிரே**
**அணிவீதி மழவிடைமேல்**
**விண்ணவர்கள் தொழநின்றான்**
**வீதிவிடங்கப் பெருமான்.**

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

மநுநீதிகண்ட சோழனின் அபூர்வ நீதிச் செயலைக் கண்டு மக்கள் மனம் பொறாது கண்ணீர் பெருக்கினார்கள். தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். அப்போது, சிவபிரான் இடபாரூட ராகத் தேவர்கள் வணங்க, மநுநீதிகண்ட சோழனுக்கு வீதியிற் காட்சி வழங்கியருளினார்.

## பாடல் 2

திருத்தொண்டர் புராணம் போற்றும் சிவனடியார்களுள் பெரும்பாலானவர்கள் ஆண்கள். அவர்கள் பெயரின் இறுதியில் நாயன்மார் என்னும் சொல்லைச் சேர்த்து திருநாவுக்கரசு நாய னார், சேரமான் பெருமாள் நாயனார் என்ற முறையில் கூறுவது சைவசமய மரபு. இப்புராணம் போற்றும் சிவபக்திமிக்க பெண்கள் சிலரே ஆவர். இத்தகைய சிவபக்தி மிக்க பெண்கள் இரு பெரும் பிரிவுகளில் அடங்குவர். ஒரு பிரிவினர் குடும்பத்தலைவரின் சிவபக்திப் பணிகளுக்குத் துணை நின்றவர்கள். இளையான் குடிமாறநாயனாரின் மனைவி, சிறுத்தொண்டரின் மனைவி என்பவர்கள் இப்பிரிவினர்க்கு உதாரணமாவர். இரண்டாம் பிரிவினர், குடும்பத்தலைவர் பிற சமயத்தவராகவோ, உலகியல் நாட்டம் மிக்கவராகவோ, தேசீயக்கடமைக்காக உயிர் துறக்கவோ நேர்ந்தபோது, சைவசமய மலர்ச்சிக்குத் துணை புரிந்த, அருஞ் செயல்கள் புரிந்த பெண்மணிகள் ஆவர். மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார், திலகவதியார் ஆகியோர் இத்தகைய செயல்கள் புரிந்த பெண்களுக்கு உதாரணமாவர்.

இவர்களிலே இறைவனால் 'அம்மை' என அருள் பெருக அழைக்கப்பட்ட ஒரேயொரு பெரியபுராணப் பெண்மணி காரைக்காலம்மையார் ஆவர். இறைவன் கூறிய 'அம்மை' என்னும் தகுதிப் பெயர், ஊர்ப்பெயரோடு இணைந்து விடக் காரைக்காலம்மையார் என்ற பெயர் வழக்கு முதன்மைமிக்க நிலையான இலக்கிய வாழ்வு பெற்றுவிட்டது. புனிதவதி என்னும் இயற்பெயர் இரண்டாம் நிலையைப் பெற்றுவிட்டது.

பெருமதிப்போடும் பெரும்பக்தியோடும் உயர்வாகப் போற்றும் பெண் தொண்டரான இவர் கயிலைக்குச் சிவபிரான்பால் உருக்குலைந்த உடலோடும் உறுதி கலையாத உள்ளத்தோடும் சென்றபோது, என்ன வரம் வேண்டும் எனக் கயிலைநாதர் வினாவியபோது, 'அம்மையார்' வேண்டிய வரத்தின் சிறப்பம்சங்களைச் சேக்கிழார், "இறவாத இன்ப அன்பு .........." என்னும் பாடல் வடிவில் அருமையாகப் பாடியுள்ளார்.

*திருச்சிற்றம்பலம்*

**இறவாத இன்பவன்பு வேண்டிப்பின்**
**வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே(ல்)**
**உன்னை யென்றும்**
**மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான்**
**மகிழ்ந்து பாடி**
**அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ(ழ்)**
**இருக்க வென்றார்.**

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

அழிவில்லாத இன்பந்தரும் கருணை, பிறப்பில்லாநிலை அல்லது மறுபிறப்பில் ஈசனை மறவாத மனம், ஆனந்தக்கூத்தனின் திருவடிக்கீழ் பாடியமரும் பேறு என்னும் வரங்களைக் காரைக்கால் அம்மையார் அறக் கடலான சிவபிரானிடம் வேண்டிக் கொண்டார்.

## பயிற்சி

பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக.

1. ஆளுடைய நம்பி புராணம் என்ற பெயரினையும் பெறும் புராணம் எது?
2. திருவாரூர்த் திருநகரச் சிறப்பில் போற்றப்படும் அரசன் யார்?
3. இறைவனால் 'அம்மையே' எனச் சிறப்பாக அழைக்கப்பட்டவர் யார்? அவர் இறைவனிடம் வேண்டிய வரங்கள் யாவை?

# 11

# சைவ மெய்யியல்

## (அ) அறிமுகம்

பாரத நாட்டுச் சிந்தனைப் பாரம்பரியம் வேதத் தொகுப்புக் காலத்திற்கு முன்னரும், வேதத்தொகுப்புக் காலத்திலும், வேதத்தொகுப்புக் காலத்தின் பின்னரும் வாழ்ந்த இருடிகள், முனிவர்கள், ஞானிகள் எனப் பலவாறு சிறப்பித்துக் கூறப்படும் சிந்தனையாளர்களான சமயச்சான்றோரால் வித்திட்டு, நீர்ப்பாய்ச்சி வளர்க்கப்பட்ட தண்ணிழல் தரும் விண்ணுயர் விருட்சம் ஆகும். அளவையியல் வளர்த்த அறுவகைத் தரிசனங்கள் மூலமும், வழிபாட்டியல் பேணிய அறுவகைச் சமயங்கள் மூலமும் செழுமை பெற்ற இவ்விருட்சம் உலகியல் என்னும் வெய்யிற் கொடுமையைத் தாங்க இயலாத மக்களுக்கு இதந்தரும் குளிர்மை அளித்து வருகின்றது. இன்று சிவ வழிபாடு தொடர்பான சைவ மெய்யியல், விஷ்ணு வழிபாடு சார்பான வைணவ மெய்யியல், சக்தி உபாசனை பேணும் சாக்த மெய்யியல் என்னும் மூன்றும் இவ்விருட்சத்தின் முக்கிய கிளைகளாக விளங்குகின்றன.

சிவவழிபாட்டு முறைகளும், அவை தொடர்பான சைவ மெய்யியல் பிரிவுகளும் பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களால் வழங்கப்பட்டுள்ளன. இச் சிவவழிபாட்டு முறைகளும் அவை தொடர்பான மெய்யியற் பிரிவுகளும் விதந்து கூறும் முக்கிய உண்மைகளை உள்ளடக்கிய உன்னத கோட்பாடே மெய்கண்ட சந்தானமும் மெய்கண்ட தேவரும் அளவையியல் அடிப்படையில் வளர்த்த சைவ சித்தாந்தம் என்னும் சிந்தனை மரபு ஆகும். இதனை "வேதாந்தத் தெளிவாம்

சைவசித்தாந்தம்" என உமாபதிசிவம் சிவப்பிரகாசத்திலும், "நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே" எனவும் "சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்" எனவும் திருமூலர் திருமந்திரத்திலும் குறிப்பிட்டுள்ளனர்.

## பிரமாணங்கள் மூன்று

மெய்கண்ட சந்தானச் சிந்தனை மரபில் தமிழ்நாட்டில் வளர்ந்த, சைவ சித்தாந்தத்தைச் சீராகப் புரிந்துகொள்ள அளவையியல் விளக்கும் பிரமாணங்கள் அல்லது அளவைகள் பற்றிய அறிவுத் தேர்ச்சி அவசியம். சைவ சித்தாந்தச் சிந்தனை மரபைப் புரிந்துகொள்ளச் சிவஞானசித்தியார் என்ற நூலில் 'பிரமாணவியல்' என்னும் பிரிவில் விவரிக்கப்படும் பிரமாணங்கள் பற்றிய அறிவுத் தேர்ச்சி மிகவும் அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

### (1) காட்சியளவை

சைவசித்தாந்தச் சிந்தனை விளக்கத்திற்கு உதவும் அடிப்படை அளவைகள் பிரத்தியட்சப் பிரமாணம் என்னும் காட்சியளவை, அநுமானப் பிரமாணம் என்னும் கருதலளவை, ஆகமப் பிரமாணம் என்னும் நூலளவை ஆகிய மூன்றுமாம். ஒரு பொருளை அல்லது சம்பவத்தை அல்லது செயலைக் கண்ணாற் கண்டால் மாத்திரம் அதனை உண்மையென உறுதியாக நம்புவது அல்லது நிச்சயம் நிகழ்ந்தது என்று கூறுவது பிரத்தியட்சப் பிரமாணம் அல்லது காட்சியளவை எனப்படும். சுருங்கக்கூறின், கண்ணாற் கண்டதே மெய், கண்ணாற் காணாதது பொய் எனல் இதன் எளிய பொருள். ஆனால், கண்ணுக்குப் புலப்படும் பிழம்புள்ள பொருள்கள் மட்டுமே உண்மையில் உள்ள பொருள்கள் எனக் கூறுவது ஏற்கத்தக்க முடிவு ஆகாது.

ஒரு பொருளைப் போலக் காட்சி தரக்கூடிய போலிப் பொருள்களை உருவாக்கி நம் கண் முன்னர் காட்டி ஏமாற்றும் தந்திரங்கள் இன்றைய உலக வாழ்வில் மலிந்து காணப்படுகின்றன. மேலும், இன்பம், துன்பம், அன்பு, வெறுப்பு முதலிய உணர்வுகள் ஆகிய உருவத் திரட்சியில்லாத (பிழம்பில்) பொருள்களை ஏற்றுக்கொள்ளப் பிரத்தியட்சப் பிரமாணம் தடையாகின்றது. எனவே, சில சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்தரும் வலிமையுள்ளது பிரத்தியட்சப் பிரமாணம் எனக் கொள்ளுவதே பொருத்தம்.

## (2) கருதலளவை

ஒரு செயல் நிகழும்போது உண்டாகும் விளைவைக் கண்ட ஒருவர், பின்னர் யாதாயினுமொரு தடை காரணமாக அச்செயலைக் கண்ணாற் காண இயலாவிட்டாலும் அவ்விளை வைக் கண்டதும் அச்செயல் நிகழ்ந்துள்ளதாக ஊகிப்பது அநு மானப் பிரமாணம் அல்லது கருதல் அளவை எனப்படும். விறகு எரிக்கும்போது புகை எழுந்து பரவுதலைக் கண்ட ஒருவர், பின்னர் சுவர் போன்ற தடை காரணமாக விறகு எரித்தல் ஆகிய செயலைக் கண்ணாற் காணாத நிலையில், புகை பரவுதல் என்ற விளைவைக் கண்டு, விறகெரிக்கப்படும் செயலை ஊகித்தறிவது அனுமானப் பிரமாணத்திற்குரிய உதாரணமாகும். ஒரு சம்பவ அவதானிப்பின் மூலம் அறிந்துகொண்ட, காரணகாரியத் தொடர்பைப் பின்னர் பயன்படுத்திக் காரியத்திற்குக் காரணமான சம்பவத்தை ஊகித்தறிதலும் ஐயம் நீங்கலும் அநுமானப் பிரமாணத்தின் சாரமாகும். ஓர் அநுமானம் செய்வதற்குரிய உறுப்புக்கள் முறையாக அமையும் போதுதான் ஊகம் உண்மையாகும். அவ்வுறுப்புக்களில் ஒன்று குறையினும், அநுமானம் பொய்யாகிவிடும். இத்தகைய ஊகம் அநுமானப்போலி அல்லது போலி நியாயம் எனப்படும். உதாரணம் - விறகெரிப்பு இல்லாமல், புகை எழுந்துபரவல், கண்ணீர்ப்புகை என்பன.

## (3) நூலளவை

மெய்யறிவு மேம்பாடு, சிந்தனை வளம், அனுபவச் சிறப்பு, ஆலோசனை கூறும் தகைமை என்பன ஒருங்கமைந்த, தெய்வநிலை அடைந்தோர் என மதிக்கப்படும் உத்தமர்களின் நூல்கள் ஆகமப் பிரமாணம் எனப்படும். இறைவன் திருவருளுக்குப் பாத்திரமான ஞானச் செல்வர்களின் நூல்கள், பாடல்களில் இடம் பெறும் பொருளாழமுள்ள கூற்றுக்கள் ஆகமப்பிரமாணம், உரையளவை, நூலளவை என்று கூறத்தக்க தகுதியுடையவை ஆகும். **"ஏகம்சத்", "சத்தியம் வத", "ஒழுக்கம் விழுப்பம் தரும்", "எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்"** என்னும் கூற்றுக்கள் ஆகமப் பிரமாணம் என்று கூறத்தக்கவை ஆகும். ஆயின், ஞானமுதிர்ச்சி பெற்ற மேலோரின் கூற்றுக்களுக்கு விளக்கம் கூற முற்படும் பிறர், நூலாசிரியரின் உட்கிடையைப் புரிந்து கொள்ளாமல் தவறான கருத்தைக் கூறல் ஆகம மலைவு எனப்படும். உதாரணமாக 'ஏற்பது இகழ்ச்சி' என்னும் கூற்றில் உள்ளார்ந்து காணப்படும் "பிறர் கூறும் இகழ்ச்சி வார்த்தைகளும் ஏற்கத் தக்கவையே" என்னும் கருத்தைப் புரிந்து கொள்வோரே போற்றுதலையும் தூற்றுதலையும் சமமாக ஏற்கும் மனப்பக்குவம் ஞான நிலைக்கு அவசியம் என்ற சிந்தனையை விளங்கிக் கொள்ளுவர். இவ்வாறு பொருள் கொள்ளாமல் "பிறர்தரும் பொருள்களை ஏற்றுக் கொள்ளுதல் இழிவு" என உலகியல் நோக்கில் கருத்துக் கூறல் 'ஏற்பது இகழ்ச்சி' என்னும் கூற்றின் ஞானச் சிந்தனையை உணராத ஆகம மலைவு ஆகும்.

எனவே, காட்சியளவை, கருதலளவை, நூலளவை என்னும் மூன்று பிரமாணங்களையும் மேலே விளக்கியவாறு மலைவு இல்லாமல் நெறிமுறைகளுக்கு இணங்கப் பிரயோகித்தல் சைவசித்தாந்தச் சிந்தனைத் தெளிவிற்கு இன்றியமையாததாகும்.

## (இ) சற்காரியவாதம்

சைவசித்தாந்தக் கோட்பாட்டின் உயிர்நிலையாக விளங்குவது சற்காரியவாதம் ஆகும். உள்ளது இல்லது, இல்லாதது உள்ள தாகாது. உள்ளதிலிருந்து உள்ளதே தோன்றும், இல்லாத திலிருந்து உள்ளது தோன்றாது என்னும் நான்கு உண்மைக் கூற்றுக்களும் சற்காரியவாதத்தின் அங்கங்கள் ஆகும். பிரபஞ் சத்தின் உண்மைப் பொருளை விளங்கிக்கொள்ளச் சற்காரிய வாதம் துணைபுரியும். இறைவனின் முத்தொழில்களில் 'அழித்தல்' என்பது "பிரபஞ்சம் இல்லாது அற்றுப் போதல்" என்று மேம்போக்காக-மேலெழுந்தவாரியாகக் கூறப்படுவது வழக்கம். மெய்யுணர்வியல் நோக்கில் இது தவறான கருத்து ஆகும். காணப்படும் பொருள் ஆகிய பிரபஞ்சம் ஓர் உள்பொரு ளேயாம். ஊழி முடிவில் அது ஒடுங்கி மீண்டும் ஒடுக்கம் நீங்கித் தோற்றம் பெறும். அதாவது உள்பொருள் ஆகிய பிரபஞ்சம் இல்லாதது ஆகவில்லை. அது ஒடுக்கநிலை அடைகின்றது. சங்கார காலத்தில் பிரபஞ்சம் இல்லாதது ஆகிவிட்டால் அது மீண்டும் உள்ளது ஆகாது. அதாவது பிரபஞ்சம் சூனியத்திலிருந்து உண்டாவது இல்லை. எனவே, உள்ளதிலிருந்து உள்ளதே காரணகாரியத் தொடர்ச்சியாகத் தோன்றும் என்பதும் இல்லாததி லிருந்து உள்ளது தோன்றமாட்டாது என்பதும் பெறப்படும்.

## (ஈ) முப்பொருள்

அளவையியல் நெறிமுறைகள், சற்காரியவாதம் என்பவற்றின் அடிப்படையில் சைவசித்தாந்தக் கோட்பாடு பின்வருமாறு உலகப் பொருள்களை மூன்று பிரிவுகளில் அடக்குகின்றது.

1. வரையறை இல்லாத அறிவுடைய பொருள் - பதி
2. வரையறை உள்ள அறிவுடைய பொருள் - பசு
3. அறியும் இயல்பற்ற சடப் பொருள் - பாசம்

பதி, பசு, பாசம் என்னும் இச்சிந்தனைப் பொருள்கள் முறையே இறை, உயிர், தளை என்றும் கூறப்படும். அறிவு என்ற

அம்சத்தின் அடிப்படையில் இவற்றை முறையே சித்து, சிதசித்து, அசித்து என்றும் கூறுதல் மரபு. இம்முப்பொருள்களும் அநாதியான அதாவது தொடக்கம் முடிவு இல்லாத உள் பொருள்கள் என்பது சைவசித்தாந்தக் கோட்பாட்டின்அடிப்படை உண்மை ஆகும்.

## (1) பதி

இறை, பிரான், புகல், மன்(னன்), மருந்து என்னும் பொதுப் பெயர்கள் பதியைக் குறிக்கும் சொற்களாகச் சைவசித்தாந்த மரபில் இடம்பெறுகின்றன. மேலும், பதியைக் குறிக்கச் சங்கரன் சிவம், ஈசன் என்னும் தனிப்பெயர்களும் திருவருட்பயன், சிவஞானசித்தியார் போன்ற நூல்களில் வழங்கப்படுகின்றன.

### வரையறை

பதி என்பது குணம், குறி என்பன இல்லாத, உயிர்க்கு உணர்வாகிய, என்றுமுள்ள, ஏகமான, ஆனந்தமயமான பொருள் ஆகும். "பதி பரமே" எனச் சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த நூல் மிக மிகச் சுருக்கமாக வரையறை செய்துள்ளது. இவை அறிவுநெறி அல்லது ஞானமார்க்கம் சார்ந்த சிந்தனைகள் ஆகும்.

இத்தகைய சிந்தனைகள் கூறும் பரம்பொருளுக்கு அடியவர்கள் பற்பல குணங்களையும், மூன்று வகைத் திருமேனிகள், ஆயிரம் திருநாமங்கள் என்பவற்றை அன்பு நெறியின் அடிப்படையில் படைத்துக் கூறுதல் பக்தி மரபு. பின்வருவன பதிக்கு உரிய இயல்புகளாக விதந்து கூறப்படுகின்றன.

1. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் -மும்மலங்கள் இல்லாத சிறப்பு (பாசப்பிணிப்பு இன்மை)
2. இயல்பாகவே எதனையும் உணரும் தகைமை - ஐம்பொறிகளின் துணையில்லாமலும், மேலானவர் எனத்தக்க வேறு ஒருவரின் துணை இல்லாமலும் தாமாகவே அறியும் தகைமை (இயற்கையறிவு)

3. முற்றுமுணர்தல் - காலம், இடம் முதலிய எல்லைகளைக் கடந்து எல்லா விடயங்களையும் அறியும் தகைமை (முற்றறிவு)
4. முடிவில் ஆற்றலுடைமை - எல்லை காணமுடியாத செயலாற்றல் அமைந்திருத்தல் ( பேராற்றல் - அனந்தசக்தி)
5. தன்வயத்தன் ஆதல் - பிறபொருளின் அதிகாரத்திற்கு உட்படாதநிலை ( சுதந்திரம், பரத்துவம்)
6. தூய உடம்பினன் ஆதல் - தூய்மையின் வடிவம்
7. பேரருளுடைமை - கருணையின் வடிவம்
8. வரம்பில் இன்பமுடைமை - பேரின்ப வடிவம்

இவை எண்குணங்கள் எனத் தொகுத்துக் கூறப்படும்.

## முக்கியத்துவம்

பதியின் முக்கியத்துவம் அதன் தொழில்கள் மூலம் உணரப்படும். அதன் தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல் எனச் சுருங்கிய நோக்கில் மூன்றாகவும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என விரிந்த நோக்கில் ஐந்தாகவும் கூறல் மரபு. இவற்றை முறையே சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் எனவும், ஐந்தொழில்கள் அனைத்தையும் ஒருங்கே பஞ்சகிருத்தியம் எனவும் கூறல் வழக்கம். உயிர்களின் ஈடேற்றத்திற்காகச் செய்யப்படும் படைத்தல் என்னும் தொழிலில் அரும்பும் அருட்பண்பு பேரின்பப்பேறு உபகரித்தல் என்னும் அருளலில் பேரருள் வெளிப்பாடாக நிறைவு பெறுகின்றது. பதியின் முக்கியத்துவம் இதன் மூலம் புலப்படுகின்றது. பரம்பொருளான பதியின் பேரருள் வெளிப்பாடு எப்போதும், இடைவிடாது, பலபடிகளில் நிகழும் பஞ்சகிருத்தியத்தின் மூலம் தொடர் நிகழ்வாகக் காணப்படல் அம்முக்கியத்துவத்தின் தனிச்சிறப்பு ஆகும். இந்த ஐந்தொழில்களில் மறைத்தலைக் காத்தலிலும், அருளலை அழித்தலிலும் அடக்குதல் சுருக்க நோக்கினர் கொள்கை ஆகும்.

## (2) பசு

சைவசித்தாந்தம் விளக்கும் முப்பொருள்களில் இரண்டாவதாக அமைவது பசு என்னும் உள்பொருள். பசு என்ற சொல் பாசத்தால் கட்டுண்டது எனப் பொருள் தரும். உயிர், ஆன்மா என்னும் பொதுப் பெயர்களும், திண்டிறல், அறிவு, சதசத்து, உள்ளம், கள்ளத்தலைவர், வெற்றுயிர் என்னும் பிறவகைப் பெயர்களும் பசுவிற்குரிய நாமங்களாகச் சைவசித்தாந்த நூல்களில் ஆளப்படுகின்றன. பசு என்பது மலப்பிணிப்பு, அற்ப ஆற்றல், சிற்றறிவு, ஐந்து அவத்தைகள் என்பன உள்ள சுதந்திரச் செயல், எண்ணளவு என்பன இல்லாத, உடம்பு, மூச்சு என்பவற்றின் வேறான, உள்பொருள் அல்லது நித்தியப் பொருள் ஆகும். ஏகான்மக் கொள்கையைப் பேணும் வேதாந்தத்திலிருந்து வேறுபட்டுச் சைவசித்தாந்தம் ஆன்மாக்கள் எண்ணற்றவை என்ற சிந்தனையை விதந்து கூறுதல் இங்கு குறிப்பிடத்தகது.

பசுவின் இயல்புகளில் மிகமிக முக்கியமானது "சார்ந்ததன் வண்ணமாதல்" என்னும் சிறப்பியல்பு ஆகும். அது சத்து ஆகிய சிவத்தைச் சாரும்போது, சத்தின் தன்மையும் அசத்து ஆகிய மலங்களைச் சாரும்போது, அதாவது கன்மப் பயனுக்கு ஏற்ப அமையும் மாயாகாரியங்களான உடல் முதலியவற்றைப் பெற்று உலகியற் சார்பு அடையும்போது அசத்தின் தன்மையையும் பெறும் நிலைமாறும் இயல்புடையது என்பது 'சார்ந்ததன் வண்ணம்' என்ற தொடரின் கருத்து ஆகும். சுட்டு விரலைப் பெருவிரலோடு வளைத்துப் பொருத்தி ஏனைய மூன்று விரல்களும் தனித்து நிற்கும் 'சின்முத்திரை' மூலம் தட்சிணாமூர்த்தி முன்பு முனிவர் நால்வருக்கு உணர்த்திய உபதேசத்தின் உட்கருத்தும் இதுவே ஆகும். எனவே, பசுவைச் 'சதசத்து' என்று கூறல் சிறப்பு வழக்கு ஆகும்.

இத்தகைய பசு அல்லது ஆன்மாவுக்கு ஐந்து நிலைகள் உள்ளன. அவை நனவு நிலை, கனவு நிலை, உறக்க நிலை, பேருறக்க நிலை, உயிர்ப்பு அடக்க நிலை என்பனவாம். இவற்றை முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்றும் கூறுதல் வழக்கம். இந்த ஆன்ம நிலைகளே ஐந்து அவத்தைகள் என்றும் கூறப்படும்.

## (3) பாசம்

ஆன்மாக்களைக் கட்டுவது பாசம் ஆகும். கட்டு, தளை, மலம், பந்தம், அசத்து, அசித்து என்பன பாசத்தைக் குறிக்கும் பிறபெயர்கள் ஆகும். பதியைப் பற்றாமல் பசுவை மட்டும் பற்றும், சடத்தன்மையுள்ள அதாவது அறிவில்லாத நித்திய பொருளே பாசம் என வரையறை செய்யலாம். ஆணவம், கன்மம், மாயை என்பன பாசங்கள் அல்லது மலங்கள் ஆகும். இந்த மும்மலங்களும், மூல மலம், ஆகந்துக மலம் என்னும் இரு பெரும் பிரிவுகளில் அடங்கும். மூல மலம் என்னும் பிரிவில் ஆசு, பிணி, இருள், சகச மலம், செருக்கு என்னும் பல பெயர்களுள் ஆணவம் இடம்பெறுகின்றது. ஆகந்துக மலம் என்ற பிரிவில், வினை எனப்படும் கன்மம், "ஒன்று" என உமாபதிசிவம் கூறும் மாயை என்னும் இரண்டும் இடம்பெறுகின்றன. வேதாந்திகள் அறியாமையின் காரணம் மாயை என்று கூற, சைவசித்தாந்திகள் இருண்மலமான ஆணவமே "உணரும் பான்மை தெரியாத தன்மையின்" அதாவது அறியாமையின் காரணம் என்று வலியுறுத்துதல் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய வேறுபாடு ஆகும். மேலும், மாயா காரியங்களான உடல் (தநு), உறுப்பு (கரணம்), உலகு (புவனம்), உலகப் பொருள் நுகர்ச்சி(போகம்) என்பன விடிவிளக்குப் போல உயிர்களின் அறியாமையை நீக்க ஒரளவு துணைபுரிகின்றன எனச் சைவசித்தாந்திகள் மாயையின் பயனை வரையறை செய்தல் ஒரு முக்கிய சிந்தனையாகும்.

மும்மலங்களின் பிணிப்பு நீக்கமே பிறவாப் பெருவாழ்வு ஆகிய முத்திப்பேற்றுக்குரிய தகைமை ஆகும். இத்தகைமையை அடைய இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் மூன்று படிகளிலும் ஆன்மா தேறி பக்குவநிலை முதிர்ச்சி அடையவேண்டும். நல்வினை, தீவினைப் பயன்களில் விருப்போ, வெறுப்போ இல்லாமல் ஒரே தன்மையாகக் கருதும் மனப்பாங்கு இருவினையொப்பு எனலாம். மலம் தனது வலி அல்லது சக்தி தேய்ந்து அடங்கும் நிலையை அடைதல் மலபரிபாகம் எனப்படும். இறைவனின் திருவருட்சக்தி உயிரில் படிந்து அதனைத் தன்வயப்படுத்தல் சத்திநிபாதம் எனப்படும்.

மும்மல வலிநீக்கமே முத்திப் பேற்றுக்குரிய தகுதி என்னும் சிந்தனையை, திரிபுர தகனம் என்னும் சிவபிரானின் அருட் செயல் உருவக முறையில் விளக்குகின்றது. சைவ சித்தாந்த சிந்தனைகளின் ஊற்றுக்கண் ஆகிய திருமந்திரத்தில் திருமூலர்,

**அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்**
**முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறி வார்களே.**

என்று கூறுதல் கவனத்திற் கொள்ளற்குரியது.

## (உ) முத்தி

இறுதியாக, மும்மல நீக்கத்தின் விளைவான முத்தி பற்றிச் சைவசித்தாந்தக் கோட்பாட்டை நோக்குவோம். முத்தி என்ற சொல் விடுபடுதல், விடுதலை பெற்றநிலை இறைவனோடு 'இரண்டறக் கலத்தல்' முத்தி அல்லது வீடுபேறு என்பதன் சாரமாகும். இம் முத்தி நிலையில் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதை விளக்க, தாள், தலை என்னும் சொற்கள் தாடலை எனச் சேரும் நுட்பத்தை உதாரணமாகக் கொள்ளலாம். சொற்புணர்ச்சிக்கு முன் தாள், தலை என இருவேறு சொற்களாகக் கருதப்பட்ட பெயர்கள் சொற்புணர்ச்சியை அடுத்து இரு வேறு சொற்கள் என்ற தன்மை அற்று 'தாடலை' என ஒரு சொல் நீர்மை பெற்றன. எனினும் 'தாடலை' என்பது ஒரு பொருளுணர்த்தும் ஒரு சொல் ஆகாது. இது போல முத்திநிலையில் பசுவும் பதியும் இருவேறு பொருள்களும் அல்ல, ஒரேயொரு பொருளும் அல்ல. இன்பமயம் என்னும் ஒரு நிலையை எய்தி வேறுபாடு புலப்படாது காணப்படுகின்றன. இந்நிலையே அத்துவிதம், அத்துவிதமுத்தி என்று கூறப்படும். இதனையே,

"ஏகம் எனக் கொள்"

என்கிறார் உமாபதிசிவம். முத்திக்குரிய வழிமுறைகளாகச் சைவ சித்தாந்தமானது சைவ நாற்பாதங்கள் முதலான வழி முறைகளைக் குறிப்பிடுகின்றது.

## பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என யார் குறிப்பிட்டுள்ளார்?

2. சைவ சித்தாந்த சிந்தனை விளக்கத்திற்கு உதவும் அடிப்படை அளவை (பிரமாணங்) கள் எவை?

3. சற்காரிய வாதத்தின் அங்கங்களைக் குறிப்பிடுக.

4. முப்பொருள்களும் எவை?

5. முத்தி என்றால் என்ன?
முத்திக்குரிய வழிமுறைகளைக் குறிப்பிடுக

# 12

# சமய இலக்கியம்

## (அ) பெரியபுராணம்

### (1) சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும்

சைவ சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார், நால்வகை மார்க்கங்களிலே சகமார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்தவராவர். சகமார்க்கம் என்பது தோழமை நெறியைக் குறிக்கும். சுந்தரர் சிவபிரானைத் தோழராகப் பெற்று, **தம்பிரான் தோழர்** என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். மேலும், அவரது காலத்தில் வாழ்ந்த சிவபக்தரான சேரமான் பெருமாள் மன்னரின் தோழமையைப் பெற்று **சேரமான் தோழர்** என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார்.

சேரமான் பெருமாளுக்குப் **பெருமாக்கோதையார்** என்ற பெயருமுண்டு. இளமையில் அரசபோகங்களை உதறித் தள்ளிவிட்டுத் திருவஞ்சைக்களத்திலே சிவதொண்டுகள் செய்துகொண்டிருந்தார். மீண்டும் அரச பதவியை ஏற்குமாறு அமைச்சர்கள் வேண்டினர். அவரும் மறுக்கமுடியாதவராய் இறைவன் அருளை வேண்டி நின்றார். இறைவன் அவருக்கு உயிர்களெல்லாம் நினைப்பதும், பேசுவதுமாகிய எல்லாம் அறியும் அறிவோடு, அரசர்க்கு வேண்டிய தகுதி யாவும் கைவரும்படி அருளினார். சேரமான் பெருமாளும் அரச பதவியை ஏற்று முடிசூடினார்.

அரசர் தினமும் நடராஜமூர்த்தியைப் பூசித்து வருபவர். பூசை முடிவில் அதன் பயனாக, எம்பெருமான் பாதச் சிலம்பொலியை அவருக்குக் கேட்பிப்பது வழக்கம். ஒருநாள் சிலம்பொலி கேட்பிக்கத் தாமதமாயிற்று. எனவே அவர் தமது பூசையில் ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டதென எண்ணினார். அதற்குப் பரிகாரமாக உடை வாளை எடுத்துத் தமது மார்பிலே

குத்த முயன்றார். உடனே சிலம்பொலி கேட்டது. வாளை எறிந்தார். "தில்லையில் எம் கூத்தைச் சுந்தரன் தரிசித்துத் தமிழாற் பாடினான், அதைக் கேட்டிருந்தோம், உன் பூசைக்கு அருள்புரிய வரத் தாமதம் நேர்ந்தது" என்றார் சிவபெருமான். இதன் மூலம் சேரமான் பெருமாளுக்குச் சுந்தரரோடு நட்புப் பூணும் வகையை நினைவூட்டியருளினார் கூத்தப் பெருமான்.

அப்போதே சிதம்பர தரிசனத்தோடு சுந்தரரையும் தரிசிக்கச் சித்தங்கொண்டார். நன்னாள் குறித்துப் பரிவாரத்தோடு பயணம் புறப்பட்டுப் பல தலங்களையும் தரிசித்து வந்து தில்லையில் நடராசப் பெருமானைப் பணிந்து, "பொன்வண்ணத் தந்தாதி" பாடிச் சிலம்பொலியும் கேட்டார். சுந்தரர் திருவாரூரில் உள்ளார் என அறிந்து அங்கு சென்றார். நம்பியாரூரரும் ஊரவரும் அடியவரும் எதிர்கொண்டழைக்க வந்தார்கள். சேரமான் பெருமாளும், தமிழின் பெருமாளும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவினர். இருவரும் கோயிலை அடைந்து வணங்கினர். பெருமாள் "திருவாரூர் நான்மணி மாலை" பாடித் துதித்தார்.

சில நாள் சுவாமி தரிசனம் செய்து கொண்டு பரவையார் மாளிகையில் சுந்தரமூர்த்தி நாயனாருடன் விருந்தினராய் அமர்ந்திருந்தார். பின் இருவருமாகப் பலதலங்களுக்கு யாத்திரை செய்து மதுரை வந்தனர். அவர்களின் வரவறிந்த பாண்டிய மன்னரும், அவர் மகளை மணந்திருந்த சோழ மன்னரும் அதிவிமரிசையாக வரவேற்று வணங்கித் திருவாலவாய்ப் பெருமானை வழிபடச் செய்து அரண்மனையில் விருந்தினராகப் போற்றினர். அந்நாளில் மூவேந்தரும் சேர்ந்துவரப் பாண்டி நாட்டுத் தலங்களைப் பணிந்தனர்.

பின், ஆரூரை அடைந்து சுந்தரமூர்த்தி நாயனாரைச் சேரமான் பெருமாள் அழைத்துக் கொண்டு சேரநாடு சென்றார். அவர்களின் வருகையை அறிந்த மந்திரி பிரதானிகள் நகரை அலங்கரித்து, அரச வரிசைகளோடு சென்று வரவேற்று வணங்கினர். தோழர் இருவரும் சென்று திருவஞ்சைக்களத்துப் பெருமானை வணங்கி அருள்பெற்று மீண்டனர்.

அதன் பின் அலங்கரித்த பிடி யானை மீது சுந்தரமூர்த்தி நாயனாரை ஏறி அமரச் செய்து, அரசர் பின்னே ஏறி இருந்து இரு கையிலும் இரு சாமரை ஏந்திப் பணி செய்து பவனியாக அரண்மனைக்கு அழைத்து வந்தார். அரசர் அமரும் சிம்மாசனத்திலே சுந்தரரை அமரச் செய்து பாதங்களைப் பணிந்தார். பணியாளர் பூசனைப் பொருட்களை எடுத்துவர, அரசர் பாத பூசை செய்யத் தொடங்கினார். முதலில் அவருடைய பாதங்களைத் தம் கையினாலே பற்றி நீர் வார்த்து விளக்க முயன்றார். சுந்தரர் "பாதங்களைப் பின்னே வாங்கி இப்படி நீர் செய்தல் தகாது" என்றார். அரசரோ "சுவாமி நான் அன்பினாலே செய்யும் பூசனைகளை மறுக்காது ஏற்றருளுக" என வேண்டுதல் செய்து பூசித்தார். அளவற்ற அன்புக்கும் அரச திருவுக்கும் ஏற்ற பெரும் பூசை புரிந்து விருந்தளித்து இன்புற்றிருந்தனர்.

சிலநாள் கழிந்தபின் சுந்தரர் அரசரிடம் விடை பெற்று ஆரூருக்கு மீண்டார். பின்னும் சில நாள் கழியத் திருப்புக் கொளியூரில் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டுக் கொடுத்து, கொடுங்கோளூராகிய தலைநகரை அணுகினார். இச்சந்தர்ப்பத்திற் சுந்தரமூர்த்தி நாயனாரின் சிவம் நிறை திருக்கோலத்தை, சேக்கிழார் பாடிய பெரியபுராணப் பகுதியிலிருந்து படித்து அறிந்து கொள்வோம்.

### சிவபோக விளைவு

1. படியில் நீடும் பத்திமுதல்
        அன்புநீரில் பணைத் தோங்கி
    வடிவு நம்பி யாரூரர்
        செம்பொன் மேனி வனப்பாகக்
    கடிய வெய்ய இருவினையின்
        களைகட் டெழுந்து கதிர்பரப்பி
    முடிவிலாக சிவபோகம்
        முதிர்ந்து முறுகி விளைந்ததால்.

## பொழிப்பு

ஒப்பில்லாததாய் நிலைத்து ஓங்கும் பக்தியாகிய வித்தானது, அன்பென்னும் நீரைப் பெற்று, பூரித்து நிறைந்து (முளைத்து) தன்வடிவம் பெற்று, நம்பியாரூரரது செம்பொன் போன்ற மேனியின் வனப்பாய் அமைந்து, கடுமையும் கொடுமையுமாயுள்ள நல்வினை தீவினை ஆகிய களைகளை நீக்கி வளர்ந்து, கதிரீன்று விரிந்து என்றும் அழிவில்லாத சிவபோக (சிவானந்த)மாக முற்றிச் செறிவுடையதாக விளைந்து மணியானது.

## பதவிளக்கம்

படிஇல் – ஒப்பற்ற. முதல் – வித்து. பணைத்து – பூரித்து. ஓங்கி – முளைத்து. வடிவு – நெற்பயிராகிய தன்னுருவம். வனப்பு– அழகு. கடிய – வலியுடைய. வெய்ய– கொடுமையுள்ள. களை கட்டு – களைப்புல்லை நீக்கி. எழுந்து – வளர்ந்து. கதிர்பரப்பி – பொத்தியான நிலை நீங்கி விரிந்து. சிவபோகம் – சிவபோகமாகிய பேரானந்தப் பேறு. முதிர்ந்து முறுகி விளைந்தது– பாலாகிய பருவம் கடந்து முதிர்ந்து செறிந்து அரிசியாக (நெல்மணியாக) விளைந்தது. அதாவது சுந்தரர் சிவபோக விளைவாக விளங்கினர் என்பதாம்.

## கதைத் தொடர்பு

சுந்தரரின் வரவுகண்ட அடியார்களும் நகரமாந்தரும் அரசரிடம் சென்று அறிவித்தனர். அறிவித்தவர்களுக்கு அரசர் ஆனந்தமிகுதியால் பொற்காசுகளும் நவமணியும் பட்டும் பரிசளித்தார்.

## அரசரின் அகமகிழ்ச்சியும் சொல்லும் செயலும்

2. செய்வதொன்றும் அறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்தென்
ஐயன் அணைந்தான் எனைஆளும்
அண்ணல் அணைந்தான் ஆரூரின்
சைவன் அணைந்தான் என்துணையாம்
தலைவன் அணைந்தான் தரணிஎலாம்
உய்ய அணைந்தான் அணைந்தானென்(று)
ஓகை முரசஞ் சாற்றுவித்தார்.

### பொழிப்பு

(ஆரூரர் வரவு கேட்ட) அரசர் மேலே செய்யவேண்டியது எது என்று அறியாமல், மிகக் களிப்பு நிறைந்தவரானர். என்னப்பன் வந்தான். என்னை ஆண்டுகொண்ட பெருமான் வந்தான். திருவாரூரில் வாழும் சிவசம்பந்தன் வந்தான். என் தோழனாகிய நாயகன் வந்தான். உலகமெல்லாம் உய்ய வழிகாட்ட அவதரித்த குருநாதன் வந்தான் என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் மங்கல முரசை அடித்து நகரத்தவர் அறியப் பிரசித்தஞ் செய்வித்தார்.

### பத விளக்கம்

ஆரூரர் வரவு கேட்டதை ஆனந்தத் தேனாக அருந்தினார். களிகூர்ந்து - களிப்பு மிகப் பெற்றார். ஐயன், அண்ணல், சைவன், தலைவன் என்பன சுந்தரரைக் குறிப்பன. சேரமான் தம் தோழனாரைத் தந்தையாகவும், தெய்வமாகவும், சிவசம்பத்துடைய வராகவும், நாயகனாகவும், உலகுக்கே குரு ஆகவும் கருதிப் போற்றினார். நகர மாந்தருக்கு அவரது நல்வரவை அறிவித்து வரவேற்கச் சித்தமாகுமாறு பறை முழக்கிப் பிரசித்தம் செய்வித்தார். முரசம் — மங்கல முரசு.

### கதைத் தொடர்பு

முரசறையக் கேட்ட அமைச்சர், அதிகாரிகள், அடியார்கள், நகரத்தார் நகர வீதிகளை விழாவணி விளங்க அலங்கரித்தனர். அரசர் பட்டத்து யானை மீதமர்ந்து, பரிசனம் சூழவந்து நகர எல்லையிலே எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார்.

## இணைந்த தோழர் இருவரின் இயல்பும் செயலும்

3. மலைநாட்(டு) எல்லை யுட்புகுத
 வந்த வன்தொண்டரை வரையில்
சிலைநாட் டியவெல் கொடித்தானைச்
 சேரர் பெருமா(ன்) எதிர் சென்று
தலைநாட் கமலப் போதனைய
 சரணம் பணியத், தாவில் பல
கலைநாட் டமுத வாரூரர்
 தாமும் தொழுது கலந்தனரால்.

## பொழிப்பு

மலைநாட்டுக்கு வந்த சுந்தரரைச் சேரமான் எதிர்கொண்டு சென்று, அன்றலர்நத செந்தாமரை மலர் போன்ற பாதங்களிலே வணங்குதலும், குற்றமற்ற பல கலைஞான அமுதத்தை வளர்க்கும் சுந்தரரும் அரசரெதிரே கைதொழுது அவருடன் கலப்புற்றார்.

## பத விளக்கம்

வரை ...... பெருமான் - இமயமலையிலே தங்கள் கொடியின் சின்னமான வில்லை நாட்டிய வெற்றி மிக்க சேனையுடைய நெடுஞ்சேரலாதன் பரம்பரையில் பிறந்த சேரமான் பெருமாள், தலை .... போது - அன்றலர்ந்த தாமரை மலர். சரணம் - பாதம். கலை அமுதம் நாட்டும் - பல கலைகளாகிய அமுதத்தை நிலைநிறுத்தும்.

### ஒன்றாந் தன்மையர்

4. சிந்தை மகிழுஞ் சேரலனார்
திருவாரூர(ர்) எனுமிவர்கள்
தந்தம் மணிமேனி கள் வேறா(ம்)
எனினு மொன்றாந் தன்மையராய்
முந்த வெழுங் காதலிற் றொழுது
முயங்கி யுதியர் முதல்வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச்
செல்வம் வினவி இன்புற்றார்.

## பொழிப்பு

(தாமிருவரும் இணைந்தமையால் ) உள்ளம் மகிழும் சேரர் பெருமானும் நம்பியாரூரரும் ஆகியவர்கள், தங்கள் அழகிய திருமேனிகளால் வேறுவேறாய் இருப்பினும், உள்ளத்து அன்பினால் இணைந்த ஒருவரேயாய், முற்பட்டெழுகின்ற அன்பினாலே, தொழுது ஆரத் தழுவினார்கள். பின் சேரமான் எம்பெருமான் வீற்றிருக்கும் திருவாரூரது அருட் செல்வத்தைக் கேட்டு மகிழ்ந்தார்.

## கதைத் தொடர்பு

இருவரும் தூல உடம்பால் இருவராகத் தோன்றினும், உயிரும் உணர்வும் உள்ளமும் ஒன்றிய சிவசிந்தையும் அன்பும்

உடையவரானமையால் ஒன்றாய் ஒருவரேயாயினர். நண்பர்கள் சந்திக்கும் போது சுகம் விசாரிப்பது போல, இவர்கள் இறைவனின், திருவருட் செல்வ விலாசத்தையே வினாவுதல் நோக்கலாம்.

### சேரமான் செய்த உபசாரம்

5. ஒருவ ரொருவ ரிற்கலந்து
குறைபா டின்றி உயர்காதல்
இருவர் நண்பின் செயல்கண்ட
இரண்டு திறத்து மாந்தர்களும்
பெருகு மகிழ்ச்சி கலந்தார்த்தார்
பெருமாள் தமிழின் பெருமானை
வருகை வரையின் மிசையேற்றித்
தாம்பின் மதிவெண் குடைகவித்தார்.

### பொழிப்பு

இருவரும் ஒருவர் உள்ளத்தில் மற்றவர் கலந்திருந்து குறைவின்றி வளரும் உயர் சிவக்காதலால் அவர்கள் நட்பினாலே செய்வனவற்றைக் கண்ட இருவர் பாங்கிலுமுள்ள மக்கள் பெருமகிழ்ச்சி பொங்கச் சேர்ந்து, 'அர அர' என ஆரவாரித்தனர். சேரமான் பெருமாள் தமிழின் பெருமாளாகிய சுந்தரரைத் தாம் ஏறிவந்த பட்டத்து யானையிலே ஏற்றித் தாம் பின்னாலிருந்து சந்திரவட்டக் குடையை ஏந்திப் பணிபுரிந்து அழைத்துச் சென்றார்.

### பத விளக்கம்

குறைபாடின்றி உயர்காதல் - திருக்கோவை காட்டும் குறையாமலே வளரும் சிவ பத்தியாகிய காதல். இரண்டு திறத்து மாந்தர் - சுந்தரர், சேரமான் ஆகிய இருவர் பாங்கிலும் வந்த பரிசனர், அடியார். கை வரை- கையுள்ள மலை- யானை. மதிவெண்குடை–அரசர்க்குரிய சந்திரவட்டக் குடை - கொற்றக் குடை. கவித்தல் - தலைமீது நிழல் தரக் கவித்துப் பிடித்தல். அதனாலே கவிகை எனவும் பெயர் பெறுவது குடை.

### கதைத் தொடர்

இவ்வாறு அழைத்துக் கொண்டு அரண்மனை வாயிலை அடைந்தனர். அங்கே,

## இருவரும் அரசவை புகல்

6. தூநறு மலர்தரளம் பொரி
தூவிமுன் இருபுடை யின்கணும்
நான்மறை முனிவர்கள் மங்கல
நாமநன் மொழிகள் விளம்பிட
மேல்நிறை நிழல்செய வெண்குடை
வீசிய கவரி மருங்குற
வானவர் தலைவரும் நண்பரும்
மாளிகை நடுவு புகுந்தனர்.

### பொழிப்பு

(அரண்மனை வாயிலில் தோழர்கள் வருதலும்) தூய்மையான நறுமண மலர்களும் முத்தும் நெற்பொரியும் ஆகியவற்றை அவர்கள் முன்னும் இருமருங்கிலும் சொரிந்து, நால்வேதங்களிலும் வல்ல முனிவர்கள் மங்கல வாழ்த்துகள் கூறினர், மேலும், வெண்கொற்றக் குடை நிழல் செய்ய, வீசுகின்ற சாமரைகள் இரு பக்கத்திலும் அசைய, சேரமானும் தோழராகிய சுந்தரரும் அவையின் நடுவே வந்த சேர்ந்தனர்.

### பத விளக்கம்

தரளம் – முத்து. இருபுடை – இருபக்கம். மறை முனிவர் – வேதியர். மங்கல நாமம் –வாழ்த்துரை. கவரி – சாமரை. வானவர் தலைவர் – சேரமன்னர் குலத்தலைவர். சேரருக்கு வானவர் என்பது மறுபெயர்.

## மணிநிதி வழங்கல்

7. அரியணை யதனில் விளங்கிட
அடல்மழ விடையென நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட
மலையர்கள் தலைவர் பணிந்துபின்
உரிமைநல் வினைகள் புரிந்தன
உரைமுடிவிலவென முன்செய்து
பரிசன(ம்) மன(ம்)மகி ழும்படி
பலபட மணிநிதி சிந்தினர்.

### பொழிப்பு

சிம்மாசனத்தின் மீது பொலிவுற, வலிய இளைய இடபம் போலச் சுந்தரரைப் பல நிற மலர் மெத்தையிலே வீற்றிருக்கச் செய்து சேரமான் வணங்கிய பின், உரிமையோடு நன்கு செய்த பூசைகள் சொல்லிலே அடங்காதெனும்படி, சந்நிதியிலே செய்து, மேலும், பரிசனராக வந்தவர்கள் யாவரும் மனம் மகிழும்படியாகப் பலவாறு மணியும் பொன்னும் பரிசளித்தார்.

### பத விளக்கம்

அரி அணை - சிங்காசனம். அடல் - வலி. மழ - இளமை. விடை- இடபம். அமளி - மெத்தை. உரிமை நல்வினைகள் - சிவனடியாருக்குச் செய்யவேண்டிய உரிமையான பூசை வழி பாடுகள். உரை முடிவு இல - சொல்லில் அடங்கா. பரிசனம் - அடியார் கூட்டத்தினர்.

### கதைத் தொடர்பு

இவ்வாறு இணைந்திருந்து, இருவரும் சேர நாட்டுச் சிவதலங்களையும் பணிந்து, மீண்டு வந்து நகரிலே தங்கினர். ஒரு நாள் சேரமான் சிவபூசை செய்துகொண்டிருக்க, சுந்தரர் திருவஞ்சைக்களத்துப் பெருமானை வழிபடச் சென்றுவிட்டார். அங்கே **"தலைக்குத் தலை மாலை"** என்ற பதிகம் பாடி தம்மை மீட்டருள வேண்டினார். அதற்குச் செவிசாய்த்தார் சிவபெருமான்.

### கயிலை நாயகன் ஆணை

8. மன்ற லந்தரு மிடைந்தபூங்
கயிலையில் மலைவல்லி உடன்கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம்
வீற்றிருந் தருளிய பொழுதின்கண்
ஒன்று சிந்தைநம் ஊரனை
உம்பர்வெள் ளானையின் உடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாருமென்(று)
அயன்முதல் றேவர்கட் கருள்செய்தான்.

## பொழிப்பு

நறுமண மலர் மரங்கள் செறிந்த அழகிய, கயிலாயத்தில் மலைமகளான பார்வதியோடு கூடி, வெற்றியும் வெண்மையுமுள்ள இடப வாகனராகிய சிவபிரான் வீற்றிருந்தருளும்போது, 'நீவிர் சென்று ஒருமை உள்ளமுடைய நம் ஆரூரனைத் தெய்வ யானைமீது உடனே ஏற்றிக்கொண்டு வருவீராக' என்று பிரமா முதலிய தேவர்களுக்குப் பணித்தருளினார்.

## பத விளக்கம்

மன்றல் - நறுமணம். தரு -மரம். மிடைந்த- செறிந்த. பூ - அழகிய. மலைவல்லி - மலைமகள், கொடிபோன்றவள். வென்றி - வெற்றி. விடை - இடபம். விடைப் பாகர் - எருதூர்பவர். ஒன்று சிந்தை - சிவனடியே சிந்திக்கும் உள்ளம். ஊரன் - சுந்தரர். உம்பர் - தேவர். வெள்ளானை - வெண்ணிறமான யானை; அயிராவணம் என்பது.

## கதைத் தொடர்பு

"உடனே சென்று ஊரனை யா(ஆ)னையில் ஏற்றிக்கொண்டு வாரும்" எனப் பணித்தார் சிவபெருமான். தேவர்களும் அப்பணியை ஏற்று, ஆனையையும் கொண்டு திருவஞ்சைக்களக் கோயிலில் வந்து, கால் நிலம் பட வலங் கொண்டு, சுந்தரர் வரவை எதிர்பார்த்து வாயிலில் நின்றனர்.

## இறைவனின் ஆணையை ஏற்றல்

9. தேவர் தம்குழாம் நெருங்கிய
வாய்தலில் திருநாவ லூரர்தம்
காவல் மன்னரும் புறப்பட
எதிர்கொண்டு கயிலைவீற் றிருக்கின்ற
பூவ லம்புதண் புனற்சடை
முடியவர் அருள்இப்பாடு எனப் போற்றி
ஏவல் என்றபின் செய்வதொன்(று)
இலாதவர் பணிந்தெழுந் தெதிரேற்றார்.

## பொழிப்பு

(ஆணையோடு) தேவர்களது கூட்டம் நெருங்கியுள்ள கோயில் வாசலிலே (தரிசனம் முடித்த) திருநாவலூரின் காவல் மன்னவரான சுந்தரர் வெளிவருதலும் (தேவர்கள்) அவரை எதிர்கொண்டு வணங்கி, 'கயிலையிலே வீற்றிருக்கும் பூக்களை அலைக்கின்ற குளிர்ந்த கங்கை நீர் தங்கிய சடைமுடியரான சிவபிரானது திருவருள் இதுவாகும். 'என்று கூறுதலும், சுந்தரர் பெருமானைப் போற்றிசெய்து 'இது இறைவன் ஆணை' என்பதால் அதன்மேல் வேறெண்ணமும் செயலும் இல்லாதவராய், வணங்கி எழுந்து இறைவனின் ஆணையை ஏற்று, செல்லத் துணிந்தார்.

## பத விளக்கம்

குழாம் - கூட்டம். திருநாவலூரரார்க்குக் காவலராகிய மன்னர் சுந்தரமூர்த்தி நாயனார். புறப்பட - வெளியே வர. புனற்சடை முடியவர் - கங்கைநீர் சடையிலுள்ள சிவன். இப்பாடு - இவ்வாறுள்ளது. சிவபிரானது திருவுள்ளக் கருத்தின் படியே சிந்தையும் சொல்லும் செயலும் பொருந்த வாழ்பவர். சுந்தரர் ஆதலால் ஆணையை ஏற்றார்.

### வெள்ளானை மீது ஏறிச்செல்லல்

10. ஏற்ற தொண்டரை அண்டர்வெள்
ளானையின் எதிர்வலங் கொண்டேற்ற
நாற்ற டங்கடல் முழக்கென
ஐவகை நாதம் மீதெழுந்தார்ப்பப்
போற்றி வானவர் பூமழை
பொழிந்திடப் போதுவார் உயிரெல்லாம்
சாற்று மாற்றங்கள் உணர்பெருந்
துணைவரை மனத்தினிற் கொடுசார்ந்தார்.

## பொழிப்பு

உடன்பட்ட சுந்தரரைத் தேவர்கள் வலம் வந்து வணங்கி, வெள்ளையானை மீது ஏற்றுதலும், நாலாதிசையிலுமுள்ள கடலின்

ஒலி போலப் பஞ்ச துந்துபிகளின் ஓசை மிக எழுந்து ஒலிக்கவும், தேவர்கள் போற்றி செய்து மலர்மழை சொரியவும், (கயிலாயம் நோக்கிச்) செல்பவராகிய சுந்தரர், எல்லா உயிர்களும் பேசும் வார்த்தைகளை எல்லாம் உணரவல்ல பெரிய நண்பரான சேரமானை மாத்திரம் தம்முள் நினைந்தவாறு செல்வாராயினர்.

## பத விளக்கம்

ஏற்ற - உடன்பட்ட. அண்டர் - தேவர். நால்+தடம் + கடல்- - நாலு திசையிலுமுள்ள பெரிய கடல். முழக்கு - ஆரவார ஒலி. ஐவகை - நாதம் தேவர்கள் வாசிக்கும் ஐந்து வகைத் துந்துபி வாத்தியம் பஞ்ச துந்துபி. சேரமான் பெருமானுக்குக் கழறிற்றறிவார் என்பதும் ஒரு நாமம். இறையருளால் இவர் எவ்வுயிரும் எண்ணுவதும் பேசுவதும் அறியவல்லவர். சாற்றும் மாற்றம் - பேசும் பேச்சு.

பெருந்துணைவியர் இருவர் இருந்தபோதும் அவர்களை நினைந்திலர், மறந்தேவிட்டார். பெருந் துணைவர் ஒருவரையே நினைந்தார். சிவனடியார் உறவையே சிவனடியார் வேண்டுவர்; பிற வேண்டார்.

## கதைத் தொடர்பு

சுந்தரருடைய திருவுள்ளக் குறிப்புச் சேரமான் பெருமாளின் சிந்தையில் உறைத்தது. சுந்தரர் கயிலை செல்வதை உணர்ந்தார். உடனே, அயலில் நின்ற குதிரைமேல் ஏறித் திருவஞ்சைக்களம் சென்றார். சுந்தரர் வான்வழியில் வட கயிலை செல்வதைக் கண்டார்.

**சேரமானின் குதிரை சுந்தரரின் யானையை வலம் வரல்**

11. விட்ட வெம்பரிச் செவியினிற்
புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திர
மோதலி னிருவிசும் பெழப்பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன்
றொண்டர்மேல் கொண்டமா தங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு
சென்றது மற்றதன் முன்னாக.

**பொழிப்பு**

தாம் ஏறிச்சென்ற வேகமான குதிரையின் செவியிலே பூமியில் முதன்மை பெற்ற சேரமான் பெருமாள் உபதேச விதிப் படி தமக்கு இட்டமாகிய சிவ மூலமந்திரத்தை (பஞ்சாட்சரத்தை) உபதேசித்த காரணத்தால், அக்குதிரையும் பெரிய ஆகாயத்தில் மேலாகப் பாய்ந்தெழுந்து, தேன் துளிக்கும் குளிர்ந்த மாலையணிந்த சுந்தரரைச் சுமந்து செல்லுகின்ற வெள்ளானையை அணுகிப் போய், அதனை வலம் வந்து, அதற்கு முன்னாகச் சேவித்துச் சென்றது.

**பத விளக்கம்**

சேர சோழ பாண்டியர் மூவர் என எண்ணும் போது முன்னிற்பவர் சேரர். பரி - குதிரை. மட்டு - தேன். தெரியல்- மாலை. வன்தொண்டர்- சுந்தரர். மாதங்கம் - ஆனை. முட்ட எய்தி - கிட்டிச் சென்று.

தோழர் இருவரும் நாற்பாதத்துள் ஞானத்தில் யோகபாதம் நடந்து காட்டியவர்கள். யோகியர் சுவாச ஓட்டத்தை யானை, குதிரை நடையென்றே கூறுவர். அவ்வகையில் தோழர் யானை

குதிரைமேல் கயிலை சென்றனர். நாயன்மாருள்ளே பெருமிழலைக்குறும்ப நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரையே தம் குருவாக மானசீகமாக வழிபட்டவர். யோகியாகிய அவர், நாளை சுந்தரர் கயிலை செல்வார் என்பதை அகக் காட்சியில் கண்டார். அவர் பிரிந்தபின் இவ்வுலக வாழ்வு வேண்டாதவராய் முதல் நாளே தம் உயிரை யோக வழியால் உடல் நீத்துக் கயிலை அடைந்தார் என்பதும் திருமூலநாயனார் வாழ்வும் இங்கு நோக்கத்தகும்.

அங்ஙனம் சென்ற தோழர்கள் இருவரும் திருக்கயிலாய நாதர் திருக்கோயிலின் தென் திசை வாயிலை அணுகினர்.

### எய்தினர் மணிவாயில்

12. மாசில் வெண்மைசேர் பேரொளி
உலகெலாம் மலர்ந்திட வளர்மெய்ம்மை
ஆசில் அன்பர்தம் சிந்தைபோல்
விளங்கிய அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும்
புரவியும் இழிந்துசே ணிடைச் செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடை
பல கடந்து எய்தினர் மணிவாயில்.

## பொழிப்பு

குற்றமில்லாத வெண்மை நிறைந்த பேரொளி உலகெல்லாம் பரவ, வளர்கின்ற மெய்ஞ்ஞான உணர்வினாலே ஆணவமாசு நீங்கிய அன்பர்களது உள்ளம் போல விளங்கும் அழகுமிகும் (கோபுரத்) திருவாயிலின் முன்பு, ஞான ஒளி மிளிரும் யானை, குதிரையாகிய ஊர்திகளினின்றும் இறங்கி உயர்ந்த நீண்ட வழியிற் செல்லும் இருவரும் ஈசனாரது வெள்ளிமலைக் கோயிலின் (சிவபூதர் காக்கும்) பலதடை வாயில்களையும் கடந்து சென்று அணுக்கன் திருவாயிலை அடைந்தனர்.

### பத விளக்கம்

மாசு -ஆசு- குற்றம். மெய்ம்மை-மெய்ஞ்ஞானம். திருக்கயிலையும் கோயில் வாயிலும் மெய்யன்பரின் உளம் போன்றவை. தேசு - ஞான ஒளி. புரவி - குதிரை. தடை - பூதர்களின் காவல். சேண் இடை - நீண்டும் உயர்ந்தும் உள்ள வழி.

### கதைத் தொடர்பு

இவ்வாயில் நந்தி தேவரின் காவல். அங்கு சேரமான் தடை செய்யப்பட்டார். சுந்தரரே உட்புக அனுமதிக்கப்பெற்றார்.

**ஊரனே வந்தனை**

13. சென்று கண்ணுதல் திருமுன்பு
 தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந்
 ததுவெனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந்
 தொண்டரை நேரிழை வலப்பாகத்து
ஒன்று மேனியர் ஊரனே
 வந்தனை என்றனர் உலகுய்ய.

### பொழிப்பு

அனுமதியோடு உள்ளே சென்று கண்ணுதற் பெருமான் முன் தொழுது வீழ்ந்து வணங்கி எழுந்து, நீண்ட நேரம் தூரத் திலே விடப் பெற்ற கன்றானது, தாய்ப் பசுவைக் கண்டு விரைந் தோடி அணைவது போல் விரைந்து சென்றணுகி நின்று, போற்றி செய்கின்ற ஒப்பற்ற பெருந் தொண்டராகிய சுந்தரரை அருளோடு நோக்கி அம்மையின் வலப் பக்கத்தில் அமைந்த மேனியராகிய சிவபிரான் 'நம்பியாரூரனே நீ நம்மிடம் வந்து சேர்ந்துவிட்டாய்' என்று உலகம் உய்ய உரைத்தருளினார்.

### பத விளக்கம்

கண்ணுதல் - கண் + நுதல் - கண்ணுள்ள நெற்றி - நெற்றிக் கண்ணர். இது அன்மொழித்தொகை. சிவனைக் குறிப்பது. சேண்+இடை - நீண்ட இடைவெளி. காலம், இடம் இரண்டாலும்

நீண்ட தூரம். விட்டகன்று- பிரிந்த கன்று. கோவினை-தாய்ப் பசுவை. அணைந்தது- அரவணைப்பையும் பரிச இன்பத்தையும் பெறுதல். தனிப் பெருந்தொண்டர்-ஒப்பாரும் மிக்காருமில்லாத உயர்ந்த நாயனார். திருத்தொண்டர் புராணக் காவியத்தின் நாயகர். நேரிழை - உமை. அன்மொழித் தொகை. நேரிழையின் வலப் பாகத்தில் ஒன்றும் மேனியர்-அம்மையின் வலப்பால் மேனியராய் இணைந்திருப்பவர்- அர்த்தநாரீசுவரர்.

## கதைத் தொடர்பு

"ஊரனே! உலகுய்யத் திருத்தொண்டத் தொகை பாடப் பணித்து, உன்னை அனுப்பியதனை நிறைவாக்கி, மீண்டும் நம்அழைப்பால் நம்பால் வந்துவிட்டனை" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வருள் பெற்ற சுந்தரர் பின்னும் தொழுது நின்று, "சுவாமி அடியேன் பிழைகளை எல்லாம் பொறுத்தருளினீர், உலக பாச பந்தங்களை அறுத்தீர், முடிவில்லாத முத்தி என்னும் பெருவாழ்வை நல்கினீர், இப்பேறு பெறுவதற்கு யான் தகுதியுடையேனோ?" என விண்ணப்பித்து மீண்டும் பல முறை பணிந்து பேரானந்தப் பிழம்பாக விளங்கி நின்றார்.

மேலும், "சுவாமி, உமது பாதமலர் பணிய, எம்முடன் வந்த சேரமான் வாயிலிலே தடைபட்டு நிற்கிறார்" என விண்ணப்பித்தார். அதற்குத் திருச்செவி சாய்த்த சிவபெருமான் நந்திதேவரிடம் சேரமானையும் அழைத்துவர அருளினார். அவ்வாறு அழைக்க அவரும் சந்நிதியில் வந்தார்.

### *நீ எய்தியது என்?*

14. *மங்கை பாகர்தம் திருமுன்பு*
*சேய்த்தாக வந்தித்து மகிழ்வெய்திப்*
*பொங்கும் அன்பினிற் சேரலர்*
*போற்றிடப் புதுமதி அலைகின்ற*
*கங்கை வார்சடைக் கயிலைநா*
*யகர் திருமுறுவலின் கதிர்காட்டி*
*இங்கு நாமழை யாமைநீ*
*எய்திய(து) என்னென அருள்செய்தார்.*

## பொழிப்பு

அம்மைபாகரின் திருமுன் வந்தவுடன் தூரத்திலேயே தொழுது வணங்கி மகிழ்ந்து, பெருகிவரும் அன்பால் சேரமான் போற்றி செய்து நின்றலும், (சூடியுள்ள) பிறைமதியை அலைக்கின்ற கங்கை விளங்கும் சடையினராகிய கயிலாயநாதர் தம்முடைய புன்முறுவலாகிய அருளொளியைக் காட்டி, "அன்பனே இங்கு வருக என நாம் அழையாமலிருக்க, நீ வந்த வுகை யாதோ?" என வினாவியருளினார்.

## பத விளக்கம்

சேய்த்து - தூரமான இடம். வந்தித்து - வழிபட்டு. சிவனது சடையிலுள்ள சிறுபிறையைக் கங்கையின் அலைகள் அசைக்கின்றன. முறுவல் - அருள்நகை. கதிர் - ஒளி. அழையாமை எய்தியது - அழையாமலே வந்தவாறு.

## கதைத் தொடர்பு

பெருமானின் வினாவுக்கு விடையிறுக்க வேண்டிப் பெருமாள் தொழுதுநின்று சொல்வார்: 'சுவாமி, என் நாயகராகிய ஆரூரர் ஏறிவந்த யானையின் முன்னே யான் காவலனாகச் சேவகஞ் செய்து இங்குற்றேன், இடையறாது பொழியும் உமது கருணை வெள்ளம் அள்ளிவந்து சேர்த்தலால் திருமுன்பு வரப்பெற்றேன். பெருமானே. இன்னும் ஒரு விண்ணப்பம், கேட்டருளுக, என் பாசத்தை நீக்க உம் தோழரது தோழமையைத் தந்தீர், உமக்கு ஒரு திருவுலா பாடினேன், கேட்டருளுக' என்று கூறினார். சிவபிரானும் சொல்லுக, என்றார். அன்பரும் பாடிக் கேட்பித்தார்.

## இருவீரும் நங்கணத் தலைமை பெறுக

15. சேரர் காவலர் பரிவுடன்
கேட்பித்த திருவுலாப் புறங்கொண்டு
நாரி பாகரும் நலம்மிகு
திருவரு(ள்) நயப்புட(ன்) அருள்செய்வார்
ஊர னாகிய ஆலால
சுந்தர னுடன் அமர்ந்(து) இருவீரும்
சாரு நங்கண நாதர்தம்
தலைமையிற் றங்குமென் றருள்செய்தார்.

### பொழிப்பு

சேரமான் பெருமாள் நாயனார் அன்போடு கேட்பித்த திருவுலாப் பிரபந்தத்தை ஏற்றருளி, அம்மை பாகராகிய சிவபிரானும் நன்மை மிகும்படி திருவருளை விருப்போடு அருள் செய்வாரானார். 'நம்பியாரூரனாகிய ஆலால சுந்தரனோடு இணைந்து, நீவிர் இருவீரும் சாரும்படி நம் சிவ கணங்களுக்குத் தலைமை தங்குவீர்களாக' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

### பத விளக்கம்

பரிவு - அன்பு. திருவுலாப்புறம் என்றது ஆதியுலா எனவும் திருக்கயிலாய ஞானவுலா எனவும் வழங்கும் ஒரு பாடற் பிரபந்தம். கொண்டு - கேட்டருளி. நாரி பாகர் - பெண் பாதியர்; சிவன். நயப்புடன் - மனமுவந்து.

### கதைத் தொடர்

ஆளுடைய பெருமானது அருளாணை வழியே இருவரும் தத்தமக்குரிய திருப்பணிகளை ஏற்றுச் சேவித்து இருப்பாராயினர்.

## தோழர் இருவருக்கும் ஒரு துதி

ஞான ஆரூரரைச் சேரரை
அல்லது நாமறியோம்
மான வயாக்கை யொடும்புக்
கவரை வளரொளிப் பூண்
வான வராலும் மருவற்
கரிய வடகயிலைக்
கோன வன்கோயிற் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே.

( நம்பியாண்டார் நம்பி அருளிய திருவந்தாதி)

ஊருணி உற்றவர்க்கு ஊரன்
மற்று யாவர்க்கும் ஊதியமே.

( மணிவாசகர் கோவைப் பூரணம் )

### பயிற்சி

(அ) செயற்பாடு

1. பெரிய புராணத்தில் வரும் தரப்பட்ட பாடல்களைத் துணைக்கொண்டு, சுந்தரர் கயிலை சென்ற கதையைச் சுருக்கமாக எழுதுக.

# 13

# திருக்குறள்

## (அ) இனியவை கூறல்

1. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 9. 5

பிறர்பால் தாழ்ச்சியுடையனாதலும் எல்லாரிடத்தும் இனிய சொற்களைக் கூறுதலும் ஒருவனுக்கு அணியாகும். இவை தவிர்ந்த உடல் ஆபரணங்கள் அணி ஆகா.

2. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 9. 6

ஒருவர் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை ஆராய்ந்து இன்சொற் கூறுவானாயின், அவனிடம் (ஏற்கனவே) உள்ள பாவத்தின் பாதிப்பு தேய அறன் வளரும்.

## (ஆ) செய்ந்நன்றி அறிதல்

3. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 10. 1

முன்னர் ஓர் உதவியும் தான் செய்யாதிருக்க, ஒருவன் தனக்குச் செய்த உதவிக்குப் பதிலாக, மண்ணுலகம் விண்ணுலகம் என்னும் இரண்டையும் கைமாறாகக் கொடுத்தாலும் அவை ஒருவன் செய்த அத்தகைய உதவிக்கு ஈடாக மாட்டாது.

4. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 10.2

ஆபத்தை அல்லது நெருக்கடியை எதிர்நோக்கும் தருணத்தில் ஒருவன் செய்த உதவி அளவில் சிறிது எனினும், அந்த உபகாரத்தினால் விளைந்த நன்மையைக் கருதும் பொழுது அவ் உதவியின் பெறுமதி நிலவுலகத்திலும் மிகப் பெரியது.

## (இ) வாய்மை

5. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 29. 1

பிறருக்குச் சிறிதும் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதலே, சிறப்பாகக் கூறத்தக்க சத்தியம் என்னும் அறமாகும்.

6. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 29. 4

ஒருவன் தன் மனச்சான்றிற்கேற்பப் பொய் கூறாது ஒழுகுவானாயின், அவன் உயர்ந்தோர் அனைவரின் உள்ளத்திலும் வாழ்வான்.

## (ஈ) இன்னா செய்யாமை

7. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல். 31. 4

துன்பங்கள் செய்தவர்க்கு ஒருவர் வழங்கும் தண்டனை, அத்துன்பங்களுக்கு எதிராக நற்பலன்கள் தரும் உதவிகளைச் செய்தலும் அவர் செய்த துன்பங்களையும் தான் செய்த உதவிகளையும் ஒருங்கே மறந்து விடுதலும் ஆகும்.

8. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை. 31. 5

பிற உயிருக்கு வந்த துன்பத்தைத் தன்னுயிர்க்கு வந்த துயரம் போலக் கருதி உதவாவிட்டால், ஒருவன் பெற்ற அறிவினால் என்ன பயன் உண்டு?

## (உ) கொல்லாமை

9. அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். 32.1

எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாமை மேலான அறமாகும். இதன் மறுதலையான கொலை என்னும் பாவம். பிறபாவங்களின் தீய விளைவுகள் எல்லாவற்றையும் தரும்.

10. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 32.2

தான் பெற்ற உணவுப் பொருள்களைப் பங்கீடு செய்து ஒருபங்கைத் தனது தேவைக்கு எடுத்துக் கொண்டு, ஏனைய பங்கைப் பசியால் வருந்தும் உயிர்களுக்கு உதவும் அறச் செயலானது, அறநூல்கள் தொகுத்துக் கூறும் அறச் செயல்கள் எல்லாவற்றிலும் முதன்மை பெறும் சிறப்பினை உடையது.

### பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக.

1. நீங்கள் இனியவை கூறலை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் எவை?
2. செய்யாமல் செய்த உதவி எத்தகையது?
3. வாய்மை எனப்படுவது யாது?
4. இன்னா செய்தாரை எவ்வாறு ஒறுக்கலாம்?

# 14

# திருவருட்பயன்

## (அ) அறிமுகம்

மெய்கண்ட சாத்திரங்கள் என்னும் நூற்றொகுதியிலுள்ள பதினான்கு நூல்களில் 'சித்தாந்த அட்டகம்' எனப்படும் எட்டு நூல்கள் ஒரு தனித்தொகுதியாகப் பேணப்பட்டு வருகின்றன. உமாபதிசிவாசாரியார் இயற்றிய சித்தாந்த அட்டகத்திலே இடம் பெறும் நூல்களில் திருவருட்பயன் எளிமையும் அருமையும் இணைந்த சாத்திரம் ஆகும். இதுசைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விரிவாகவும் முழுமையாகவும் அறிந்து கொள்ள விரும்புகின்ற வர்கள் தொடக்கத்திற் கற்பதற்கு ஏற்ற மரபு முறை நூல்களில் முதலிற் படிக்கும் தகுதியும் பொருத்தமும் உடையது. இது சிவஞானபோதத்திற்குச் சார்புநூல் எனக் கணிக்கப்படுகின்றது.

ஒவ்வோர் அதிகாரமும் பத்துக் குறள் வெண்பாக்கள் கொண்ட பத்து அதிகாரங்கள் அடங்கிய நூலாகத் திருவருட்பயன் இயற்றப்பட்டுள்ளது. விநாயகக் கடவுளுக்குத் துதிகூறும் முறையில் முதலில் இடம்பெறும் காப்பு என்னும் குறள் வெண்பாவையும் சேர்த்து, நூற்றொரு குறட்பாக்கள் திருவருட்பயனில் அடங்கி யுள்ளன. திருவருளின் பயனை விளக்கும் நூல் என இந்நூற் பெயருக்கு விளக்கம் கூறலாம். இந்நூலில் முதலைந்து அதிகாரங்கள் ஒரு பெரும் பிரிவாகவும் ஆறாம் அதிகாரம் தொடக்கம் பத்தாம் அதிகாரம் வரையும் உள்ள பின்னைந்து அதிகாரங்கள் மற்றப் பெரும் பிரிவாகவும் விளங்குகின்றன.

அருளின் உறைவிடமான பதியின் இயல்பு, அவ்வருளை அடையும் உயிர்த் தொகுதியின் இயல்பு, அவ்வருளால் வலியடங்கும் ஆணவத்தின் இயல்பு, இறையருளின் தன்மை, அருளின் வடிவமான குருவின் தன்மை என்பவற்றைக் கருத்தாழம் உள்ள ஒழுங்கு முறையிற் கூறும் முதலைந்து அதிகாரங்களும் 'திருவருள்'

என்னும் பொதுப் பொருளை விளக்கும் பிரிவாகக் கணிக்கப்படுகின்றன.

குருவிடம் உண்மைப் பொருளை அறியும் முறைமை, அம் முறைமைக்கு இணங்கத் திருவருள் வயப்படல், அருள் வயப்பட்ட உயிர் பேரானந்தத்தை அடையும் முறை, திருவருளின் தன்மை, முத்தி நிலை அடைந்தோர் இயல்பு என்னும் ஐந்து அம்சங்களையும் கூறும் பின்னைந்து அதிகாரங்களும் இரண்டாம் பெரும் பிரிவாக மதிக்கப்படுகின்றன.

திருவருட்பயனின் பொருளை விரிவாக விளக்கும் உரைகள் பல தமிழ் நாட்டில் பலரால் எழுதப்பட்டுள்ளன. நமது நாட்டில் வாழ்ந்த சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் உரை சிறப்பு மிக்க ஒன்று. இவற்றைப் படிக்கவும் ஏனைய சாத்திர நூல்களைப் படிக்கவும் விரும்புபவர்களுக்குரிய தொடக்க நிலை விளக்கமாக இங்கே திருவருட்பயன் பாக்களுக்குப் பொருள் தொகுப்பும், விளக்கக் குறிப்புக்களும் தரப்படுகின்றன.

## காப்பு

காப்பு என்ற சொல் 'காக்குமாறு' வேண்டும் துதி எனப் பொருள்படும். இது நூலின் தொடக்கத்தில் இடம் பெறுவது மரபு. உமாபதிசிவம் தாம் பாட முற்படும் திருவருட்பயன் என்னும் நூல் எத்தகைய தடையும் இல்லாமல் இனிது நிறைவேற விக்கினங்களை நீக்கவல்ல விக்கினேசுவரப் பெருமானுக்குத் தெய்வவணக்கம் கூறும் 'காப்பு' என்னும் குறள் வெண்பாவைப் பாடியுள்ளார்.

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்.**

## பொருள்

நன்மை புரியவல்ல ஆனைமுகன் ஆகிய 'பிள்ளையாரை' மெய்யன்போடு வழிபட்டால், கல்வி மூலம் அடையவேண்டிய மெய்யறிவு சிரமப்பட்டுப் படிக்கும் நூற்பொருள் ஆகாது.

## விளக்கக் குறிப்புக்கள்

குஞ்சரக்கன்று - குஞ்சரம் + கன்று - யானைக்குட்டி - ஆனைமுகப் பிள்ளையார். நண்ணில் -உள்ளத்தில் உறைந்தால், மெய்யன்புடன் வழிபட்டால். கலை - கல்வி. ஞானம் - மெய்யறிவு, ஆன்மீகவிளக்கம், கற்குஞ்சரக்கன்று - கற்கும்+சரக்கு +அன்று - சிரமப்பட்டுப் படிக்கும் நூற் பொருள் ஆகாது. சரக்கு - பண்டம், வெறுப்பூட்டும் பொருள். காண் - அசை (கருத்தில்லாது பாட்டுக்களில் இடத்தை நிரப்புவது).

பிள்ளையாரை உள்ளன்போடு வழிபட்டால் கஷ்டமான விடயத்தையும் சுலபமாக விருப்போடு படிக்கலாம். எனவே, விநாயகப்பெருமானின் அருளை வேண்டும் தொனிப்பொருள் இப்பாடலில் அடங்கியுள்ளது.

# (ஆ) முதலாம் அதிகாரம்

## (1) பதிமுதுநிலை

(முதுபதிநிலை : அநாதிப் பரம்பொருளின் இயல்பு.)

1. ***அகர உயிர்போல அறிவாகி எங்கும்***
   ***நிகரிலிறை நிற்கும் நிறைந்து.***

## பொருள்

அகரம் என்னும் உயிர் அருவம், உருவம், முதன்மை, கலந்திருத்தல், இயக்குதல் என்னும் சிறப்பியல்புகளைப் பெற்று முதன்மை பெற்றிருப்பது போல், ஒப்பில்லா இறைவன் அச்சிறப்பியல்புகள் ஐந்தையும் கொண்டிருப்பதுடன், ஞானப் பொருளாகவும் பூரணப் பொருளாகவும் சத்துப் பொருளாகவும் வியாபித்துள்ளார்.

## விளக்கக் குறிப்புக்கள்

'அகரம்' :- -

அருவம் - கட்புலனாகாத நாத வடிவம்; உருவம் - கட்புலனாகும் வரிவடிவம்; முதன்மை - மொழியெழுத்துக்களிற்

பெறும் முதலிடம். தலைமை. கலந்திருத்தல் -உயிர் மெய் எழுத்துக்களிற் கலந்து காணப்படல்; இயக்குதல் - மெய்யெழுத்துக்களை இயக்கி அவற்றுக்கு மொழி வாழ்வு அளித்தல்.

இறைவன் -

அருவம் - கட்புலனாகாத நாதவடிவம் இறைவனுக்கும் உண்டு (ஓம்); உருவம் - கட்புலனாகும் மூர்த்தங்கள். முதன்மை பசுபதி ஆகும் தலைமை; கலந்திருத்தல் - எங்கும் இருத்தல், எவற்றிலும் இருத்தல், இயக்குதல் - உயிர்க்குயிராதல்.

அறிவாகி -

இறைவன் ஞானப்பொருளாதலைச் சுட்டுகின்றது; நிறைந்து - இறைவன் பூரணப் பொருள் என்பதைக் குறிக்கின்றது; நிற்கும் - சத்துப் பொருள் என்பதை உணர்த்துகின்றது.

எங்கும் நிற்கும் -

இறைவனின் வியாபகத்தைக் கூறுகின்றது; இறைவனுக்கு நிகராக எவரும் எதுவும் இல்லாவிட்டாலும் அவரின் இயல்பு விளக்கத்திற்கு 'அகரம்' ஓரளவுக்குத் துணைபுரியும் என்பதனால் அதனை நூல்வல்லார் உவமையாகக் கூறுவர். எனவே, நிகரில்லாத இறைவனுக்கு அகரம் நிகர் என்பது இழுக்கு ஆகாது.

2. ***தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி***
***பின்னமிலான் எங்கள் பிரான்.***

## பொருள்

பசுபதி ஆகிய இறைவன் என்றுமுள உயிர்கள் சிவத் தன்மையை அடையத் துணைபுரிகின்ற சக்தியிலிருந்து பிரிக்க இயலாத முழுப் பொருள் / பூரணன் ஆவான்.

## விளக்கக் குறிப்புக்கள்

தன்நிலைமை - சிவத்தன்மை, பாசங்கள் நீங்கிய 'ஆனந்த நிலை'. மன்னுயிர்கள் - அநாதியான, எண்ணற்ற ஆன்மாக்கள். பின்னம் - பிரிப்பு; பின்னமிலான் - பூரணப் பொருள், அர்த்தநாரீச்சர வடிவினன். எங்கள் பிரான் - ஆன்மாக்கள் ஆகிய எமது தலைவர், பசுபதி.

இறைவன் முழுப் பொருள், சக்தி (அருள்) இறைவனின் ஓரம்சமேயாகும். ஆன்மாக்கள் பாசங்கள் நீங்கிய ஆனந்த நிலை அடையத் துணைபுரிவதே சக்தியின் கடமை (தொழிற்பாடு) ஆகும்.

3. **பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்.**

## பொருள்

பதி (அளவின்) பெருமை, சிறுமை என்ற கட்புல நிலைகளிலும் பெருங் கருணை, பெறுதற்கு அருமை என்ற கருத்து / பண்பு நிலைகளிலும் தமக்கு நிகர் இல்லாத பரம்பொருள் ஆவார்.

## விளக்கக் குறிப்புக்கள்

பெருமை - கருவிகளால் அளவிடஇயலாத வடிவப் பெருமை, விசுவரூபம்.

நுண்மை - பூதக்கண்ணாடி போன்றவற்றாலும் அவதானிக்க இயலாத சிறு வடிவம், அணுவிலும் மிகச்சிறியதாய்க் காணப்படும் நுண்ணுருவம்.

பேரருள் - எவருடைய, எதனுடைய மனநெகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிய கருணை.

பேற்றின் அருமை - ஒருவர் அடையக்கூடிய பேறுகளின் மேலான பேறு ஆக விளங்கும் சிறப்பு.

ஆணவமுடையார்க்கு எளிதிற் கிட்டாத அருமை எனவும் சிலர் விளக்கம் அளிப்பர்.

முதற் குறளில் 'நிகரில் இறை' என்று கூறிய கருத்தின் விளக்கமாக இம்மூன்றாம் குறள் வெண்பா அமைகின்றது.

4. **ஆக்கி எவையும் அளித்தா சுடனடங்கப்**
**போக்குமவன் போகாப் புகல்.**

## பொருள்

எல்லாவற்றையும் படைத்தல், காத்தல், ஆணவம் வலிகெட ஒடுக்குதல் ஆகிய முத்தொழில்களையும் புரியும் இறைவனே, எக்காலமும் ஆன்மாக்களின் புகலிடமாக விளங்குகின்றார்.

## விளக்கக் குறிப்புக்கள்

எவையும் - தநு, கரணம், புவனம், போகம் என்பன; அதாவது உடல், உறுப்புக்கள், உலகம், போகப் பொருள்கள் என்பன. ஆசு - ஆணவம்; போக்கும்-சங்காரம் செய்யும், போகாப்புகல்- நீங்காத புகலிடம், நிலையான அடைக்கலம், தஞ்சம் தருபவர்.

5. **அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவும் உடையான் உளன்.**

## பொருள்

பதி கண்ணுக்குப் புலப்படாத அருவம், கண்ணுக்குப் புலப்படும் உருவம், (அருவ - உருவ இயல்புக் கலப்பு வடிவம்), ஞானிகளுக்குரிய 'ஞான வடிவம்' என்னும் திருமேனிகள் உடையவராக விளங்குகின்றார்.

## விளக்கக் குறிப்புக்கள்

அரு - அருவம் - சிவம், சக்தி, நாதம், விந்து. இவை நிட்கள நிலை உள்ளவை; அதாவது 'உறுப்புக்கள் காணப்படும் உடல் இல்லாத நிலை' உடையவை. உருவம் அயன், அரி, உருத்திரன், மகேசுவரன். சகளநிலை உறுப்புக்கள் காணப்படும் உடல் உள்ள நிலை. அருவுருவம்

- மகாலிங்கம் (சதாசிவ நிலை); கை, கால் முதலிய உறுப்புக்கள் இல்லாமையால் அருவம்; திரளுரு காணப்படலால் உருவம் என்னும் இருவகை இயல்புகளும் உடைய வடிவம் மகாலிங்கம் ஆகும். அருவம், உருவம், அருவுருவம் என்பவற்றைத் 'திருமேனிகள்' என்று கூறல் சமய மரபு. இம்மூவகைத் திருமேனிகளிலும் 'நவபேதங்கள்' உள்ளன. உளன் - சத்துப் பொருளாகப் பதி விளங்குதலைக் குறிக்கின்றது.

6. **பல்லார் உயிருணரும் பான்மையென மேலொருவன்**
**இல்லாதான் எங்கள் இறை.**

## பொருள்

ஆன்மாக்கள் எல்லாம் (பதி உணர்த்த) உணரும் சிற்றறிவுப் பண்பு உடையன ஆகும். ஆயின், பதி தாமாகவே உணரும் முற்றறிவுப் பண்பு உள்ளவர் ஆவர். எனவே, எமது தலைவரான பதி தம்மைவிட மேலான தலைவர் ஒருவர் இல்லாத பரம்பொருள் ஆவார்.

## விளக்கக் குறிப்புக்கள்

பல்லார் - பல்+ஆர்+உயிர் - உயிர்த்தொகுதி, சகல ஆன்மாக்களும்; உணரும் பான்மை - அறியும் இயல்பு; இறை- பதி, இறைவன், பதியும் பசுவும் அறிவுப் பொருள், சித்துப் பொருள் ஆகும். ஆனால், அவை மேலான தலைவர் இல்லாமை, பதி உள்ளமை, தானாகவே அறியும் நிறை , தாமாகவே அறிய முடியாத குறைபாடு, முற்றறிவு சிற்றறிவு என்னும் வேறுபாடுகள் உள்ளன ஆகும்.

இந்தக் குறட்பா பதிக்கும் பசுக்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் முறையிற் கூறுகின்றது.

7. **ஆணா அறிவாய் அகலான் அடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்.**

## பொருள்

தேவர்கள் எளிதில் காண இயலாத பதி, தன்னை வழிபடும் மெய்யடியார்க்குப் பேரறிவுப் பொருளாய் / ஞான வடிவினராய் விளங்கி, அவர்களை விட்டுப் பிரியாது அவர்களின் உள்ளத்தில் உறைவார்.

## விளக்கக் குறிப்புக்கள்

ஆனா - குறையாத, பூரணமான. அகலான் - நீங்கான், உள்ளத்தில் உறைவான்; அடியவர்க்கு - அன்புள்ள அடியார்களுக்கு; வானாடர் - வான் + நாடர் - விண்ணுலகினர், தேவர்கள்; மன் - வேந்தன், தலைவன், நிலையானவன் அதாவது சத்துப் பொருள்; மன்னுதல் - நிலையாதல். பிரமவிட்டுணுக்கள் முடியும் அடியும் தேடிய புராணக்கதை குறிப்பாகக் கூறப்படுகிறது.

8. **எங்கும் எவையும் எரியுறுநீர் போலேகந்**
   **தங்குமவன் தானே தனி.**

## பொருள்

வெந்நீரில் சூடு சீராகப் பரவியிருத்தல் போல், பதி எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் வியாபித்து உள்ளார். ஆயினும், அவர் அவற்றின் தன்மை சாராமல் தமக்குரிய தனிப் பண்புடன் வேறாக விளக்குவார்.

## விளக்கக் குறிப்புக்கள்

எரி - வெப்பம், சூடு; உறு- பொருந்திய; ஏகம் - ஒன்றாக, கலந்து; அவன் - பதி, இறைவன்; தனி - தனிப்பண்பு, தனக்குரிய பண்பு; இடங்கள், பொருள்களின் பண்புகளாற் பாதிக்கப்படாதவன் இறைவன்.

9. **நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
   **சலமிலன் பேர்சங் கரன்.**

## பொருள்

பதி 'பேரின்பம்' பெறும் தகைமை அடைந்தவர்களுக்குப் பேரின்பம் ஆகிய நன்மை அருளும் இயல்பு உள்ளவர். அந்தத் தகைமை அடையாதவர்களுக்கு அந்த நன்மையை அருளும் இயல்பு இல்லாதவர். இந்தத் தகைமை ஒருவரிடம் காணப்படுதல் அல்லது காணப்படாமை காரணமாக விருப்பு அல்லது வெறுப்பு ஆகிய விகாரம் அவரின் திருவுள்ளத்தில் நிகழுவது இல்லை. அவரின் பெயர் 'சங்கரன்' என்பது ஆகும்.

## விளக்கக் குறிப்புக்கள்

நலம் - நன்மை, முத்தி, பேரின்பம்; நண்ணார் - தகைமை அடையாதவர், இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்னும் தகுதிகள் அடையாத ஆன்மாக்கள்; சலம் - விகாரம், மனம் பேறுபடுதல், அசைதல்; சலமிலன் - விகாரம் இல்லாதவர், நிலையான தன்மை உள்ளவர், சீராகச் சுகம் அளிக்கும் பண்பு உள்ளவர். சங்கரன் - சம் + கரன் - சுகம் செய்பவர், பிறவி நோய் நீக்குபவர். 'பதி' ஆகிய பரம்பொருளுக்கு இறை என்னும் பொதுப் பெயரை முதற் குறட்பாவில் வழங்கிய உமாபதிசிவம் இப்போது முதன்முதல் "சங்கரன்" என்ற நாமத்தைச் சூட்டியுள்ளார்.

**10 உன்னுமுள(து) ஐயம் இலதுணர்வாய் ஓவாது**
**மன்னுபவம் தீர்க்கு(ம்) மருந்து.**

## பொருள்

நிலையான பிறவி நோயை ஒழிக்கும் மருந்தான பதியை மெய்யுணர்வுடன் இடையறாமல் தியானம் செய்யுங்கள். அதனால் பேரின்பம் கிடைக்கும் நன்மை உள்ளது. இந்நன்மை கிடைத்தலில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

**விளக்கக் குறிப்புக்கள்**

உன்னும் - நினைக்கவும், தியானம் செய்யவும். உ(ள்)ளது - நன்மை உண்டு; ஐயம்-சந்தேகம்; இலது - இல்லை, உணர்வாய் - மெய்யுணர்வுடன்; ஓவாது - இடையறாமல், தொடர்ச்சியாக; மன்னு -நிலையான; பவம் - பிறவி; மன்னுபவம்- பிறவிச்சக்கரம், மருந்து - மருந்து போன்ற பதி; திருவருள் வடிவினர்.
உணர்வாய், ஓவாது, உன்னும் என்று இம் மூன்று சொற்களையும் கூட்டிப் பொருள் கொள்ளுக /விளக்கம் பெறுக.

# அதிகாரத் தொகுப்பு

## பதி

1. **இயல்புகள் :** ஒப்பின்மை, முதன்மை, கலந்திருத்தல், இயக்குதல், ஞான வடிவு, பூரணத்துவம், சத்துப் பொருளாதல் என்னும் சிறப்பியல்புகள் உள்ளவர்.
2. **முழுமை :** பதி உயிர்கள் சிவத்தன்மை சார உதவும் சக்தியின் பிரிக்க முடியாத முழுமை உள்ளவர்.
3. **ஒப்பின்மையின் அம்சங்கள் :** அளவுப் பெருமை, அளவு நுண்மை, பெருங் கருணை, பெறுதற்கு அருமை என்னும் அமிசங்களில் பதி ஒப்பு இல்லாதவர்.
4. **தொழில்கள் :** படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என்னும் முத்தொழில்களையும் பதி புரிகிறார். அவர் ஆன்மாக்களின் புகலிடம் ஆவார்.
5. **திருமேனிகள் :** அருவம், உருவம், அருவுருவம், ஞானவடிவம் என்பன பதியின் திருமேனிகள் ஆகும்.
6. **பதி - பசு வேறுபாடுகள்** : பதி முற்றறிவினர், தாமாகவே அறிபவர், தம்மின் மேலான தலைவர் இல்லாதவர், பசுக்கள் சிற்றறிவுள்ளன; அறிவிக்க அறிவன; பதியைத் தலைவராக உடையன.

   பொதுத்தன்மை; இரண்டும் சித்துப் பொருள்கள்.

**7. பதியின் உறைவிடம்** : மெய்யன்புள்ள அடியார்களின் உள்ளத்தில் பதி எப்போதும் உறைவார்.

**8. பதி உறைதலின் நுட்பம்** : பதி எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் உடனாக வியாபித்து, தமது தனிப் பண்பு வேறாகத் தோன்ற உறைவார்.

**9. விகாரமின்மை** : பதி தகைமையுள்ள ஆன்மாக்களுக்குப் பேரின்பம் அருளுவார். ஏனையோர் தகைமை அடையும் வரை பேரின்பத்தை வழங்கமாட்டார். அவர் விருப்பு, வெறுப்பு என்னும் விகாரம் இல்லாதவர், 'சங்கரன்' என அழைக்கத்தக்கவர்.

**10. மருந்து** : பதி பிறவிப் பிணியை ஒழிக்கும் மருந்து. அவரைச் சீராகத் தியானித்தால் பேரின்பம் கிடைத்தலில் சந்தேகம் இல்லை.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

*1. திருவருட் பயன் ஆசிரியர் யார்?*
*2. காப்புத் துதி என்றால் என்ன?*
*3. சக்தி பின்னமில்லாதவன் - யார்?*
*4. நிகரில்லாத இறைவனுக்கு அகரம் எவ்வாறு நிகராகும்?*
*5. எவ்வெவ் வகையில் பதி ஒப்பில்லாதவர்?*
*6. சங்கரன் என்பதன் பொருள் யாது?*

## (இ) இரண்டாம் அதிகாரம்

### (2) உயிரவை நிலை

(ஆன்மாக்களின் இயல்பு )

1. **பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந்**
   **துறந்தோர் துறப்போர் தொகை.**

### பொருள்

முத்தியடைந்த ஆன்மாக்களின் எண்ணிக்கை அவை முத்தியடையும் வரை எடுத்த பிறவிகளில் வாழ்ந்த தினங்களின் கூட்டுத்தொகைக்குச் சமம் ஆகும். இதுவரை முத்தியடையாத ஆன்மாக்களின் எண்ணிக்கை அவை இவ்வளவு காலமும் எடுத்த பிறவிகளில் வாழ்ந்த தினங்களின் கூட்டுத்தொகையையும் அவை முத்தியடையும் வரை இனிமேல் எடுக்கவேண்டிய பிறவிகளில் வாழவேண்டிய தினங்களின் கூட்டுத்தொகையையும் ஒன்றாக்கிப் பெறும் இறுதிக் கூட்டுத்தொகைக்குச் சமமாகும்.

### விளக்கக் குறிப்புக்கள்

ஆன்மாக்களின் தொகை எண்ணற்றது. அவற்றுள் முத்தி அடைந்த ஆன்மாக்களின் தொகையும் எண்ணற்றது. இனி முத்தி அடைய இருக்கும் ஆன்மாக்களின் தொகையும் எண்ணற்றது. துறந்தோர் - தநு, கரண, புவன, போகங்களைத் துறந்து முத்தியடைந்தோர்.

2. **திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்கள் அன்றி**
   **ஒருமலத்தார் ஆயும் உளர்.**

### பொருள்

ஆன்மாக்கள் மும்மலங்கள் உடையோர், மாயை நீங்கிய இருமலங்கள் உடையோர், ஆணவம் என்னும் ஒரு மலம் மட்டும் உடையோர் என மூவகையினராய் உள்ளனர்.

## விளக்கக் குறிப்புக்கள்

திரி - மூன்று. திரிமலத்தார் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களும் உள்ளவர்கள் சகலர்.

அதனில் - திரி என்னும் தொகையில், மும்மலத்தொகுதியில்; ஒன்று- ஆணவம், கன்மம், மாயை என்னும் வரிசையில் கடையில் உள்ள மாயை என்னும் ஒரு மலம்; சென்றார்கள் - நீங்கிய ஆன்மாக்கள் பிரளயாகலர்.

ஒருமலம் முதலில் நீங்கும் மாயை அடுத்து நீங்கும் கன்மம் என்பன கழிய எஞ்சியுள்ள ஒரு மலமான ஆணவம்.

ஒருமலம்- மலங்களில் தீய விளைவு தருதலில் ஒப்பில்லாத மலம் ஆணவம்.

ஒரு மலத்தார்- ஆணவம் மட்டும் எஞ்சியுள்ள விஞ்ஞானகலர். ஆன்மாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர்.

3. **மூன்றுதிறத்(து) உள்ளாரும் மூலமலத்(து) உள்ளார்கள் தோன்றலர்தொத்(து) உள்ளார் துணை.**

## பொருள்

(சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும்) மூவகை ஆன்மாக்களும் (அநாதியாகவே) மூலமலம் ஆகிய ஆணவத்தால் பிணிக்கப்பட்டு உள்ளனர். மாயையைத் துணையாகக் கொண்டுள்ள சகலர் தாங்கள் மலப்பிணிப்பு அடைந்துள்ள நிலையை அறியார்கள்.

## விளக்கக் குறிப்புக்கள்

மூன்றுதிறம் - மூவகை; மூன்றுதிறந்து உள்ளார்- மூவகை ஆன்மாக்கள். மூலமலம் - அநாதிமலம், ஆணவம். இது சகசமலம் என்றும் கூறப்படும். துணை - மாயை; துணையுள்ளார் - மாயை என்னும் மலம் உள்ளவர்கள், சகலர்; தொத்து மலப்பிணிப்பு; தொற்று - தொத்து ,பேச்சுமொழித் திரிபு. மாயை நீங்கப்பெற்ற பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகியோர் தாங்கள் மலப்பிணிப்பு அடைந்திருத்தலை அறிவர் என்பது பெறப்படும். (குறிப்பு எச்சம்.)

4. **கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடும்**
**திண்டிறலுக்(கு) என்னோ செயல்.**

## பொருள்

ஆன்மா பகல்வேளையில் (நனவிலே) கண்ட பொருள்களை (இரவில்) கனவிலே கண்டு(அச்சம் அடைந்து) கலக்கமுறும் இயல்பினது. எனவே, திண்ணிய வல்லுயிர் என்னும் போலிப் பாராட்டுப் பெறும் இத்தகைய ஆன்மாவுக்குத் தன் செயல் எனக் கூறத்தக்க சுதந்திரமான செயல் என்ன உள்ளது? (எதுவும் இல்லை.)

## விளக்கக் குறிப்புக்கள்

நாள் - பகல்; திண்டிறல் - திண்(மை) + திறல் - திண்ணிய வலிமை; வல்லுயிர் என்- என்ன; வலிமையில்லாத ஆன்மாவை வல்லுயிர் என்று கூறல் இகழ்ச்சிக் குறிப்பு, போலிப் பாராட்டு. ஆன்மா மாறுபடக் காணும் இயல்பினது, தன்வயம் அற்றது. (சுதந்திரச் செயல் இல்லாதது.)

5. **பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)**
**அறிவென்ற பேர்நன் றற.**

## பொருள்

ஐம்பொறிகளின் உதவியில்லாமல் ஒரு விடயத்தையும் அறியமாட்டாத ஆன்மாக்களுக்கு 'அறிவு' எனப் பெயர் சூட்டுதல் மிகவும் நல்லது! (பிழை என்பது தொனிப்பொருள்.)

## விளக்கக் குறிப்புக்கள்

பொறி - உறுப்பு (மெய், வாய், கண், மூக்கு, செவி). புணராத- அறியாத; புந்தி - அறிவு, ஆன்மா (ஆகுபெயர்); பேர்- பெயர்; நன்றற - அற, நன்று - மிகநல்லது, கேலி, இகழ்ச்சிக் குறிப்பு.

6. ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவில் எனில் என் செய.

## பொருள்

சோதியுள்ள பொருள்கள், மயக்கும் இருள், உலகிலுள்ள பொருள்கள் என்பன திறந்த கண்களில் பார்வைத்திறன் இல்லாதபோது என்ன பயனைச் செய்ய வல்லன? ஒரு பயனும் இல்லை.

## விளக்கக் குறிப்புக்கள்

அலர்கண் - விழித்திருக்கும் கண், திறந்த கண்; தெளிவு- தெளிவாகக் காணுதல், பார்வைத்திறன். ஒளி, இருள், பொருள் என்னும் வேறுபாடு காண மானிடப் புறக்கண்ணுக்குப் பார்வைத்திறன் வேண்டும். அது போலச் சிவம் (ஒளி), மலம் (இருள்), மாயை (உலகம்) என்பவற்றை வேறுபடுத்திக் காண அகக்கண்ணுக்கும் திறன் வேண்டும்.

7. சத்தசத்தைச் சாரா(து) அசத்தறியா(து) அங்கணிவை
உய்த்தல்சத சத்தா முயிர்.

## பொருள்

சத்து ஆகிய பதி, அசத்து ஆகிய பாசத்தைச் சாராது. அதாவது பொருந்தாது, அசத்து (சடம்) ஆகிய பாசம் ஒரு விடயத்தையும் அறியமாட்டாது. ஆன்மா சத்தைச் சார்ந்து பதியையும் அசத்தைச் சார்ந்து பாசத்தையும் அறிதலால் அது 'சதசத்து' ஆகும்.

## விளக்கக் குறிப்புக்கள்

சத்து - உள்பொருள், அறிவுள்ள பொருள், சிவம், பதி. அசத்து - அல்பொருள், அறிவு அல்லாத பொருள், சடப் பொருள், பாசம். அங்கண்-அங்கு, சாரும் இடம், சந்தர்ப்பம்; இவை- சத்தும், அசத்தும்; உய்த்தல்-பொருந்தல், சாரல். சதசத்து - சத்+அசத்து - (சார்பினால் அடையும்) அறிவும்

அறியாமையும் உளள பொருள், ஆன்மா, பசு. ஆன்மாவின் சிறப்பியல்பு "சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல்" ஆகும்.

8. **இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம்**
**பொருள்கள் இலதோ புவி.**

## பொருள்

இருள் பரவிய வேளையில் இருள் மயமாகியும் ஒளியுள்ள போது ஒளியைத் தெறித்துப் பரப்பும் பொருளாகியும் விளங்கும் ஒளித்தெறிப்புப் பொருள்கள் இவ்வுலகத்தில் இல்லையா? உள்ளன அல்லவா? ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புள்ளது என்பது குறிப்புப் பொருள்.

## விளக்கக் குறிப்புக்கள்

எல்-ஒளி, எல்லாம்- எல்+ஆம், ஒளியாகும், ஒளியைத் தெறிக்கும் பொருள்கள் - கண்ணாடி, பளிங்கு.
கண்ணாடி, பளிங்கு அல்லது படிகம், கண் என்பன போல ஆன்மா, ஆணவம் ஆகிய இருண்மலத்தோடு சேரும்போது அறியாமையையும் திருவருள் ஆகிய ஒளியோடு சேரும்போது மெய்யறிவு அல்லது உண்மை விளக்கமும் பெறும் இயல்பினது. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பினது என்ற கருத்தைக் கண்ணாடி, பளிங்கு என்னும் உவமைப் பொருள் மூலம் உமாபதிசிவம் இக் குறட்பாவில் விளக்கியுள்ளார்.

9. **ஊமன்கண் போல ஒளியும் மிகவிருளே**
**யாமன்கண் காணா தவை.**

## பொருள்

பதியின் அருளால் பெற்ற ஞானக்கண்ணால் உண்மையைக் காணாத ஆன்மாக்களுக்கு ஆந்தைக்கண் போன்ற ஊனக் கண்ணால் பார்க்கும் போது ஒளியாகிய சிவம் இருள் என்னும் வண்ணம் தோன்றவே தோன்றாது.

## விளக்கக் குறிப்புக்கள்

ஊமன் - கூகை, ஆந்தை; மன் - மன்னன், மன்னும் பொருள், பசுபதி, சத்துப் பொருள், மன்கண்-பதி தந்தருளும் ஞானம், ஞானக்கண், காணாதவை- காணாத உயிர்கள்.

ஆந்தையின் கண்ணுக்கு பகல் ஒளி இருளாகவும் இரவிருள் ஒளிபோலவும் மாறுபடத் தோன்றும். அது போல ஆன்மாவின் ஊனக்கண்ணுக்கு ஒளியாகிய பதி பொய் போலவும் இருள் ஆகிய மலம் மெய்போலவும் மாறுபடத் தோன்றும்.

**10. அன்றளவும் ஆற்றுமுயிர் அந்தோ அருள்தெரிவ(து)**
**என்றள(வு) ஒன்றில்லா இடர்.**

## பொருள்

சுட்டிக் கூறமுடியாத அன்று தொடக்கம் அளவில்லாத துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் ஆன்மாக்கள், பதியின் திருவருளே துன்பங்களைக் களையும் என்னும் உண்மையை அறிந்து கொள்ளுவது எக்காலம்?

## விளக்கக் குறிப்புக்கள்

அன்றளவும் அன்று+அளவும்-அன்று தொடக்கம், அநாதி காலம் தொடக்கமே, ஆற்றும் -சகித்துக் கொள்ளும், தாங்கிக் கொள்ளும்; அந்தோ- ஐயோ; தெரிவது - உண்மையை அறிந்து கொள்ளுவது; என்று எப்போது, எக்காலம், எந்நாள். இடர் துன்பங்கள், பிறவிச் சக்கரம் மூலம் அடையும் துன்பங்கள்.

'அளவு ஒன்றில்லா இடர் ஆற்றும் உயிர்' எனச் சொற்களைக் கூட்டிப் பொருள் கொள்க.

பிறவித்துயர் நீங்க அருளே துணை என்னும் உண்மையை அறிந்து கொள்ளுதலே ஆன்மா பேரின்பம் பெறும் வழியாகும். திருவருள் துணை நின்றால் ஆன்மா இப்பிறவியில் விமோசனம் பெறலாம். அத்துணை இல்லாவிட்டால் எவ்வளவு காலம் கழிந்தாலும் துன்பத்தொடர் ஒழியாது.

# அதிகாரத் தொகுப்பு
## ஆன்மாக்கள்

1. **தொகை :** ஆன்மாக்கள் முத்தியடைந்தவை, முத்தியடையாதவை என்னும் இரு பெரும் பிரிவுகளில் அடங்கும். அவ்விரு பிரிவுகளிலும் உள்ள ஆன்மாக்கள் எண்ணற்றவை அல்லது கணக்கிட முடியாதவை ஆகும்.

2. **வகை :** ஆன்மாக்கள் மும்மலத்தார் (சகலர்), இருமலத்தார் (பிரளயாகவர்), ஒரு மலத்தார் (விஞ்ஞானகலர்) என்னும் மூன்று வகைப்படும்.

3. **வகைவிளக்கம் :** சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை ஆன்மாக்களும் 'மூலமலம்' எனப்படும் ஆணவத்தை1 உடையன ஆகும். மாயை உள்ள காரணத்தால் சகலர் மலப்பிணிப்பு அல்லது பாசத்தனை தம்மிடம் இருத்தலை அறியமாட்டார். மாயை நீங்கிய பிரளயாகலரும் மாயை, கன்மம் என்பன ஒழிந்த விஞ்ஞானகலரும் இம்மலப் பிணிப்பை உணர்வர்.

4. **வலியின்மை :** ஆன்மா வலியில்லாத பொருள். மாறுடக்காணல், தன்வயம் இல்லாமை என்பன அதன் இயல்புகள் ஆகும்.

5. **பொறிவழியறிதல் :** ஆன்மா ஐம்பொறிகள் உணர்த்துபவற்றை அறியும் சிற்றறிவு உள்ள பொருள் ஆகும்.

6. **உண்மையறியும் முறை :** பதி (ஒளி), மலம் (இருள்), மாயை (உலகம்) என்பவற்றின் வேறுபாடு காண ஞானக்கண்ணே பயன் தரவல்லது.

**7. சதசத்து :** முப்பொருள்கள் சத்து, சதசத்து, அசத்து+ என்று விதந்து கூறப்படும். பதி – சத்து, இயல்பாகவே பாசங்களின் நீங்கியது. பாசம்– அசத்து, அல்பொருள், அறிவு அல்லாதது, சடப் பொருள்; பசு – சதசத்து, பதியைச் சாரப் பாசம் நீங்கப் பெறும்; பாசத்தைச் சார அறிவு இல்லாத சடப் பொருள் போலாகிவிடும்.

**8. சதசத்து என்னும் கருத்து விளக்கம் :** கண்ணாடி, பளிங்கு, என்பன போல ஆன்மா மலத்தைச் சார அறியாமையையும் அருளொளியைச் சார உண்மை விளக்கத்தையும் பெறும்.

**9. மாறுபடக்காணல் :** ஆந்தைக்குப் பகலொளி இருளாகவும் இரவிருள் ஒளியாகவும் மாறுபடத் தோன்றுவது போல ஆன்மாவின் ஊனக் கண்ணுக்குப் பதி பொய் போலவும் பாசம் (மலம்) மெய்போலவும் மாறுபடத்தோன்றும்.

**10. பிறவித்தொடர் நீங்கும் வழி :** ஆன்மாவின் பிறவித் துயர் தொடக்கமில்லாத ஒரு தொடர்கதை. திருவருளே இத் துயர் துடைக்கவல்லது என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளலே அத்தொடர்கதைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வழியாகும்.

## பயிற்சி

(அ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆன்மாக்களில் திரிமலத்தார் என்போர் யார்?
2. ஐம்பொறிகளும் எவை?
3. ஆன்மா சதசத்து எனப்படுவதேன்?

# (ஈ) மூன்றாம் அதிகாரம்

## (3) இருண்மலநிலை

### (ஆணவத்தின் இயல்பு, இருள் மலம் - இருள்போன்ற ஆணவம்)

1. துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்றென்ப(து) எவ்வாறும் இல்.

**பொருள்**

தொடரும் பிறவித்துன்பமும் முத்தியின்பமும் (முறையே) அவற்றுக்குக் காரணமான மலங்களும் பதியும் இல்பொருள் என (நாத்திகவாதம்) கூறுவது எப்பிரமாணத்தின் அடிப்படையில் பரிசீலித்தாலும் உண்மையாகாது.

**விளக்கக் குறிப்புக்கள்**

துன்றும் - நெருங்கிவரும், தொடர்ந்துவரும்; பவம்-பிறவி, இன்பு -பேரின்பம், முத்திமின்பம்; துணைப்பொருள்-காரணமான பொருள்; பிறவிக்குக் காரணமான பாசமும் முத்திக்குக் காரணமான பதியும்; இன்று என்பது-இல்லை என்று கூறுவது, நாத்திகம் பேசுவது; எவ்வாறு - எந்த வழி, சுருதி, யுக்தி, அனுபவம் என்னும் மூன்றும்; அளவைகள் அல்லது பிரமாணங்கள் என்பன இம்மூன்றிலும் அடங்கும். இல்-இல்லை, உண்மையாகாது. பதி, பாசம், முத்தியின்பம், பிறவித்துன்பம் என்பன உள்பொருள்கள் ஆகும்.

2. இருளான(து) அன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

**பொருள்**

உலகப் பொருள்கள் எல்லாம் வேறுபாடு காணமுடியாத வாறு ஒரே பொருள் போலத் தோன்றச் செய்யும், மறைக்கும்

சக்தியுள்ள பொருள் இருட்டே ஆகும். அவ்வாறு மறைக்கும் சக்தியுள்ள பொருள் வேறு எதுவும் இல்லை. (ஆணவம் மெய்ப் பொருளை மறைக்கும் சக்தியுள்ளது என்பது குறிப்புப் பொருள்.)

### விளக்கக் குறிப்புக்கள்

இருளானது - இருள், இருட்டு, ஆனது (சொல்லுருபு); எவையும் -உலகப் பொருள்கள், உருவப் பொருள்கள்; ஏகப் பொருள் - ஒரே பொருள், இருள்மயம், வியாபிக்கும் கருமை; நிற்கும்- மறைத்து நிற்கும், மறைக்கும்.

**3. ஒரு பொருளும் காட்டா(து) இருளுருவம் காட்டும்**
**இருபொருளும் காட்டா(து) இது.**

### பொருள்

தூல இருள் அல்லது பூத இருள் பிறபொருள் எதனையும் வேறுபாடு புலப்படக் காட்டமாட்டாது. எனினும், தன் கருமையாகிய நிறத்தின் வடிவத்தைக் காட்டும். ஆனால் சூக்கும இருள் என்னும் ஆணவ மலம் பிறபொருள்கள், தன் இயல்பு ஆகிய இரண்டையும் புலப்படுத்துவது அல்லது காட்டுவது இல்லை.

### விளக்கக் குறிப்புக்கள்

ஒரு பொருள் - பிறபொருள், வடிவமுள்ள பொருள், காட்சிப் பொருள்; இருள்- தூல இருள், பூதஇருள்; உருவம் - வடிவம், கண்ணுக்குத் தெரியும் கருநிறப் பரவல்; இது; ஆணவம்; சூக்கும இருள்; கருத்துப் பொருள்; இரு பொருள்கள்- 1. பிறபொருள்கள் (சிவம், முத்தி) 2. தன் இயல்பு (மறைப்பாற்றல்). எனவே, ஆணவம் தூல இருளினும் கொடியது.

**4. அன்றளவி உள்ளொளியோ(டு) ஆவி யிடையடங்கி**
**இன்றளவும் நின்ற(து) இருள்.**

## பொருள்

ஆணவம் அநாதி காலந் தொடங்கியே முத்தியடையும் வரை ஆன்மாவோடு சார்ந்து உள்ளது. உள்ளொளி என்னும் பதி ஆன்மாவோடு நிற்பினும் ஆணவம் பதியைச் சாராமல் ஆன்மாவை மட்டும் சார்ந்து நிற்கும்.

## விளக்கக் குறிப்புக்கள்

அன்று - அநாதி, இன்று - முத்திப்பேறு ஆகிய காலம், அளவி -கலந்து, சார்ந்து; உள்ளொளி - பதி, ஆன்மநாயகன், ஆவி - உயிர், ஆன்மா; ஆவியிடை - ஆன்மாவிடம், ஆன்மாவோடு, இருள் -ஆணவம், அடங்கி நின்றது எனக் கூட்டுக. தன்னியல்பை வெளிப்படுத்தாது ஆன்மாவின்கண் நின்றது.

ஆன்மாவோடு பதியும் பாசமும் சேர்ந்து நிற்கும் போது பாசமாகிய ஆணவம் பதியைச் சாராது ஆன்மாவை மட்டும் சார்ந்து அடங்கி நிற்கும்.

**5. பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குன்(டு) என்றும்
கணவர்க்குந் தோன்றாத கற்பு.**

## பொருள்-தொகுப்பு

ஆணவம் என்னும் பெண் எண்ணில்லாத ஆன்மாக்களைச் சார்ந்து இருந்தாலும், தான் சார்ந்துள்ள தலைவனான ஆன்மாவுக்குத் தனது உண்மையியல்பை வெளிப்படுத்தாது இருக்கும் மறைப்பாற்றல் உள்ளது.

## விளக்கக் குறிப்புக்கள்

பலர் - பல ஆன்மாக்கள், எண்ணற்ற ஆன்மாக்கள்; இருட்பாவை - ஆணவம் ஆகிய பெண்; கணவர் - தலைவர், ஆன்மா; கற்பு-மறைப்பு; ஆற்றல், சக்தி

ஒரே ஆணவம் எல்லா ஆன்மாக்களிடமும் சார்ந்துள்ளது. ஆனால் எண்ணற்ற ஆன்மாக்களில் ஒன்று கூட ஆணவப் பிணிப்பை உணருவதில்லை. ஆணவத்தின் மறைப்பாற்றலின் கொடுமையை இக்குறட்பா ஓர் உருவகம் மூலம் விளக்குகிறது.

6. **பன்மொழிகள் என்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது.**

## பொருள்

ஆன்மா மெய்யுணர்வு பெறாது உழலும் மயக்கம் ஆணவம் என்னும் சூக்கும இருளின் விளைவே ஆகும். எனவே, ஆணவத்தின் கொடுமை பற்றி விரிவாகப் பல சொற்களினாலே தரும் விளக்கம், பயன் எதுவும் தரப்போவது இல்லை.

## விளக்கக் குறிப்புக்கள்

*பன்மொழிகள் - பலசொற்கள்; என் - என்ன பயன்? அறியும் பான்மை - மெய்யுணர்வை அறியும் வழிவகை; தெரியாத தன்மை - மயக்கம்; இருளார் - இருள், ஆணவம். (இகழ்ச்சிக் குறிப்பு.)*

7. **இருளின்றேல் துன்பேன் உயிரியல்பேல் போக்கும்**
**பொருளுண்டேல் ஒன்றாகப் போம்.**

## பொருள்

(அ) ஆணவம் என்னும் மலம் இல்லையானால் ஆன்மாவுக்குப் பிறவித் துன்பம் ஏன் உண்டாக வேண்டும்? (உண்டாகாது.)
(ஆ) ஆணவம் ஆன்மாவின் குணமானால் அந்த ஆணவத்தை இல்லாதொழித்துவிடும் பொருள் கிடைத்தால் ஆணவமும் ஆன்மாவும் ஒன்றாகவே ஒழிந்து போகும்.

## விளக்கம்

### முடிபு

(அ) ஆன்மாவைப் பற்றியுள்ள பிறவித்துன்பம் மறுக்கவியலாத உண்மையாகும். எனவே, ஆணவம் என்னும் மலம் உள்பொருள் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய முடிபு ஆகும்.
(ஆ) புகையும் கருமையும் போல, ஆன்மாவும் ஆணவமும், குணியும் குணமும் என்றால், இல்லாதொழிக்கும் பொருள்

கிடைத்ததும் புகையும் கருமையும் ஒன்றாய் நீங்குவதுபோல, ஆன்மாவும் ஆணவமும் இல்லாதொழிய வேண்டும். ஆனால், ஆன்மாவும் ஆணவமும் அவ்வாறு அழிந்து ஒழிந்து போவன அல்ல; இரண்டுமே உள்பொருள்கள். எனவே, ஆணவம் ஆன்மாவின் இயல்பு அல்ல, செம்பில் களிம்பு போன்ற அழுக்கே என்னும் உண்மை ஏற்க வேண்டிய தருக்கமுடிபு ஆகும்.

இருள்-ஆணவம்; இன்றேல் - இல்லையானால்; துன்பு-துயரம்; பிறவித் துன்பம்; ஒன்றாகப் போம் - ஒன்றாகவே (ஒருங்கே) ஒழிந்து போகும்.

8. **ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை**
**பேசாது கவ்வும் பிணி.**

## பொருள்

1. ஆணவம் ஆன்மாவைப் பற்றிக்கொள்ளும் செயலுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தைத் தொடக்கமாகக் கூறலாமென்றால் அம்மலப்பிணிப்பின் காரணம் என்ன?

2. தொடக்கத்தில் ஒரு காரணமும் இல்லாமல் ஆணவம் ஆன்மாவைப் பற்றிக்கொண்டதென்றால் முத்தி நிலையிலும் ஆன்மாவிடம் மலப் பிணிப்பு நிகழலாம் அல்லவா?

## விளக்கம்

### முதல் வாதம் தொடர்பான மறுப்பு

1. ஆணவம் ஆன்மாவை இடையிலே ஒரு காலத்தில் பற்றிக் கொண்டது என்று சொல்லத் தருக்கரீதியாக ஏற்கத்தக்க காரணம் எதுவும் இல்லை. ஆகவே, ஒரு காரணத்தை முன்னிட்டு ஆணவம் ஆன்மாவை இடையில் பற்றிக் கொண்டது என்பது பொருந்தாது.

### இரண்டாம் வாதம் பற்றிய மறுப்பு

2. ஆணவப் பிணிப்பு என்பது காரணமில்லாக் காரியம். இவ் வாதம் முத்திக்கு முந்திய தொடக்க நிலைக்குப் பொருந்துவது போல முத்தி நிலைக்கும் பொருந்த வேண்டும்.

இந்த வாதம் முத்திநிலை என்பது மலபரிபாகம் அடைந்த நிலை. இது அடிப்படைக் கோட்பாட்டுக்கு முரணாக உள்ளது. ஆகவே, முத்திநிலையில் காரணமில்லாக் காரியமாக ஆணவம் ஆன்மாவைப் பற்றிக் கொள்ளும் என்பதைத் தருக்கரீதியாக ஏற்றுக்கொள்ள இயலாது.

### முடிவான கருத்து

எனவே, ஆணவப் பிணிப்பு என்பது அநாதியான காரியமே தவிர, காரணத்தை முன்னிட்டோ, காரணமில்லாமலோ இடையில் நிகழும் காரியம் அல்ல என்னும் உண்மையே முடிவான கருத்து அல்லது முடிந்த முடிபு அல்லது சித்தாந்தம் ஆகும்.

ஆசு-குற்றம், மலம், ஆணவம்; ஆதி-தொடக்கம்; என்-என்ன?- பேசாது - காரணம் கூறாமலே, கவ்வும் - பற்றிக் கொள்ளும், பிணி ஆணவம்

**9. ஒன்று மிகினும் ஒளிகவரா தேலுள்ளம்**
**என்றும் அகலாது இருள்.**

## பொருள்

ஆன்மா மாயையின் காரியமான உடம்பை ஒரு சாதனமாகப் பெற்றுள்ளது. இந்தச் சாதனம் கிடைத்தபோது, ஆன்மா திருவருளால் கவரப்படாவிட்டால், ஆணவம் ஆன்மாவை விட்டு ஒருபோதும் நீங்காது.

### விளக்கக் குறிப்புக்கள்

ஒன்று-உடல் என்னும் ஒரு சாதனம்; ஒளி - திருவருள்; உள்ளம் - ஆன்மா; இருள்- ஆணவம்.

மாயையின் பயன்பாடு இக்குறட்பாவிற் கூறப்படுகின்றது. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" - நாவலர்

**10. விடிவாம் அளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து.**

### பொருள்

*மாயா காரியமான உடல் முதலிய சாதனங்கள் ஆன்மாக்கள் முன்செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப வாய்த்து, விடியும் வரை இருள் நீக்கும் விளக்குப் போல அவ்வான்மாக்களுக்குப் பயன் தரும்.*

### விளக்கக் குறிப்புக்கள்

*வடிவாதி-வடிவு + ஆதி - உடல் முதலியன - உடல், உறுப்புக்கள், உலக வாழ்விடம், உலக போகங்கள்; கன்மம் - வினை; பாவ புண்ணியங்கள்; வடிவாம் அளவு விளக்கு- விடிவிளக்கு; அனைய - போன்றன, போலப் பயன்படுவன.*

*மாயா காரியங்களுக்கும் கன்மங்களுக்கும் உள்ள தொடர்பு கூறப்பட்டுள்ளது.*

## அதிகாரத் தொகுப்பு

### ஆணவத்தின் இயல்பு

1. **உள்பொருள் :** *பிறவித் துன்பம், முத்தி இன்பம் என்பவற்றின் காரணங்களான பதியும் பாசமும் உள்பொருள்கள் ஆகும். எனவே, பாசங்களில் ஒன்றான ஆணவம் உள்பொருளேயாம்.*
2. **ஆணவம் இருள் போன்றது :** *உலகப் பொருள்களை மறைத்துக் கருமை மயமாக்கும் இருள் போன்றது ஆணவம்.*
3. **ஆணவம் இருள் வேறுபாடு :** *இருள் பிற பொருள்களை மறைக்கும் தன் கருநிறப் படர்ச்சி வடிவத்தைக் காட்டும். ஆனால், ஆணவம் சிவம், முத்தி என்னும் பிற பொருள்களை யும் மறைப்பாற்றல் ஆகிய தன்னியல்பையும் காட்டாது.*
4. **ஆணவச் சார்பு வேறுபாடு :** *பதியும் பாசமான ஆணவமும் ஆன்மாவோடு சார்ந்திருப்பினும் ஆணவம் பதியைச் சாராமல் ஆன்மாவை மட்டும் சார்ந்து அடங்கிநிற்கும்.*

5. **மறைப்பாற்றலின் கொடுமை :** எண்ணற்ற ஆன்மாக்கள் எல்லாவற்றையும் ஆணவம் சார்ந்திருப்பினும், அது தனது உண்மையியல்பை ஓரான்மாவுக்குக் கூட வெளிப்படுத்தாத கொடுமையும் கடுமையும் உடையது.

6. **அறியாமையின் மூலம் :** ஆன்மாக்கள் மெய்யுணர்வு பெறாது உழலும் அறியாமை ஆணவத்தின் விளைவேயாகும். அதாவது அறியாமையின் மூலமே ஆணவம்தான்.

7. **பிறவித் துயரின் காரணம் :** ஆன்மாக்களின் பிறவித் துன்பத்தின் காரணம் ஆணவம் ஆகும். அது செம்பிற் களிம்பு போன்ற அழுக்கு ஆகும்.

8. **அநாதி :** ஆணவம் இடையில் ஆன்மாவை அடைந்த பொருள் இல்லை. ஆணவ மலப் பிணிப்பு அநாதியான காரியமாகும்.

9. **மாயையின் பங்கு :** ஆணவ வலியை அடக்கும் திருவருளை ஈட்டிக்கொள்ளப் பயன்படும் சாதனம் மாயா காரியமான உடம்பு ஆகும்.

10. **கன்மத்தின் பங்கு :** ஆணவத்தை அடக்கும் திருவருளை ஈட்டிக்கொள்ளப் பயன்படும் மாயாகாரியங்கள், பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே ஆன்மாக்களுக்கு அமைகின்றன. எனவே, ஆணவத்தை அடக்கும் பணியில் மாயையும் கன்மமும் விடிவிளக்குப்போல ஒரு வரையறைக்கு உட்பட்ட பங்களிப்பே செய்கின்றன.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக).

1. ஆணவத்தின் இயல்பு யாது?
2. ஆணவம் ஆன்மாவுடன் எவ்வாறு கலந்துள்ளது?
3. விடிவாமளவும் விளக்குப் போன்றது எது?

# (உ) நான்காம் அதிகாரம்

## (4) அருளது நிலை

**(ஆணவத்தின் வலியை அடக்கும் திருவருளின் இயல்பு.)**

1. **அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளில் தலையிலது போல்.**

### பொருள்

இவ்வுலகில் (வாழ்க்கை நலத்திற்கு) இன்றியமையாத பொருட் செல்வத்தைவிட மேலான பொருள் இல்லாதது போல (அவ்வுலக முத்தி நலத்திற்கு) இன்றியமையாத திருவருளை விட மேலான பொருள் இல்லை.

### விளக்கக் குறிப்புக்கள்

அகிலத்து - உலகத்தில், இவ்வுலகில்; வேண்டும்-தேவைக்கு வேண்டப்படும்; இன்றியமையாத; பொருள்-பொருட் செல்வம், தலை-மேலானது, இலது - இல்லாதது.
"பொருளில் தலை இலது போல் அருளில் பெரியது இலது" என இலது என்ற சொல் இரு சந்தர்ப்பங்களிலும் இணைந்து கருத்தைத் தெளிவுபடுத்துகிறது. பொருள் இல்லாவிடின் இவ்வுலக வாழ்வு இல்லை, அருள் இல்லாவிடில் அவ்வுலக வாழ்வு இல்லை. பொருள் வறுமையின் கொடுமையை அடக்கும், அருள் ஆணவ வலியை அடக்கும்.

2. **பெருக்க நுகப்வினையாய் பேரொளியாய் எங்கும்
அருக்கனென நிற்கும் அருள்.**

### பொருள்

திருவருள் (மெய்யுணர்வைப்) பெருக்கவும் வினைப்பயனை அநுபவிக்கவும் துணைபுரியும் ஞானசூரியனின் மேலான ஒளியாக எல்லா ஆன்மாக்களிடமும் காணப்படும்.

### விளக்கக் குறிப்புக்கள்

பெருக்க - வளர்க்க, மெய்யுணர்வைப் பெருகச் செய்ய; நுகர வினை-வினை நுகர, தீர்க்க வேண்டிய வினைப் பயனை அனுபவிக்க; எங்கும் - எல்லா இடமும், எல்லா ஆன்மாக்களிடமும், அருக்கன் - சூரியன், ஞானசூரியன்; ஞானசூரியன் ஆகிய பதியின் பேரொளியாய் அருள் எல்லா உயிர்களிடமும் காணப்படும்.

**3. ஊனறியா தென்றும் உயிரறியா தொன்றுமிது**
**தானறியா தாரறிவார் தான்.**

### பொருள்

உடல் எக்காலத்திலும் உண்மை எதனையும் அறியமாட்டாது. (உடலை ஏற்கும்) உயிர் ஒரு பொருளையும் (தானாக) அறியமாட்டாது. (ஞானசூரியனின் பேரொளியான) இத்திருவருள் உணர்த்தாமல் எப்பொருளின் உண்மையையும் தானாகவே அறிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவர் யார்? (யாருமில்லை).

### விளக்கக் குறிப்புக்கள்

ஊன் - சதை, சதையாலான உடல்; என்றும் - எக்காலமும்; உயிர் அறியாது- ஆன்மா தானாகவே அறியமாட்டாது, இது இப்பொருள், பதியின் பேரொளியான இவ்வருள், அறியாது அறி(வி)யாது; இடைக்குறை என்னும் விகாரம்; ஆர் - எவர், யார்; அறிவார் தான் - தான் அறிவார் என மாற்றுக; தானாக அறியும் ஆற்றலுள்ளவர். சடப் பொருளான உடல் அறிவில்லாதது; உயிர் அறிவுப் பொருளாயினும் திருவருள் உணர்த்த உணரும் சிற்றறிவு உடையது ஆகும்.

**4. பாலாழி மீனாளும் பான்மைத் தருளுயிர்கள்**
**மாலாழி யாழும் மறித்து.**

### பொருள்

அருள் ஆகிய கடலில் வாழ்கின்ற ஆன்மாக்கள் அவ்வருளைப் புரிந்துகொள்ளாமல், ஐம்புல மயக்கம் என்னும்

கடற் சதுப்பில் மீண்டும் மீண்டும் ஆழ்ந்து / புதைந்து விடுகின்றன. இச்செயல் திருப்பாடற்கடலில் வாழ்கின்ற மீன்கள் அப்பாலின் உயிர்ப் பயனைப் புரிந்துகொள்ளாமல், உடற் பயனை நாடி இரைக்காக நீந்தும் வெறுஞ் செயலில் மேலோங்குதலை நிகர்க்கும்.

## விளக்கக் குறிப்புக்கள்

பாலாழி - பாற்கடல்; ஆளும்- ஆட்சி புரியும், மேலோங்கும், பான்மைத்து- இயல்பை உடையது, நிகர்க்கும்; மால் - மயக்கும், ஐம்புலமயக்கம்; ஆழி-கடல், கடலின் சதுப்பு (ஆகுபெயர்), ஆழும் - ஆந்துவிடும், புதைந்துவிடும்; மறித்து - திரும்பத்திரும்ப, மீண்டும், மீண்டும்.

**5. அணுகு துணையறியா ஆற்றோனில் ஐந்தின்**
**உணர்வை உணரா துயிர்.**

## பொருள்

தன்னை நெருங்கிவரும் வழித்துணையை அறிந்து கொள்ளாத வழிப்போக்கனைப் போலவும், தமது புலச் செயல்களை இயக்கும் ஆன்மாவின் துணையை அறியாத ஐம்பொறிகளைப் போலவும் உயிர்க்குயிராய் விளங்கும் அருளின் உண்மையை ஆன்மா உணர்வதில்லை.

## விளக்கக் குறிப்புக்கள்

அணுகு துணை - நெருங்கிவரும் வழித்துணை; ஆறு- ஆற்றோன் - வழி, வழிப்போக்கன், பாதைசாரி, பிரயாணி; ஐந்து-ஐம்பொறிகள் (ஆகுபெயர்), மெய், வாய், கண், மூக்கு, செவி; உணர்வு - மெய்யுணர்வைத் தருவது, திருவருள் (காரிய ஆகு பெயர்).

**6. தரையை அறியாது தாமே திரிவார்**
**புரையை உணரா புவி.**

### பொருள்

நிலத்தின் உலகியற் பயன்களை அறிந்துகொள்ளாமல் செருக்குடன் திரிகின்றமையினால் திருவருளின் பயனை உணருவதில்லை.

### விளக்கக் குறிப்புக்கள்

தரை-நிலம், நிலத்தின் உலகியற் பயன்கள், உலகியல் வாழ்வின் ஆதாரம். தாமே திரிவார் - நான் என்னும் செருக்குடன், அதாவது அகந்தையுடன் திரிகின்றவர்கள்; புரைய - போல (உவம உருபு); புவி - உலகு, உலகிலுள்ள உயிர்கள்; உணரா - அருளை, அருளின் பயனை உணர்வதில்லை.

7. மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானந்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.

### பொருள்

மலையின் நின்று கொண்டு அதனைத் தேடுவோர், நிலத்தில் நின்று கொண்டு அதனைத் தேடுவோர், வானத்தில் இயங்கிக் கொண்டு அதனைத் தேடுவோர், ஞானத்தின் உச்சியில் அதாவது திருவருளில் நின்று கொண்டு அதனைத் தேடுவோர் ஆகிய நால்வகை அறிவிலிகளும் தம்மைத் தாமே காணவில்லையே என்று தேடும் முழு மூடர்கள் ஆவர்.

### விளக்கக் குறிப்புக்கள்

கெடுத்தோர் - இழந்ததாக மயங்கித் தேடுபவர், கெடுதல் தொலைந்து போதல், இழந்துவிடல்; கெடுத்தல் - தொலைத்து விடுதல்

கெடுத்தோர் இருவகையினர்.

1. உள்ள பொருளைக் காணவில்லை எனத் தேடுபவர்.
2. உடைமைப் பொருளைத் தொலைத்துவிட்டு, அதனை அடையத் தேடுபவர்.

உள்பொருளை இல்பொருள் எனக் கருதல் அறியாமை ஆகும். பொதுப் பொருளைத் தன் பொருளாகக் கருதலும், அதனை இழந்துவிட்ட பாவனையுடன் மீண்டும் பெற்றுக்கொள்ளத் தேடுதலும் மமகாரத்தைச் சார்ந்த அறியாமையாகும்.

மலை, மண், விண் என்னும் கட்புலப் பூதங்களைத் தேடுதல் அறியாமை என்னும் குற்றம் ஆகும். ஞானத்தின் உச்சியில் அதாவது அருள் என்னும் உயிராதாரத்தின் மீது வாழ்ந்துகொண்டு, அதனை உணராமல் தேடுதல் பெருங் குற்றம் ஆகும். தன்னையே காணவில்லை என்று தேடும் தற்கேடரின் நகைப்புக்குரிய தேடல் மிகப் பெரிய குற்றம் ஆகும். எனவே, இந்த நால்வகை அறிவிலிகளும் தன்னைத்தான் தேடும் மூடர்களாயும் முழு மூடர்கள் என்று கருதத்தக்க நகைப்புக் குரியவர்களாயும் இருக்கின்றனர்.

**8. வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்**
**கள்ளத் திறைவர் கடன்.**

## பொருள்

பக்குவ நிலை அடையாத ஆன்மாக்கள் எங்கும் சூழ்ந்துள்ள அருள் வெள்ளத்தின் இடையில் வாழ்ந்துகொண்டு, நாவரட்சி அடைந்து நீர்த்தாகத்தால் வருந்துதலும், முத்தி என்னும் விடிவைத் தரும் அருளொளியின் கதிர்கள் எங்கும் பரவிய போதும், ஒரே இருட்டாய் உள்ளதென்று சொல்லுதலும் ஆந்தைக் கண் பார்வை உள்ள அந்த ஆன்மாக்கள் ஆணவம் ஆகிய வஞ்சகத்தில் தலைமை தாங்கும் முறைமையின் வெளிப்பாடு ஆகும்.

## விளக்கக் குறிப்புக்கள்

வெள்ளம் - அருள் வெள்ளம், கருணைப் பெருக்கு; தாகம் - முத்தித் தாகம்; விடிவு - முத்தி; இருள் - இருட்டு, அருளொளியைக் காணாத குருட்டுத்தனம்; மாறுபாடு, ஆந்தையின் கண் பார்வையிலுள்ள போன்ற குறைபாடு.

கள்ளத் தலைவர் - கள்ளத் தனம் அல்லது வஞ்சகம் மிக்க ஆன்மாக்கள்; மலபரிபாகம் அடையாத ஆன்மாக்கள்; கள்ளத் தனம்-அகங்காரம், மமகாரம் என்பன; அகந்தை, மமதை, யான், எனது என்னும் செருக்கு; கடன் -முறைமை, முறைமையின் வெளிப்பாடு.

9. **பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூஞை**
**கரப்பருந்த நாடுங் கடன்.**

## பொருள்

பால் நிறைந்த மூடப்பட்ட பாத்திரத்தின் மேல் உள்ள பூனை, அண்மையில் பால் இருப்பதை அறிந்துகொள்ளாமல், தொலைவில் ஊர்ந்து திரியும் கரப்பானைப் பிடித்துண்பதற்காக அதனை நாடிச் செல்லும். அம் முறைமையில் காணப்படும் அவசரம் போன்ற பரபரப்பு அடங்க, மனவமைதி பெற்று விருப்பத்தோடு திருவருளின் பெருமையை அல்லது பயனை, அதனைப் பெற்ற மேலோரிடம் கேட்டறிக.

## விளக்கக் குறிப்புக்கள்

பரப்பு - பரபரப்பு (முதற்குறை); அமைந்து - மனவமைதி பெற்று; கேண்மினிது-கேண்ம்+இனிது-இனிது கேளும் - விருப்புடன் கேட்டறிக. கேளும் - கேள்ம் - கேண்ம். இடைக்குறையை அடுத்த திரிபும் மகரக்குறுக்கமும். கலன் - பாத்திரம், பூஞை - பூனை; கரப்பு - கரப்பான் பூச்சி; கடன் - முறைமை; முறைமையிற் காணப்படும் அவசரம்.

பூனை அறியாமையினால் பாலையும் அவசரத்தினால் கரப்பானையும் இழந்துவிடுகின்றது. எனவே, பால் போன்ற திருவருளின் பயனை அல்லது பெருமையை அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மா, கரப்பான் போன்ற அற்ப பொருள் மீது நாட்டம் செலுத்தாமல், பரபரப்பின்மை, மனவடக்கம், விருப்பம் என்னும் பண்புத் தகைமைகளை வளர்த்து, மேலோர் உபதேசத்தைப் பெற்றுக்கொண்டால், திருவருளின் பெருமையை அல்லது பயன் பற்றிய அறிவை ஈட்டிக்கொள்ளலாம்.

10 இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கம் இல்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

### பொருள்

திருவருள் என்னும் ஆதாரம் அநாதி தொடக்கம் இன்று வரையும் எல்லா ஆன்மாக்களிடமும் பொருந்தியிருப்பினும், அவ்வான்மாக்களிலே திருவருளோடு சிறிதாயினும் அனுபவத் தொடர்புகொள்ளமுயலாத, மெய்யுணர்வு வெறுமை உள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின்பம் வேண்டாத பொருளே ஆகும். (எனவே, அருளின் பழக்கத் துணை முத்திக்கு அவசியம் ஆகும்).

### விளக்கக் குறிப்புக்கள்

இற்றை வரை -இன்றளவும், ஏதும் - சிறிதாயினும், பழக்கம் - அநுபவத் தொடர்பு; இல்லா - முயற்சி இல்லாத, முயலாத; வெற்றுயிர் - மெய்யுணர்வு இன்மை ஆகிய வெறுமை உள்ள ஆன்மாக்கள்; மிகை - தேவைப்படும் அளவுக்கு மேற்பட்ட அளவுள்ள பொருள், வேண்டப்படாத பொருள்.

## அதிகாரத்தொகுப்பு
## திருவருளின் இயல்பு

1. **அருளின் பெருமை :** உலக வாழ்க்கை நலத்திற்குப் பொருட் செல்வத்தை விட மேலான பொருள் இல்லாதது போல, முத்தி நலத்திற்கு அருட் செல்வத்தை விட மேலான பொருள் இல்லை.
2. **அருள் மேலான ஒளி :** திருவருள் மெய்யுணர்வைப் பெருக் கவும் வினைப் பயனை அனுபவிக்கவும் ஆன்மாக்களுக்குத் துணை புரியும் மேலான ஒளியாகும்.
3. **உண்மையை உணர்த்துவது அருள்:** திருவருள் உண்மையை உணர்த்தாவிடில் ஆன்மா அதனைத் தானாக உணராது.

4. **அருளை அறியாமையின் விளைவு :** திருவருளைப் புரிந்து கொள்ளாமை ஆன்மாக்களை ஐம்புல மயக்கத்தில் புதைத்து விடும். இந்நிலை பாற்கடல் மீன்கள் பாலின் உயிர்ப் பயனை அறிந்துகொள்ளாமல், உடற் பயனுக்காக இரையைத் தேடும் வெறுஞ் செயலில் ஈடுபடுதலை நிகர்க்கும்.

5. **அறியாமை வழித்துணையை அறியாத வழிப்போக்கன் :** வழித்துணையை அறிந்துகொள்ளாத வழிப்போக்கனைப் போலவும், ஆன்மாவின் துணைஅறியாத ஐம்பொறிகளைப் போலவும் ஆன்மா அருளின் உண்மையை உணருவதில்லை.

6. **அறியாமை – நிலம் ஆதாரமாதலை அறியாத செருக்குடையார்:** நிலத்தின் பயன்பாட்டை அறியாமல் செருக்குடன் திரிபவர்கள் போல, ஆன்மாக்கள் இருள் மலம் தந்த அறியாமையினாலே திருவருளின் பயனை உணருவதில்லை.

7. **அருள் உயிராதாரம் :** திருவருள் உயிரின் ஆதாரமாகும். இவ்வுண்மையை உணராமல் அதனைத் தேடுதல் மலை, மண், விண் என்பவற்றில் நின்றும் இயங்கியும் அவற்றைத் தேடுதலைப் போலவும் தன்னைத்தான் காணாது தேடுதல் போலவும் முழுமூடச் செயல் ஆகும்.

8. **அருட்பயனுக்கு மலபரிபாகம் அவசியம் :** அருள் வெள்ளத்தில் வாழ்ந்து கொண்டு தாகத்தால் வருந்துதலும், அருளொளிக் கதிர்கள் எங்கும் பரவியபோதும் ஒரே இருட்டாய் உள்ள தென்று சொல்லுதலும் ஆன்மாக்கள் மலபரிபாகம் அடையாமையின் வெளிப்பாடு ஆகும்.

9. **அருட்பயனை அடையும் நுட்பம் :** அற்பபொருளில் நாட்ட மின்மை, பரபரப்பின்மை, மனவடக்கம், மெய்யுணர்வில் விருப்பம் என்னும் தகைமை வளர்ச்சி, மேலோர் உபதேசம் என்பன திருவருளின் பயனை அடையும் நுட்பத்தின் அங்கங்கள் ஆகும்.

10. **அருட் பயன் ஆன்ம முயற்சியின் பேறு :** திருவருள் எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாயிருப்பினும் வெற்றுயிராய் வாழாது அவ்விருளோடு சிறிதாயினும் பழக்கம் கொள்ள முயற்சி செய்யும் நல்லுயிர்களுக்கே முத்தி அடையக்கூடிய நிலையாகும்; வெற்றுயிர்களுக்கு முத்தி வேண்டாப் பொருளாய்விடும்.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.

1. அவ்வுலக முத்தி நலத்திற்கு இன்றியமையாத பொருள் எது?
2. ஆன்மா திருவருளின் பயனை உணராமைக்குக் காரணம் யாது?

## (ஊ) ஐந்தாம் அதிகாரம்

## (5) அருளுருநிலை

**(கருத்துப் பொருளான திருவருளின் கட்புல வடிவமாகிய குருநாதரின் இயல்பு.)**

1. ***அறியாமை உண்ணின் றளித்ததே காணும்***
   ***குறியாகி நீங்காத கோ.***

### பொருள்

(ஆன்மாக்கள் மலபரிபாகம் அடையும் வரை) அவற்றின் கண்களுக்குப் புலனாகாமல் உயிர்க்குயிராய் நின்று காத்தது ஆகிய திருவருளே (பின்னர்) அவை பக்குவநிலை அடைந்ததும், கண்ணாற் காணக்கூடிய வடிவம் தாங்கி அவ்வான்மாக்களுக்கு உதவுதலின் நீங்காத குருநாதர் ஆகும்.

### விளக்கக் குறிப்புக்கள்

*அறியாமை - அறியாமல் (எதிர்மறை வினையெச்சம்); உண்ணின்று - உள் - நின்று - அந்தர்யாமியாகி, உயிர்க்கு உயிராய் நின்று, அளித்தது - காத்தது, அருட்சக்தி (வினையாலணையும் பெயர்). குறி - வடிவம், கோ-கோமான், குருநாதர்.*

2. ***அகத்துறு நோய்க்(கு) உள்ளினர் அன்றி அதனைச்***
   ***சகத்தவரும் காண்பரோ தான்.***

### பொருள்

வீட்டிலுள்ள ஒருவரின் பிணியினை அவருடன் அங்கு உள்ளவர் அல்லாமல் உலகிலுள்ள, தொடர்பற்ற பிறர் அறிவார்களா? (அறியமாட்டார்கள்.)

### விளக்கக் குறிப்புக்கள்

ஒருவரைப் பற்றியுள்ள ஆணவமலம் என்னும் பிணியை அவரோடு தொடர்பு பூண்ட அருளின் உருவமான குருநாதர் மட்டுமே அறிவார். அதன் வலியடக்கி உபகரிப்பார்.

நோய்க்கு - நோயை, ஆணவத்தை (வேற்றுமை உருபு மயக்கம்) உள்ளினர் - இங்கு குருநாதரைச் சுட்டுகின்றது; சகத்தவர்- உலகினர், பக்குவநிலையற்ற பிற ஆன்மாக்கள்.

3. **அருளா வகையால் அருள்புரிய வந்த**
**பொருளார் அறிவார் புவி.**

### பொருள்

அனைவரும் வெளிப்படையாக அறியாத வகையில் மறைமுகமாக 'அருளல்' என்னும் தொழிலை விரும்பிச் செய்ய வந்த பரம்பொருளின் வடிவமான குருநாதரை உலகில் அறியும் தகுதி பெற்றவர் யார்? (பக்குவநிலை அடைந்த சீடரே அறிவர்.)

### விளக்கக் குறிப்புக்கள்

அருளா(த) வகையில் - வெளிப்படையாக வழங்கலை யறியாத வகையில், புரிய - செய்ய, விரும்ப, விரும்பிச் செய்ய; பொருள்-செம்பொருள், பரம்பொருள், பரம்பொருளின் வடிவம்; ஆர், யார், எவா. அறிவார்- அறியத்தக்கவர். புவி - பூமி, பூமியில். (வேற்றுமையுருபு கெடுதல் விகாரம்).

4. **பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா(ம்)**
**மெய்யிரண்டும் காணார் மிக.**

### பொருள்

உலகியல் இன்பம் ஆகிய பொய்ம்மையும் ஆணவ இருளும் கொண்ட சித்தத்தை(த் தெளிவிக்கும்) நல்லறிவுப்பேறு

இல்லாதவர்கள், திருவருள், அருளுருவான குருநாதர் என்னும் மெய்ப்பொருள் இரண்டையும் சிறிதும் புரிந்துகொள்ளமாட்டார்.

### விளக்கக் குறிப்புக்கள்

பொய்- நிலையற்ற உலக இன்பம், இருண்ட -ஆணவ இருள் மூடிய; பொறி - நல்லூழ், நற்பேறு, நல்லறிவு; போதம் - ஞானம், மெய்ம்மை, மெய்ப்பொருள்; மிக - (இங்கே) சிறிதும்.

5. **பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.**

### பொருள்

வனவிலங்குகளை நேர்நின்று கைப்பற்றிக் கொள்ளுவதற்கு அதே இனத்தைச் சார்ந்த பழக்கப்பட்ட விலங்கு அல்லது "பார்வை மிருகம்" ஒன்றைப் பயன்படுத்துதல் போல ('குருநாதர்' என்பவர்) மானிட வடிவம் என்னும் போர்வை தரித்த திருவருளே என்னும் உண்மையைப் பக்குவமில்லாதவரான உலகினர் அறியமாட்டார்.

### விளக்கக் குறிப்புக்கள்

பார்வை - பார்வை மிருகம், பழக்கப்பட்ட விலங்கு; மாக்கள் - வனவிலங்குகள்; போர்வை - போர்வை எனத்தக்க வடிவம்; புவி - உலகினர், பக்குவம் அடையாதோர்.

6. **எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்.**

### பொருள்

எவருக்கு எந்த எந்த நூற்பொருள்கள் தெரியுமோ அந்த அந்தப் பொருள்களை அறிந்துகொள்ளத் தமக்கு ஏற்ற குருநாதராக அவரையே துணையாக அடையவேண்டியிருத்தலால் (குருவினால்) எமக்கு என்ன பயன் என்னும் குதர்க்க வினாவைத் தவிர்ப்பாயாக.

**விளக்கக் குறிப்புக்கள்**

என் – என்ன பயன்? எவனுக்கு – யாருக்கு; எவை – (எந்த) எந்த நூற் பொருள்கள்; அவ்வவ் – அவ் + அவ் – அவை, அவை, அந்த அந்த நூற்பொருள்கள்.

ஒருவர் தாமாக மெய்ஞ்ஞானத்தை அடைதல் அரிது. குருவின் துணை ஞான விளக்கத்திற்கு இன்றியமையாதது என்பது இக்குறட்பாவின் கருத்து ஆகும்.

**7. விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளும்**
**கடனிலிருள் போவதிவன் கண்.**

**பொருள்**

(பாம்பு தீண்டியதால் உண்டான) நஞ்சு மயக்கம் கீரி நேரில் பொருந்தி நிற்பினும் (நீங்காமல்) உண்மையாகத் தன்னைக் கீரியாகப் பாவனை செய்யும் விடகாரியினால் அல்லது மாந்திரீகனால் நீங்கும். இது போல இருண்மலம் ஆன ஆணவம் தன்னைப் பதியாகப் பாவனை செய்யும் குருவின் அருட்பார்வையால் வலி நீங்கப்பெறும்.

**விளக்கக் குறிப்புக்கள்**

விடம் – நஞ்சு, நஞ்சின் மயக்கம்; நகுலம் – கீரி; மெய்ப்பாவகன் – உண்மையாகவே பாவனை செய்பவன்; மீளும் – நீங்கும்; கடனில் – முறைமை போல; இதுபோல, இருள் – இருள் போன்ற ஆணவம், இருண்மலம்; இவன் – குருநாதர்; கண் – பார்வை, அருள்நோக்கு.

**8. அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்கும்**
**சகலர்க்கு வந்தருளும் தான்.**

**பொருள்**

விஞ்ஞானகலர் என்னும் ஒரு மலத்தாருக்கு அவரின் அறிவிலே நின்று, அருமை வாய்ந்த அருள் புரிந்து, மலபரிபாகம்

செய்கின்ற (பதி); பிரளயாகலர் என்னும் இரு மலத்தாருக்கு முன்னிலையாக எழுந்தருளி வந்து ஆணவவலி கெடுத்தலோடு கன்மத்தையும் நீக்கும் (பதி); திரிமலத்தாரில் பக்குவான்மாக்களுக்குக் குருவடிவில் வந்து மலபரிபாகம் செய்து அருள் பாலிப்பார்.

**விளக்கக் குறிப்புக்கள்**

அகலம் – கலை நீங்கின ஆன்மா, விஞ்ஞானகலர்; வினை நீக்கும் – கன்மத்தை ஒழிக்கும்; எனவே, 'பிரளயாகலர்' என்ற பதம் வருவிக்கப்பட்டது. சகலர் – மும்மலத்தார், திரிமலத்தார், வந்து – குருவாக வந்து.

**9. ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.**

**பொருள்**

எல்லா மல பந்தங்களும் நீங்கிய, முத்தி நெறியை அருளுகின்ற, முற்றறிவினரான பதி குருவாக வராவிட்டால், அம்முத்தி நெறியை அறியத்தக்கவர் யார் (எவரும் இல்லை.).

**விளக்கக் குறிப்புக்கள்**

எல்லாம் – மல பந்தங்கள் எல்லாம்; மந்திரம், வர்ணம், பதம், தத்துவம், புவனம், கலை ஆகிய அத்துவாக்கள் எல்லாம்; அகன்ற – நீங்கிய; நெறி – முத்திநெறி, பேரறிவான் – முற்றறிவினர், பதி; வாராத பின் – மானுட வடிவில் வராவிட்டால்; குருநாதராக வராவிட்டால், அறிவார் – அறியும் தகைமை உள்ளவர்; ஆர் – யார், எவர் (எவரும் இல்லை.).

**10. ஞானம் இவனொழிய நண்ணிடும் நற்கலனல்
பானு ஒழியப் படின்.**

**பொருள்**

குற்றமில்லாத சூரிய காந்தக் கல்லிலே, சூரிய ஒளி இல்லாமலே நெருப்புத் தோன்ற முடியுமேயாமின், அருளுருவான குரவர் இல்லாமலே ஞானம் உண்டாதல் கூடும். (இரண்டும் நிகழக்கூடிய சாத்தியம் இல்லை.)

**விளக்கக் குறிப்புக்கள்**

ஞானம் - மெய்யறிவு; இவன் - குரு, குரவர்; நற்கல் - குற்றமில்லாத கல், சூரிய காந்தக்கல்; அனல் - நெருப்பு; பானு - சூரியன்; அனல் - படின் நெருப்புத் தோன்ற முடியுமாயின், குரு இல்லாமல் ஞானம் உண்டாகாது என்பது முடிந்த முடிபு.

**உவமை விளக்கம்**

சூரிய காந்தக் கல்லின் துணை இல்லாமல் சூரியனாற் பஞ்சிலே தீப்பற்ற முடியாது. அது போலக் குருவின் துணை இல்லாமல். பதியின் அருளினால் ஆன்மாவிடம் நேரில் ஞானம் பிறக்காது, கல், குரு என்னும் இரண்டும் துணைக்கருவிகள்; சூரியனும் பதியும் மூலகாரணங்கள்.

## அதிகாரத் தொகுப்பு
## குருநாதரின் இயல்பு

1. **அருளின் உரு குரு :** பதியின் அருள் பக்குவநிலை அடைந்த ஆன்மாக்களுக்கு உதவுவதற்காகத் தாங்கும் கட்புல வடிவமே குரு ஆகும்.
2. **குருவின் பணி :** பக்குவ ஆன்மாவோடு தொடர்புடைய குரு அவ்வான்மாவின் ஆணவ மலம் என்னும் பிணியை அறிந்து அப்பிணியின் கொடுமையை அடக்குவர்.
3. **குரு உதவும் முறை :** குரு புரியும் 'அருளல்' என்னும் தொழில் மறைமுகமானது. அதனைப் பக்குவநிலை அடைந்த சீடரே அறிவார்; பிறர் அறியார்.
4. **பிறர் காணாமையின் காரணங்கள் :** உலக இன்ப மயக்கம், ஆணவ மலத்தின் செயலான அறியாமை; நல்லூழ் இல்லாமை என்பன சீடர் தவிர்ந்த பிறர் திருவருளையும், அதன் அருளுருவையும் காணாமையின் காரணங்கள் ஆகும்.

5. **குரு ஒரு போர்வை** : வன விலங்குகளைப் பற்றிக்கொள்ளப் 'பார்வை விலங்கு' ஒரு கருவியாகப் பயன்படுவது போல, ஆன்மாக்களைப் பதி வசப்படுத்தும் கருவியாகக் குரு விளங்குகிறார்.

6. **குருவின் பயன்** : ஞான விளக்கத் தெளிவு பெறுதலே மெய்ஞ் ஞானம் கை வந்த குருவினால் ஒருவர் அடைக்கூடிய பயன் ஆகும்.

7. **குருவின் பார்வை** : கீரியாகத் தன்னைப் பாவனை செய்யும் விட வைத்தியனால், பாம்பு தீண்டல் மயக்கம் நீங்குவது போலப் பதியாகத் தம்மைப் பாவனை செய்யும் குருவினால் ஆணவ நோய் நீங்கும்.

8. **மூவகை ஆன்மாக்களும் இறை நலம் பெறும் முறை** : பதி விஞ்ஞானகலரின் அறிவில் நின்று அருள் புரிவார்; பிரளயாகலரின் முன் தோன்றிக் கன்மத்தை நீக்கி அருள் புரிவார்; சகலரில் பக்குவநிலை அடைந்தவர்களுக்குக் குரு வடிவில் வந்து மலபரிபாகம் செய்து அருள் பாலிப்பர்.

9. **குரு முற்றறிவினர்**: குரு முத்தி நெறியை உபகரிக்கும் முற்றறிவினர். அவரில்லாமல் எவரும் முத்திநெறியை அறியமுடியாது.

10. **குரு ஞான சூரியன்** : சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றச் சூரியனின் ஒளிக்கதிர்கள் அவசியமாதல் போல, ஆன்மாவிடம் ஞானம் பிறக்கக் குருவின் துணை அவசியம் ஆகும்.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அருளுரு நிலை என்றால் என்ன?
2. ஆணவ மலம் எவ்வாறு நீங்கப் பெறும்?
3. மூவகை ஆன்மாக்களும் இறை நலம் பெறும் முறையை விளக்குக.

# 15

# சைவ ஒழுக்கம்

சைவ ஒழுக்கத்தைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்க வேண்டியவற்றுள் பின்வருவன அடங்கும்.

அ. நித்திய கருமங்கள்

ஆ. சிவசின்னங்கள்

இ. திருமுறை ஓதுதல்

ஈ. மாலை கட்டுதலும், கோலம் போடுதலும்

உ. சிவ புண்ணியம், பசு புண்ணியங்களைச் செய்தல்

ஊ. சைவ உணவு உட்கொள்ளல்

## அ. நித்திய கருமங்கள்

சைவமக்கள் தம் வாழ்வில் நாடோறும் செய்யவேண்டிய கடமைகள் நித்திய கருமங்கள் எனப்படும். காலையும் மாலையும் அனைவரும் கடவுளை வணங்க வேண்டும். சிவ தீட்சை பெற்றோர் அனுட்டானம் பார்த்தல் வேண்டும். காலையில் சூரியன் உதிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே நித்திரை விட்டெழுதல் வேண்டும். போசனம் செய்யும்போது அதனை இறைவனுக்கு அர்ப்பணித்து அதன் பின் உண்ண வேண்டும். சூரியன் அஸ்தமித்ததும் கை, கால், முகம் கழுவி, விபூதி தரித்துச் சிவபெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்ய வேண்டும். மீண்டும் இறைவனைத் தியானித்துச் சிவசிந்தனையோடு நித்திரைக்குச் செல்லுதல் வேண்டும்.

## ஆ. சிவசின்னங்கள்

விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும். அவற்றிற்கு மதிப்பளித்து, உரிய முறையில் அணிந்து பயன் பெற வேண்டியது சைவ சமயிகளின் கடமையாகும்.

அஞ்ஞானத்தை நீக்கி, மெய்ஞ்ஞானமாகிய மேலான செல்வத்தைத் தருதலால் விபூதி என்ற பெயர் வழங்குகின்றது.

தினந்தோறும் நாம் அணியும் விபூதி நம்மிடத்தே இறைவன் குடி கொண்டிருப்பதை நினைவுபடுத்துகின்றது. பெரியபுராணத்தில் வரும் சிவனடியார்களின் வரலாற்றைக் கற்கும்போது விபூதியின் பெருமை புலப்படுகின்றது.

சைவசமயிகள் என்பதற்குச் சான்றாகத் திகழ்வது விபூதியாகும். இது, திருநீறு, பசிதம், பசுதம், இரட்சை எனப் பல பெயர்களைப் பெறுகிறது. இப்பெயர்களே இதன் சிறப்பை உணர்த்தும்.

பசுவின் சாணத்தை அக்கினியால் எரிப்பதனால் உருவாகிய நீறே விபூதி எனப்படும். விபூதிக்குரிய சாணம் ஆன்மாவையும், சாணத்திலுள்ள அழுக்குகள் மலங்களாகவும், நெருப்பு திருவருளாகவும், எரித்தல் திருவருள் பதிவதாவும் கூறப்படு கின்றது. இத்தகைய விபூதியை ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளிலே தயாரித்துப் புனிதமாகப் பயன்படுத்த வேண்டும்.

விபூதியை, தீட்சை பெற்றோர் திரிபுண்டரமாகவும் ஏனை யோர் உத்தூளனமாகவும் வேதாகமங்களில் உள்ளபடி தரித்தல் வேண்டும். இவ்வாறு தரிக்கும்போது, வடக்கேனும் கிழக்கேனும் நேக்கி நின்று, அண்ணாந்து *'சிவசிவ'* என மும்முறை சொல்லி, மூன்று விரல்களினாலே தரித்தல் வேண்டும். தரிக்கும் போது, விபூதி நிலத்திலே சிந்தலாகாது. சிந்திய விபூதியைப் பிறர் மிதிக்கா வண்ணம் அகற்றல் வேண்டும். காலையிலும் மாலையிலும் சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் நித்திரைக்கு முன்னும் சிவ நாமஞ் சொல்லி விபூதி அணிதல் சாலவும் நன்று.

**"நீறில்லா நெற்றி பாழ்"** என திருநீறு தரிப்பதன் அவசியத்தை ஔவையார் விளக்குகின்றார். திருஞானசம்பந்தர் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கத் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீற்றைப் பெருமைப்படுத்தியுள்ளார். சம்பந்தர் திருநீற்றுப் பதிகத்தில் அழகு, செல்வம், நித்தியவாழ்வு, இன்பம், பக்தி, மனத்தூய்மை, இருவினைப்பயன்நீக்கம் ஆகியவற்றை அளிப்பது திருநீறு எனப் போற்றுகிறார். எனவே, அருமருந்தாகிய விபூதியின் மகிமையை உணர்ந்து செயற்படுவோம்.

**உருத்திராக்கம்**

சிவபெருமானுக்கு **உருத்திரன்** என்ற பெயரும் உண்டு. உருத்திரன் + அக்கம் = உருத்திராக்கம். அக்கம் என்பது கண் எனப் பொருள்படும். எனவே, உருத்திராக்கம் என்பது சிவபெருமானின் கண் எனப் பொருள்படும். தேவர்கள் திரிபுரத்து அசுரர்களாலே தமக்கேற்பட்ட இன்னலைச் சிவபெருமானிடம் விண்ணப்பம் செய்தபொழுது அவரது மூன்று கண்களினின்றும் பொழிந்த கருணை நீரினின்றும் தோன்றிய மணியே உருத்திராக்கம் எனவும் கூறுவர். சிவபெருமானின் பெருங்கருணைக்கும் அவர் ஆன்மாக்களிடம் கொண்டுள்ள பேரிரக்கத்துக்கும் அடையாளமாக அமைவது உருத்திராக்கமாகும்.

பஞ்சாட்சர செபஞ் செய்யும் பொழுது, அம்மந்திரத்தை 108 முறை எண்ணுவதற்கு உருத்திராக்க மாலை உதவுகிறது. எனவே, உருத்திராக்க மாலையைச் செபமாலை என்றுங் கூறுவர். இதனைக் குறிக்க அக்கமாலை, கண்டிகை என்னுஞ் சொற்களுஞ் சைவ சமய நூல்களில் வழங்குகின்றன.

உருத்திராக்கத்தில் வெண்ணிறம், கபிலநிறம், பொன்னிறம், கருநிறம் ஆகியவை உள. அம்மணிகளுள் ஒன்று முதல் பத்துக்கு மேற்பட்ட முகங்களைக் கொண்ட மணிகளும் உள்ளன. செபமாலையை ஒரே இன மணிகளால் கோத்தலே முறையாகும். பலவிதமாகிய மும்மணிகளைக் கலந்து கோத்தல் குற்றமாகும். உருத்திராக்கமாலை சிரசிலும், மார்பிலும், தோள்களிலும், கைகளிலும் அணியத்தக்கது. சிவனடியார்கள் உருத்திராக்க மாலையைக் கழுத்திலே எப்பொழுதும் அணிந்திருப்பர். சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், சந்தியாவந்தனம், பஞ்சாட்சர செபம், சிவபுராணம் படித்தல், கேட்டல், புராணபடனம் ஆகியன செய்யும்பொழுதும் உருத்திராக்க மாலை அணிதல் நல்லது.

## இ. திருமுறை ஓதுதல்

ஏழிசையாய் இசைப்பயனாய் இலங்கும் இறைவனை இசையுடன் பாடி வழிபடுவது சைவ மரபாகும். தோத்திரப் பாடல்களான திருமுறைகள் பண்ணோடும் பண்ணுக்கு நிகரான இராகத்தோடும் பாடக்கூடிய பாடல்களாகும். இறைவழிபாடு செய்யும் வேளைகளிலெல்லாம் திருமுறைகளை ஒழுங்கு முறையிலேயே பாடி வழிபட வேண்டும் என்ற நியதி உண்டு. இவ்வகையில் திருமுறைகளுள் **தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்** ஆகிய **பஞ்ச தோத்திரங்களை** ஓதும் ஒழுங்கு பேணப்படுகிறது. திருமுறைகளை முறைப்படி பண்ணோடு ஓதுபவர்கள் **ஓதுவார்** எனப்படுவர். இவர்கள் ஆலயங்களில் திருமுறைகளைப் பாடிப் பணிபுரிவர். திருமுறைகள் இறைவனுடைய அருட் குணங்குறிகளை நினைந்து, வேண்டித் துதிப்பதற்கும், பக்திப் பெருக்கை வெளிப் படுத்துவதற்கும் உறுதுணையாக அமைவதால், திருமுறை ஓதுதலை ஒழுங்குறப் பேணுவது எமது சமயக் கடமையாகும். திருமுறைகளை ஓதுதலின் பயன்களைத் திருஞானசம்பந்தர் பதிக இறுதிகளில் பாடியுள்ளார். நாம் நல்லொழுக்கம், பக்தி, மனச்சாந்தி பெறவும் பாவத்தைப் போக்கி, வினையை அறுத்து, நல்வாழ்வைப் பெறவும் தினமும் இறைவழிபாடு செய்யும் பொழுது திருமுறைகளை ஓதுதல் வேண்டும்.

## ஈ. பூமாலை கட்டுதலும் கோலம் போடுதலும்

**பூ செய்** என்பது **பூசை** என மருவியதாகக் கூறுவர். பூக்களைக் கொண்டு செய்யும் வழிபாடே பூசையாகும். பூசை வழிபாட்டில் சிறப்பாகப் பூ பயன்படுத்தப்படுகின்றது. பூமாலை கட்டி வழிபடுவது சிறப்பான வழிபாடாகக் கொள்ளப்படுகின்றது. சமயகுரவர்கள் பூமாலை தொடுத்து வழிபடுவதைச் சிறந்த சிவத்தொண்டாகச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். பெரிய புராணத்திலும் முருகநாயனார், பரவையார், சங்கிலியார் போன்றோர் இத்தகைய தொண்டியற்றிப் பேறுபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

பொழுது புலருமுன் எழுந்து காலைக் கடன்களை முடித்து, நீராடித் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு திருநந்தவனத்திலோ அல்லது வேறு தூய்மையான இடங்களிலோ உள்ள பூ மரங்களிலிருந்து அப்பொழுது மலர்ந்த பல்வகைப் பூக்களைப் பூக் கூடையினுள்ளோ, வேறு தூய பாத்திரத்திலோ சேகரிக்க வேண்டும். மந்தாரம், கொன்றை, அலரி, முல்லை, சம்பங்கி, சாதிமல்லிகை, தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர் முதலிய மலர்களைச் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு சேகரித்தல் வேண்டும். தூய்மையான தனியிடத்திலிருந்து அந்தந்த மலருக்கேற்ற விதத்தில் மாலை தொடுக்க வேண்டும். கோக்கும் **கோவை,** சுருக்கிக் கட்டும் **இண்டை,** மலர்களை இழுத்துக் கட்டும் **மாலை,** தண்டிலே கட்டும் **கண்ணி,** பிணைத்துக்கட்டும் **பிணையல்,** தொடுத்துக் கட்டும் **தொடையல்** என்று **ஆறு வகையாகப்** பிரித்து மாலைகள் அமைக்கலாம். அவற்றை வீட்டிலோ, கோயிலிலோ, பாடசாலையிலோ சுவாமிக்குச் சாத்தி வழிபடலாம். மனதுக்குச் சாந்தியை அளிக்கும் இவ்வழிபாடு சிறப்புக்குரியதாகும்.

சைவசமயப் பண்பாட்டில் அழகியல் உணர்வின் வெளிப் பாடாக அமைவது **கோலக் கலையாகும்**. சைவ ஒழுக்கத்தைப் பேணுவோர் தம் வீட்டிலும் ஆலயங்களிலும் தூய்மையையும் புனிதத்தையும் பேணும் வகையில் **கோலம்** போடுவது மரபாகும். அரிசி மா, மஞ்சள் மா முதலியவற்றால் **கோலம்** போடும்போது அவை எறும்பு முதலியவற்றிற்கு உணவாகின்றன. இதனால், கோலக் கலையானது ஜீவகாருண்யப் பண்பையும் வளர்க்க உதவுகின்றது.

ஆகவே, சைவப் பண்பாட்டிற்குச் சிறப்புத் தரும் பூமாலை கட்டுதல், கோலம் போடுதல் முதலிய அழகியல் உணர்வுகளை நாம் வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.

## உ. சிவபுண்ணியம், பசு புண்ணியம் செய்தல்

ஆன்மா உடம்பின் துணைக்கொண்டு பல வினைகளைச் செய்கின்றது. இவ்வினைகள் நல்வினை, தீவினை என இரு வகைப்படும். ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினைகளாம். அன்பு, நீதி, உண்மை, பொறுமை,

ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படுவனவும் இறைவனுக்கும் மெய்யடியார்களுக்கும் செய்யப்படும் வழிபாடுகள், தொண்டுகள் முதலியனவும் நல்வினையில் அடங்கும்.

நல்வினை சிவநல்வினை (சிவபுண்ணியம்), பசு நல்வினை (பசு புண்ணியம்) என இரண்டு வகையினுள் அடங்கும். இறைவனுக்கும் மெய்யடியார்களுக்குஞ் செய்யப்படும் வழிபாடுந் தொண்டுகளுஞ் சிவநல்வினை எனவும், மற்றைய உயிர்களுக்குச் செய்யப்படும் நல்வினைகள் பசு நல்வினை எனவும் வழங்கப்படும். இவற்றிற்கு மாறாக ஆணவத்துக்கு அடங்கி ஆன்மாவுக்குக் கேடு விளைக்கும் வினைகள் தீவினைகளாகும். ஆசை, கோபம், பொறாமை, செருக்கு, அநீதி, கொடுமை முதலியவை தீவினைக் குணங்களாகும். தீவினை தீமை பயத்தலால் அவற்றை விடுத்து நல்வினைக்கேதுவான கருமங்களைச் செய்வதும், சைவ ஒழுக்கத்தில் வழிப்படுத்தும் அன்பு, தயை, இரக்கம், பொறுமை, உண்மை, நீதி ஆகிய குணங்களை வளர்த்துக்கொள்வதும் நன்று.

## ௨௩. சைவ உணவு

சைவ உணவை உண்பதால் ஒருவரிடத்தில் சாத்வீக குணம் மேலோங்கிக் காணப்படும் என்பர். வாய்மை, தூய்மை, பொறுமை, தியாகம், பக்தி, ஜீவகாருண்யம், அகிம்சை முதலிய நற்குணங்கள் உள்ளத்தே குடிகொள்ளும். இதனால், சைவ உணவு உண்பது எம்மைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தும். ஆகவே, சைவ ஒழுக்கம் சைவ உணவு உண்பதை வலியுறுத்துகிறது.

### பயிற்சி

(1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. நித்திய கருமங்கள் என்றால் என்ன?
2. விபூதி என்பதன் பொருள் யாது?
3. விபூதி தத்துவம் எதனை உணர்த்துகிறது?
4. விபூதி அணியும் முறைகளை விளக்குக.
5. விபூதி அணியும் சந்தர்ப்பங்களைத் தருக.

நம் நாட்டு இளஞ்சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்கவும்

பாடசாலையின் பெயர்: ..........................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |
| **2002** | | | |
| **2003** | | | |
| **2004** | | | |
| **2005** | | | |

**හින්දු ධර්මය 10 ශ්‍රේණිය (දෙ)**